பரிசுத்தவேதாகமத்தில

101 பெண் மணிகள்

பரிசுத்த வேதாகமத்தின்

101 பெண்மணிகள்

IMMANUEL GOSPEL LIBRARY
9th Main Road
Mariyappana Palya
4th Cross, Magadi Road
BANGALORE - 560 023

IMMANUEL GOSPEL LIBRARY
BOOK No. 012
C
BANGALORE-23

அமிர்தபாய் சன்னியாசினி

குமரிப்பேராயர் கடிதம்

சகோதரி, **அமிர்தபாய் சன்னியாசினியார் பரிசுத்த வேதாகமத்தில் 101 பெண்மணிகள்** என்ற தலைப்பில் ஒரு நூல் வெளியிட அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியினை பெரிதும் பாராட்டுகிறேன். 16 தலைப்பின்கீழ் இந்நூலினை அவர்கள் பகுத்துள்ளார்கள் ஒவ்வொரு தலைப்பின் கீழும் அத்தலைப்புக்கு ஏற்ற குணங்களுடைய ஸ்திரீகள் வாழ்க்கை வரலாற்றை வரைந்துள்ளார்கள் வேதபுத்தகத்தை மையமாகக் கொண்டு, தற்கால நிலையினை சுட்டிக்காட்டி, நல்ல போதனைகளுடன், ஒவ்வொரு ஸ்திரீகளையும்பற்றி எழுதியுள்ளார்கள். அன்னாருடைய பொறுமை, விடாமுயற்சி, வேத அறிவு, புத்தகம் எழுதும் ஆர்வம் இவற்றை பாராட்டுகின்றேன். இந்நூல்திருப்பணிவிடையாளர்களுக்கும், குறிப்பாக ஒவ்வொரு குடும்பத்தின் பிள்ளைகளுக்கும் ஏற்ற ஒரு கை நூலாக அமைகின்றது. சகோதரியின் முயற்சியை பெரிதும் பாராட்டுகின்றேன். இந்நூல் மூலமாக இறைவன் பணியைத்தொடர ஆசீ கூறுகின்றேன். இந்நூலை வாங்கி படித்து பயன் பெறும்படி அன்பர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இவண்,

நாகர்கோவில்,
20—5—1987.

உயர்மறைதிரு. ஜி. கிறிஸ்துதாஸ்.
பேராயர்.

சென்னை பிஷப் அம்மா

இயேசு கிறிஸ்துவின் அடியாளும் ஊழியக்காரியுமாகிய அமிர்தபாய் சந்நியாசியம்மையார் அரிய சில புத்தகங்களை எழுதி வெளியிட்டிருக்கிறார்கள். ஐந்தாவது முறையாக பெண்களுக்கு ஏன் வாசிப்போர் அனைவருக்குமே மிகப்பிரயோஜனமாகவும், எழுப்புதலாகவும் எழுதியிருக்கும் இப்புத்தகம் "பரிசுத்த வேதாகமத்தில் நூற்றியொரு பெண்கள்" என்ற கவர்ச்சிகரமானத்தலைப்பில் அம்மையார் எழுதியுள்ளார். அழகுக்கு அழகு தீட்டும் வகையில் இப்புத்தகம் வேதத்தின் சிறப்புப் பெண்மணிகளைக் குறித்து பரிசுத்தவான்களால் எழுதப்பட்ட முக்கியக் கருத்துக்களையும் உண்மைகளையும் அடிப்படையாக வைத்து 16 அத்தியாயங்களில் எழுதப்பட்டுள்ளது.

பழைய புதிய ஏற்பாட்டிலடங்கிய இந்த 101 பெண்களின குணலட்சணங்களை கூறுபடுத்தி அத்தியாயங்களின் சிறப்புத்தலைப்புகளில் அடக்கி எழுதப்பட்டுள்ளது. சிலப்பெண்களின் குறைவு பாடுகளையும் எடுத்துக்கூறி அவற்றின் மூலம் நம்மை எச்சரித்துள்ளார் ஆசிரியை. நாமும அத்தகைய தீய வழிகளில் விழுந்து தத்தளிக்காதவாறு அவர்களின் வாழ்க்கை சரித்திரம் நமக்கு ஒரு அத்தியந்த அவசியமான எச்சரிப்பாயிருக்கிறது. இதை யாவரும் வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

இப்பெண்களைக்குறித்து வாசிக்கும் நாம் நம் வாழ்க்கையை முதற்கண் இயேசுவின் சிலுவை பாதையில் செலுத்தி, இப்பெண்களின் உத்தம வாழ்க்கையில் பல கற்பனைகளைக் கற்று, அவற்றை அனுசரித்து நம் வாழ்க்கையை நடத்தும்போது நாமும் ஆண்டவருக்கு அருமையான பாத்திரங்களாக விளங்க அவர் அருள் புரிவாராக. அம்மாள் இன்னும் பல புத்தகங்களை எழுத இறைவன் அவர்களை ஏவி, உபயோகித்து ஆசீர்வதிப்பாராக.

CLARA SUNDER CLARKE
BISHOP'S HOME, MADRAS.

திருநெல்வேலி பிஷப் அம்மா

"நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் ஜோதிகளின் பிதாவினிடத்தில் இருந்து இறங்கி வருகிறது" யாக் 1:17.

''பரிசுத்த வேதாகமத்தின் 101 பெண்மணிகள்'' என்ற தலைப்பில் செல்வி அமிர்தபாய் சந்நியாசினி அம்மையார் எழுதிய இந்நூல் பெண்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்கும், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்திற்கு மகிமையான சாட்சியுள்ள குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கும் ஏதுவாக அமைந்துள்ளது. பரிசுத்த வேதாகமத்திலுள்ள பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலுமுள்ள அனைத்துப்பெண்களின் நற்பண்புகளை மட்டுமல்ல. தீயகுணங்களையும் சுட்டிக்காட்டி நம்மை எச்சரித்து வழி நடத்தக்கூடிய நன்னூலாக அமைந்துள்ளது.

செல்வி அமிர்தபாய் சந்நியாசினி அம்மையாரின் வேத அறிவைப் பாராட்டுகிறேன். இந்நூல் ஏற்ற இடங்களில் தகுந்த வேத வசனங்களைக் கொண்டு, நம்மை தூய வழியில் நடத்திச்செல்லும் வழிகாட்டியாக அமைந்துள்ளது மேலும் யாவரும் வாசித்து மகிழும்படி எளிய நடையில் அமைந்துள்ளது.

இந்நூலை யாவரும் வாங்கி ஜெபத்துடன் வாசித்துப் பயன்பெற அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் இதனை சிறந்த தலைப்புகளுடன் வெகு அழகாக வேதாகம பெண்களின் நிலையைச் சித்தரித்துக் காட்டியுள்ள செல்வி அமிர்தபாய் சந்நியாசினி அம்மையார் அவர்களுக்கு என் நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

கர்த்தர் தாமே அவர்களை ஆசீர்வதிப்பாராக! இந்நூலை வாசிப்போர் தேவனண்டைவழி நடத்தப்படவும் அவர்களின் வாழ்க்கைப் பரிசுத்தப்படவும் எல்லாம் வல்ல இறைவன் கிருபை அளிப்பாராக!

திருமதி. லீதியாள் தர்மராஜ், B. A., B. T.
பிஷப் ஹவுஸ்,
திருநெல்வேலி.

திருநெல்வேலி,
24—3—1987.

பொருளடக்கம்

முன்னுரை:

		பக்கம்
	அத்தியாயம் I	
1	ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகிய ஏவாள்	1
	அத்தியாயம் II	
	குணசாலியான ஸ்திரீகள்	5
2	இயேசுவின் தாயாகிய மரியாள்	6
3	சூனேமியாள்	11
4	யோகெபேத்	14
5	யெப்தாவின் மகள்	17
6	ஆஸ்நாத்	20
7	சிபியாள்	22
8	சலோமே	23
9	யோசேபாள்	26
10	மில்க்காள்	28
11	ரூத்	29
	அத்தியாயம் III	
	புத்தியுள்ள ஸ்திரீகள்	33
12	பத்சேபாள்	33
13	அபிகாயில்	35
14	நகோமி	38
15	புத்தியுள்ள ஒரு ஸ்திரீ	41
16	சேபாவின் ராஜஸ்திரீ	43
17	சிப்போராள்	46
18	யாகேல்	47
19	அக்சாள்	49
20	செலோப்பியாத்தின் குமாரத்திகள்	51
21	தெக்கோவா ஸ்திரீ	52
22	பாபிலோனிய ராஜஸ்திரீ	54
	அத்தியாயம் IV	
	விசுவாசித்த ஸ்திரீகள்	56
23	நாகமானின் மனைவி	56
24	தாமரி	58
25	ஐனிக்கேயாள்	60
26	லோவிசாள்	61
27	நீதிக்காக போராடிய ஸ்திரீ	62

அத்தியாயம் V

விசுவாசத்தில் சிறந்த ஸ்திரீகள் 64

28 கானானிய ஸ்திரீ 64
29 ராகாப் 65
30 பெரும்பாடுள்ள ஸ்திரீ 68
31 கூனியான ஸ்திரீ 71
32 செபெதேயுவின் மனைவி 74

அத்தியாயம் VI

கணவனை கனம் பண்ணி கீழ்ப்படிந்த ஸ்திரீ 76

33 சாராள் 76

அத்தியாயம் VII

தேவனோடு நெருங்கிய தொடர்பும் அன்பும் கொண்ட ஸ்திரீகள் 79

34 பெத்தானியா மரியாள் 79
35 மகதலேனா மரியாள் 82
36 கிலேயோப்பா மரியாள் 84
37 லேயாள் 85
38 சமாரியா ஸ்திரீ 87
39 இரண்டு காசு காணிக்கை போட்ட விதவை 91
40 எலிசபெத் 93
41 பினெகாசின் மனைவி 95
42 பாவியான ஸ்திரீ 96
43 மன்னிப்பைப் பெற்ற ஸ்திரீ 98

அத்தியாயம் VIII

தேவனுக்கென்று பணிவிடை செய்த ஸ்திரீகள் 102

44 மார்த்தாள் 103
45 சாரிபாத் விதவை 105
46 லீதியாள் 108
47 பேதுருவின் மாமி 109
48 யோவன்னாள், சூசன்னாள் 109
49 எயோதியாள், சிந்திகேயாள் 111

அத்தியாயம் IX

தேவனுக்கு ஊழியம் செய்த ஸ்திரீகள் 115

50 தபீத்தாள் 115
51 மாற்குவின் தாயாகிய மரியாள் 117
52 பெபேயாள் 119
53 பிரிஸ்கில்லாள் 121
54 சின்ன யாக்கோபுக்கும், யோசேக்கும் தாயாகிய மரியாள் 123
55 அப்பியாள் 124

அத்தியாயம் X

தீர்க்க தரிசினிகள் 125

56 மிரியாம் 125
57 தெபோராள் 128
58 உல்தாள் 130
59 பிலிப்புவின் நான்கு குமாரத்திகள் 132
60 அன்னாள்-பானுவேலின் குமாரத்தி 133

அத்தியாயம் XI

தேவனுக்கு பயந்த ஸ்திரீகள் 135

61 சிம்சோனின் தாய் 135
62 சிப்பிராள், பூவாள் 137
63 யோபின் குமாரத்திகள் 139
64 தீர்க்க தரிசியின் மனைவி 140
65 பிலாத்துவின் மனைவி 141

அத்தியாயம் XII

ஜெபஜீவியத்தில் சிறந்த ஸ்திரீகள் 144

66 அன்னாள்-சாமுவேலின் தாய் 144
67 எஸ்தர் 147

அத்தியாயம் XIII

அன்பில் சிறந்த பெண்கள் 155

68 ரெபேக்காள் 155
69 ரோதை 158
70 நாகமானின் வேலைக்காரி 160
71 பார்வோனின் குமாரத்தி 162
72 சூலமித்தியாள் 163
73 யோனத்தானின் தாதி 166
74 அபிஷாக் 167
75 திரிபேனாள், திரிபோசாள் 168
76 ஒரு வேலைக்காரி 169
77 ஒரு வீட்டுக்காரி 169
78 ஒரு அம்மாள் 170

அத்தியாயம் XIV.

கைவிடப்பட்ட ஸ்திரீகள் 172

79 நாயீனூர் விதவை 172
80 யூதாவின் மருமகள் தாமார் 174
81 ஆகார் 176
82 அப்சலோமின் சகோதரி தாமார் 178

அத்தியாயம் XV

விசுவாசத்தில் குன்றின ஸ்திரீகள் 180

83 ராகேல் 180
84 யோபின் மனைவி 182
85 ஓர்பாள் 184

அத்தியாயம் XVI

குடும்பத்தை இடித்த ஸ்திரீகள் 186

86 யேசபேல் 186
87 அத்தாலியாள் 189
88 சிரேஷ் 190
89 சப்பிராள் 193

அத்தியாயம் XVII

சீர் கெட்ட துஷ்ட ஸ்திரீகள் 196

90 போத்திபாரின் மனைவி 196
91 ஏரோதியாள் 197
92 ஏரோதியாளின் மகள்-சலோமி 199
93 தெலீலாள் 200

அத்தியாயம் XVIII

கர்த்தரின் வழிவிட்டு விலகின ஸ்திரீகள் 202

94 லோத்தின் மனைவி 202
95 மீகாள் 203
96 தீனாள் 205
97 எப்சிபாள்-மனாசேயின் தாய் 207
98 பெனின்னாள் 208
99 பெர்னிக்கேயாள் 210
100 துருசில்லாள் 211
101 வஸ்தி 212

ஏமது வெளியீடுகள்

		ரூ.	பை
1	கைவிடாத கன்மலை—தமிழ்	3	50
2	The unfailing Rock English	5	00
3	நீயும் தேவனோடு பேசலாம்	5	00
4	உன்னதப்பாட்டில் மறைந்து கிடக்கும் உன்னத சத்தியங்கள்	3	00
5	யார் இந்த இயேசு	4	50
6	பரிசுத்த வேதாகமத்தின் 101 பெண்மணிகள்	7	50

முன்னுரை

கடவுளின் படைப்பில் ஸ்திரீ

தேவன் உலகத்தைப் படைத்தபோது இறுதியாக அவர் படைத்தது மனுஷனையே. ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார். தேவசாயலாக அவர்களை சிருஷ்டித்து, பிற உயிரினங்கள் யாவையும் ஆண்டு கொள்ளும்படி அவர்களை அதிபதியாக்கினுர் (ஆதி. 1:27, 28). ஆயினும் தேவனுடைய படைப்பு அதனுடன் முடிவு பெறவில்லை. எனவேதான் தேவன் ''மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன்'' என்ருர். அதனுல் அவர் ஆதாமுக்கு அயர்ந்த நித்திரை வரப்பண்ணி, அவனது விலா எலும்பினின்றும் ஏவாளை உருவாக்கினுர். தேவன் மனுக்குலத்தைச் சிருஷ்டிக்கும்பொழுது அவர்களைத் தமது சாயலிலேயே சிருஷ்டித்தார்.

தேவன் ஆதாமையும் ஏவாளையும் படைக்கும்பொழுது ஒருவர் மற்றவருக்காகக் கொடுக்கப்பட்டனர். இவர்களிருவரும் சுயாதீனமாயும், சந்தோஷமாயும் இருக்கும் பொருட்டும், தன்னேடு பழகி சஞ்சரிக்கும் படிக்கும் அழகானதொரு தோட்டத்தையும் உண்டாக்கி, அத்தோட்டத்திற்கு ஏதேன் என்று பெயரிட்டார். அவரது இந்தத் தோட்டத்தைப் பண்படுத்தவும், பாதுகாக்கவும், அவர்களை நியமித்தார். இதற்காக அவர்கள் இணைந்து வாழும்படிச் செய்தார். ஏவாளுக்கு ஆதாமின் பலமும் ஆதரவும் வேண்டியிருந்தது. ஆதாமுக்கு ஏவாளின் கனிவும், அன்பும் துணையும் தேவையாயிருந்தது. இருவருக்கும் தேவன் இன்றியமையாதவரானுர். பகலின் குளிர்ச்சியான வேளையிலே தேவன் அத்தோட்டத்தில் உலாவவும், தாம் படைத்த மக்களுடன் பேசி மகிழ்ந்து கொண்டிருக்கவும் தோட்டத்திற்கு வந்து கொண்டிருந்தார். (நீதி 8:31)

முதல் மனுஷனுகிய ஆதாமின் விலா எலும்பினுல் மனுஷியை உருவாக்கி அவளை மனுஷனிடத்தில் கொண்டு

வந்தார் (2:22) ஆதாம் அவளுக்கு மனுஷி என்று பெயரிட்டான். (2:23) இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும்விட்டு, தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்' (ஆதி 2:24) எனவும் வரையறுக்கப்பட்டது. இந்த இணைப்பு தேவனது பார்வையில் நலமானதாகக் காணப்பட்டது.

பரிசுத்த வேதாகமத்தில் ஸ்திரீகளுக்குரிய இடம்

பழைய ஏற்பாட்டுக் காலத்தில், எபிரேயருக்குள்ளே புருஷனுக்கு நிகரான இடம் பெண்களுக்குக் கொடுக்கப்படாவிடினும், அவள் புருஷனுக்கு அடிமையாய் அல்ல, ஏற்ற துணையாயிருக்க வேண்டுமென்பதே அவர்களது கருத்தாயிருந்தது என்பது மிகத் தெளிவானதாகும். சாராள், ரெபேக்காள், ராகேல் இவர்கள் தங்கள் தங்கள் கணவன்மார்களைப்போலவே மேன்மைபெற்று விளங்கினர். மிரியாம், மோசே, ஆரோன் என்பவர்களோடு மகிமை பெற்றிருந்தாள் (மீகா 6:4). தெபோராஸ் நியாயாதிபதியாயிருந்தாள் (நியாதி 4:4) ராஜஸ்திரீயாகிய யேசபேலும், அத்தாலியாளும் ராஜாங்கக் காரியங்களைக் கவனித்தனர். ஆண்களோடு பெண்களும் தேவஸ்தலங்களுக்குச் சென்றனர் (I சாமு 1:1). பலி செலுத்தும்போது பெண்களும் உதவிசெய்தனர் (நியாதி 13:23). அவர்கள் தேவாலயங்களில் சங்கீதங்களைப்பாடி, இசைக் கருவிகளை இசைத்துத் தேவனைத் துதித்தனர் (எஸ்றா 2:65). அப்பெண்களில் தீர்க்கதரிசிகளும் இருந்தனர்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இயேசுவினிடத்தில் வந்த ஸ்திரீகளைக் கனப்படுத்தியே பேசியிருக்கிறார். மரியாள் ஒரு எளிய கன்னிகையாயிருந்தாலும் பரலோகத் தேவதூதன் அவளை வாழ்த்திப்பேசி, ''கிருபைப்பெற்றவளே வாழ்க. . . ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்'' என்று கூறினார் (லூக் 1:28). தேவனுடைய பார்வையில் ஆண் என்றும் பெண் என்றும் வித்தியாசமில்லை. ''கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்

கள் எத்தனைபேர்களோ அத்தனைபேரும் கிறிஸ்துவை தரித்துக் கொண்டீர்களே'' (கலா 3:27,28) என்னும் வசனம்மூலம் அறிகிறோம். ஆதித்திருச்சபையில் பேதுரு யோவான் முதலான அப்போஸ்தலர்களோடுகூட அநேக ஸ்திரீகளும், இயேசுவின் தாயாகிய மரியாளும், சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு ஜெபத்திலும், வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள் (அப் 1:13,14). அச்சபைகளில் ஆண்களான ஊழியர்களைப்போலவே பெண்களான ஊழியக்காரிகளும் இருந்திருக்கின்றனர் (ரோமர் 16:1). அப்போஸ்தலர் யாவரும் ஸ்திரீகளை நன்கு மதித்திருக்கிறார்கள். யோவான் அப்போஸ்தலன் காலத்தில் பரிசுத்த பவுல் பிலிப்பியருக்கு எழுதும்போது யெயோதியாள், சிந்திகேயாள் என்ற பெண்களுடைய பெயரைக் குறிப்பிட்டு இவர்களுடைய பெயர்கள் பரலோகத்தில் எழுதப்பட்டிருப்பதாக குறிப்பிடுகிறார். ''சுவிசேஷத்திற்காக இவர்கள் மிகவும் பிரயாசப்பட்டார்கள்'' (பிலிப் 4:2;3). ''கெங்கிரேயா ஊர்சபைக்கு ஊழியக்காரியாகிய பெபேயாள்...''(ரோம 16:1,2) இன்று நம் திருச்சபையிலும் அனேக பெண்கள் குருபட்டம் பெற்றுஆண்டவர் ஊழியத்தை செய்து வருகிறார்கள். எந்நிலமையிலும் நாம் ஆண்டவருக்கு ஊழியம் செய்யலாம். செய்கிறோமா ? செய்வோம்.

ஸ்திரீகளின் தனித்தன்மைகள்

விசுவாசியாயிருந்த ஒரு தாயாருக்கு நிரூபம் எழுதியிருக்கிறார். ''நான் மாத்திரமல்ல சத்தியத்தை அறிந்திருக்கிற யாவரும் சத்தியத்தின்படி நேசிக்கிறவரும் தெரிந்துகொள்ளப் பட்டவளுமாகிய அம்மாளுக்கும் அவருடைய பிள்ளைகளுக்கும் எழுதுகிறதாவது'' (II யோவான் 1:1,2) ''சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே ஸ்திரீகளுக்கு அலங்கரிப்பாயுள்ளது'' என்கிறார் (I பேதுரு 3:4). பெண்ணை மெல்லியாள் அல்லது மெல்லிய இயல்புடையவள் எனக்கூறுவதுண்டு. இந்த மெல்லியல்புகள் யாவும் அவளிடமிருக்கும் அன்பின் அடிப்படையிலேயே பிறக்கின்றன. உலகில் மனிதர் எத்

தனேயோ விதங்களில் ஒருவர் மீது ஒருவர் அன்பு கொள்ளுகின்றனர். ஆனுல் இவை எல்லாவற்றிலேயும் தலேயாயது தாயன்பேயாகும். ஆகையினுல் தான் இறையன்பு தாயன்போடு ஒப்பிடப்படுகிறது. எனினும் இறையன்பு தாயன்பைக் காட்டிலும் விசேஷித்தது. ''ஸ்திரியானவள் தன் கர்ப்பத்தின் கனிக்கு இரங்காமல் தன்பாலகனே மறப்பாளோ, அவர்கள் மறந்தாலும் நான் உன்னே மறப்பதில்லே'' என தேவன் கூறுகிருர் (ஏசாயா 49 : 15) (சங்கீதம் 27:10) அடுத்ததாக விசேஷித்துக் கூறப்படக் கூடியது. மனேவி கணவனிடம் காட்டும் அன்பு. ஆகையால் தான் தாவீது தன் நண்பனுகிய யோனத்தானுக்காக வியாகுலப்படுகையில், ''உன் சிநேகம் ஆச்சரியமாயிருந்தது, ஸ்திரிகளின் சிநேகத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருந்தது'' என்ருர். (II சாமு 1:26)

இந்த அன்பினின்று தோன்றுபவைதான் இதர இயல்புகள் அன்பைப்பற்றி நாம் I கொரிந்தியர் 13-ம் அதிகாரத்தில் தெளிவாகக் காணலாம். ''அன்பு நீடிய சாந்தமும். தயவுமுள்ளது'' (வசனம் 4) இதனேத் தான் பரி.பவுல் வலியுறுத்துகிறார். ''அன்பு சினமடையாது. சகலத்தையும் தாங்கும்'' இவ்வாறு சினத்தை தவிர்த்து, யாவற்றையும் தாங்கிக் கொள்வதாலேயே பெண்ணிற்குப் பொறுமையென்னும் குணம்தானுகவே அமைந்து விடுகிறது. ஆனுலும் பெண்களேப் பேதையர் எனக்கூறுவதுமுண்டு (ஏசாயா 35:8) ''அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசைக் கெட்டுப்போவதில்லே'' இப்பேதைகுணமே அவர்கள் அநேக சமயங்களில் ஏமாந்துபோகவும் வைக்கிறது. நமது ஆதித்தாயாகிய ஏவாளுங்கூட இப்பேதமையாலேயே சாத்தானிடம் ஏமாந்து விட்டாள். பெண்களுக்குள்ள மற்றொரு கெட்ட குணம் பொருமை. உதாரணம் ராகேல் தனக்கு குழந்தைகளில்லாததால் தன் சகோதரியாகிய லேயாள் மீது பொருமைக் கொண்டதை வேதத்தில் நாம் காண்கிறோம்.

வேதத்தில் நாம் குணசாலியான பெண்கள், புத்தியுள்ள பெண்கள், ஜெபிக்கும் பெண்கள் எனப்பலவாருன பெண்களேக் காணலாம். அவர்களில் 100 பேரைத் தெரிந்தெடுத்து அவர்கள் மூலமாக தேவன் நமக்கு என்னக் கற்பிக்கிருர் என்பதைத் தெரிந்துக் கொள்ளவே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது. அவர்களே ஒவ்வொருவராகப் பின்வரும் அத்தியாயங்களில் பார்ப்போம்.

1. ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகிய ஏவாள்

(ஆதியாகமம் 1:27; 3:1,2)

ஆதியிலே இவ்வுலகத்தை அற்புதமாய் தம் வார்த்தையால் படைத்த தேவன், மனிதனைப்படைத்து, அவனுக்குத் துணையாக ஒரு மனுஷியையும் படைத்தார். ''தேவன் தம்முடைய சாயலாக மனுஷனை சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்'' (ஆதியாகமம் 1:27). இந்த பெண் தான் மனுக்குலம் அனைத்திற்கும் தாய் அல்லது ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய். ஆதாம் தன் மனைவியைப் பார்த்து ''இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள்'' என அன்புடன் சொன்னான். இவ்வாறு இணைக்கப்பட்ட இருவரும், ஒருவருக்கொருவர் துணையாக வாழவும், இருவரும் இணைந்து கடவுளுடன் பழகி, சகவாசம் செய்து, அவருக்காக அவரது ஏதேன் தோட்டத்தை பயன்படுத்தி, பாதுகாத்து வாழும்படியும் ஆண்டவர் அவர்களை நியமித்தார். ஏவாளுக்கு ஆதாமின் பலமும், ஆதரவும் தேவையாயிருந்தது போல, ஆதாமுக்கு ஏவாளின் கனிவும், துணையும் தேவையாயிருந்தது. இருவருக்கும் தேவன் துணை நின்றார். ஏவாள் என்பதற்கு ''ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாய்'' என்பது பொருள். தேவனாகிய கர்த்தர் மனிதனை சுயாதீனத்துடன் வாழப்படைத்தார். அவர் கொடுத்திருந்த ஒரே கட்டளை தோட்டத்திலிருந்த நன்மை, தீமை அறியும் விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்பதே. ஆனால் பிசாசானவன் ஏவாளை வஞ்சித்து. அக்கனியைப் புசிக்க வைத்து, அவளது கணவனையும் புசிக்க வைக்குமாறு சதி செய்தான். அவளும் அதில் விழுந்துவிட்டாள். இவ்வாறாக பாவம் உலகில் நுழைந்தது. அதனால் தேவனுக்கும், மனிதனுக்கும் ஒரு பிளவு ஏற்பட்டது. சாபம் வந்தது.

கடவுளின் சமுகத்தை விட்டு அவர்கள் நீங்க வேண்டி தாயிற்று. வாழ்வில் முள்ளும், குருக்கும், வேர்வையும் வேதனையும் வந்தது. கடவுளுடைய கற்பனையை மீறுவதே பாவம். இவ்வளவுக்கும் காரணம், ஆதி பெற்ேறார் கடவுளின் கட்டளையை மீறியதேயாகும். இவ்வாறு பாவம் உலகில் பிரவேசிக்கத்தக்கதாய் ஏவாள் நடந்துக் கொள்ளுவதற்கு, அவளிடம் காணப்பட்ட பெலவீனங்கள் தான் எவை என்பதைப் பார்ப்போம்.

முதலாவது, அவள் சாத்தான் தன்னை வஞ்சிக்க இடம் கொடுத்தாள். அவள் அவனை, ''அப்பாலே போ, சாத்தானே'' என விரட்டியடித்திருக்கலாம். ஆனால் அவள் அவனது வார்த்தைகளாகிய ''நீங்கள் சாகவே சாவதில்லை'' என்ற வார்த்தைகளை நம்பினாள். தேவன் அவர்களுக்கு, ''நீங்கள் சாகாதபடிக்கு அதை புசிக்கவும் அதை தொடவும் வேண்டாம்'' என்று கூறியிருந்த வார்த்தைகளை விட, சாத்தானின் வார்த்தைகளை நம்பினாள். ''நீங்கள் நன்மை தீமை அறிந்து, தேவர்களைப்போல் இருப்பீர்கள்'' என்று சாத்தான் கூறிய வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து, தேவர்களைப் போல் ஆகவேண்டும் என்ற ஆசையினால் உந்தப்பட்டு ஏமாந்து போனாள். நாமும்பிறரது நயவஞ்சகப் பேச்சால் ஏமாந்து போகாதிருப்போமாக. இரண்டாவதாக அவளிடம் இச்சையடக்கம் காணப்படவில்லை. அந்த விருட்சத்தின் கனி ''புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்ப''முமாக இருந்ததால் அதன்மீது இச்சைக் கொண்டாள் அந்த ஏதேன் தோட்டத்திலிருந்த கோடிக் கணக்கான கனிகளை அவள் அதனால் இழக்க நேரிட்டது. ஏனெனில் ஆதாமும், ஏவாளும் தோட்டத்திலிருந்து தேவனால் துரத்தப்பட்டார்கள். எனவே பெண்களாகிய நாம் நம் கண்களின் இச்சையை அடக்கி, நம் மனதைக் கட்டுப்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக, அவள் தான் தேவனுடைய கட்டளையை மீறியதுமல்லாமல், தன் கணவனையும் அப்பாவத்தைச் செய்யத் தூண்டினாள். இவளது கணவனை மாத்திரமல்ல, மனுக்குலமனைத்தும் பாவத்தில் ஈடுபட

இவள் மூலக்காரணமானுள். ஆதாம் இப்பாவத்தில்விழாது தன்னைக் காப்பாற்றி, தன் மனைவியையுங் கூட காப்பாற்றி யிருக்கலாம். ஆனுல் பெண்ணின் சக்தியை நாம் இங்கு பார்க்கிறோம். அவளுடைய பேச்சில் அவன் மயங்கினுன். இடறலடைந்தான். ஒரு கணவனையும் தன் குடும்பத்தி னரையும் இடுக்கமான பாதையில் வழிநடத்தவும், விசால மான பாதையில் வழிநடத்தவும் ஒரு பெண்ணுக்கு சக்தி உண்டு. ஆகையினுல் தான், ''ஆவதும் பெண்ணாலே, அழி வதும் பெண்ணாலே'' என்ற பழமொழி உருவாயிற்று. ஏவாள் தனக்கிருந்த இச்சக்தியை துர்ப்பிரயோகம் செய் தாள். இது பெண்களாகிய நமக்கு ஒரு எச்சரிப்பாக அமையட்டும்.

நான்காவதாக, அவள் தான் செய்த் குற்றத்தை ஒத்துக்கொள்ளாது, சர்ப்பத்தின் மேல் பழி சுமத்தினுள். தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவற்றை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனே இரக்கம் பெறுவான் என வேதம்கூறுகிறது. ஆனுல் ஏவாளோ, அந்த தேவனுடைய வசனத்திற்கு ஏற்றவாறு நடக்கவில்லை. தன் பாவத்தை மறைத்தாள். அதனுல் சாபத்தை ஏற்றுக் கொண்டாள். பூமி அவள் நிமித்தம் சபிக்கப்பட்டது. நாமெல்லாரும் பாவம் செய்ய வழிவகுக்கப்பட்டது.

அவள் தேவனுக்கு பயந்து கீழ்ப்படியாத படியால் அவள் தன் பிள்ளைகளையும், அன்பிலும், தேவ பயத்தி லும், கீழ்ப்படிதலிலும் வளர்க்க தவறிவிட்டாள். எனவே காயீன் ஆபேலைக் கொன்றுன். பாவத்தினுல் மனிதன் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்படுவதால், அந்த அன்பும் சமாதானமும் மனதில் காணப்படுவதில்லை. இப்படி பாவத்தில் ஜீவிக்கும் குடும்பங்களில் என்றும் துன்பமும், கவலையும், கண்ணீரும், உறவில் பிளவும் தான் ஏற்படும். எனவே பெண்குலம் தங்கள் பிள்ளைகளை தேவ அன் பிலும், பயத்திலும், கீழ்ப்படிதலிலும், வளர்த்து வர வேண்டும்.

அருமையான சகோதரியே, இன்று யாரைப் போல் வாழ்கிறாய்? சற்று சிந்தித்துப்பார். ஏவாளைப் போல வாழ்கிறாயா? யாரையாவது வஞ்சிக்கிறாயா? பிறரை பாவம் செய்ய தூண்டுகிறாயா? இச்சையால் இழுப்புண்டு போகிறாயா? குடும்பத்தை நல்வழியில் நடத்துகிறாயா? நாம் நமது பாவங்களை ஏவாளைப் போல் மறைக்க நினையாது, கர்த்தரிடம் அறிக்கையிடுவோம். நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ள வேண்டாம். அப்பொழுது "நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியுமுள்ளவராயிருக்கிறார்." (I பேதுரு 1:9) நாம் அவரை விசுவாசித்தால், நாம் இவ்வாறு அவரால் சுத்திகரிக்கப் படுவதுடன், அவர் நம்மை தமது இரட்சிப்பின் வஸ்திரத்தாலும், நீதியின் உடைகளாலும், நம்மை போர்த்திவிடுவார். நாம் மனந்திரும்பி அவரண்டை வரும்போது இவவித மேன்மையை அடைவோம் என்பதில் சந்தேகமேயில்லை. ஏசாயா 61:10, சங்கீதம் 51:12.

இந்த ஏவாளும்கூட படிப்படியாக தேவனுடைய பாதைக்கு வரத்தொடங்கினாள் என நாம் யூகிக்க இடம் உண்டு. அவளது துன்பங்களும், துயரங்களும், அவளை தேவனண்டைக்கு அழைத்துச் சென்றிருக்கலாம். ஏனெனில் அவள் தனது குமாரனாகிய சேத் என்பவனை பெற்ற போது, "தேவன் எனக்கு வேறொரு புத்திரனை ஆபேலுக்குப் பதிலாக கொடுத்தார்" (ஆதியாகமம் 4:25) என தேவனை மகிமைப் படுத்தினாள். எனவே, பாவத்தில் கலங்கும் சகோதரிகளே, நீங்கள் சோர்ந்து போகவேண்டாம். ஏவாளுக்கு இரங்கி, அவளுக்கு ஆபேலுக்கு பதிலாக, வேறொரு புத்திரனை அளித்த ஆண்டவர், நீங்கள் மனந்திரும்பி, நொறுங்குண்ட இருதயத்தோடே அவரை கிட்டிச் சேர்வீர்களானால், தேவன் உங்கள் குறைகளையும் மன்னித்து உங்கள் தேவைகளையும் சந்திப்பார். இரக்கமுள்ள தேவன், அந்த ஸ்திரீயின் வித்தின் மூலமாகவே (லூக்கா 1:28-38; ஆதியாகமம் 3:15) சர்ப்பத்தின் தலையை நசுக்க சித்தங்கொண்டு, ஸ்திரீயினிடத்தில் மனி

தனாகப் பிறந்து, உலகத்தின் பாவங்களையெல்லாம் சுமந்து தீர்க்கும் கிருபாதார பலியானார். ஏவாளைப்போல் இச்சைக்கு ஒப்புக்கொடாமல், ஆண்டவருக்கு அடிமை என்று தன்னை ஒப்படைத்த மரியாளைப்போல் ஒப்படைப்போமா? அதை ஆண்டவர் விரும்புகிறார், அப்படி ஒப்புக்கொடுத்த மரியாளை போன்ற பாத்திரங்களை ஆண்டவர் பயன் படுத்த காத்திருக்கிறார். நாமும் ஒப்படைப்போமா? ஜெபிப்போமா? கிருபையில் பலப்படுவோமா?

அத்தியாயம் II.

குணசாலியான ஸ்திரீகள்

''குணசாலியான ஸ்திரீயை கண்டு பிடிப்பவன் யார்? அவருடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது.'' (நீதிமொழிகள் 31:10) நீதிமொழிகள் 31-ம் அதிகாரத்தில் இப்படிப்பட்ட பெண்களின் பண்புகள் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அவற்றைச் சுருக்கிக் கூற வேண்டுமாயின், அவள் ஒரு வியாபாரக் கப்பலைப் போல் எக்காலத்திலும் சுறுசுறுப்புடன் இயங்கி, தன் கணவனுக்கும், தன் குடும்பத்தினருக்கும் தேவையான யாவற்றையும் திறமையுடன் செய்து முடிப்பதுமன்றித், தன் வாயை ஞானம் விளங்கத் திறந்து, தயையுள்ள போதகம் செய்கிறாள்', ''சிறுமையானவர்களுக்குத் தன் கையை திறந்து ஏழைகளுக்குத் தன்கரங்களை நீட்டுகிறாள்'' இதினால் அவளது புருஷனுடைய இருதயம் அவளை நம்பும். அவளும் தன் புருஷனுக்குக் கிரீடமாய் இருக்கிறாள் (நீதி 12:4) அவளுடைய பிள்ளைகள் அவளைப் பாக்கியவதி என்கிறார்கள். அவளது புருஷனும் அவளைப் பார்த்து புகழுகிறான். இந்த வரிசையில் நாம் அனேகரைப் பார்க்கலாம்.

2. இயேசுவின் தாயாகிய மரியாள்.

பரலோகப் பிதாவின் பரிசுத்த மைந்தன் இவ்வுலகில் மனிதனாக உருவாக வேண்டுமாயின் அவர் அதற்காக தெரிந்து கொள்ளும் ஸ்திரீயும் பரிசுத்தமுள்ளவளாகவே இருக்க வேண்டும். மனிதராகிய நாம் அனைவரும் ஜென்மத்தில் பாவிகளே ஜென்ம பாவத்தில் இருந்து மனிதனை விடுவிக்க ஜென்ம பாவம் இல்லாதவரால் தான் முடியும். மனிதராகிய நாம் கருமத்திலும் பாவிகள் நம்மைக் கரும பாவத்திலிருந்து விடுவிக்க, கரும பாவம் இல்லாதவரால் தான் இயலும். மனிதனை அவனது ஜென்ம, கரும பாவங்களிலிருந்து விடுவிக்க, ஜென்ம, கரும பாவமில்லாத ஒரு ரட்சகர் தேவைப் பட்டது. குருடன் குருடனுக்கு வழிகாட்ட இயலாது. அப்படியே பாவி பாவியை விடுவிக்க இயலாது. இந்த இரட்சகர் ஆதி 3:15-ல் கூறப்பட்டுள்ள ஸ்திரீயின் வித்தாக வரவேண்டும். ஏசாயா 7:14-ல் சொல்லப் பட்டுள்ள வண்ணமாய் கன்னிகையில் உருவாக வேண்டும். குறித்த காலம் வந்த போது இத்தீர்க்க தரிசனங்கள் நிறைவேறலாயின. கன்னிகையான மரியாளும் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதற்கு அடிமையாக கீழ்ப்படிந்தாள். எனவே தான் தேவன் இந்த மரியாளை தெரிந்தெடுத்தார்.

மரியாள் தேவ பக்தியுடன் நியாயப்பிரமாண ஒழுங்குகளைக் கடைபிடித்து, நியாயப் பிரமாணத்துக்கு உட்பட்டு வாழ்ந்திருந்தவள். அவள் யோசேப்புக்கு நியமிக்கப் பட்டிருக்கையில், ஒரு புதிதான ஆழமான முறையில் தேவன் அவளை சந்தித்தார். அவர் தமது சித்தத்தை காபிரியேல் என்னும் தேவதூதன் மூலமாய் அவளுக்குத் தெரியப்பண்ணினார். (லூக் 1:26-38) தேவதூதன் அவளை வாழ்த்தும் போது கிருபை பெற்றவளே' எனவாழ்த்தினன. எனவே அவள் தேவகிருபை பெற்றுக்கொள்ள கூடிய ஒரு பாத்திரமாய் இருந்தாள் என்பது நன்கு புலனாகிறது.

தேவதூதன் மரியாளிடம் வந்து, ''கிருபை பெற்ற

வளே வாழ்க கர்த்தர் உன்னோடு இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய். அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக'' எனக் கூறினான். அப்பொழுது அவள், ''இது எப்படியாகும்? புருஷனை அறியேனே'' என்றாள். அதற்குத் தூதன் ''பரிசுத்தாவி உன்மேல் வரும்; உன்னதமானவருடைய பலம் உன் மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் எனப்படும்'' என்றதோடு, அவளது உறவினளாகிய மலடியாயிருந்த எலிசபெத்தும் ஒரு குமாரனைக் கர்ப்பந்தரித்திருக்கிறாள் என்று கூறினான். ஆகையால் அவளது விசுவாசம் பெருகிற்று. அன்றியும் அவன் அவளிடம், ''தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை'' என்றான். அவள் தேவனோடு நடக்கவும், தேவனுடைய சத்தத்தைக் கேட்கவும், தேவனுக்குக் கீழ்ப்படியவும் பழக்கப்பட்டிராவிடில், சிறிதும் எளிதல்லாத இந்த தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்ளுவது கூடாத காரியமாய் இருந்திருக்கும். அச்சமயத்திலும் மரியாளின் அமைதியும், தன்னடக்கமும், தேவனோடு இணைந்து வாழ்தலும் நன்கு வெளிப்படுகின்றன. அவள் மேசியாவை பற்றிய தீர்க்க தரிசனங்களையும் அறிந்திருக்கவேண்டும். ஆகவே தான் அதினால் தன்னைப்பற்றி பிறர் பலவாறாக பேச நேரிடுமே என்பதை உணர்ந்தும், தேவனிடமுள்ள அசையாத விசுவாசத்தாலும் நம்பிக்கையாலும் தன்னை முழுவதுமாக தேவ சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்து, ''இதோ நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆக்கடவது'' என்று தன்னை அர்ப்பணித்தாள்.

தேவனோடு தொடர்பு கொண்டு அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிந்து நடப்பவர்களுடைய விசுவாசம் பலமானதாகவே இருக்கும். இந்தப்பரிசுத்தமான வெளிப்படுத்தலுக்குப் பின் அவள் தேவனுக்கு பயந்து, அவரது வழிகளில் நடந்த, தனது இனத்தாளாகிய எலிசபெத்தை சந்திக்கச் சென்றாள். அப்பொழுது எலிசபெத் மரியாளைப் பார்த்து, ''ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்

கப்பட்டவள்; உன் கர்ப்பத்தின் கனியும் ஆசீர்வதிக்கப்பட்டது. என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினால் கிடைத்தது. இதோ நீ வாழ்த்தின சத்தம் என் காதில் விழுந்த உடனே, என் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பாய் துள்ளிற்று. விசுவாசித்தவளே பாக்கியவதி, கர்த்தராலே அவளுக்கு சொல்லப்பட்டவைகள் நிறைவேறும்'' என்றாள். அப்பொழுது மரியாளின் விசுவாசம் இன்னும் அதிகமாக பெலப்பட்டு தான் பரிசுத்த ஆவியினாலே பெறப் போகும் குழந்தை, தூதன் சொன்னபடியே தேவனுடைய குமாரன் என்ற நிச்சயம் கொண்டவளாய்த் தேவனை மகிமைப்படுத்தினாள். (லூக் 1:39)

இதற்கிடையில் மரியாளிடம் பேசிய தேவதூதன் நீதிமானாகிய யோசேப்புடனும் பேசினார். கர்த்தருடைய தூதன் யோசேப்புக்குச் சொப்பனத்தில் காணப்பட்டு 'தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளை சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே; அவளிடத்தில் உற்பத்தியாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியினால் உண்டானது. அவள் ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக; ஏனெனில் அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்'' என்றார். (மத் 1:18-25) யோசேப்பும் தேவனுக்குக் கீழ்ப்படிகிறவராய் இருந்ததினால் அவரும் இது தேவனுடைய நடத்துதல் என்றும், தேவனுடைய சித்தம் என்றும் உணர்ந்து மரியாளைச் சேர்த்துக் கொண்டார். பிற்பாடு அந்த பிள்ளையைக் குறித்து தேவன் கூறியவற்றை சாஸ்திரிகளும், மேய்ப்பர்களும் உறுதிப்படுத்தினர். மரியாள் இந்த காரியங்களை எல்லாம் தன் இருதயத்தில் வைத்து சிந்தனைபண்ணினாள். அடுத்து அப்பிள்ளையைக் குறித்து சிமியோனின் மூலம் வந்த வெளிப்பாட்டில் இருந்து அப்பிள்ளையின் ஜீவியம் முடியும் மட்டும் தேவனுடைய சித்தம் எவ்வாறு செயல்படப் போகிறது என்பதும் மரியாளுக்குப் புலனாகிறது. உன் ஆத்துமாவையும் ஒரு

பட்டயம் உருவிப்போகும்'' என்று அவர் கூறியவார்த்தை யும் அவளது இருதயத்தை விட்டு அகலாதிருந்தது.

மரியாள் தனக்குப் பிறந்த குழந்தை தேவனு டையகுமாரன் என்றறிந்திருந்ததினால் இயேசுவை தேவ னுக்குப் பிரியமான மார்க்கத்தில் வளர்க்கத் தவறவில்லை. அவளது ஜெப ஜீவியமும், தேவனுடைய சித்தத்திற்கு அடங்கி நடந்த அச்சூழ்நிலையும் இயேசுவின் ஜெப ஜீவி யத்திற்கும், பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்கும் எற்றதாக இருந்திருக்கவேண்டும். பன்னிரண்டாவது வய தில் நியாயப் பிரமாண முறையின்படியேஅவரைத் தேவால யத்திற்குக் கூட்டிச் சென்றதும், அவர் அவர்களோடு திரும்பி வராது தேவாலயத்திலே போதகர் நடுவில் உட்கார்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்கவும் வினாவவும் செய்ததையும், யோசேப்பும் மரியாளும் கண்டு, இயேசு விடம் கேட்டபோது ''நீங்கள் ஏன் என்னைத் தேடினீர் கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண் டியதென்று அறியீர்களா?'' என்பதையும் நாம் நன்கறி வோம். அச்சமயத்தில் பிறர் அதை அறிய முடியாவிடி னும், மரியாள், ''இந்தச் சங்கதிகளையெல்லாம் தன் இருதயத்திலேயே வைத்துக் கொண்டாள்.'' (லூக் 2:51)

இயேசு பெரியவராகி, தனது ஊழியத்தைத் தொடங்கிய போதுங்கூட, தான் மேசியாவின் தாய் என் பதை நன்கறிந்திருந்தும், அதை வெளிக்காட்டிப் பெருமை கொள்ளாது தாழ்மையுடனேயே நடந்து கொண்டாள். கானாவூர் கலியாண வீட்டில் அவள் அங்குள்ள வேலைக் காரர்களுக்கு, அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதன்படி செய்யுங்கள் என்று கூறினாள். (யோ 2:5-7) இயேசுவின் உத்தம குணத்தையும், ஏழை எளியவர்களி டம் அவர் காட்டிய இரக்கமும் அன்பும், அவளால் மாத்திரமே புரிந்துக் கொள்ள கூடியதாயிருந்தது. அவர் இவ்வுலகில் தமது பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற வந்தவர் என்பதை அவள் நன்கு புரிந்து கொண்டு, தானும் அச்சித்தத்திற்கு அடிபணிய வேண்டும் என்று அறிந்து கொண்டாள். அவருக்கு அவரது விரோதிகளால் ஏற்பட்ட

துன்பங்கள் அவள் உள்ளத்தை வேதனைப் படுத்தியிருக்க வேண்டும். இயேசு பாலகனாய் இருந்த காலத்தில் இவள் அவரைப் பற்றி அதிக சந்தோஷம் அடைந்திருந்தாள். அவர் தமது ஊழியத்தைச் செய்யுங் காலத்தில் இவள் சொல்லி முடியாத அளவு துயரம் அடைந்திருக்க வேண்டும். அவரது சொந்த சகோதரர்களே அவரைப் பைத்தியமென இகழ்ந்தனர். இவற்றையெல்லாம்அவள் பொறுமையுடனேயே தாங்கிக் கொண்டாள்.

தனது மகன் அநியாயமாக குற்றஞ்சாட்டப்பட்டு அநியாயத்தீர்ப்பு பெற்ற போதுங்கூட அந்த அம்மாள் சிறிதும் முறுமுறுப்பில்லாது தாங்காத் துயரத்தின் மத்தியிலும் சாந்தமாகக் காட்சியளித்தாள். சிலுவையை அவர் தூக்கிச் செல்லுங்கால் அவரைப் பின்பற்றிச் சென்ற ஸ்திரீகளுள் இவளும் இருந்தாள். அப்பொழுது அத்தாயார் அடைந்த துயரம் எத்தகையதாயிருந்திருக்கும்! அச்சமயத்திலுங்கூட அவள் அவர் தேவனுடைய சித்தத்தையே நிறைவேற்றுகிறார் என அறிந்திருந்தாள். பின்னர் அவள் தனது மகனின் சிலுவையினடியில் நின்று. அவர் இறுதி மட்டும் தேவனுடைய சித்தத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது அத்தாயின் உள்ளத்தை உறுத்திய வேதனை எத்தகையதாயிருந்திருக்கும் என்பதைச் சற்று சிந்தித்துப்பார்ப்போம்.அந்நிலையில் சிமியோன் அன்று கூறியவாசகமான, ''உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் உருவிப் போகும்'' நிறைவேறுவதை அவள் உணர்ந்திருப்பாள். அப்பொழுதுங்கூட அவள் தன்னையும் முழுமையாக தேவ சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து, அந்த வேதனையை சாந்தத்தோடும், அமைதலோடும் தாங்கிக் கொண்டாள்.

இயேசு மரித்தபின் அவர் தனக்குக்கூறிய கடைசி வார்த்தையின பிரகாரமாய் யோவானைத் தன் மகனாக பாவித்து அவனுடைய வீட்டில் வாழ்ந்து வந்தாள். இயேசுவின் சீசர்களோடு ஜெபத்தில் தரித்திருந்தாள், எனவேதத்தில் பார்க்கிறோம். (அப் 1:14) அது மட்டுமின்றி, அவர் வாக்குத்தத்தம் பண்ணிய பரிசுத்த ஆவியைப் பெறும்படி

காத்திருந்து ஜெபித்த மக்களோடு தானும் ஒரு ஆளாக இருந்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டாள்.

இவ்வாறு தேவனோடு உறவாடி, அவர் திருமைந்தனைப் பெற்ற பாக்கியவதியாகிய மரியாளுங்கூட அவரது பரிசுத்தாவிக்காக காத்திருந்து பெற்றுக் கொண்டாளெனில் கிறிஸ்துவில் பெலனடைய அவரது ஆவியைப் பெற்றுக் கொள்ள வேண்டியது அதிக அவசியமல்லவா? நாமும் இந்த மரியாளைப்போல் நம்மைத் தாழ்த்தி, அவரது அடிமையாகி அவரது சித்தம் நம்மில் செய்யப்பட நம்மை முற்றிலும் ஒப்புக் கொடுப்போமானால் தேவ கிருபை பெற்றவர்களாவோம். தேவனுடைய வார்த்தைகளைக் கேட்டு அவைகளை காத்துக் கொள்வதினால் அதிகபாக்கியவான்களாவோமென்பதில் யாதொரு ஐயமுமில்லை.

பிதாவினுடைய சித்தத்திற்குத் தன்னை பரிபூரணமாக ஒப்புக்கொடுத்த இந்தப் பரிசுத்தத் தாயைப்போல நாமும் தேவ சித்தம் நிறைவேற நமது முழுப்பகுதியையும் அவர் கையில் ஒப்புவித்து ஜீவிப்போம். அவள் பிதாவின் சித்தப்படி தேவகுமாரனை உலகினுள் கொண்டு வந்தாள். நம் வாழ்க்கையில் நாம் அவரை ஏற்றுக்கொண்டு மற்றவர்களுக்கும் அவரது அன்பை பகர்ந்து கொடுக்க நம்மை அர்ப்பணிப்போமாக. அப்படி அவரை அடைந்த தம்முடைய பிள்ளைகளுக்காக அவர் பிதாவைநோக்கி வேண்டுதல் செய்கிறார். (யோ 17:9; ரோமர் 8:26) நமக்காக வேண்டுதல் செய்யும் ஆண்டவர் நாம் மற்றவர்களை அவரது அன்புக்குள் கொண்டு வரும் போது அவர்களுக்காகவும் வேண்டுதல் செய்கிறார் (யோ 17:20 ஏசாயா 45:22 சங் 2:8) விசுவாசத்தினால் கிறிஸ்து மனுஷருக்குள் உருவாகும்படி ஜெபிப்போமாக.

3. சூனேமியாள் (II ராஜாக்கள் 4:8-)

சூனேமியாளின் குடும்ப நிலையை நாம் கவனிக்கும் பொழுது அது கர்த்தருக்குப் பயந்த ஒரு குடும்பமாக இருந்தது. தேவனுடைய மனுஷனாகிய எலிசாவை

அவள் வருந்தித் தன் வீட்டிற்கு அழைத்து வந்தாள். கணவனும் அதை ஆமோதித்திருக்க வேண்டும். அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பக்கூடிய அளவுக்கு அவள் உத்தமியாகவும் குணசாலியாயுமிருந்தாள். அன்றியும் அவள் அத்தேவ மனுஷனுக்கென்று தன் வீட்டில் ஒரு மேலறையைக்கட்டி, அதில் அவனுக்குத் தேவையான யாவற்றையும் வைக்க வேண்டுமென அவள் தன் விருப்பத்தைத் தெரிவித்த போது கணவன் சிறிதும் மறுப்புத் தெரிவிக்கவில்லை. இதே விதமாக இன்றும் அநேக தேவனுடைய பிள்ளைகள் தேவ ஊழியர்களை அழைத்துப் பண்புடன் விசாரித்துப் பராமரித்து வருகிறார்கள்.

இவ்வாறு இருக்குங்கால் எலிசா அந்த விசுவாசக் குடும்பத்திற்கு ஏதாவது செய்ய வேண்டுமெனக் கருதி, அவளைப்பார்த்து, ''நான் உனக்கு ராஜாவிடத்திலாவது, அல்லது சேனாபதியிடத்திலாவது பேச வேண்டுமா?'' எனக் கேட்டான். ஆனால் அந்த உத்தமி தன் இருதயத்தின் ஆழத்தில் பதிந்திருந்த குழந்தை வேண்டுமென்ற ஆசையைக்கூட அவனிடம் தெரிவிக்கவில்லை அந்தபெண் அவ்விதமான ஒருஅடக்கமும் அமைதலுமான சுபாவம்கொண்டிருந்தாள். தான் கனத்துக்குரியவளாயிருந்தும், தேவனுக்கும் தேவனுடைய மனுதனுக்குமே கனத்தை செலுத்தினாள். அவளுடைய இந்த விருப்பத்தைக்கூட எலிசா தன் ஊழியக்காரனான கேயாசியின் மூலமே அறிந்துக் கொள்ள வேண்டியிருந்தது. அதை அறிந்த எலிசா அவளிடம். அவளுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்றான். அவ்விதமே அவளுக்கு ஒரு குமாரன் பிறந்தான்,

அந்தப்பிள்ளை வளர்ந்து தேவகிருபையில் பெலப்பட்டது. ஒருநாள் திடீரென அக்குமாரன் மரித்துப் போனான். உடனே அவள் தேவனுடைய கிருபைக்காக அந்தத் தேவ மனிதனான எலிசாவை நாடிச் சென்றாள். அச்சமயத்திலுங்கூட அவள் தன் கணவனின் அனுமதி பெற்றே சென்றாள். தேவமனிதனும். ''கர்த்தர் இவளது துக்கத்தை எனக்கு மறைத்து விட்டாரே'' என்று சொல்லி,

கேயாசியிடம் தன் தடியைக் கொடுத்து, அதைப் பிள்ளையின் முகத்தின்மீது வைக்கச் சொன்னான். ஆகிலும் அந்தப்பெண் எலிசாவை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டதால், எலிசா அங்கு சென்று, ஜெபித்துப் பிள்ளையின் உயிரைப் பெற்று, உயிருள்ள பிள்ளையை அவளிடம் கொடுத்தான்.

''தீர்க்கதரிசி என்னும் நாமத்தினிமித்தம் தீர்க்க தரிசியை ஏற்றுக்கொள்ளுகிறவன் தீர்க்கதரிசிக்கேற்றபலனை அடைவான்—சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தாலும் அதன் பலனை அடையாமல் போகான் (மத்தேயு 10:41,42) ஆண்டவருடைய பிள்ளைகளைத் தங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்ளும்பொழுது, அம்மக்கள் தங்கள் குறைகள் நீங்கப் பெறுவதுடன் தங்கள் தேவைகளையும் பெற்றுக் கொள்வார்கள். ஆனாலும் தேவனுடைய பிள்ளைகளையே முற்றும் நம்பியிராது, அவர்கள் மூலம் கிரியை செய்கிற தேவனையே நம்பி, அவர் பாதத்தில் அமர்ந்திருந்து ஜெபிப்பார்களாயின், அவர் அவர்களையும் அநேகருக்குப் பயனுள்ள சாட்சிகளாக மாற்றுவார்.

நடக்க முடியாதெனத் தோன்றிய இரு நிகழ்ச்சிகள் மூலம் தேவன் சூனேமியாளின் விசுவாசத்தை வர்த்திக்கப் பண்ணினார். முதலாவது அவளுக்கு ஒரு குமாரன் பிறக்கச் செய்ததினிமித்தமும், அடுத்து மரித்துப்போன அக்குமாரனை உயிர்ப்பிக்கச் செய்ததினிமித்தமும் அவள் விசுவாசம் பெலப்பட்டது. மூன்றாவது ஒரு நிகழ்ச்சியும் அவர்களது விசுவாசத்தை உறுதிப்படுத்த உதவியது. தேசத்திலே கொடிதான பஞ்சம் நேரிட்டபோது, அவள் எலிசாவின் வார்த்தைகளை நம்பி, அவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து, அவள் தன் குடும்பத்துடன் பெலிஸ்தியரின் தேசத்திற்குச் சென்று அங்கு ஏழு வருடங்களை கழித்துப் பின்னர் தன் தேசத்திற்குத் திரும்பி வந்தாள். ராஜா அவள் குடும்பத்தில் நடந்த அற்புதங்களைப்பற்றிக் கேட்டபோது, அவள் விட்டுச் சென்றிருந்த சகல ஆஸ்தி

களையும், அதிலிருந்து கிடைத்த வருமானத்தையும் அவளுக்குக் கிடைக்கும்படிச் செய்தான்.

பிள்ளையில்லாக் குறையையும், மரணத்தையும், பஞ்சத்தையும் அனுபவித்த இப்பெண்மணி, எக்காலத்தும் நாம் தேவனுடைய அடைக்கலத்தை அடையலாம் எனக் கண்டு கொண்டாள். இவ்வாறு சூனேமியாள் அன்பிலும், அறிவிலும், விசுவாசத்திலும் சிறந்து விளங்கினாள். எனவே, நாமும் நமது துன்ப துக்க சமயங்களில் தேவனை நோக்கிப்பார்த்து, அவருக்குக் கீழ்ப்படிவோமானால், அவர் நம்மைப் பெலப்படுத்தி, காத்து, வழிநடத்தி, மகிமைப் படுத்துவார். இந்த சூனேமியாள் எவ்வாறு தேவனுடைய மனுஷனைச் சார்ந்து, அவர் பாதத்தில் விழுந்தாளோ, அதே போல ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் ஆண்டவரைச் சார்ந்து அவர் பாதத்தில் விழுவோம். அதன் மூலம் எண்ணற்ற ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டவர்கள் ஏராளம். நாமும் அவ்வாறே பெற்றுக் கொள்ள ஆண்டவர் நமக்கு உதவி செய்வாராக.

4. யோகெபேத் *(யாத்திராகமம் 2:1-11, 6:20)*

யோகெபேத் மோசே, ஆரோன், மிரியாம் என்பவர்களின் தாய் லேவியின் குடும்பத்தில் பிறந்தவள். தேவ நியமத்தின்படி, லேவியின் குடும்பத்தில் தோன்றிய அம்ரான் என்பவனை விவாகம் பண்ணினாள். இவள் குடும்பப் பெண்களுக்குரிய பாங்கோடு வாழ்ந்து, தன் கணவனுக்குக் கீழ்ப்படிந்து, குணசாலி என்று பெயர் எடுத்ததுமல்லாமல், தேவனுக்குப் பயந்து நடந்து, மற்றவர்கள் முன்னிலையில் அவருக்கு ஒரு சிறந்த சாட்சியாக விளங்கினாள்.

யோசேப்பை அறியாத ஒரு ராஜா எகிப்தில் தோன்றிய போது, அங்குள்ள இஸ்ரவேல் மக்கள் பலுகிப் பெருகிப் பலத்துத் தேசமெங்கும் பரவியிருந்தனர். அவர்கள் மேலும் பெருகாதபடி ஒடுக்க ராஜா பல

உபாயங்களைச் செய்தான். அவன் தன் நாட்டு மருத்துவச்சிகளைக்கொண்டு எபிரெயப் பெண்களுக்குப் பிறக்கும் ஆண் பிள்ளைகளையெல்லாம் கொன்று போடும்படிச்சொன்னான். ஆனால் அவர்கள் தேவனுக்குப் பயந்ததினால், அவ்வாறு செய்யவில்லை. பின்னர் அவன் எபிரெயருக்குப் பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நைல் நதியில் போட்டு விடும்படியானக் கட்டளையைப் பிறப்பித்தான். யோகெபேத்திற்குப் பிறந்த மூன்றாவது குழந்தை திவ்விய சௌந்தரியமுள்ளதாயிருந்ததினால், அவள் அவனை மூன்று மாத காலமளவும் மறைத்து வைத்திருந்தாள். அவளுக்கிருந்த விசுவாசமே அப்படிச் செய்ய அவளைத் தூண்டிற்று (அப்.7:20; எபி.11:23) குழந்தையை நைல் நதியில் எறிந்து விட வேண்டுமே என எண்ணிய போது, அவள் மனம் எவ்வளவு வேதனையுற்றிருக்கும்; அக்குழந்தை மீதுள்ள அன்பினால், அவள் அரச கட்டளையையும் மீறி, மற்ற மக்களுக்கு மறைத்து, அதை மூன்று மாதம்பேணிக் காத்தாள். ஆனால் எத்தனை நாட்கள் தான் பிறர் கண்களுக்கு மறைத்து வைக்க முடியும்? ஆனாலும் தான் தெரிந்து கொண்ட பாத்திரமான அக்குழந்தையின் உயிரைக் காப்பதற்காகத் தேவன் அவளுக்கு ஒரு வழியைக் காட்டினார். அவள் ஒரு நாணற் பெட்டியை எடுத்து தண்ணீர் புகாதபடி அதற்கு உள்ளும் புறமும் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வைத்து, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். அதைக் கண்காணிப்பதற்காகக் குழந்தையின் தமக்கையான மிரியாமை விட்டுச் சென்றாள்.

நதியில் நீராட வந்த பார்வோனின் குமாரத்தி அவ்வழகிய குழந்தையைக் கண்டு அதை வளர்க்க ஆசை கொண்டாள். இதைக் குறிப்பாலறிந்த மிரியாம் அதை வளர்க்க ஒரு தாதியைக் கொண்டு வரலாமா எனக்கேட்டுப் பின் தன் சொந்த தாயையே கூட்டிக் கொண்டு வந்தாள். அவள் தன் குழந்தையை அன்புடன் சீராட்டி, வளர்த்து, அத்துடன் விசுவாசத்தையும் ஊட்டி வந்தாள். குழந்தை

வளர்ந்த பின் அதைப் பார்வோனின் குமாரத்தியிடம் ஒப்புவித்தாள். ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டதால் அவனுக்கு அவள் ''மோசே'' என்று பெயரிட்டாள்.

யோகெபேத் லேவியின் குடும்பத்திலுள்ளவள். எனவே, இயற்கையாகவே அவளிடம் விசுவாசமும், நம்பிக்கையும் இருந்து வந்தது. ஆகையினாலே, அவள் மோசேக்காக தெய்வ சமூகத்தில் மன்றாடி ஜெபித்திருக்கலாம். தேவனுடைய அநாதி தீர்மானத்தின்படியே, தேவனை முகமுகமாய்த் தரிசித்து, இஸ்ரவேல் மக்களை விடுவித்து, அவர்களுக்கு ஒருநியாயப் பிரமாணத்தையும் அருளிய மோசேயைப் பெற்றெடுத்து வளர்ப்பதற்காகத் தேவன் தெரிந்து கொண்ட பாத்திரமே யோசெபேத். எனவே அவளது அன்பையும் விசுவாசத்தையும் நாம் எளிதில் கண்டு கொள்ள முடியும்.

அன்றியும் மற்ற இரு குழந்தைகளாகிய ஆரோனையும், மிரியாமையும் கூட அவள் மகிமையான ஊழியங்களுக்கேற்றவாறே வளர்த்தாள். ஆரோன் ஆசாரியத்துவத்தின் முதல்வனுனன். மிரியாம் தன் ஆடல் பாடல்களால் தேவனைத் துதித்துப்பாடியதுமல்லாது, அவரது சமூகத்தில் ஒரு தீர்க்கதரிசியாகவும் விளங்கினுள்.

விசுவாசத்தால் தேவனது உன்னத ஊழியக்காரனாக மாறிய மோசேயைக் காப்பாற்றிய யோகெபேத்திடமிருந்து, நாம் தேவனைப் பற்றிக் கொள்ளும் விசுவாசத்தை அறிந்துக்கொள்ளலாம். அநீதியுள்ள பார்வோனும், புதிய எகிப்திய சட்டங்கள் போன்ற பல இன்னல்களுக்கும் இடையில், தேவன் தங்களுக்கு உதவி செய்வார் என்ற அசைக்க முடியாத விசுவாசம் உடையவளாயிருந்தாள். தேவன் அவர்களது எதிர்ப்பார்ப்பிற்கு மேலாகவே அதிசயமான பிரகாரமாய் அவர்களைக் காப்பாற்றினுர். களங்கமற்ற மரியாளைத் தனது உலகத் தாயாக ஏற்றுக்கொண்ட கர்த்தர், யோகேபேத்தையும் தனக்குகந்த தாசனுகிய மோசேயைப் பெற்று இஸ்ரவேலுக்கு அளிக்கும் கருவியாக

மாற்றினர். அந்தப் மாளிடம் காணப்பட்ட பூரணதேவ அன்பு, பயத்தைப்புறம்பே தள்ளிற்று. தேவன் மீது பற்று வைக்கும் பொழுது இந்தப் பூரண அன்பு நம்மை ஆக்கிர மித்துக்கொள்ளும். நாமும் கர்த்தரில் பெலப்படுவோம்.

நாம் தேவனிடத்தில் அன்பு கூறும் போது நம்முடைய வாழ்க்கையில்காணப்படும் பிரச்சினைகளுக்கெல்லாம், யோகெபேத்துக்கு மோசேயைக் காப்பாற்ற வழிவகுத்துக் கொடுத்தாற் போல், நமக்கும் போக்கு வழி உண்டாக்கு வார். அதோடு உயர்ந்த, உன்னத அனுபவங்களின் ஊடாக நம்மை நடத்தி அவருடைய திருச்சித்தத்தை நம்மிலே நிறைவேற்றுவார். அவரிடத்தில் அன்பு கூறுகிற அவருடைய பிள்ளைகளாகிய நமக்கு சகலமும் நன்மைக்கேதுவாக நடந்தேறும். இதை நாம் யோகெபேத்தின் வாழ்விலிருந்து அறிந்து கொள்ளலாம். முடிவில் அவர் நமக்கு நித்திய ஜீவனையும் மகிமையையும் அருளச் செய்வார்.

5. யெப்தாவின் மகள் (நியாயாதிபதிகள் 11:30-40)

அமைதிக்கும், பொறுமைக்கும், அன்புக்கும் எடுத்துக்காட்டாக வேதாகமத்தில் விளங்கும் ஒரே மகள் யெப்தாவின் மகளாகும். யெப்தா கீலேயாத் நாட்டில் வசித்த ஓர் பராக்கிரமசாலி. இஸ்ரவேலின் சரிதத்தில் தெபோராளின் காலத்திற்குப் பின் அவர்கள் மறுபடியும் தேவனை விட்டுத் தூரமாய் விலகி அந்நிய தேவர்களைப் பின்பற்றிப் போனார்கள். எனவே, கர்த்தர் அவர்களைப் புறஜாதியாரின் கைகளில் ஒப்புக் கொடுத்தார் (நியாயாதிபதிகள்10:9-18), அவர்களை அப்புறஜாதியார் மிகவும் நெருக்குகையில், இஸ்ரவேல் மக்கள் மனந் திரும்பி மறுபடியுமாகக் கர்த்தரைத் தேடத் தொடங்கினர்.

இந்நிலையில் அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் மக்கள் மீது யுத்தம் பண்ண வந்தனர். அப்பொழுது யெப்தா தன் சகோதரரால் விரட்டப்பட்டு தோப் தோத்திலிருந்தான். கீலேயாத்தின் மூப்பர் அங்கு சென்று,

யுத்தம் நின்ற பின்னருங்கூட அவனே அவர்களுக்குத்தலை வனாயிருக்க வேண்டுமென்ற அவனது நிபந்தனைக்குட் பட்டு, அவனைக்கிலேயாத்திற்கு அழைத்து வந்து, தங்க ளுக்குத் தலைவனாக்கினார்கள். அப்பொழுது யெப்தா தன் காரியங்களையெல்லாம் மிள்பாவிலே கர்த்தரிடத்தில் கூறினான். இவ்வாறு அவன் கர்த்தருடைய ஆசியைப் பெற்று அம்மோன் புத்திரருக்கு எதிராகச் சென்றான். அதற்கு முன்னதாக அவன், ''தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக் கொடுக்க—வே ஒப்புக் கொடுத்தல், நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும் போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவானாலும் அது கர்த்தருக்கு உரியதாகும். அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன்'' என்று ஒரு பொருத்தனை செய்தான். யுத்தத்தில் மிகுந்த வெற்றி கிடைத்தது. இருபது பட்டணங்களையும் முறியடித்தான்.

வீட்டிற்கு வரும் பொழுது அவனது குமாரத்தி சந்தோஷமாய் தம்புறாவாசித்து, நடனமாடிக் கொண்டே அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள். அவள் அவனுக்கு ஒரே பிள்ளை. ஜெயகம்பீரத்தோடும், மகிழ்ச்சியோடும் வந்த யெப்தா அதிர்ச்சியடைந்தான். தன் வஸ்திரங்களைக் கிழித்து, ''ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணுகிறாயே; நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லி விட்டேன், அதை மாற்றக்கூடாது'' என்றான். கர்த்தரிடத்தில் வாயைத் திறந்து சொல்வது எளிது. ஆனால் அதை நிறைவேற்றுவதே முக்கியம். ''உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி, ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்'' (சங்கீதம் 50:14,15) ''நீ தேவனுக்கு ஒரு பொருத்தனை பண்ணிக் கொண்டால், அதைச் செலுத்த தாமதியாதே....நீ நேர்ந்து கொண்டதைச் செய்யாமற் போவதைப் பார்க்கிலும் நேர்ந்து கொள்ளாதிருப்பதே நலம்'' (பிரசங்கி 5:4,5).

தன் தகப்பனது நிலையை உணர்ந்த மகள் தேவனிடத்தில் கொண்ட பயபக்தியினாலும், தன் தந்தையிடம் பூண்ட அன்பினாலும், தகப்பனுக்கு ஆறுதலாக, ''என் தகப்பனே, நீர் கர்த்தரை நோக்கி உம்முடைய வாயைத் திறந்து பேசினீரல்லவோ? அம்மோன் புத்திரராகிய உம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டும் ஜெயத்தைக் கர்த்தர் உமக்குக் கட்டளையிட்டபடியினால், உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும்'' என்றாள். (நியாயாதிபதிகள் 11:30-40) யெப்தா தன் மகளைக் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தில் வளர்த்தபடியால், அவள் கர்த்தருடைய பிள்ளைகள் சொல் தவறாதிருக்க வேண்டுமென்பதை உணர்ந்து, மனப்பூர்வமாய்த் தன்னை ஆண்டவருக்கு ஒப்புக் கொடுத்தாள். அநேக பெற்றோர் தங்கள் மக்கள் வியாதியாயிருக்கையில், அவர்கள் சுகமடைந்தால், அவர்களை தேவனுடைய ஊழியத்திற்கு அனுப்புவதாகப் பொருத்தனை செய்கிறார்கள். ஆனால் பிள்ளைகள் சம்மதிப்பதில்லை. இந்த மகளோ, தன் தகப்பன், தான் செய்த பொருத்தனையை நிறைவேற்றும் பொருட்டு, அவன் மீதுள்ள அன்பால் தன்னையே ஒப்புக்கொடுத்தாள்.

ஆனாலும் அவள் தன் கன்னிமையினிமித்தம் தன் தோழியருடன் துக்கங்கொண்டாட இரண்டு மாதத்தவணை கொடுக்கும் படி கோரினாள். அப்படியே அந்த நாட்கள் நிறைவேறிய பின்னர் அவள் தன் வீட்டிற்குத் திரும்பி, தன்னையே ஜீவபலியாக ஒப்புக் கொடுத்தாள். யெப்தா தன் பொருத்தனையை நிறைவேற்றினாள். பிள்ளை களைக் கர்த்தருக்குப் பிரியமான வழியில் நடத்த வேண் டும். எந்தப் பிள்ளையும் இவ்வளவு பொறுமையுடனும் அன்புடனும் தன் தகப்பன் தனக்காகச் செய்த பொருத் தனையை நிறைவேற்றுவது அரிது வாழ்க்கை நெறியில் சரி எனத் தோன்றியதற்காகத் தன்னையே தியாகம் செய்தாள்.

இந்த யெப்தாவின் மகளைப் போல் ஆண்டவரின் பிள்ளைகளாகிய நாம் பெற்றோருக்கு அடங்கி, தன்

தந்தையின் மீதுள்ள விசுவாசத்தால் அவனது பொருத்தனையை ஏற்றுத் தன்னைத் தியாக பலியாக ஒப்புவித்தது போல், நாமும் அப்பொருத்தனைகளை நிறைவேற்றுவோம். அப்பொழுது ஆண்டவரின் ஆசீர்வாதம் நம் சிரசின் மீதிருக்கும். யெப்தாவின் மகள்இறந்தும் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறாள் அவ்வாறு நாமும் நம்மை ஒப்படைத்தால், நாமும் ஒரு நாள் ஆண்டவரின் மகிமையில் வெளிப்படுவோம்.

6. யோசேப்பின் மனைவி ஆஸ்நாத்

(ஆதியாகமம் 41:36-52)

எகிப்திற்கு அடிமையாக எடுத்துச் செல்லப்பட்ட யோசேப்பு, போத்திபாரின் வீட்டில் உத்தமமாய் நடந்த போதிலும், அநியாயமாகக் குற்றஞ்சாட்டப்பட்டு காவலில் தள்ளப்பட்டான். தமது அநாதி தீர்மானத்தின் படியே இஸ்ரவேலரை பஞ்சத்தினின்று காக்கும்படி தேவன் யோசேப்புக்குப் பரமஞானத்தைக் கொடுத்துப் பார்வோனின் சொப்பனங்களுக்கு அர்த்தப் சொல்லக் கிருபை செய்தார். எனவே பார்வோன் தனது முத்திரை மோதிரத்தை அவனுக்கு அணிவித்து எகிப்து முழுமைக்கும் அவனை அதிகாரியாக்கினான். இவன் இவ்வாறு உயர்ந்த நிலையிலிருக்கும் பொழுதுதான் ஆஸ்நாத் அவனுக்கு மனைவியாகக் கொடுக்கப்பட்டாள்.

ஆஸ்நாத் விக்கிரக ஆராதனைக்காரியாக இருந்த போதிலும், தன் கணவனை விக்கிரக ஆராதனைக்கு அழைத்துச் செல்லவில்லை. தனது கணவனான யோசேப்பின் தெய்வமே ஜீவனுள்ள மெய்யான தேவன் எனக் கண்டடைந்தவளாய், அவரை ஏற்றுக் கொண்டு யோசேப்புக்குச் சிறந்த மனைவியாக வாழ்ந்தாள். அவள் ஒரு குணசாலியான பெண்ணாய் இருந்ததினிமித்தமே அவளது கணவன், 'தேசத்து மூப்பர்களோடே' உயர்ந்த ஸ்தானத்தில் இருக்க முடிந்தது. அவர்களது குடும்ப வாழ்க்கை

அமைதலாயிருந்ததால் தான் யோசேப்பு தன் பணிகளைச் சரிவரச் செய்து முடிக்க முடிந்தது.

அவர்களுக்கு இரு குமாரர்கள் பிறந்தனர். யோசேப்பு ''என் வாழ்க்கையின் வியாகுலங்களையறிந்த ஆண்டவர் எனக்கு ஆசீர்வாதமான கனிகளைக் கொடுத்தார்'' என்று சொல்லி, மூத்த குமாரனுக்கு 'மனாசே' என்றும், ''நான் சிறுமைப்பட்டிருந்த தேசத்தில் தேவன் என்னைப் பலுகப் பண்ணினர்'' என்று சொல்லி இளைய குமாரனுக்கு 'எப்பிராயிம்' என்றும் பெயரிட்டான். ஆஸ்நாத் அந்நிய பெண்ணாக இருந்த போதிலும் எபிரெயப் பெண்களைப் போலவே தன் மக்களை கர்த்தருக்குப் பயப்படும் பயத்திலும், எபிரெய முறைப்படியும் வளர்த்தாள். கர்த்தரிடத்தில் முழு இருதயத்தோடு அன்பு கூரவும், அவருடன் செய்த உடன்படிக்கையை நிறைவேற்றவும் அவள் தன் கணவனின் கருத்தை ஏற்று நடந்தாள்.

இவ்வாறு அவள் தன் அந்தஸ்தை நினையாது, தாழ்மையுடன் செயல்பட்டதாலும், தன் பிள்ளைகளைக் கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் வளர்த்ததாலுமே அக்குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்ட குடும்பமாக விளங்கிற்று. ஆஸ்நாத் கர்த்தருக்குப்பயந்து, தன் புருஷனை மதித்து அவனுக்குக் கீழ்ப்படிந்து, அவனேடு சேர்ந்து தேவனை வழிபட்டாள். அவள் குடும்பம், ''நானும் என் வீட்டாருமோவெனில் கர்த்தரையே சேவிப்போம்'' என்று சொன்ன யோசுவாவின் குடும்பத்தைப்போல் மாற்றப்பட்டது. ''புத்தியுள்ள ஸ்திரீ வீட்டைக் கட்டுகிறாள்'' என்றபடி அவள் தன் வீட்டைக் கட்டினுள். இதை வாசிக்கும் சகோதரிகளே, நீங்களும் உங்கள் கணவன்மாருக்கு எதிர்த்து பேசாது, இந்த ஆஸ்நாத்தைப் போல் அவர்களோடு சேர்ந்து குடும்ப வாழ்க்கை நடத்தும் போது அது ஆசீர்வாதமாக அமையும் அன்றியும் அவளைப் போல் நாமும் கர்த்தருக்குப் பயந்து, அவரது ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அவர் வழியில் முன் செல்லுவோம். அப்பொழுது அவர் நம்மைக் கைவிடவும் மாட்டார். நம்மை விட்டு விலகவும் மாட்டார்.

7. சிபியாள் (II ராஜாக்கள் 12:1)

சிபியாள் அகசியா ராஜாவுக்கு ஒருசிறந்த மனைவியாயிருந்ததுமன்றி, யோவாஸ் ராஜாவுக்கு ஒரு சிறந்த தாயுமாயிருந்தாள். இவள் ஒரு ஜெபிக்கும் தாயாக மற்றவர்களுக்கு முன்மாதிரியாயிருந்தாள். இத்தாயினுடைய ஜெபமும், உண்மையும், நேர்மையுமான வாழ்க்கையும், அவனை தேவனுடைய பிள்ளைகளோடு இணைத்தன. அவள் தனது மகனாகிய யோவாசுக்கும் தேவபக்தியோடு, பெரியோரை மதிக்கும் சுபாவத்தையும் வளர்த்துவந்தாள். ஆகவே தான் யோவாஸ் கர்த்தருக்குப் பயப்படுகிறவராயும், தீர்க்கதரிசிகளை மதிக்கிறவருமாக இஸ்ரவேலை நாற்பது வருடங்கள் அரசாண்டார்.

சிபியாவின் மகனாகிய யோவாசிடம் காணப்பட்ட கர்த்தருக்குப் பயப்படும் பயம் நம்முடைய பிள்ளைகளிடத்தில் காணப்படுகிறதா? யாத்திராகமம் 20:12-ல், ''உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு உன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணுவாயாக'' என்ற வாக்குத்தத்தமுள்ள கற்பனையைப் பார்க்கிறோம். நாம் பிள்ளைகளை வளர்க்கும் முறை சரியாயிருந்தால், பிள்ளைகள் பெற்றோரை மதிப்பதும், அவர்களுக்குக் கீழ்படிவதும் நியாயம் என்றும் தனக்கு அது பிரியமென்றும் கர்த்தர்சொன்ன பிரகாரம், நமது பிள்ளைகள் அவருக்குப் பிரியமாய் வளருவார்கள் (எபேசியா 6:1-3) நீங்களும் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் சிறு வயதிலிருந்தே வளர்ப்பீர்களானால், நிச்சயமாக அப்பிள்ளைகள் வருங்காலத்தில் மகிழ்ச்சியோடு இருப்பார்கள் நீங்களும் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்பீர்கள்.

கொலோசெயர் 3:20 இல் சொல்லப் பட்டுள்ளபடி, பிள்ளைகள் எல்லாக் காரியங்களிலும் கர்த்தருக்குக் கீழ்ப்படிவது உங்கள் கைகளில் தான் உள்ளது. உங்கள் கரங்களில் ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற உங்கள் பிள்ளைகளுக்கு நீங்களே பொறுப்பாளிகள். அருமை தாய்மாரே,

உங்கள் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படுவதற்கு நீங்கள் தடையாயிராமல், அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர, உங்களதுஜெபத்தினாலும், முன்மாதிரியான வாழ்க்கையினாலும் அவர்களைக்கர்த்தரிடம் வழி நடத்துங்கள். குடும்ப ஜெபம், ஆலய ஆராதனை இவற்றில் உங்கள் பிள்ளைகளைப் பங்கேற்கச் செய்யுங்கள். கர்த்தருக்குப் பயப்படும் பயத்திலும் விசுவாசத்திலும் உங்கள் பிள்ளைகளை வளர்த்து, அவர்கள் யோவாசைப் போலஉயர்த்தப்பட உதவுங்கள். அப்பொழுது உங்கள் பிள்ளைகள், ''என் தாயின் ஜெபம் என்னை இந்த ஆழ்ந்த அனுபவத்திற்கு வழி நடத்தியது. அவர்களது விசுவாசம், அன்பு, பொறுமை, ஒழுக்கம் ஆகியவை என்னை ஆண்டவருக்குள் வழி நடத்தியது'' என்று கூறி உங்களை ஆசீர்வதிக்கப்பட்ட தாயாகவும், பாக்கியசாலியாயும் காண்பார்கள்.

ஆனால் உங்கள் பிள்ளைகள் தீயவழியில்செல்லும் பொழுது, அவர்களைத் தீய வழிகளிலிருந்து தடுத்து நிறுத்த வேண்டும். ''ஐந்தில்வளையாதது அறுபதிலும் அடங்காது'' எனவே சிறு வயதிலிருந்தே அவர்கள் திருத்தப்பட வேண்டும். சிபியாவின் மகன் யோவாசைப்போல் உங்கள்பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்படுவதற்கும், உங்களோடு கூட அவர்கள் நித்திய ஜீவனை அடைவதற்கும், அவர்கள்மூலம் தேவன் மகிமைப்படவும், அநேகரை அவர்கள் ஆண்டவரிடம் வழி நடத்தவும் ஊக்கமாக ஜெபியுங்கள்.

8. சலோமே (மத்தேயு 20:20,21)

சலோமே என்பவள் செபதேயுவின் மனைவியும் யாக்கோபு, யோவான் என்பவர்களுக்குத் தாயுமாவாள். இயேசு கிறிஸ்து உலகத்தில் வாழ்ந்த காலத்தில், அவர்கள் குடும்பமாக அவரை ஏற்றுக் கொண்டவர்கள்.

குடும்பத்தில் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொண்ட ஒரு குடும்பமாக அக்குடும்பம் விளங்கியது. யாக்கோபும், யோவானும் கடலோரத்தில் அமர்ந்து, தங்கள் தந்தையாகிய செபதேயுவின் வலையைப் பழுது

பார்த்துக் கொண்டிருந்தனர். இயேசு அவ்விடம் வந்த போது தன்னை பின் செல்லுமாறு அவர்களை அழைத்தார். உடனே அவர்கள் படகையும் வலையையும் விட்டு அவருக்குப்பின் சென்றார்கள். அவர் அவர்களை அழைத்தவுடன்கீழ்படிந்தனர். பெற்றோரும் மறுப்புச் சொன்னதாகத்தெரியவில்லை. இதிலிருந்து சலோமேயின் குடும்பம் தேவனுக்குக் கீழ்ப்படிந்த ஒரு குடும்பம் எனத்தெரிகிறது.

சலோமே தாழ்மையும் தெய்வ பயமும் நிறைந்தவளாயிருந்திருக்க வேண்டும். எனவே தான் அவள் இயேசுவைப் பணிந்து கொண்டாள். தன்னுடைய வேண்டுகோளைத் தாழ்மையுடன் அவருக்குத் தெரியப்படுத்தினாள். அவள் அவரை மேசியாவாகவும்பரமராஜாவுமாகக்கண்டு கொண்டாள். அதனால் தான் அவள் அவர் தமது ராஜ்யத்தில் அரசாளுகையில் தனது மக்களிருவரும் அவரது வலது இடது பக்கங்களில் அமர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டாள்.

இயேசுவை சலோமே பரலோக ராஜ்யத்தின் ராஜா எனக் கண்டறிந்ததுமன்றி, அவரது அன்பை ருசித்தவளாகவுமிருந்தாள். அதனாலேயே அவள் இயேசுவோடு இருந்து அவருக்கு ஊழியம் செய்து வந்தாள். அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டாள். அன்பர் இயேசு சிலுவையில் தொங்குகையில், அவரது சீஷர்கள் அவரை விட்டு ஓடிய வேளையிலுங்கூட, அவள் தனது மகன் யோவானுடன் சிலுவையினடியில் நின்றாள். அதோடு நில்லாது, வாரத்தின் முதல் நாளிலே, அதாவது இயேசுவின் சடலத்தை அடக்கம் செய்த மூன்றாம்நாளிலே அவள் மகதலேனா மரியாளுடனும் மற்றும் பல பெண்களோடும் அவரது சரீரத்திற்குச் சுகந்தவர்க்கமிடும்படியாக கல்லறைக்குச் சென்றாள்.

சலோமே, தனது குடும்பத்துடன் இயேசுவை அண்டினாள். அவளோடு தேவன் பேசினார். அவ்வாறே தேவன் நம்மோடு பேச வேண்டுமானால், நாமும் தேவனது பாதத்தை அண்ட வேண்டும். ஒரு குடும்பமாக

அவரைத் தேடி, யோசுவாவைப் போல், ''நானும் என் வீட்டாருமோவெனில் கர்த்தரையே சேவிப்போம்'' என்று கூற வேண்டும். அப்பொழுது வாக்குத்தத்தம் பண்ணப் பட்ட கானான் தேசத்தை யோசுவா அடைந்தது போல, நாமும் பல ஆசீர்வாதங்களைப் பெறுவதுடன், குடும்பமாகப் பரம கானானுக்குள் பிரவேசிக்கும் பாக்கியத்தையும் அடைவோம். தேவனைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும். அவரைத் தேடுகிறவர்களே, உங்கள் இருதயம் வாழும். அவரைத் தேடுகிறவர்கள் அவரைக் கண்டடைவார்கள்.

மேலும், சலோமே பரலோக ராஜ்யத்தை வாஞ்சிக்கும் ஒரு பெண்ணாகத் திகழ்ந்தாள். அதினால் தான் தான் கேட்பது இன்னதென்று அவளுக்குத் தெளிவாக விளங்காவிடினும், அந்தப் பரலோக ராஜ்யத்தில் தன் குடும்பம் சேரும் என்ற நிச்சயத்துடனேயே, இயேசுவின் இருபக்கங்களிலும் தன் இரு புதல்வர்களும் இடம் பெற வேண்டுமென யாசித்தாள்.

தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிந்து குடும்பமாக இயேசுவைப்பற்றிக் கொண்டு, அன்பினால் அவருக்கு ஊழியம் செய்து, நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ள ஆவலாயிருந்த சலோமேயின் குடும்பத்தை ஆண்டவர் சும்மாவிடவில்லை. அவளுடைய இரு குமாரரும் இயேசுவுக்கு உகந்த சீஷரானார்கள். கிறிஸ்துவின் சாட்சிகளாக விளங்கினார்கள். முதல் இரத்தச் சாட்சியாய் மரித்த அப்போஸ்தலனாகும் பாக்கியத்தைப் பெற்றான். சத்தியவாசகனாகிய யோவான், பரம தரிசனங்களைக் கண்டார். பத்மு தீவுக்கு நாடு கடத்தப் பட்டார். அப்பொழுது வெளிப்படுத்தின சுவிசேஷத்தை அவர் எழுதினார். இயேசு சொன்னபடியே, அவர்களும் அவர் குடித்த பாத்திரத்தில் குடித்து, அவர் பெற்ற ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொண்டனர். இயேசுவின் தாயோடு ஒன்றித்துப் போகும் சிலாக்கியத்தையும் அடைந்தனர்.

ஆகையால் இச்செய்தியை வாசித்துக் கொண்டி க்கும் தேவனுடைய பிள்ளைகளே, உங்கள் குடும்பங்கள் மேயின் குடும்பத்தைப் போல மாறி, இவ்வளவு ளான ஆத்தும நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் பாது பெற தேவனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப் படிந்து, அவர் உங்களைஎதைச்செய்யச் சொல்லுகிறாரோ, அதை செய்யுங்கள். குடும்பமாக தேவனை ஆராதியுங் கள். ர்த்தருக்கு ஊழியஞ் செய்யுங்கள். நித்திய ஜீவனை யடை வாஞ்சையுள்ளவர்களாயிருங்கள். அப்பொழுது மெய்ய கவே தேவன் உங்கள் குடும்பங்களைஆசீர்வதித்து, அவருடைய பிள்ளைகளாக உங்களை மாற்றி, தேவனுக்குச் சாட்சியாக உங்களை எடுத்துநிறுத்துவார். முடிவில், அவர் உங்களுக்கு நித்திய வாழ்வை அளிப்பார். அநேக ஆத்து மாக்களோடு நீங்கள் நித்தியராஜ்யம் வந்து சேரதேவன் கிருபை அளிப்பார்.

៩. யோசேபாள் (II ராஜாக்கள் 11:1-21)

இவள் இஸ்ரவேல் ராஜாவான யோராமின் குமாரத்தி. யோராம் வியாதியாயிருக்கையில், யூதாவின் ராஜாவான அகசியா அவனைக் காணச் சென்றான். அப்பொழுது யெகூ இஸ்ரவேலின் ராஜாவுக்கு விரோத மாய் வந்தான். அகசியா யோராமுடன் சென்றான். அதுவே அவனுக்குக் கெடுதியாய் முடிந்தது. யெகூ யோராமைக் கொன்றதுடன் நில்லாது. யூதாவின் ராஜாவாகிய அகசியாவையும் கொன்றுபோட்டான். இதையறிந்த அகசியாவின் தாயாகிய அத்தாலியாள் எழும்பி ராஜவம்சத்தார் யாவரையும் கொன்று சங்கரித்தாள்.

அப்பொழுது அத்தாலியாளின் மகளும், அக சியாவின் சகோதரியுமான யோசேபாள், கொலையுண்ணப் படுகிற ராஜகுமாரரின் நடுவிலிருந்த அகசியாவின் மகனான யோவாசைக் களவாயெடுத்து வந்து, அவன் கொலலப் படாதபடி, அவனையும் அவன் தாதியையும் அத்தாலியா ளுக்குத் தெரியாமல் பள்ளியறையில் ஒளித்து வைத்தாள்.

யோசேபாள் தேவனுக்குப் பயந்தவளும், அன்பினால் நிறைந்தவளுமாயிருந்தாள். தனது தாயாகிய அத்தாலியாள் செய்வது சரியல்லவென்றும், அது தேவனுக்கு விரோதமான செயல் என்றும் அறிந்ததினால், தனது தாய்க்கும் தெரியாமல் யோவாசை ஒளித்து வைத்தாள். யாராயிருந்தாலும் அவர்கள் நமக்கு நெருங்கிய சொந்தமானவர்களாயிருந்தாலும், நாம் அவர்களோடு சேர்ந்து தீமைக்கு ஒத்துப்போகக்கூடாது. அதை நாம் எதிர்க்கும் மனவலிமை படைத்தவர்களாக விளங்க வேண்டும். யோசேபாளின் ராஜவிசுவாசமும் போற்றத்தக்கதே. நாம் பரம கானானின் நித்திய பிரஜைகளானாலும், இவ்வுலகில் வாழும் வரை நமக்கு மேலான அதிகாரிகளுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்க வேண்டும். ''எந்த மனிதனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக் கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது'' (ரோமர் 13:1).

இவளோடே யோவாஸ் ஆறு வருடங்கள் ஒளித்து வைக்கப்பட்டிருந்தான். இவ்வாறு வருடங்களும், இவள் தாய் ஸ்தானத்திலிருந்து அவனை வளர்த்திருக்க வேண்டும். அவன் பின்னால் ஒரு சிறந்த தேவனுக்குப் பயந்த ஓர் அரசனாகத் திகழ, இவளது அன்பும், அருங்குணங்களும், தேவ பக்தியுமே காரணமாயிருந்திருக்க வேண்டும். யோவாசை ஒரு சிறந்த ராஜாவாக உருவாக்கிய பெருமை யோசேபாளையே சேரும்.

யோசேபாளைப் போலவே நாமும் குணசாலிகளாயிருந்து, தேவனுக்குப் பயப்படுகிற பயத்திலும், அன்பிலும் நமது பிள்ளைகளை வளர்ப்போமானால், அவர்கள் யோவாசைப் போல ஆசீர்வதிக்கப்படுவதோடு, அவன் தன் ஜனத்துக்கு ஆசீர்வாதமாக விளங்கியது போல், அவர்களும் அநேகருக்கு ஆசீர்வாதமாய் விளங்குவார்கள்.

10. மில்காள் (ஆதியாகமம் 24:15)

மில்காள் ஆபிரகாமின் சகோதரனான நாகோரின் மனைவி. ஈசாக்கின் மனைவியான ரெபெக்காளின் தகப்பனான பெத்துவேலின் தாய், இவளைப் பற்றி வேதாகமத்தில் ஒன்றுங் கூறப்படாவிடினும், இவளது சந்ததியார் நடந்து கொண்ட முறையிலிருந்து இவளைப் பற்றி நாம் ஒரு சிறிது அறிந்து கொள்ளலாம்.

ஆபிரகாமின் ஊழியக்காரனான எலெயெசார் தனது எஜமானனின் ஆணைப்படி, ஈசாக்கிற்குப் பெண் தேடி வரும்பொழுது, ஆபிரகாமின் சொற்படியே தேவன் எலெயெசாருக்கு இவ்விடத்தைக் காட்டினார். அவனும் அங்கு சென்று பெண் கேட்கும் நேரத்தில், லாபானும் பெத்துவேலும், ''இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது. உமக்கு நலம் பொலம் ஒன்றும் சொல்லக்கூடாது'' என்று கூறியதுடன், ''கர்த்தர் சொன்னபடியே அவள் உமது எஜமானனுடையகுமாரனுக்குமனைவியாகும்படி அழைத்துச் செல்லுங்கள்'' என்றார்கள்.

இதிலிருந்து இவ்விரு சகோதரரும் தேவனுக்குப் பயந்தவர்களென்றும், தேவ சித்தத்தையறிந்து, அதற்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவர்களென்றும் அறிந்து கொள்ளுகிறோம். இவ்வாறு அவர்கள் விளங்க வேண்டுமாயின், அது அவர்கள் வளர்க்கப்பட்ட விதத்தினாலேயே ஆகும். அன்றியும் அந்த சகோதரர் தமது சகோதரியிடம் காட்டிய அன்பும் வியக்கத்தக்கதே. தாங்களே அவளது விவாகத்தில் முடிவு எடுக்காது, 'அவளது வாய் மொழியைக் கேட்போம்' என்றார்கள். அவளும் தனது சகோதரர் தனக்கு நன்மையேயன்றி தீமையொன்றும் செய்ய மாட்டார்களென்ற நம்பிக்கையில் அவர்களது முடிவுக்கு பூரண சம்மதம் தெரிவித்தாள். எனவே அக்குடும்பம் அன்பினால் கட்டப்பட்ட ஒரு குடும்பமாயிருந்தது.

இவ்வாறே நாமும் நமது பிள்ளைகளை தேவனுக்குப் பயப்படும் விசுவாசத்திலே வளர்த்தால், நமது பிள்ளை

களுக்கு இடையேயும் இவ்வித அன்பு ஏற்படுவதால், நமது குடும்பங்களும் அன்பின் அடிப்படையில் கட்டப்பட்ட ஒரு விசுவாசக் குடும்பமாக விளங்கும். அன்றியும் நாம் அவர்களைத் தேவனுடைய சித்தத்தையறிந்து, அதன்படி நடக்கப்பழக்கினால், ரெபேக்காள் தேவனால் ஆசீர்வதிக்கப் பட்டு, அநேகருக்கு ஆசீர்வாதமாக விளங்கியது போல், நமது பிள்ளைகளும் தேவனால் பலவித ஆசீர்வாதங்களைப் பெறுவதோடு, மற்றவர்களுக்கு முன் மாதிரியாக விளங்கு வதால், அவர்களுக்கு ஆசீர்வாதமாகவும் விளங்குவார்கள்.

11. ரூத்

இஸ்ரவேல் நாட்டில் பஞ்சம் உண்டான போது, பெத்லகேம் ஊரானாகிய எலிமலேக்குதன் மனைவியோடும், இரு குமாரரோடும் மோவாப் தேசத்திற்குச் சென்றான். அங்கு தன் இரு குமாரருக்கும். ஓர்பாள், ரூத் என்ற இரு மோவாபியப் பெண்களைத் திருமணம் செய்து வைத்தான். சிறிது நாட்கள் சென்றபின் அவனும் அவன் குமாரரும் அங்கேயே மரித்து விட்டனர். நகோமி வாழ்வில் கசப்பு நிறைந்தவளானாள். இஸ்ரவேல் நாட்டில் தேவன் பஞ் சத்தை நீக்கி விட்டார் என்று கேள்விப்பட்ட நகோமி தன் சொந்த ஊரான பெத்லகேமுக்குச் செல்ல புறப்பட் டாள். அப்பொழுது அவள் மருமக்களைத் தங்கள் தேசத்துக்குத் திரும்பி போகும்படிச் சொன்னாள். ஓர்பாள் தன் மாமியாரை முத்தமிட்டு பிரிந்து தன் தேசத்துக்குப் போய் விட்டாள். ஆனால் ரூத்தோ தன் மாமியாரை விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டு,'' நான் உம்மை பின்பற்றாமல் உம்மை விட்டுத்திரும்பிப் போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்கு வேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்; நீர் மரணமடையும் இடத் தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப் படுவேன்; மரணமேயல்லாமல், வேறொன்றும் உம்மை விட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்கு சரியாகவும்,

அதற்கு அதிகமாகவும் எனக்குச்செய்யக் கடவர்'' என்றாள் இவ்வகை அன்பைகாண்பது அரிதிலும் அரிது ஒரு மாமியார் எவ்வளவு தான் மருமகளிடம் அன்புச் செலுத்தினாலும் தன் கணவன் இறந்துவிட்டால் மாமியாரை விட்டுப் பிரிந்து விடுவாள். இந்த ரூத்தோ தன் மாமியாரைப் பற்றிக் கொள்ளுவதற்குக்காரணம்; அவளிடமிருந்த அன்பும் தேவபக்தியுமேயாகும். இவள் தன்மாமியாரின் தேவனையே தன் தேவனாகக் கண்டுக் கொண்டிருந்ததால், அவள் தன் நாட்டை விட்டு, நகோமியுடன் வந்தாள். அன்றியும், அவள் நகோமியைத் தன் சொந்த தாயாக பாவித்து, அவளிடம் அன்பு பூண்டு அவளுக்குச்சேவை செய்து வ ததால், ''அ ன் பு அன்பைப் பிறப்பிக்கும்'' என்ற ஆங்கிலேயர் மூதுரைப்படி, நகோமி தன் சொந்த மகள் போல் ரூத்தின் பால்பாசமும், அன்பும், அக்கரையும் உடையவளானாள்.

பெத்லகேமுக்குத்' திரும்பிய பின் நகோமி தன் மருமகளின் நலனில் அக்கரைக் கொண்டாள். ரூத்தும் தன் மாமியாரின் சொற்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தாள். போவாஸின் வயலிலே அவள் வேலை செய்து, நகோமி தனக்குச் சொன்னப்படியெல்லாம் செய்தாள். போவாஸ் ரூத்திடம் ''மகளே நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாயாக நீ தரித்திரரும், ஐசுவரியவான்களுமான வாலிபர்களின் பிறகே போகாததினால், உன் முந்தின நற்குணத்தைப் பார்க்கிலும், உன்பிந்தின நற்குணம் உத்தமமாயிருக்கிறது. இப்போதும் மகளே, நீ பயப்படாதே; உனக்கு வேண்டிய படியெல்லாம் செய்வேன்; நீ குணசாலி என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாரும் அறிவார்கள்'' என்று சொன்னதிலிருந்து, ரூத் ஒரு குணசாலியான ஸ்திரீ என்பது தெளிவாகத் தெரிகிறது.

இவ்வளவுமேன்மையும்இந்த மோவாபிய ஸ்திரீக்கு எங்ஙனம் கிட்டியது? ரூத் இஸ்ரவேலின் தேவனைத் தன் தேவனாக ஏற்றுக் கொண்டு, அவர் வழிகளில் நடந்ததினாலேயாகும். இது போவாஸின் வார்த்தைகளில் வெளிப்படுகிறது. ,போவாஸ் உன் புருஷன் மரணமடைந்த பின்பு,

நீ உன் மாமியாருக்காக செய்ததும், நீ உன் தகப்பனையும் தாயையும், உன் ஜந்ம தேசத்தையும் விட்டு, முன்னே நீ அறியாத ஜனங்களிடத்தில் வந்ததும் எல்லாம் எனக்கு விவரமாய்த் தெரிவிக்கப்பட்டது. உன் செய்கைக்குத்தக்க பலனை கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்கீழ் அடைக்கலமாய் வந்த உனக்கு அவராலே நிறைவான பலன் கிடைப்பதாக'' என்றான். அவள் இவ்வாறு கர்த்தரது செட்டைகளின் கீழ் அடைக்கலம் புகுந்ததினாலேயே அவள் ஆசீர்வதிக்கப்பட்டாள்.

கர்த்தருக்குள் மிகவும் பிரியமான சகோதரியே, வாழ வழியின்றி வறுமையில் தவிக்கின்றீர்களா? பயப்படாதிருங்கள். ஆகாயத்துப் பறவைகளைப் போஷித்த தேவன், ரூத்திற்கு நிறைவான பலன் கிடைக்கச் செய்த தேவன், உங்களையும் போஷிக்க வல்லமையுள்ளவராயிருக்கிறார். அவரை நம்புங்கள். அப்பொழுது அறிவுக்கெட்டாத ஆச்சரியமான காரியங்களைச் செய்வார். உங்களை ஆசீர்வதித்துப் பாக்கியவான்களாக மாற்ற போதுமானவராயிருக்கிறார். எரேமியா 17:7-ல்; ''கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாக கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான்'' என்று வாசிக்கிறோம். ரூத் அவரை நம்பி வந்ததால், அவள் ஆசீர்வதிக்கப்பட்டாள். எனவே, ஆசீர்வதிக்கப்பட்ட மக்களாக வாழ நீங்கள் அவரை நம்புங்கள். அவரை நம்பிய ரூத்தை அவர் மேன்மைப்படுத்தினார். மோவாபியப் பெண்ணாயிருந்த போதிலும், தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து உலகமனைத்திற்கும் இரட்சகராக இருப்பதால், அவளுடைய வம்சத்தில் வந்து பிறந்தார். கர்த்தரை நம்பி, அவரது செட்டைகளின் மறைவில் வந்தடையும் போது, நம்மையும் அவர் ஆசீர்வதித்து உலகெங்குசந்த சாட்சிகளாக மாற்றுவார்.

ரூத் தன் மாமியாரிடம் காட்டிய அன்பு, கர்த்தரின் பார்வையில் விசேஷித்தாகக் காணப்பட்டது. அவள் தன் மாமியாரிடம் காட்டிய அன்பும், பரிவும், தாழ்மையும், கீழ்ப்படிதலும், மிகவும் போற்றத்தக்கதே இதை வாசிக்கும் அருமை தாயே, சகோதரியே, நீங்கள் மாமியாராகவும், மருமக்களுமாக இருக்கலாம். உங்களுக்கிடையிலுள்ள உறவு எப்படிப்பட்டது? ரூத் தன் மாமியாரிடம் நடந்துக் கொண்டது போல, நீங்களும் உங்கள் மாமியாரை மதித்து, நடந்துக் கொள்ளுங்கள். அப்பொழுது, அவர்களும் உங்கள் நலனில் அக்கரைக் கொண்டு, நகோமி ரூத்திற்கு ஒரு நல் வாழ்வு அமைத்துக் கொடுத்தது போல, உங்களுக்கு ஒரு நல்வாழ்வு கிடைக்கப் பாடுபடுவார்கள்.

ரூத், போவாஸின் வயலில் சென்று வேலைசெய்து ஆசீர்வதிக்கப்பட்டாள். அது போல் நாமும் ஆண்டவர் கூறிய, ''அறுப்பு மிகுதி, ஆட்களோ குறைவுத்; அறுப்புக்கு எஜமான் ஆட்களை அனுப்பும் படி வேண்டிக் கொள்ளுங்கள்'' என்ற வார்த்தைகளை நினைவில் வைத்தவர்களாய் ஆண்டவரிடம் வேண்டிக் கொள்ளுவோம். அவரது இந்தக் கட்டளையை நிறைவேற்றுவோம். ஆண்டவரின் வயல் அறுவடைக்கு ஆயத்தமாக உள்ளது. நாம் நமது ஆண்டவரின் வயலில் நம்மாலியன்ற வேலை செய்து, அரிக்கட்டுகளைக் கொண்டு வந்து சேர்த்து, ரூத்தைப் போல சிந்தின மணிகளையும் சேர்ப்போம். அவளைப் போல நற்குணசாலிகளாக வாழ ஆண்டவர் கிருபை செய்வாராக.

அத்தியாயம் III

புத்தியுள்ள ஸ்திரீகள்

''புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப் போடுகிறாள்'' (நீதிமொழிகள் 14:1).

''வீடும் அஸ்தியும், பிதாக்கள் வைக்கிறசுதந்திரம்; புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு'' (நீதிமொழிகள் 19:14)

புத்தியுள்ள ஸ்திரீயினால் ஒரு வீடு கட்டப்படும் அல்லது ஸ்திரப்படும். ஏனெனில் அவள் விவேகமும், சிந்திக்கும் திறனும் பெற்றவளாயிருக்கிறாள். அவள் தன் நலனுக்காகவும், தன்னைச் சேர்ந்தவர்களின் நலனுக்காகவும் சிந்தித்துச் செயலாற்றுகிறாள். அவள் பேச்சிலல்ல, கிரியையிலேயே சாதுரியமுள்ளவளாய் விளங்குகிறாள். இவ்வாறு தங்கள் குடும்பங்கள் இடிந்து போகத் தக்கதான இக்கட்டான நிலையிலுங்கூட, தங்கள் மதியூகத்தால் அவற்றைக் கட்டிக் காத்த சில வேதாகமப் பெண்மணிகள் அதை எவ்வாறு செய்தனர் என்பதைப் பார்ப்போம்.

12. பத்சேபாள் (II சாமுவேல் 11,12 அதிகாரங்கள்)

பத்சேபாள் தாவீதரசனின் ஊழியனான உரியாவின் மனைவி. அவளது பேரெழிலுக்கு அடிமையாகி விட்ட தாவீதரசன் அவளைத் தகாத முறையில் அடைந்தான். இந்தத் தகாத முறையில் உற்பவித்த குழந்தையும் செத்தது. தீர்க்கதரிசியாகிய நாத்தான் மூலம் உணர்த்தப்பட்ட தாவீது கர்த்தரிடத்தில் தன்னைத் தாழ்த்தி, தன் குற்றத்தை உணர்ந்தவனாய், அதை அறிக்கையிட்டு, கர்த்தரிடத்தில் மன்னிப்பைக் கோரி மன்னிப்பை பெற்றுக் கொண்டான். பத்சேபாளுக்குதாவீது மூலம் பிறந்த அடுத்த மகனே சாலோமன். கர்த்தருக்கு

ஒரு ஆலயத்தைக் கட்ட தாவீது நினைத்த போது, கர்த்தர் நாத்தானின் மூலம் தாவீதின் குமாரனாகிய சாலோமோன் தான் அவ்வாலயத்தைக் கட்டுவான் என்றார். தாவீது தன் மகனுக்குச் சாலோமோன் என்று பெயரிட்ட போதிலும், கர்த்தர் நாத்தான் மூலம் அவனுக்குக் ''கர்த்தருக்குப் பிரியமானவன்'' எனப் பொருள் படும் ''பியதிதியா'' என்ற பெயரிட்டார்.

இந்த பத்சேபாள் பல சமயங்களிலும் ஞானமாய் நடந்திருக்கிறாள். தாவீதரசன் அவளைக் கூப்பிட்டனுப்பிய போது, மறுப்பேதும் சொல்லாது சென்றாள். ஒரு வேளை அவன் அரசனாயிருந்ததால் அவன் தன் இச்சையை எவ்வாறேனும் நிறைவேற்றிக் கொள்ளுவான் என்று நினைத்திருக்கலாம். அல்லது தன் கணவனுக்கு ஆபத்து நேரக்கூடும் எனக் கருதியிருக்கவும் மிகவும் புத்திசாலித் தனமாகத் தான் கருவுற்றிருப்பதை தாவீதுக்கு அவள் தெரியப்படுத்தினாள். தன் கணவன் இறந்த பின்னரே தாவீதரசன் விருப்பப்படி அவனது மனைவியானாள். அவனுக்குப் பின் தன் மகனே பட்டத்திற்கு வருவான் என அரசனது ஆணையையும் பெற்றாள்.

ஆகிலும் தாவீது வயது சென்றபோது, அவனது மகன் அதோனியா, ''நான் ராஜா ஆவேன்'' எனக்கூறி, சாலோமோனைத் தவிர தனது மற்ற சகோதரருடன் கூடிச்சென்று தன்னை ராஜாவாக்கிக் கொள்ள முயன்றான். அதை நாத்தான் மூலம் அறிந்த பத்சேபாள், நாத்தான் தனக்குக் கற்பித்தபடியே புத்தியுடன் இயங்கி தாவீதரனிடம் சென்று தன் முறையீட்டைக் கூறி தனது மகனுக்கே ராஜ்ய 'பாரத்தைப் பெற்றுத் தந்தாள்.

இவ்வாறாக நீதிமொழிகள் 14:1-இல் நாம் காண்கிறபடி இந்தப்புத்தியுள்ள பத்சேபாள் தன் வீட்டைக் கட்டிக் கொண்டவளாய்த் திகழ்ந்தாள். தனது மகனின் ராஜ்யபாரத்திற்கு வரவிருந்த தீங்கைத் தன் மதியூகத்தால் மாற்றிப் போட்டாள். அவள் தனது குடும்பத்தை உலகப்பிரகாரமாக மாத்திரம் கட்டிக் கொள்ளவில்லை.

தனது குடும்பத்தைக் கர்த்தருக்குள் கட்டியதாலேயே சாலோமோன் உலகப் பிரசித்தி பெற்ற ஞானியாக விளங்கியதோடு, கர்த்தருக்கு முதல் ஆலயம் கட்டும் பெரும் பேற்றினைப் பெற்றான்.

''புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்'' தேவன் பத்சேபாள் மூலம் தனக்குச் சொந்தமாகத் தாம் தெரிந்துக் கொண்ட தாவீதரசனின் குடும்பத்தைக் கட்டினார். ''கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா'' (சங்கீதம் 127:1) இருதயத்தில் சுத்தமுள்ளவர்களே தேவனைத் தரிசிக்கக் கூடும். எனவே, கர்த்தரைத் தன் இருதயத்தில் ஆண்டவராகக் கொண்டுள்ள ஒரு ஸ்திரீ அவரையே எப்பொழுதும் நோக்கினவளாக, ஜெபத்தினால் தன் புத்தியையும் ஞானத்தையும் தேவனிடமிருந்து பெற்று, தன் குடும்பத்தைக் கட்டுவாள். அதற்கு முன்பதாக அவள் தன்னையே தேவனுக்கு உகந்த ஆலயமாகக் கட்ட வேண்டும். எனவே நாம் மூன்று காரியங்களைச் செய்ய கடமைப்பட்டிருக்கிறோம். முதலாவது கிறிஸ்துவுக்குள் நமது ஜீவியத்தையும், இரண்டாவதாக, அவருக்குள் ஒரு பரிசுத்த குடும்பத்தையும், மூன்றாவது தேவனுடைய ராஜ்யத்தையும் கட்ட வேண்டும். எனவே, நீங்களும் புத்தியுள்ள பெண்களாய் நடந்தால், உங்களை அவருக்கு கந்த ஆலயமாகக் கட்டி, உங்கள் குடும்பங்களையும் அவருக்கு மகிமையாகக் கட்டி எழுப்புவார், அவரது ஆலயத்திலிருந்து எப்பொழுதும் துதி எழும்பும். மட்டுமல்லாமல், உங்கள் பிள்ளைகள் சாலோமோனைப் போல ஞானமுள்ளவர்களாய்மாற முடியும் (II நாளாகமம் 1:7-13, I ராஜாக்கள் 1:10-45 சாலோமோனிலும் பெரியவரான இயேசுவே உங்களிலிருக்கிறார் (மத்.12:42) உலகத்திலிருக்கிறவனிலும், உங்களிலிருக்கிறவர் பெரியவர் (யோ 4:4).

13. அபிகாயில் (I சாமுவேல் 25:1-44)

சவுலிடமிருந்து தப்பியோடிய தாவீது, வனாந்தரமான ஓரிடத்திற்கு வந்தான். அங்கே மாகோன் என்னு

மிடத்தில் நாபால் என்னும் ஒரு மனிதனிருந்தான். அவனுக்குத் திரண்ட ஆஸ்தியிருந்தது. ஆனால் அவன் ஒரு பேலியாளின் மகனாய் இருந்தான். அவன் தன் ஆடுகளை மயிர் கத்தரிக்கக் கர்மேல் பர்வதத்திற்கு வருவதைக் கேள்வியுள்ள தாவீது, அவனிடம் தன் ஆட்களை பத்துப்பேரை தூது அனுப்பித் தாங்கள் கர்மேலில் இருந்தபொழுது எவ்வாறு தனது ஆட்களும் அவனுடைய வேலையாட்களாகிய மேய்ப்பர்களும் பழகினார்கள் என்றும், அதினால் தனக்கும் தனது ஆட்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்யுமாறும் அவனிடம் சொல்லச் சொன்னான். ஆனால் நாபாலோ, ''தாவீது என்பவன் யார்? ஈசாயின் குமாரன் யார்?'' எனக் கூறினதுமல்லாமல், தாவீதையும் அவனது ஆட்களையும் ''எஜமானனை விட்டு ஓடிப்போகும் வேலையாட்கள்'' என ஏளனமாகப் பேசி, உதவி செய்ய மறுத்துவிட்டான். தனது மேய்ப்பர்களின் சொல்லையும் கேட்கவில்லை. இதனால் கடுங்கோபமுற்ற தாவீது, அவனைக் கூண்டோடு அழிக்கும்படியாக நூறு மனிதர்களுடன் புறப்பட்டான்.

அப்பொழுது நாபாலின் வேலைக்காரர்களின் ஒருவன் நடந்தவற்றையெல்லாம் நாபாலின் மனைவியாகிய அபிகாயிலிடம் கூறினான். அன்றியும் தாங்கள் கர்மேல் பர்வதத்தில் இருக்கும் பொழுது தாவீதின் மனிதர் தங்களுக்கு உதவினதையும் எடுத்துக் கூறினான். மேலும் தாவீதின் வெஞ்சினம் எவ்வாறு நாபாலின் குடும்பத்தை நாசமாக்காவல்லது என்பதனையும் எடுத்துச் சொன்னான்.

உடனே, புத்தியுள்ள பெண்ணான அபிகாயில் இந்தத்தீங்கைத் தவிர்க்கத் திட்டமிட்டாள். தனது கணவனாகிய நாபாலுக்கு அறிவிக்காது அவள் இருநூறு அப்பங்களையும், இரண்டு துருத்தி திராட்சை ரசத்தையும், சமைக்கப்பட்ட ஐந்து ஆடுகளையும், ஐந்துபடி வறுத்த பயற்றையும், நூறுகுலை திராட்சப்பழ வற்றலையும், இருநூறு அத்திப்பழ அடைகளையும் ஒரு கழுதையின் மேல் ஏற்றி, வேலைக்காரரின் மூலம் அதை அனுப்பி பின்னால்

அவள் சென்றுள். சமாதானத்தை விரும்பிய அபிகாயில், தாவீதைக் கண்டதும் தன் கழுதையினின்றும் இறங்கி, தரையில் விழுந்து முகங்குப்புறப் பணிந்து, அவன் பாதத்தில் விழுந்து ''நாபால் மதியற்றவன்'' எனக் கூறினாள். அத்துடன் அவள் நில்லாது தனது புத்திக் கூர்மையால் தாவீது கர்த்தருடன் கொண்டிருந்த நெருங்கிய தொடர்பையும், விசுவாசத்தையும் உணர்ந்தவளாய், ''இப்போதும், என் ஆண்டவனே, நீர் இரத்தம் சிந்தவரவும், உம்முடைய கை நீதியைச் சரிக்கட்டவும், கர்த்தர் உமக்கு இடங்கொடுக்கவில்லை என்பதை கர்த்தருடைய ஜீவனைக் கொண்டும் சொல்லுகிறேன்'' எனக் கூறியதுடன் தன்னை மன்னித்துத் தான் கொண்டு வந்த பொருட்களை ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் வேண்டிக் கொண்டாள். அன்றியும் தாவீது விருதாவாய் இரத்தஞ் சிந்தாமலும், பழிவாங்காமலும் இருந்தால், அவனுக்கு அமைதி கிட்டும் என்று சொல்லி அவனைச் சாந்தப்படுத்தினதுமல்லாமல், கர்த்தர் நிச்சயமாக அவனுக்கு நன்மை செய்வார் என்றும் கூறினாள்.

இவ்வாறு அவள் தனது புத்திக் கூர்மையினாலும், நல்லெண்ணத்தாலும், சாந்தத்தாலும் புத்தியாய் நடந்து தாவீதின் கோபத்தை மாற்றினாள். அவளுடைய தாழ்மை தாவீதைக் கவர்ந்தது. தாவீதும் தனது கோபத்தை விடுத்து, மனம் மாறி, அவள் வராதிருக்கும் பட்சத்தில் அவள் குடும்பத்திற்கு எவ்வகை தீங்கு நேர்ந்திருக்கும் என்பதை எடுத்துரைத்தான். பின்னர் அவன் அவள் கொண்டு வந்திருந்த பொருட்களை ஏற்றுக்கொண்டு, ''நீ சமாதானத்தோடே உன் வீட்டுக்குப் போ'' என்றான். இவ்வாறாக அபிகாயில் தான் தேடிவந்த சமாதானத்தை, அவள் தாழ்மையுடனும் சாந்தத்துடனும், சாதுரியத்துடனும் புத்தியாய் நடந்துபெற்றுக் கொண்டாள். இவ்வாறே அருமைத்தாயே, சகோதரியே, உங்கள் குடும்பங்களிலும் சண்டைகள், குழப்பங்கள், சச்சரவுகள் ஏற்படுமாயின், தேவனுடைய பாதத்தில் அவற்றைச் சமர்ப்பித்து, சாந்தத்தோடும், அவர்

கொடுக்கும் ஞானத்தோடும் நடந்து சமாதானத்தை உண்டாக்குங்கள்.

அபிகாயிலின் அகத்தினழகு அவளது முகத்தில் பிரதிபலித்ததால், தாவீது அவள் அழகில் ஈடுபட்டு அவளது சொல்லைக் கேட்டான். இதனால் தான் பரிசுத்த பேதுருவும், ''மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக் கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது'' என்றார் (1 பேதுரு 3:3-5) இப்படிப்பட்ட உள்ளான அலங்காரம் உடையவனாயிருந்ததால் தான், அவளது கணவனான நாபால் இறந்த பின் தாவீது அவளை மணம்புரிய தூது அனுப்பிய போது, ''இதோ நான் உமக்கு அடிமை'' என தன்னைத் தாழ்த்தி அவனுச்கு விடையனுப்பி, அவனுக்கு என்றும் கீழ்ப்படிந்த ஒரு மனைவியாக வாழ்ந்தாள்.

இவ்வாறே பெண்கள் சாந்தமும் அமைதலுமான ஆவியைப் பெற்று, கணவன்மாருக்குக் கீழ்ப்படிந்து, புத்தியுடன் நடந்து கொண்டால், அவர்கள் குடும்பங்களிலும் தெய்வீக சமாதானம் நிலவும் உங்கள் குடும்பங்களில் சமாதானம் உண்டா? இல்லையெனில் இன்றே உங்களைத் தாழ்த்தி, ஆண்டவரின் கிருபையைச் சார்ந்து, அவரைப் பற்றிக் கொள்ளுங்கள். அப்பொழுது உங்கள் குடும்பங்களிலும் கர்த்தர் சமாதானத்தை நிலைநாட்டுவார்.

14. நகோமி (ரூத்தின் புத்தகம்

இஸ்ரவேல் நாட்டில் பஞ்சம் உண்டான போது, எலிமெலேக்கு என்பவன் தன் ஊராகிய பெத்லகேமையும், தனது இனத்தாரையும் விட்டுத் தன் மனைவியாகிய நகோமியுடனும் தன் இரு குமாரர்களுடனும் அந்நிய நாடான மோவாப் தேசத்திற்குச் சென்றான். அங்குள்ள

அந்நிய தேசப் பெண்களை அவர்கள் தங்கள் குமாரருக்கு விவாகம் செய்து வைத்தனர். அங்கே எலிமெலேக்கும் அவனது இரு குமாரர்களும் மரித்தார்கள். நகோமியின் வாழ்க்கை கசப்பானதாயிற்று. கர்த்தர் தம் ஜனத்தைச் சந்தித்து ஆகாரம் கொடுப்பார் என்ற விசுவாசத்தை விட்டு அந்நிய நாட்டிற்குச் சென்றதால் அவளது வேதனைகள் பெருகின.

அவள் இவ்வாறு வேதனையில் தவிக்கும்பொழுது, கர்த்தர் தமது ஜனத்திற்கு ஆகாரம் அளித்தார் என்பதையறிந்து நகோமி தன் சுய தேசத்திற்குத் திரும்ப புறப்பட்டாள். அப்பொழுது அவளது இரு மருமக்களும் அவளைப் பிரிய மனதில்லாதிருந்தனர். இது நகோமியின் உத்தம குணத்தை எடுத்துக்காட்டுவதாகவுள்ளது. தன் மருமக்கள்மீது அவள் எவ்வளவு அன்பு செலுத்தியிருப்பாள்! அவளோ அவர்களைத் திரும்பிப் போய் மோவாபிய வாலிபரை மணம் செய்து கொண்டு சுகமாக வாழும்படிக் கூறினாள். இதுவும் அவள் தன் மருமக்களின் பிற்கால வாழ்வு நலமுறை அமைய வேண்டுமென்ற அவாவுடன் கூறியதேயாகும். அவர்களில் ஓர்பாள் என்னும் ஒரு மருமகள் மிகவும் அழுது, தன் மாமியை முத்தமிட்டுத் தன் பெற்றோரிடம் திரும்பிப் போய் விட்டாள். ஆனால் மற்ற மருமகளாகிய ரூத்தோ அவளை விட மாட்டேன் எனக்கூறி அவளோடு இஸ்ரவேல் நாட்டிற்கு வந்து விட்டாள். நகோமி ரூத்துடன் பெத்லகேமுக்கு வந்த போது ஊரார் அவளைப் பார்த்து ''இவள் நகோமி அல்லவா?'' என்றார்கள் அப்பொழுது அவள் ''சர்வ வல்லவர் எனக்கு மிகுந்த கசப்பைக் கட்டளையிட்டிருக்கிறார்'' ஆகையால் என்னை ''எனக்கு பிரியமானவள்' என்று அர்த்தம் கொள்ளும் நகோமி என்னும் பெயரால் அழைக்காது கசப்பு எனப் பொருள்படும் 'மாரா' என்று அழையுங்கள்'' என்றாள்.

ஆனால் இந்தக் கசப்பான வாழ்வு அதிக நாள் நீடிக்கவில்லை, அவள் தன் கர்த்தரை நம்பித் தன் சுய தேசத்திற்கு வந்த நாள் முதல் அவளது வாழ்வில் ஒரு

திருப்பம் ஏற்பட்டது. போவாஸின் கண்களில் நகோமிக்கும் ரூத்திற்கும் கர்த்தர் தயவு கிடைக்கும்படிச்செய்தார் தனது நெருங்கிய உறவினனான போவாஸ் ரூத்திடம் காட்டிய பரிவை நகோமி கண்டபோது அவள் ரூத்திடம் ''உயிரோடிருக்கிறவர்களுக்கும், மரித்தோருக்கும் தயவு செய்கிற கர்த்தரராலே அவன் ஆசீர்வதிக்கப்படுவானாக'' என்றாள். இவ்வாறு அவள் அச்சமயத்திலும் கர்த்தரையே முன் வைத்ததால் கர்த்தரோடு அவள் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தாள் என அறிகிறோம்.

அவள் கர்த்தர் மீது கொண்ட நம்பிக்கையும் தன் மருமகள் மீது வைத்த அன்பும், போவாஸிடம் அவள் கண்ட நற்பண்புகளும் அவளை விவேகத்துடன் நடந்துக் கொள்ள செய்தது. அவள் ரூத்தை போவாஸின் வயலை விட்டு வேறு எங்கும் சென்று தானியம் சேகரிக்க வேண்டாமென அறிவுரை கூறினாள். ஏனெனில் அவள், போவாஸ் ரூத்தின் பிரச்சினைக்கு ஒரு முடிவு தோன்றும் வரை ஓயமாட்டான் என அறிந்திருந்தாள். இவ்வாறு அவள் சிந்தித்து, விவேகத்துடனும், புத்தியாயும் செயல் பட்டதினால் தன் மருமகளுக்கு ஒரு நல் வாழ்க்கையினை அமைத்துக் கொடுத்தாள். அதன் மூலம் தன் குலம் தழைக்கவும் வழி வகுத்தாள். இக்குலத்தில் தான் நம் இயேசு பிரானும் பிற்காலத்தில் தோன்றினார் (மத்தேயு 1:5)

நகோமி நிறைவுள்ளவளாய் அந்நிய நாட்டிற்குச் சென்றாள். வெறுமையாய் திரும்பி வந்தாள். அவ்வாறே நாம் நம் இயேசுவை விட்டு விலகிச் செல்லும் பொழுது பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும். ஆனால், நாம் அதை உணர்ந்து, மறுபடியும் அவரிடம் வருகையில், நகோமியின் வாழ்வில் ஏற்பட்ட மறுமலர்ச்சிக் கொப்ப கர்த்தர் நம் வாழ்விலும் ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்குவார் விதவையான நகோமியை ஆசீர்வதித்த தேவன் விதவைகளை விசாரிக்கும் தேவனாயிருக்கிறார் அவரது ஆணி கடாவப்பட்ட கரங்களில் உங்களை ஒப்புக்

கொடுத்து, உங்களைத் தாழ்த்தி, உங்கள் உள்ளான நிலைமையை அவரிடம் அறிக்கையிடும் போது, அதற்கேற்ற பலனை அவர் அனுப்புவார். ஆகவே, நாம் எக்காலத்தும் தேவனிடத்தில் நெருங்கி ஜீவித்து, பிறர்பால் அன்பு கொண்டு, புத்தியாய்ச் சகல காரியங்களையும் செய்யும் பொழுது, நகோமி உயர்த்தப் பட்டது போல் நாமும் நிச்சயமாய் உயர்த்தப் படுவோம். இவ்வித ஆசீர்வாதம் உங்களனைவருக்கும் கிடைக்க தேவன் தாமே கிருபை செய்வாராக.

நாகோமியின் வாழ்க்கையைப் பற்றி படித்த தாய்மார்களே, உங்கள் மருமக்களிடம் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிறீர்கள்? நகோமி தன் இரு மருமக்களையும் தன் சொந்த பிள்ளைகளைப் போல் நேசித்தாள். அவர்களிடத்தில் அன்பு கூர்ந்தாள். அவர்கள் நல்வாழ்வுக்கு வழிவகுத்தாள். நீங்கள் உங்கள் மருமக்களின் நலனில் கருத்துள்ளவர்களாய் இருக்கிறீர்களா? அவர்கள் எல்லா நலன்களும் பெற்று வாழ விரும்புகிறீர்களா? அவர்களுக்காகஜெபிக்கிறீர்களா? அவர்களுக்கு நல்வார்த்தைகள் சொல்லுகிறீர்களா? அப்படிச் செய்யா விட்டால் இனிமேலாவது செய்ய முன் வாருங்கள் அப்பொழுது மருமக்கள் மருமக்களாகஅல்ல. உங்கள் பிள்ளைகளாக மாறி விடுவார்கள். உங்கள் வாழ்வில் சமாதானமும், சந்தோஷமும் நிறைந்து வழியும்.

15. புத்தியுள்ள ஒரு ஸ்திரீ

(II சாமுவேல் 20:1-22)

பென்யமீன் கோத்திரத்தில் சேபா என்னும் பேருள்ள பேலியாளின் மனிதன் ஒருவன் இருந்தான் தாவீது அப்சலோமை முறியடித்துத் திரும்பியபோது, அவனை எதிர் கொண்டழைக்க யூதா கோத்திரத்தார் முந்திக் கொண்டனர். இதனால் அவர்களுக்கும் இஸ்ரவேல் மக்களுக்கும் சச்சரவு ஏற்பட்டது. அப்பொழுது தற்செயலாய் அங்கிருந்த சேபா, ''எங்களுக்குத் தாவீதிடத்தில் பங்குமில்லை. ஈசாயின் குமாரனிடத்தில் எங்களுக்குச் சுதந்தரமும் இல்லை; இஸ்ரவேலரே நீங்கள் அவரவர்

தங்கள் கூடாரங்களுக்குத் திரும் போங்கள்'' என்றான். அப்பொழுது இஸ்ரவேல் மக்கள் ாவீதுக்கு விரோதமாக இந்த சேபாவைச் சேர்ந்தனர். யூத மக்கள் அச்சமயம் தாவீதோடு சேர்ந்து, சேனைத்தலைவனானயோவாபுடனும், இந்தசேபாவையும் அவனைச் சார்ந்தவர்களையும் அழிக்கும் படிச் செய்தனர். அவர்கள் பெத்மாக்காவாகிய ஆபேலிலே அவனை முற்றுகை போட்டுப் பட்டணத்திற்கு எதிராகக் கொத்தளம் போட்டார்கள். யோவாபுடன் இருந்த மக்கள் அலங்கத்தை விழப்பண்ணும்படி முயற்சி செய்து கொண்டிருந்தனர்.

அவ்வேளையிலே புத்தியுள்ள ஸ்திரீ ஒருத்திபட்டணத்திலிருந்து சத்தமிட்டு யோவாபைக் கூப்பிட்டு, ''ஆபேலிலே விசாரித்தால் வழக்குத்தீரும் என்பார்கள். இஸ்ரவேலில் நான் சமாதானமும் உண்மையுமுள்ளவளாயிருக்கையில், நீர் இஸ்ரவேலிலே தாய் பட்டணமாயிருக்கிறதை நிர்மூலமாக்கப் பார்க்கிறீரோ? நீர் கர்த்தருடைய சுதந்தரத்தை விழுங்க வேண்டியது என்ன?'' என்றாள். இவ்வாறு அவள் தன் புத்திசாதுரியத்தால் யோவாபின் கடின சிந்தையை அவனுக்கு எடுத்துக் காட்டினாள். யோவாப் உடனே தன் தவறை உணர்ந்தவனாய், ''இப்படி அழிப்பதோ, விழுங்குவதோ என் ஆசை அல்ல, சேபா ராஜாவுக்கு விரோதமாய்த்தன்கையை ஓங்கினான். அவனை மாத்திரம் ஒப்புக்கொடுங்கள். நான் பட்டணத்தை விட்டுப் போய் விடுகிறேன்'' என்றான். அதற்கு அவள் ''இதோ அவன் தலை மதிலின் மேலிருந்து உம்மிடம் போடப்படும்'' என்றாள். பின்னர் அவள் தன் ஜனங்களிடத்தில் ஞானத்தோடு பேசியதால், அவர்கள் சேபாவின் தலையை வெட்டி யோவாபிடத்தில் போட்டார்கள். அப்பொழுது யோவாப் எக்காளம் ஊதி ஜனங்களைத் தங்கள் தங்கள் கூடாரங்களுக்குச் செல்லுமாறு அனுப்பி விட்டான்.

இவ்வாறாக அந்தப் புத்தியுள்ள ஸ்திரீ தன் புத்தியின் வலிமையால் ஒரு பட்டணத்தையும், இஸ்ரவேல் மக்களையும் அழிவினின்று காப்பாற்றினாள். இப்பொழுது

நம் நாட்டிலும், ஏன், உலகம் முழுவதிலுமே கலவரமும், சண்டைகளும், சச்சரவுகளும் ஏற்பட்டுள்ளன. இக்காலத்திலேயும் நாம் நமது வீடுகளிலும், சபைகளிலும், நாட்டிலும், உலகத்திலும் அமைதி நிலவ புத்தியாய் நடந்து ஜெபித்து தேவனில் மறைந்து கொள்வதையே தேவன் விரும்புகிறார். இதை வாசிக்கும் அன்பர்களே, நாமும் இந்தப் புத்தியுள்ள ஸ்திரீயைப்போல சமாதானத்தை விரும்புகிறவர்களாயும், உண்மையுள்ளவர்களாயும் விளங்கி, ''ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன்'' என்ற கர்த்தருடைய வார்த்தைகளுக்கிணங்க அவரை நோக்கிக்கூப்பிட்டு, அவர் அருளும் ஆலோசனையின்படி நடப்போமாக. அதற்காக நாம் நம்மை தத்தம் செய்வோம். அப்பொழுது நம் ஆண்டவர் நம்மை அதிக மகிமையான காரியங்களுக்குப் பயன்படுத்துவார்.

16. சேபாவின் ராஜஸ்திரீ

(1 நாளாகமம் 10:1-12)

''தென் தேசத்து ராஜஸ்திரீ பூமியின் எல்லைகளிலிருந்து சாலொமோனுடைய ஞானத்தைக் கேட்க வந்தாள். இதோ, சாலொமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார். ஆதலால் நியாயத்தீர்ப்பு நாளிலே அந்த ராஜஸ்திரீ இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று இவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவாள்'' (மத்தேயு 12:42)

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, மேலே கூறப்பட்டிருக்கிற வசனம் யாரால், எப்போது, யாருக்கு கூறப்பட்டது என்பதை நீங்கள் யாவரும் நன்றாக அறிவீர்கள். இயேசு இந்த உலகத்தில் சுற்றித் திரிந்த காலத்தில், அவர் மேசியா தானோ என அறிய வந்த வேதபாரகர், பரிசேயர் முதலியவர்களிடம் இயேசு இவ்வார்த்தைகளைக் கூறினார். இதிலிருந்து நியாயத்தீர்ப்பு நாளிலே சேபாவின் ராஜஸ்திரீக்கும் உயிர்த்தெழுதலில் பங்குண்டென்றும், அவள் அவர்கள் மேல் குற்றஞ்சுமத்துவாள் என்றும் அறிகிறோம். இப்பேர்ப்பட்ட மேலான

பாக்கியம் இவளுக்குக் கிடைக்கக் காரணமென்ன என்பதைச் சற்று கவனிப்போம்.

சேபா என்பது தென் அரேபியாவில் செங்கடலின் கிழக்கு ஓரத்திலுள்ள ஒரு நாடு. அந்நாட்டு குடிமக்கள் சூரிய சந்திர வணக்கக்காரர்கள். இவர்களுடைய அரசி தான் அந்த ராஜஸ்திரீ. சாலொமோன் அரசனானபோது, கர்த்தரிடம் ஞானத்தையே கேட்டுப் பெற்றுக் கொண்டான். அவன் கர்த்தரிடம் வேறெதையும் கேளாது, தனது ஜனத்தை நீதியோடு ஆளத்தேவையான ஞானத்தையே கேட்டதால், தேவன் அவனுக்கு அபரிதமான ஞானத்துடன் திரளான ஐசுவரியத்தையும் கொடுத்தார். இந்தச் செய்தி உலகமெங்கும் பரவியது.

சாலொமோனின் கீர்த்தி சேபாவின் ராஜஸ்திரீயின் காதுக்கும் எட்டியது. அவள் சாலொமோனை விடுகதைகளால் சோதிக்கவும், அவனுடன் வர்த்தக உறவுகளை உண்டு பண்ணிக் கொள்ளும் பொருட்டும் அவனைக் காணவந்தாள். சாலொமோன் அவள் போட்ட விடுகதைகளையெல்லாம் விடுவித்தான். ஒன்றையும் விடுவிக்க கூடாமல் போகவில்லை. அவள் சாலொமோனுடைய சகல ஞானத்தையும், அவன் கட்டின அரண்மனையையும், அவன் பந்தியின் போஜனபதார்த்தங்களையும், அவன் ஊழியக்காரரின் வீடுகளையும், அவன் உத்தியோகஸ்தரின் வரிசையையும், அவர்கள் வஸ்திரங்களையும், அவனுடைய பானபாத்திரங்களையும், அவன் கர்த்தருடைய ஆலயத்திற்குள் பிரவேசிக்கும் நடைமண்டபங்களையும் கண்ட போது அவள் ஆச்சரியத்தால் பிரமைக் கொண்டு, ''உம்மை இஸ்ரவேலின் சிங்காசனத்தின் மேல் வைக்க உம்மேல் பிரியங்கொண்ட உம்முடைய தேவனாகிய கர்த்தர் ஸ்தோத்தரிக்கப்படுவாராக; கர்த்தர் இஸ்ரவேலை என்றென்றைக்கும் நேசிக்கிற படியினால், நியாயமும் நீதியும் செய்கிறதற்கு உம்மை ராஜாவாக ஏற்படுத்தினார்'' என்றாள். (I இராஜாக்கள் 1:10-15)

சேபாவின் ராஜஸ்திரீ தேவனை அறியாதவளாகயிருந்தும், அவருடைய மகத்துவத்தையும், செய்கைகளை

யும் பார்த்த மாத்திரத்தில் அவரை ஸ்தோத்தரித்தாள். அருமையான சகோதரியே, தேவன் உன் வாழ்க்கையில் செய்த காரியங்களை நினைத்து அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறீர்களா? அக்காரியங்களையெல்லாம் ஒவ்வொன்ருய் நினைத்து அவரை ஸ்தோத்தரியுங்கள். ஸ்தோத்திரபலியிடுகிறவன் தேவனை மகிமைப்படுத்துகிருன்.

அவள் புத்திசாலித்தனமாக சாலொமோனுக்குத் திரளான வெகுமதிகளைக் கொடுத்தாள். அவள் ராஜாவுக்குப் பொன்னும், இரத்தினங்களும் வழங்கினுள். திரளான கந்தவர்க்கமும் கொடுத்தாள். அவ்வளவு கந்தவர்க்கம் பிற்பாடு ஒருக்காலும் வரவில்லை எனச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் அவள் வாசனை மரங்களையும் கொடுத்தாள். அவற்ருல் சாலொமோன் கர்த்தருடைய ஆலயத்திற்கு தேவையான தூண்களையும், சுரமண்டலங்களையும் செய்வித்தான்.

இவ்வளவு வெகுமதிகளைக் கொடுத்த ராஜஸ்திரீ வெறுமையாகத் திரும்பிப் போகவில்லை. சாலொமோன் அவள் விரும்பிக்கேட்டதையெல்லாம் கொடுத்தான். அநேகமாக அவள் சாலொமோனுடன் தனது உட்கருத்தான வியாபார ஒப்பந்தங்களையும் பெற்றிருக்கக்கூடும் சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனுக்குத் திரளான வெகுமதிகளை அளித்ததால் தான், தான் விருப்பப்பட்டயாவையும் அவனிடமிருந்து பெற்றுக்கொண்டாள். சேபாவின் ராஜஸ்திரீக்கு உண்மையான ஞானத்தின் மேல் இருந்த பற்றே அவளை சாலொமோனின் அரண்மனைக்கு அழைத்துச் சென்றது.

இவ்வாறே நாமும் சகல ஞானத்துக்கும் காரணரான நமது சாலொமோனுகிய கர்த்தரிடம் இழுக்கப்பட்டு அவரது பாதத்திலமர்ந்து, விலையேறப்பெற்ற நமது ஆத்துமாக்களை அவருக்குப் படைப்போமாளுல், நமக்கும் நமதாண்டவர் நாம் விரும்பிக் கேட்கும் யாவற்றையும் அருளிச்செய்வார். அப்படிப்பட்ட கிருபையை தேவன் தாமே நமக்கு அருளிச் செய்வாராக.

17. மோசேயின் மனைவி சிப்போராள்

(யாத்திராகமம் 2:11-23)

மோசே பார்வோன் குமாரத்தியின் மகனாக வளர்ந்து வந்தபோதிலும் அவனுக்குத் தேவன் மீதும், இனத்தார் மீதும் பற்று இருந்து வந்தது. அதனாலேயே மோசே தனது ஜனத்தை இரட்சிக்க காலம் வரும் முன்னேயே ஒரு எகிப்தியனை கொன்றான், அதன் பயனாக அவன் பார்வோனின் கோபத்துக்குள்ளாகி தன் ஜீவன் தப்ப ஓடும் படி நேர்ந்தது. அவன் மீதியான் தேசத்தையடைந்து, அங்கு ஒரு துரவண்டையிலே உட்கார்ந்தான். அப்பொழுது மீதியான் தேசத்து ஆசாரியனான எத்திரோவின் குமாரத்திகள் ஏழு பேர் தங்கள் ஆடுகளை மேய்த்து, பின்னர் அவற்றிற்குத் தண்ணீர் காட்டும்படி துரவண்டை வந்து சேர்ந்தனர். மோசே அவர்களுக்கு உதவி செய்ததால், அவர்கள் சீக்கிரமே வீட்டை அடைந்தனர். எத்திரோ அவர்கள் எவ்வாறு அவ்வளவு சீக்கிரம் வீட்டிற்குத் திரும்பினர் என வினவ, அவர்கள் தங்களுக்கு ஒரு மனிதன் உதவி செய்ததாகக் கூறினர். அப்பொழுது எத்திரோ மோசேயை அழைப்பித்து, அவனைத் தன்னோடு தங்கி விடுமாறு கேட்டான். மோசேயும் அதற்கு இணங்கினான். எத்திரோ தனது மகள் சிப்போராளை மோசேக்கு மனைவியாகக் கொடுத்தான்.

இந்த சிப்போராள் மோசேக்குக் கீழ்ப்படிந்து அவனுக்கு அடங்கி, இனிதாக இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டாள். அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்குக் கெர்சோன் எனப் பெயரிட்டனர். மோசே தன் மாமனாகிய எத்திரோவின் ஆடுகளை மேய்த்து வந்தான். அச்சமயத்தில் முட்செடியில் அக்கினிமயமாக அவனுக்குத் தரிசனம் தந்த கர்த்தர் அவனை இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்கும்படி அழைத்தார். முதலில் அவன் பல சாக்கு போக்குகள் சொல்லிய போதிலும், இறுதியில் கர்த்தருடைய சத்தத்துக்குக் கீழ்ப்படிந்தான். எனவே, அவன் தன் மனைவியுடனும், மகனுடனும் எகிப்து தேசத்துக்குச் சென்றான்.

மோசே இஸ்ரவேலின் வம்சத்தில் லேவியின் குடும்த்தில் பிறந்திருந்த போதிலும், கர்த்தர் ஆபிரகாமோடு செய்த உடன் படிக்கையை மறந்து, தன் மகனுக்கு விருத்தசேதனம் பண்ணுதிருந்தான். ஆகவே, வழியில் அவர்கள் தங்குமிடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொல்லப் பார்த்தார். அந்நிய தேவர்களைச் சேவிக்கும் குடும்பத்தில் பிறந்திருந்த போதிலும், சிப்போராள் தன் மதியூகத்தால் காரணத்தைக் கண்டு பிடித்து, உடனே ஒரு கூர்மையான கல்லினுல் தன் மகனின் நுனித்தோலை விருத்தசேதனம் பண்ணினுள். உடனே கர்த்தர் மோசேயை விட்டு விலகிப் போய் விட்டார். இவ்வாருக அவள் தன் புத்தியைச் சரியாக உபயோகித்ததால் தனது கணவனை மீட்டுத் தன் குடும்பத்தைக் கர்த்தருக்குள் கட்டிக் கொண்டாள்.

கர்த்தருடைய சித்தத்தை உணர்ந்த சிப்போராள் தன் தாய் வீட்டை விட்டு, எகிப்துக்கு தன் கணவனுடன் சென்ருள். இவ்வாருகக் கர்த்தருடைய சித்தம் நிறைவேற அவள் தன் குடும்பத்தையே கர்த்தரின் கைகளில் ஒப்புக் கொடுத்தாள். தன் தந்தை அந்நிய தேவர்களுக்கு ஆசாரியனுக இருந்த போதிலும், தனது கணவனின் தெய்வமே மெய்யான ஜீவனுள்ள தெய்வம் என்றுணர்ந்து, அவனேடு இணைந்து செயல்பட்டுத் தேவனை மகிமைப் படுத்தினுள். அருமையான சகோதரிகளே, நீங்களும் மோசேயின் மனைவியைப் போல் உங்கள் குடும்பங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, இக்கட்டுகள் வரும் போது தேவனுடைய சித்தத்தையறிந்து, அதற்கேற்ப புத்தியுடன் வாழ்வீர்களானுல், நீங்கள் வாலாகாமல் தலையாகவும், கீழாகாமல் மேலாகவும் தேவன் கிருபை செய்வார் வாழ்வின் எல்லா பகுதியிலும் இடங்கொண்டு பெருகுவீர்கள்.

18 யாகேல் (நியாயாதிபதிகள் 4:4-24)

இஸ்ரவேல் மக்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதை செய்ததால், கர்த்தர் அவர்களை

யாபீன் என்னும் கானானிய ராஜாவிடம் விற்றுப் போட்டார். அவன் அவர்களை இருபது வருஷம் ஒடுக்கினான் அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் முறையிட்டனர். கர்த்தர் மனமிரங்கி அவர்களை மீட்க பாராக்கை எழுப்பினார். தெபோராள் என்னும் தீர்க்கதரிசி பாராக்கை, அவன் சிசெராவின் தலைமையில் வந்த கானானியருக்கு விரோதமாய்ப் போகாததற்காகக் கடிந்துக் கொண்டபோது, அவன் அத்தீர்க்கதரிசி தன்னோடு வந்தால் மாத்திரம் போவதாகக் கூறினான். அவளும் அதற்கிசைந்தாள். ஆனால் அவள், ''நான் உன்னோடே நிச்சயமாய் வருவேன்; ஆனாலும் நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது; கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கையில் ஒப்புக் கொடுப்பார்'' என்றாள். கர்த்தர் சிசெராவையும் அவனது சேனையையும் பட்டயக்கருக்கினால் கலங்கடித்தார். சிசெரா கால்நடையாக ஓடிப்போய் கேசியனான ஏபேரின் மனைவி, யாகேலின் கூடாரத்திற்கு வந்தான். அப்பொழுது யாபீனுக்கும், ஏபேரின் வீட்டிற்கும் சமாதானம் உண்டாயிருந்தது, யாகேல், சிசெராவுக்கு எதிர் கொண்டு போய், அவனை உள்ளே அழைத்து வந்து அவனைப் படுக்க வைத்தாள். சிசெரா அவளிடம் தண்ணீர் கேட்டான் அவள் அவனுக்குப் பாலைக் கொடுத்தாள். அவன் களைப்பினால் தூங்கி விட்டான். தாவீதின் ஒரு கவண் கல்லினால் பெலிஸ்தியரின் கையினின்று இஸ்ரவேலை இரட்சித்தக் கர்த்தர் இங்கேயும் அற்ப ஆயுதமான கூடார ஆணியைப் பயன்படுத்தினார். சிசெரா அயர்ந்து தூங்குகையில், ஒரு சுத்தியால் கூடார ஆணியொன்றை யாகேல் அவனது நெற்றியில் அடித்து விட்டாள். அதினால் அவன் செத்துப்போனான். பின்பு அவள் பாராக்குக்கு எதிர்கொண்டு போய், ''நீர் தேடுகிற மனுஷனை நான் காண்பிப்பேன்'' எனக்கூறி, அவனைத் தன் கூடாரத்திற்கு அழைத்துச் சென்று சிசெராவின் உடலைக் காண்பித்தாள்.

இவ்வாறாகக் கர்த்தர் அன்று இஸ்ரவேல் மக்களை யாகேலின் மூலம் இரட்சித்தார். கர்த்தருடைய கரம்

இஸ்ரவேல் மக்களோடிருப்பதை யாகேல் உணர்ந்து, புத்தியாய்ச் செயல்பட்டாள். எனவே, யாகேல் ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவளாய் மாறினாள். சிசெரா தன் சிநேகிதனாயிருந்த போதிலும், இஸ்ரவேலின் தேவனே வல்லமையான தெய்வம் எனக்கண்டறிந்து கொண்டதால், அவரது வல்லமையையும், பாதுகாவலையும் நாடினாள்.

அதுபோலவே, சத்துரு பலவிதமான அக்கினி ஆஸ்திரங்களை எய்து கொண்டிருக்கும் இக்கடைசி நாட்களில், கர்த்தருடையபிள்ளைகளாகியநாம் கர்த்தரிலும் அவரது சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுவோம் (எபேசியர் 6:10-16) (II கொரிந்தியர் 3:17) கர்த்தரின் ஆவி எங்கேயோ, அங்கே விடுதலை உண்டு. எனவே நாமும் துன்பம், துக்கம், கஷ்டங்கள், பிரச்சினைகள், போராட்டங்கள் இவற்றின் மத்தியிலும் கர்த்தருடைய சமூகத்தை நாடுவோம். அவர் நம்மைக் கைவிடமாட்டார். அவர் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் நமது தேவன், நமக்காக யாவற்றையும் செய்து முடிக்க வல்லவர். அவரை நாம் பற்றிக் கொள்ளுவோமாக தேவன் தமது சித்தத்தை நிறைவேற்ற யாகேல் போன்ற பாத்திரங்களை உபயோகித்தார். நாமும் அவ்வாறாக பாத்திரங்களாக அவர் கையில் உபயோகப்பட நம்மையே அவரிடம் ஒப்புவிப்போம். அவரை அவ்வாறு அண்டிக் கொள்ளும் போது நாம் அவரது கைகளில் சிறந்த பாத்திரங்களாக திகழ்வோம்.

19. அக்சாள் (யோசுவா 15:16-19, நியாயாதிபதிகள் 1:12-15)

காலேப் தேவனை விசுவாசித்து, அவரை நம்பி உத்தமமாய் அவரைப் பின்பற்றியவன். கானான்தேசத்தை வேவு பார்த்து நல்ல செய்தி கொண்டு வந்தவர்களில் ஒருவன் அவனுடைய குமாரத்தியே அக்சாள். எனவே, காலேப் தனது பிள்ளைகளையும் தேவனுடைய பாதையில் வழிநடத்தினார். அக்சாள் தன் தகப்பனுடைய வீட்டில்

இருந்த போது, கர்த்தருக்குப் பயந்து நற்குணசாலியாக வாழ்ந்து வந்தாள். யூதா கோத்திரத்தார் கீரியாத் செப்பேர் என்ற தெபீரின் குடிகளுக்கு விரோதமாகப் போனார்கள். அப்பொழுது காலேப், ''கீரியாத் செப் போரைச் சங்காரம் பண்ணி பிடிப்பவனுக்குத் தன் மகள் அக்சாளை மனைவியாகக் கொடுப்பதாக அறிவித்தான், ஒத்னியேல் என்னும் வாலிபன் அவ்வி டத்தைப் பிடித்தான். ஆகையால் அவனுக்கு அக்சாளை விவாகம் பண்ணிக் கொடுத்தான். அவள் தன் கணவனின் வீட்டிற்குச் செல்லும் பொழுது, ''இதுகாறும் நான் என் தகப்பனின் விளை நிலங்களின் பலனைச் சந்தோஷமாய் அனுபவித்து வந்தேன். என் தகப்பன் எனக்குக் கொடுத்தவை வறட்சியான நிலங்கள். எனவே, நான் அவரிடத்தில் செழுமையான நிலங்களையும் கேட்டுப் பெற்றுக் கொள்வேன்'' எனத் தன் கணவனிடம் சொல்லி, அவனது உத்தரவைப் பெற்றுக் கொண்டாள். பின் அவள் தன் கழுதையிலிருந்து இறங்கித் தன் தகப்பனிடத்தில் சென்று அவன் தனக்கு ஓர் ஆசீர் வாதத்தைக் கட்டளையிட வேண்டுமெனக் கேட்டாள். தகப்பன் அவளுக்கு என்ன வேண்டுமெனக் கேட்க, அவள் புத்தியை உபயோகித்து, ''நீர் எனக்குத் தந்த நிலம் வறட்சியானது. எனக்கு ஆகாரத்திற்கு தேவை யான பொருட்களும் தேவை ஆகையால் நீர்ப்பாய்ச்சலான ஒரு இடத்தையும் தாரும்'' எனத் தாழ்மையுடன் வேண்டிக் கொண்டாள். காலேபும் அப்படிப்பட்ட ஒரு நிலத்தை அவளுக்குக் கொடுத்தான்.

அக்சாளிடம் ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய பண்புகளெல்லாம் காணப்பட்டன. விவாகம் முடியும் வரை அவள் தன் தந்தைக்குக் கீழ்ப்படிந்தாள். விவாக மான பின் தன் தந்தையிடம் நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கேட்டு வாங்க அவள் தன் கணவனின் அனு மதியையும் புத்திச்சாலித்தனமாகப் பெற்றாள். அவள் தன் தகப்பன் தனக்கு வறட்சியான நிலத்தைக் கொடுத்து விட்டாரே என முறுமுறுக்கவுமில்லை, கோபப்

படவுமில்லை. ஆனால் சாந்தத்துடனும் தாழ்மையுடனும் நடந்து கொண்டாள். இவள் இவ்வாறாக ஒரு புத்தியுள்ள ஸ்திரீயாகத் திகழ்ந்தாள். தன் கணவனுக்கு ஒரு பெரும் ஈவாக இருந்தாள். அவளால் அவன் குடும்பம் ஆசீர்வாதம் அடைந்தது.

20. செலொப்பியாத்தின் குமாரத்திகள்

(யோசுவா 17:3,4, எண்ணாகமம் 27:1-7)

மனாசேயின் வம்சத்தில் வந்த செலொப்பியாத்தியாவுக்குக் குமாரர்கள் இல்லை. மக்லாள், நோவாள், ஒக்லாள், மில்காள், திர்சாள் என்ற குமாரத்திகள் இருந்தனர். ஆதலால் அவர்கள் தகப்பன் மரணமடைந்த பின் அவர்கள் மோசேயிடம் வந்து, ''எங்கள் தகப்பனுக்கு ஆண் மக்கள் இல்லாததால், அவரது சுதந்தர வீதம் அற்றுப் போகாதபடி எங்கள் தகப்பனின் காணியாட்சியை எங்களுக்குத் தரவேண்டும்'' என்று கேட்டனர். மோசே கர்த்தரிடத்தில் விசாரித்தான். கர்த்தர் மோசேயை நோக்கி, ''செலொப்பியாத்தின் குமாரத்திகள் சொல்லுகிறது சரிதான். அவர்களுக்கு அவர்கள் தகப்பனுடைய சகோதரருக்குள் சுதந்தரம் கொடுக்கப்பட வேண்டும்'' என்றார். இவ்வாறு இப்பெண்கள் புத்தியாய் நடந்து கொண்டதால் அவர்கள் தங்கள் தகப்பனுடைய சுதந்தர வீதத்தை அடைந்தனர்.

இன்று அநேகர் தங்கள் சுதந்தர வீதத்தை நாடுகிறதே இல்லை. ஏசா பயற்றங் கூழை விரும்பி தன் சேஷ்ட புத்திரபாகத்தைத் தன் சகோதரனை யாக்கோபுக்கு விற்றுப் போட்டான். ஏசாவைப்போல் நாம் சீர் கெட்டவர்களாயிருக்கலாகாது. இப்பெண்மணிகள் தங்கள் சுதந்தர வீதத்தை விற்றுப்போடாமல், தங்கள் தகப்பனின் பெயரைத்தாங்கள் நிலை நாட்டி அதைப் பேணிக்காத்தனர். நம்மெல்லாருக்குமே கிறிஸ்து ஒரு சுதந்தர வீதத்தை வைத்துள்ளார். நிலையில்லாத இவ்வுலக பொருட்களுக்காக நாம் நமது நித்திய சுதந்தரத்தை இழந்து போகாது இப்பெண்மணிகளைப்போல, அதை அடைந்து கொள்ள ஆசித்து

அதைப்பெற்றுக் கொள்ள முயல்வோம். ஏசா தன் சுதந்தரத்தை அசட்டை செய்தான். பின்னர் கண்ணீர் விட்டழுதும், கவலையோடு தேடியும் அதை அடைய முடியாது போனான். (எபிரெயர் 12:15,16) எனவே, நாமும் எச்சரிப்புடனும், விழிப்புடனும், விவேகத்துடனும், புத்தியுடனும் நடந்து அப்பெண்மணிகளைப்போல், நமது பரம தகப்பன் நமக்காக வைத்திருக்கும் அந்த நித்திய ராஜ்யத்தையடைந்து, அவருடன் வாழத்தக்கதாக, இவ்வுலகிலேயே நம் இரட்சகர் நமக்குச் சம்பாதித்த இரட்சிப்பைப் பெற்று அவருக்கு மகிமையாக வாழக் கர்த்தர் கிருபை செய்வாராக.

21. தெக்கோவா ஸ்திரீ (2 சாமுவேல் 14:1-33)

தன்னுடைய சகோதரியாகிய தாமாரை அம்னோன் கேவலமாக நடத்தியதால் வெகுண்டெழுந்த அப்சலோம் சமயம் பார்த்து அவனைக் கொன்றுவிட்டான். தாவீது ராஜா இதையறிந்த பொழுது, தன் மகனுக்காக மிகவும் துக்கித்துக் கொண்டிருந்தான். அப்சலோம் தாவீதுக்குப் பயந்து போய் கேசூருக்கு ஓடிப்போய் மூன்று வருஷம் அங்கே தங்கினான். அவனைத் திரும்ப அழைக்க தாவீது விரும்பவில்லை. இதனையறிந்த யோவாப் தெக்கோவா ஊரிலுள்ள புத்தியுள்ள ஒரு ஸ்திரீயைத் தெரிந்தெடுத்து, அவளுக்குத் துக்கவஸ்திரம்தரிப்பித்து ராஜாவிடம் அனுப்பினான். அவள் ராஜாவிடம் சென்று, ''நான் ஒரு விதவை. எனக்கு இரண்டு குமாரர்கள் இருந்தனர். ஒருவன் மற்றொருவனைக் கொலை செய்து விட்டான். இப்பொழுது வம்சத்தார் யாவரும் அடியாளுக்கு விரோதமாய் எழும்பி, 'உன்னுடைய உயிருள்ள குமாரனை ஒப்புவி. தன் சகோதரனைக்கொன்று போட்டவனைப் பழிவாங்க வேண்டும்' என்றார்கள். இப்படியாக என் கணவனுக்குப் பேரும் நீதியும் உலகில் இல்லாதபடி, எனக்கு இன்னும் மீதியாயிருக்கிற ஒரு பொறியையும் அவித்துப்போட மனதாயிருக்கிறார்கள்'' என்றாள். ராஜா அவளிடம், ''நீ உன் வீட்டுக்குப்போ, நான் உன் காரியத்தைக் குறித்து ஆத்

தரவு கொடுப்பேன்'' என்றான். அவள், ''இந்தப் பழி ராஜாவின் மீதும் அவர் சிங்காசனம் மீதும் விழாதபடி, என் மீதும், என் தகப்பன்வீட்டின் மீதும் ஒரு தலைமயிர்கூட தரையில் விழுவதில்லை என்று உத்தரவாதம் கொடுத்தான்.

அப்பொழுது அந்த ஸ்திரீ, ''அப்படியானால் நீர் துரத்துண்ட குமாரனை இன்னும் அழைக்காததினால், ராஜா இப்பொழுது சொன்ன வார்த்தையினால் குற்றமுள்ளவரைப் போலிருக்கிறார். நாம் மரிப்பது நிச்சயம் திரும்பச் சேர்க்கப்படக்கூடாதபடி, தரையிலே சிதறுகிற தண்ணீரைப் போலிருக்கிறோம். தேவன் துரத்துண்டவனை அழிக்காது. அவன் முற்றிலும் தம்மை விட்டு விலக்கப் படாதிருக்கும் நினைவுகளை நினைக்கிறார். எனக்கு ஜனங்கள் பயமுண்டாக்கியதால் நான் இங்கே வந்தேன். ராஜா நிச்சயமாய் எனக்கு நீதி செய்து, என்னையும் என் குமாரனையும் தேவனுடைய சுதந்தரத்திற்குப் புறம்பாக்கி, அழிக்க நினைக்கிற மனிதனுடைய கைகளுக்கு என்னை நீங்கலாக்க ராஜா கேட்பார். அது எனக்கு ஆறுதலாயிருக்குமென எண்ணினேன். நீரோ தேவ தூதனைப் போலிருக்கிறீர். கர்த்தர் இதற்காக உம்மோடு கூட இருக்கிறார்'' என்றாள். ராஜா இதைக் கேட்டபொழுது, அதன் பொருளையுணர்ந்து, யோவாபின் கை பின்னணியிருப்பதை அறிந்தவனாய் அந்த ஸ்திரீயிடம், இதிலெல்லாம் யோவாப் உனக்கு உடந்தை தானே,'' எனக் கேட்டான். அப்பொழுது அவள் உண்மையைக் கூறினாள். ராஜா யோவாபை அழைத்து அப்சலோமைக் கூட்டிக் கொண்டு வரும் படிக்கூறினான்.

யோவாப் இவளை ஒரு புத்தியுள்ள ஸ்திரீயாகக் கண்டான். அவளும் அவ்வாறே யோவாபுடன் இணைந்து, தாவீதுக்கும் அவனது குமாரன் அப்சலோமுக்குமிடையில் சமாதானம் உண்டுபண்ணும் முயற்சியில் ஈடுபட்டாள். ''சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் எனப்படுவார்கள்'' (மத்தேயு 5:9) சமாதானம் உண்டாகும் பொழுது அங்கு மன்னிப்பும் கிட்டுகிறது. அந்த ஸ்திரீ தாவீதிடம் யோவாப் சொன்னபடியே மிகவும் விவேகம

ராயும், புத்திசாலித்தனத்துடனும் நடந்து, தாவீதின் தவறைச் சாதுரியமாக எடுத்துக்காட்டி, அவனது கோபத்தைத் தணித்து, மகனை மன்னித்து ஏற்றுக் கொள்ளும் படிச் செய்தாள். இக்காலத்தில் அநேகர் ஒருவருடைய தவறுதல்களை மிகைப்படுத்தி, ஒருவருக்கொருவர் தீதானவைகளைப் பேசி, சமாதானத்தைக் குலைக்கும் செயலில் ஈடுபடுவதைக் காணலாம். ஆனல் சமாதானத்துக்குக் காரணராகிய தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், சமாதானத்தை வாஞ்சிக்கிறவர்களாய், ஒருவர் தப்பிதத்தை மற்றவர் மன்னித்து சமாதானமாய் வாழ்வதோடு, சமாதானமின்றி வாழும் மக்களுக்கிடையில் சமாதானத்தைப் பரப்புவோமாக. அப்பொழுது சமாதானத்தின் தேவனுன நம் பிதா நம் இதயங்களில் தமது தெய்வீக சமாதானத்தை மேலும் மேலும் அருளி நம்மை ஆசீர்வதிப்பார்.

22. பாபிலோனிய ராஜஸ்திரீ (தானியேல் 5:1–3)

பெல்ஷாத்சார் என்னும் பாபிலோன் ராஜா ஆயிரம் பேருக்கு விருந்து பண்ணினுன். அவர்கள் எருசலேமிலுள்ள தேவனுடையவீடாகிய ஆலயத்திலிருந்து எடுக்கப்பட்ட பொற்பாத்திரங்களை மது அருந்த உபயோகித்தனர். அவர்கள் குடித்து, வெறித்து, அந்நிய தேவர்களைப் புகழ்ந்தார்கள். அப்பொழுது மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக ராஜ அரண்மனையில் சாந்து பூசப்பட்ட சுவரில் எழுதிற்று. அதைக்கண்ட ராஜா திகிலுற்றுக் கலங்கினுன். தேசத்திலுள்ள சகல ஞானிகளையும், மந்திரவித்தைக் காரரையும், ஜோசியரையும், குறிசொல்லுகிறவர்களையும் ராஜா அழைப்பித்து அந்த எழுத்துக்களை வாசித்துப் பொருள் சொல்லும் படியாகக் கூறினுன். ஒருவராலும் அதைவாசிக்கவோ பொருள் சொல்லவோ முடியவில்லை, எனவே, ராஜா மேலும் கலக்கமுற்றுன். அவனேடிருந்த பிரபுக்களும் திகிலடைந்தனர்.

அதனையறிந்த ராஜாத்தி விருந்து சாலைக்குள் நுழைந்து, ''ராஜாவே, நீர் வாழ்க. உமது நினைவுகள்

உம்மைக் கலங்கவிட வேண்டாம். உம்முடைய ராஜ்யத்திலே ஒரு புருஷன் இருக்கிறான், அவனுக்குள் பரிசுத்த தேவர்களுடைய ஆவி இருக்கிறது; உம்முடைய பிதாவின் நாட்களில் அவனுக்கிருந்த ஞானத்தைக் கண்டு அவனை அவர் கல்தேயருக்கும், ஜோசியருக்கும், குறிச்சொல்லுகிறவர்களுக்கும் அதிபதியாக வைத்தார். அவனுள் வெளிச்சமும், விவேகமும், தேவர்களுக்கொத்த ஞானமும் உண்டு. சொப்பனங்களின் பலனைத் தெரிவிக்கவும், புதைப்பொருட்களை வெளிப்படுத்தவும் தேவையான அறிவும், விஷேசித்த ஆவியும் உண்டு; அவனை ராஜா அழைப்பாராக என்றாள். அவ்வாறே தானியேல் அழைக்கப்பட்டான். அவன் அவ்வெழுத்துக்களை வாசித்து, அதின் அர்த்தத்தையும் கூறினான்.

ராஜாவாகிய பெல்ஷாத்சார் கலங்கித் தவிக்கும் அவ்வேளையிலே ராஜாத்தி அவன் கலக்கத்தை நீக்க முற்பட்டாள். புத்தியோடு செயல் பட்டாள். தானியேலுக்குள் உன்னதமான தேவனின் ஆவி இருந்தது என்பதை அறிந்துகொண்டாள். விவேகத்துடன் அதை ராஜாவுக்குத் தெரியப் படுத்தினாள். தானியேலுக்குள் வெளிச்சம் இருந்தது என்றாள், இந்த வெளிச்சம் அவனுக்குள்ளிருந்த ஜீவனுள்ள தேவனின் ஆவியின் பிரதிபலிப்பே. இதையும் அவள் புரிந்து கொண்டாள். இவ்விதமாக அவள் தானியேலின் உன்னத லட்சணங்களை உணர்ந்து கொண்டதால், ராஜாவின் கலக்கத்தை நீக்க சரியான வழியையும் கூறினாள். நாமும் அவ்வாறே மனிதனுக்குள்ளிருக்கும் ஆவியின் தன்மையைப் பகுத்தறிந்து கஷ்டப்படுவோரையும், துன்பம் துக்கம் அனுபவிப்பவர்களையும், தேவ ஆவியால் நிரப்பப்பட்ட தேவனுடைய பிள்ளைகளிடம் நடத்திச்சென்று, அவர்கள் சமாதானமும், விடுதலையும் அடைய வழிவகுப்போமாக. கர்த்தரின் அன்பை அவர்களுக்குக் கொடுப்போம். அவர்கள் தவறை அவர்களுக்கு எடுத்துக் காட்டி, ஆண்டவரின் வார்த்தைகளை அன்போடு சொல்லி, ஜீவிக்கிற ஆண்டவருக்கு நேராக அவர்களை வழி நடத்த ஆண்டவர் நமக்கு உதவி செய்வாராக.

அத்தியாயம் IV

விசுவாசித்த ஸ்திரீகள்

''விசுவாசித்தவளே பாக்கியவதி'' விசுவாசம் தேவனுடைய பிள்ளைகளுக்கும், ஏன், எல்லா மனிதருக்குமே எவ்வளவு தேவை என்பதை நாம் அறிவோம் விசுவாசமே நமது இரட்சிப்பின் அடிப்படை விசுவாசத்தின் மூலமே நாம் தேவனிடத்திலிருந்து பலவிதமான ஆவிக்குரிய நன்மைகளையும், சரீரத்தேவைகளையும் கேட்டுப் பெற்றுக்கொள்ள முடியும். விசுவாசமே சபைக் கட்டப்படுகிற அடிக்கல். இப்படிப்பட்ட பலத்த விசுவாசம் அநேகப் பெண்களிடம் காணப்பட்டதை வேதத்தில் பார்க்கிறோம் அவற்றைச் சற்று ஆராய்வோம்

23. நாகமானின் மனைவி

(II ராஜாக்கள் 5:1-19)

சீரியா தேசத்து ராஜாவின் படைத் தலைவனாகிய நாகமான் மகாபெரிய வீரனாயிருந்தான். ஆனால் அவன் ஒரு குஷ்டரோகியாயிருந்தான். இஸ்ரவேல் தேசத்திலிருந்துசிறைபிடித்து வந்த ஒரு பெண்ணை அவன் தனதுமனைவிக்கு பணிவிடை செய்யுமாறு வைத்திருந்தான். அவள் தன் நாச்சியாரைப் பார்த்து, ''என் ஆண்டவன் சமாரியாவிலிருக்கிற தீர்க்கதரிசிகளிடத்தில் போவாரானால் நலமாயிருக்கும்; அவர் இவருடைய குஷ்டரோகத்தை நீக்கிவிடுவார்'' என்றான்.

நாகமானின் மனைவி சீரியா தேசத்தவள். விக்கிரக ஆராதனை செய்து வருபவள் அந்தச் சிறுபெண் அவளதுஅடிமைஎன்ற போதிலும் அவளது வார்த்தைக்கு, மதிப்புக்கொடுத்தாள். நாகமான்படைத்தலைவன் எனவே, அவனது செல்வாக்கு மிகவும் உயர்ந்ததாயிருந்தது. அவ்வாறேஅவன் தனவந்தனாகவும் இருந்தான். அவன் பல

வைத்தியர்களிடம் வைத்தியம் செய்தும் அவனுக்கு விடுதலை கிடைக்கவில்லை. ஆகவே, நம்பிக்கை இழந்த நிலையில் அவள் செவி கொடுத்தாள் அப்பெண் தனக்கு அடிமையாயிருந்துங் கூட, அவள் சொல்லைக் கேட்டதினால் நிச்சயமாகவே அவள் தன் பணிப் பெண் மீது அன்பும், நம்பிக்கையும் கொண்டிருக்க வேண்டும். அதுமட்டுமல்லாது, அவள் ஒரு பணிப்பெண் தானே என அசட்டைப் பண்ணாமல் தன்னையும் தாழ்த்தி, தன் கணவன் மீது கொண்ட அன்பினால், அவனுக்கு அதைத் தெரிவித்தாள்.

இவ்வாறு நாகமானின் மனைவி தன் பணிப் பெண்ணை அலட்சியம் செய்யாது, அவளது அன்பின் வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து, கர்த்தர் மீது விசுவாசம வைததுத் தன் கணவனுக்குச் செவ்வையான வழியைக காட்டியதாலேயே, தனது கணவனின் குஷ்டரோகம் நீங்கப் பெறும் பாக்கியம் பெற்றாள். அவ்வாறே பாவக்குஷ்டத்தினால் வாடும் பல மக்களை அதைத் தீர்த்து வைக்க, பாவப் பரிகாரியான கிறிஸ்துவினிடம் நாம் வழி நடத்தும் போது, அவர்கள் விடுதலை அடைந்து சமாதானம் பெறுவதைக் கண்டு நாம் மகிழ்ச்சியடையலாம். தேவனுடைய கிருபையையும் ஆசீர்வாதத்தையும் அதன் மூலம் அடைந்து கொள்ளலாம்.

நாகமானின் வேலைக்காரியின் வார்த்தை நிமித்தம் நாகமான் வீட்டிற்கு இரட்சிப்பும் சுகமும் கிடைத்தது. நாகமான் தன் வழக்கமான விக்கிரக ஆராதனையை விட்டான். தேவனை விசுவாசித்து அவரை பற்றிக் கொண்டான். இதை வாசிக்கும் தேவனுடைய அருமையான பிள்ளைகளே, இந்த நாகமானின் குடும்பத்தார் ஆண்டவரின் வார்த்தையை ஏற்றுக் கொண்டது போல, எந்நிலைமையிலிருந்தாலும், ஆண்டவரை விசுவாசித்து, அவரை நம்பி வாருங்கள். எந்நிலைமையிலும் அவர் உங்களை விடுவிப்பார். உங்களை வியாதியிலிருந்தும், பிசாசின் கட்டிலிருந்தும், பாவப்பிடியிலிருந்தும் விடுவித்து இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்.

நாகமானின் மனைவி, தன் அடிமைப் பெண்ணிடம் அன்புடனும், அனுதாபத்துடனும் நடந்து கொண்டாள். ''அன்பு அன்பைப் பிறப்பிக்கும்'' என்றவாறு அப் பெண்ணும் தன் எஜமானனிடத்தும், நாச்சியாரிடமும் அன்பு கொண்டாள். இன்றைக்கு நாம் அநேக வீடுகளில் வேலைக்காரப் பெண்களைப் பார்க்கிறோம். நம் வீடுகளிலும் அவர்களை வைத்திருக்கிறோம். அவர்களை நாம் எவ்வாறு நடத்துகிறோம்? பல வீடுகளில் சிறு பெண்களை முழு நேர வேலைக்கு வைத்துக் கொள்ளுகிறார்கள். அவர்களுக்கு உண்ண சரியான உணவு கொடுப்பதில்லை. அதனால் அவர்கள் அவ்வீட்டிலுள்ள தின்பண்டங்கள் மீது ஆசை வைத்து அதைத் திருட ஆரம்பிக்கிறார்கள். ஆனால் நாம் இந்த நாகமானின் மனைவியைப் போல் அவர்களைப் பட்சமுடன் நடத்தினால் அவர்கள் என்றைக்கும் நமக்கு விசுவாசமுள்ளவர்களாக நடப்பார்கள். தன் எஜமான னாகிய பிலேமோனை விட்டு ஓடிப் போன ஓநேசிமு பவுலடி யாரிடம் வந்து, மனந்திரும்பி, இயேசுவுக்குச் சொந்த மானபோது, பவுல் அவனை; ''கட்டப்பட்டிருக்கையில் நான் பெற்ற மகன்,'' என அவனை அன்போடு அழைப்ப தோடு, பிலேமோனும் அவனை மன்னித்து, ஏற்று அவனை அடிமையாகவல்ல சகோதரனாக ஏற்றுக் கொள் ளும்படி வேண்டுகிறார். நாமும் நம்முடைய வேலைக்கார ரிடம் அன்பும் பட்சமுமாக நடந்து கொண்டால், அவர் களும் நம்மிடம் விசுவாசத்துடன் நடந்து கொள்வதோடு, தக்க சமயத்தில் ஆதரவு அளிப்பவர்களாகவும் விளங்குவார்கள்.

24. தாமரி (அப்போஸ்தலர் 17:19–34)

இந்தத்தாமரி என்ற பெண்ணைப் பற்றி வேதாக மத்தில் நாம் அதிகமாக ஒன்றும் காண்பதில்லை. என்று லும் பவுல் அப்போஸ்தலரின் வாழ்விலும், ஊழியத்திலும் ஒரு சிறந்த பங்கு கொண்டிருக்கிறாள்.

அத்தேனே பட்டணத்தில் பவுல் அப்பட்டணத் தாரின் வேண்டுகோளின் படி மார்ஸ் மேடைக்குச் சென்று

தனது உபதேசத்தைச் சொல்லத் தொடங்கினுர். அம் மக்கள் வீணுகத் தங்கள் காலத்தைக் கழிக்க மாட்டார் களாம். அப்படிப்பட்ட மக்களின் மத்தியில் அவர் பேசினுர். அவர்கள் புவுலுடைய பேச்சுக்கு அமைதலாகச் செவி கொடுத்தார்கள். ஆனுல் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலைப் பற்றிப் பேசியபொழுது, அவர்களுக்குள் கருத்து வேறு பாடு ஏற்பட்டது. அவர்களில் சிலர் பவுலின் உபதேசத்தை ஏற்றுக்கொண்டனர். சிலர் நிராகரித்து விட்டனர். ஏற்றுக் கொண்டவர்களில் தாமரி என்ற பெண்ணும் இருந்தாள்.

''அந்த அத்தேனே பட்டணத்தாரெல்லாரும், அங்கே தங்குகிற அந்நியரும், நலமான காரியங்களைச் சொல்லுகிறதிலும் கேட்கிறதிலுமேயொழிய வேறொன்றி லும் பொழுது போக்குவதில்லை''. என்ற நற்சாட்சியை அந்த அத்தேனே பட்டணத்தார் பெற்றிருந்தனர். அதினுல்தான் அவர்கள்பவுலை மார்ஸ் மேடையிலேறிப்பேசும் படிக் கேட்டுக் கொண்டனர். இப்படிப்பட்ட ஓர் சூழ் நிலையில் தாமரி வளர்ந்து, பவுலின் பிரசங்கத்தைக் கேட் கும் வாய்ப்பைப் பெற்றுள். பவுலின் பிரசங்கத்தைக் கேட்டு, ஏற்றுக்கொண்டவர்கள் ஒரு சிலரே, அதில் தாமரி என்பவளும் ஒருத்தி.

அத்தேனே பட்டணத்தார் அறியாமல் ஆராதித்த அந்த மெய்யான வாஞ்சை இப்பெண்ணிற்கும் இருந்திருக்க வேண்டும். அந்த வாஞ்சையை நிவர்த்தி செய்யவே அவள் அன்று வந்திருக்கக் கூடும். மனிதரின் இருதயத் தின் ஆழங்களை அறிந்த கர்த்தரே அன்று அவளை அங்குக் கொண்டு வந்தார். அவள் தன் வாஞ்சை நிறைவேறப் பெற்று, அந்த மெய்யான ஜீவனுள்ள தேவனை அறிந்து விசுவாசிக்கும் நற்பேற்றைப் பெற்றுள். அவ்வாறே நாமும் நம் முழுமனதுடன் நம் இரட்சகரைத் தேடுவோமானால் அவரைக் கண்டு கொள்ளும் சிலாக்கியத்தை அடைவ தோடு, பிற பல ஆசீர்வாதங்களையும் பெறுவோம். தாமரி யைப்போல் நாமும் ஆண்டவருக்குச் சாட்சியாயிருக்க ஆண்டவர் உதவி செய்வாராக.

நமது இந்திய நாட்டில் சுவிசேஷ தேவைகள் அதிகம், நம் இந்திய நாட்டின் இரட்சிப்புக்காக சுவிசேஷ வீரர்களை எழுப்ப ஆண்டவரை நோக்கி ஜெபிப்போம். அத்தேனே பட்டணத்தாரைப் போலவே நம் இந்திய நாட்டு மக்களும் மிகுந்த தெய்வபக்தி உள்ளவர்கள். அத்தேனே பட்டணத்தில் அந்த "அறியப்படாத தேவனைப்" பற்றிப் பவுல் பேசிய போது அநேகர் ஆண்டவரை ஏற்றுக் கொண்டனர். இன்றும் இந்தியாவில் இந்நிலையிலிருக்குப் மக்கள் அநேகர். அன்று ஏசாயாவைப் பார்த்து, "யார் நமது காரியமாய்ப் போவான்?" என்று கேட்ட கர்த்தர் இன்றும் காத்துக் கொண்டே இருக்கிறார். காத்துக் கொண்டிருக்கும் ஆண்டவரின் தாகத்தைத் தீர்க்க, அழிவுக்கு நேராக விரைந்து செல்லும் ஆத்துமாக்கள் ஆண்டவரின் அன்பைப் பெற ஆண்டவரை அறியாதவர்கள் அவரை அறிந்து கொள்ள ஆண்டவர் கிருபை செய்ய ஜெபிப்போம். ' ஆண்டவரே, என்னை அனுப்பும்'' என்ற தீர்மானத்தோடு ஒப்புக்கொடுப்போம். அப்படிப்பட்ட மக்களை எழுப்ப ஜெபிப்போம். கர்த்தர் உங்களையும் பயன் படுத்துவார்.

25. ஐனிக்கேயாள் (அப்போஸ்தலர் 16:1 II தீமோத்தேயு 1:5)

ஐனிக்கேயாள் தீமோத்தேயுவின் தாயார், பவுல் அப்போஸ்தலன் தனது சுவிசேஷப் பிரயாணத்தின்போது லீஸ்திரா என்ற இடத்தைச் சென்றடைந்தார். அங்கே தீமோத்தேயு என்னப்பட்ட ஒரு சீஷனைக் கண்டார். அவனுடைய தாயாகிய ஐனிக்கேயாள் விசுவாசமுள்ள ஒரு யூத ஸ்திரீ பவுல் அவனைத் தமது சுவிசேஷ ஊழியத்தில் சேர்த்துக்கொள்ள மிகவும் ஆவல் கொண்டார். அவனிலிருந்த மாயமற்ற விசுவாசமே அவனைத் தன்னிடமாய்ச் சேர்த்துக் கொள்ளத் தூண்டிற்று இவ்வாறு அவன் தன் விசுவாசத்தில் வளருவதற்கு அவனுடைய தாயாகிய ஐனிக்கேயாளின் விசுவாச ஜீவியமே காரணம் இதைப் பவுல் தாம் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாவது

நிருபம், முதலாம் அதிகாரம் ஐந்தாம் வசனத்தில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம்.

எனவே, இந்த ஸ்திரீ தன் மகனுகிய தீமோத்தேயுவுக்கு மாயமற்ற விசுவாசத்தை போதித்ததோடு அதற்கேற்றபடி வாழ்ந்தும் காட்டினுள். பிள்ளைகளின் வளர்ப்பிற்குப் பெற்ருேர் மிகுந்த உத்தரவாதமுள்ளவர்கள். உங்களுடைய பிள்ளைகளை நீங்கள் எவ்வாறு வழி நடத்துகிறீர்கள்? விசுவாசமுள்ள பரிசுத்த ஜீவியத்திற்கா, அல்லது ஏரோதியாளைப் போல துன்மார்க்க ஜீவியத்திற்கா? சற்று சிந்தித்துப்பாருங்கள். உங்கள் வாழ்க்கை உங்களுடைய பிள்ளைகளுக்கு முன் மாதிரியாக உள்ளதா, அல்லது இடறுதலுக்கேற்றதாயுள்ளதா? பிள்ளைகளுக்கு நாம் இடறுதலாயிருப்பதை நம் ஆண்டவர் எவ்வளவு வன்மையாகக் கண்டித்திருக்கிருர்! ''என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனே, அவனுடைய கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி, சமுத்திரத்தில் அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்'' என்ருர் (மத்தேயு 18:6) ஆகவே நீங்கள் உங்கள் பிள்ளைகளை வளர்ப்பதில் மிகவும் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். பவுல் அப்போஸ்தலன் கூறியுள்ள, ''பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக'' என்ற ஆலோசனையைக் கடைபிடியுங்கள், கர்த்தர் உங்களுக்கு உதவி செய்வாராக.

இந்தத் தாய் தனது பிள்ளையை ஆண்டவருடைய மகத்தான ஊழியத்தில் ஈடுபடுத்தியது போல, நீங்களும் இந்தக் கடைசி நாட்களில் அவரது மகத்தான ஊழியம் செய்ய அவர்களைப் பக்குவப் படுத்துங்கள். அதோடு அவர்களுக்காக ஜெபியுங்கள். (எபேசியர் 6:19-20)

26. லோவிசாள் (II தீமோத்தேயு 1:5)

இந்த லோவிசாள் தீமோத்தேயுவின் பாட்டி

ஆவாள். ஐனிக்கேயாளைப் போலவே இவளும் விசுவாசத்தில் சிறந்தவளாயிருந்தாள். இவளும் தன் பிள்ளைகளைக் கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும், விசுவாசத்திலும் வளர்த்து வந்தாள். இவ்வாறு அக்குடும்பமே விசுவாசம் என்னும் கற்பாறையின் மீது அஸ்திபாரம் போடப்பட்ட ஒரு குடும்பமாயிருந்தது. பவுல் அப்போஸ்தலனும் இக்குடும்பத்தின் விசுவாசத்தைப் பாராட்டி எழுதியுள்ளார்.

இந்த விசுவாசத்தில் அவள் பிள்ளைகள் வளர்க்கப்பட்டதால் தான், பவுல், தன் குமாரன் என்று சொல்லத் தக்க விதமாய் தீமோத்தேயு அக்குடும்பத்தில் தோன்றினன். அவனும் பவுலின் நற்சாட்சியைப் பெற்ருன். அதோடு அவன் ஒரு சிறந்த தேவ ஊழியனுக விளங்கினன். அது போலவே, அருமைத்தாயே, சகோதரியே, நீங்களும் உங்கள் குடும்பங்களை இவ்வகை விசுவாசக்குடும்பங்களாக அஸ்திபாரமிட்டு கட்டுவீர்களானல், உங்கள் குடும்பங்களிலும் பல தீமோத்தேயுக்கள் எழும்பி தேவனுக்காக ஊழியம் செய்யும் பெரும் பேற்றை பெறுவீர்கள் என்பது திண்ணம் II தீமோத்தேயு 3:14-16 இந்த லோவிசாளாகிய பாட்டியைப் போல உங்கள் பேரப்பிள்ளைகளை ஆண்டவருக்கேற்ற பாதையில் நடக்க உங்கள் போதனையினுலும், வாழ்க்கையினுலும் உதவுவீர்களானல், நீங்களும் இந்த லோவிசாளைப் போல ஆசீர்வதிக்கப் படுவீர்கள்.

27. நீதிக்காக போராடிய ஸ்திரீ

(லூக்கா 1?:3-7)

ஒரு பட்டணத்தில் ஒரு ஏழை விதவை இருந்தாள். அவளுக்கு ஒரு எதிராளி இருந்தான். எனவே அவள் அவ்வூர் நியாயாதிபதியிடம் சென்று தனக்கு நீதி வழங்கும்படிக்கேட்டுக் கொண்டாள். ஆனல் அவனே அவ்விஷயத்தில் நிர்விசாரமாயிருந்தான். அவன் தேவனுக்குப் பயப்படாதவனும் மனுஷரை மதியாதவனுமாயிருந்தான். அப்படிப்பட்ட நியாயாதிபதியிடம் அவள் அடிக்கடி

சென்று நியாயத்திற்காகக் கெஞ்சினுள். விதவையின் வழக்கை விசாரிக்கிற தேவன் அந்த நியாயாதிபதியின் இருதயத்தைத் தொட்டார் அப்பொழுது அந்த நியாயாதிபதி ''இந்தவிதவை என்னை எப்பொழுதும் தொந்தரவு செய்கிறபடியால், இவள், அடிக்கடி வந்து என்னை அலட்டாதபடி இவளுக்கு நியாயஞ்செய்ய வேண்டும்'' எனக்கூறி அவளுக்கு நியாயஞ் செய்தான் (யாத்திராகமம் 22:22-24)

அருமையான தாயே, சகோதரியே, விதவைகளின் வழக்கை விசாரிக்கிற தேவன் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டார். உங்கள் கண்ணீரைத்துடைப்பார். உங்கள் பிள்ளைகளுக்குத் தேவையானதைத் தருவார். உச்சிதமான கோதுமையால் உங்களைப் போஷிப்பார் (ஏசாயா 54:10-14) ''சிறுமைப்பட்டவளே, பெருங்காற்றில் அடிப்பட்டவளே, தேற்றரவற்றவளே, இதோ, நான் உன் கல்லுகளைப் பிரகாசிக்கும்படி வைத்து, நீலரத்தினங்களை உன் அஸ்திபாரமாக்கி, உன் பல கணிகளைப் பளிங்கும், உன் வாசல்களை மாணிக்கக்கற்களும், உன் மதில்களையெல்லாம் உச்சிதமான கற்களுமாகுவேன், உன் பிள்ளைகளெல்லாரும் கர்த்தரால் போதிக்கப்பட்டிருப்பார்கள். உன் பிள்ளைகளுடைய சமாதானம் பெரிதாயிருக்கும். நீதியினால் ஸ்திரப்பட்டிருப்பாய், கொடுமைக்குத் தூரமாவாய், பயமில்லாதிருப்பாய், திகிலுக்குத்தூரமாவாய் அது உன்னை அணுகுவதில்லை. இவ்வாறு கலங்கித்தவிக்கும் யாவரும் ஆண்டவர் பாதத்தில் உங்கள் பாவங்களை வைத்து விடுங்கள் அவர் உங்கள் கவலைகளையெல்லாம் போக்குவார் என்ற விசுவாசத்துடன் ஜெபியுங்கள். அந்த நியாயாதிபதி எவ்வளவுதான் தாமதப்பண்ணினுலும், அந்த ஸ்திரீ சோர்ந்து போகாமல் அந்த நியாயாதிபதியிடத்தில் எப்படியும் தனக்குநீதி கிடைக்கும் என்றவிசுவாசத்துடன் அடிக்கடி அந்நியாயாதிபதியிடம்சென்றுள். அப்படியே நாமும் சோர்ந்துபோகாமல் விசுவாசத்துடன் நமது ஆண்டவரிடம் ஜெபிக்கும் போதோ தேவைகளைக் கேட்கும் போதோ நமக்கு அவர் விடையளிப்பார். மேலே கூறப்பட்ட ஆசீர்வாதங்களையெல்லாம் நாம் சுதந்தரித்துக் கொள்ளுவோம்.

அத்தியாயம் V

விசுவாசத்தில் சிறந்த ஸ்திரீகள்

28. கானானிய ஸ்திரீ (மத்தேயு 15:22-28)

சிரோனிக்கிய தேசத்தாளாகிய ஒரு ஸ்திரீயின் மகள் அசுத்த ஆவியினால் மிகவும் வேதனைப்பட்டாள். இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்ட அந்த ஸ்திரீ இயேசுவின் பாதத்தில் வந்து விழுந்து ''ஆண்டவரே எனக்கு இரங்கும். என் மகள் பிசாசினால் கொடிய வேதனைப் படுகிறாள்'' என்றாள். இயேசுவோ ஒன்றும் சொல்லவில்லை. இயேசு தன் மகளை சுகப்படுத்துவார் என்ற நம்பிக்கையுடன் வந்த அந்தப் பெண்ணுக்கு இது பெருத்த ஏமாற்றமாக இருந்திருக்கலாம். ஆனாலும் அவள் அவரை விடாது பற்றி நின்றாள். இயேசு அவளிடம் ''காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு தான் அனுப்பப்பட்டேனேயன்றி மற்றப்படி அல்ல'' என்றும் ''பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்குட்டிகளுக்கு போடுகிறது நல்லதல்ல என்றும் கூறினார். அப்பொழுதுகூட அவள் தன் விசுவாசத்திலிருந்து சிறிதும் விலகவில்லை. மிகுந்த தாழ்மையுடன் ''மெய்தான் ஆண்டவரே ஆகிலும் நாய்க் குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே'' என்றாள். இதன்மூலம் அவள் இயேசுவைத் தன் எஜமானாகக் கொண்டாள். அவரிடத்திலிருந்து தனக்கு இரக்கம் கிடைக்குமென்றும் விசுவாசித்தாள். அவளது விசுவாசம் அசைக்கக் கூடாதிருந்தது. அப்பெண்ணின் தாழ்மையையும் அசைக்கமுடியாத விசுவாசத்தையும் கண்ட இயேசு ''ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது நீ விரும்புகிறபடியே உனக்கு ஆகக்கடவது'' என்றார்.

அப்பெண் ஒருபுற ஜாதிப்பெண்ணாயிருந்த போதிலும், அவள் இயேசுவின் மீதுகொண்ட விசுவாசம் மிகவும்

பெரியதாயிருந்தது, சாதாரணமான பெண்ணுயிருந்தால் இயேசு கூறிய வார்த்தைகளைக் கேட்டு, அவள் பின்வாங்கி போயிருப்பாள். ஆனுல் அவளோ, அச்சமயத்திலும் மனந்தளரவில்லை எவ்விதத்திலும் இயேசு தனக்கு உதவி செய்வார் என்ற எண்ணத்துடன் தன்னைத் தாழ்த்துகிருள். ''நான் பிள்ளையல்ல, நான் நாய்க்குட்டி தான்'' எனக் கூறுகிருள் இந்தத் தாழ்மை நம்மிடத்திலும் காணப்படவேண்டும். தாழ்மையுள்ளவர்களுக்குத் தேவன் கிருபையளிக்கிருர்.

அன்றியும் அந்தத் ஸ்திரீ தனக்கு உதவி செய்யக் கூடியவர் இயேசு ஒருவரே என்ற விசுவாசத்துடன் வேறெங்கும் செல்லாது இயேசுவின் பாதத்தில் வந்து பணிகிருள். இயேசுவின் சீஷர்களாலும் எதிர்ப்பு வந்தது. ''இவள் நம்மைப் பின் தொடர்ந்து கூப்பிடுகிருளே இவளை அனுப்பி விடும் என்று இயேசுவிடம் கேட்டுக் கொண்டனர்.'' எவ்வளவு தான் மறுப்பு வந்த போதிலும் அவள் தன் விசுவாசத்தை விடவில்லை. ஆகவே தான் இயேசு அவளுக்கு, உன் விசுவாசம் பெரிது எனும் நற் சாட்சியை வழங்கினுர். நாமும் ''வானம் என்சிங்காசனம், பூமி என்பாதபடி'' என்ற நம் ஆண்டவரின் பாதத்தை, இந்தக் கானுனிய ஸ்திரீயைப் போல் பற்றிக் கொள்வோமானுல் அவள் இயேசுவிடம் ஒரு நற்சாட்சியைப் பெற்றது போல, நாமும் ஒரு நற்சாட்சியை பெறுவோம். நமது விசுவாசம் பெரிது எனப்படக்கூடிய சாட்சியை நாம் பெறுவோமானுல் அது எவ்வளவு மகிமையுள்ளதாகும்! அப்பேர்ப்பட்ட ஒரு நிலைக்கு நம் விசுவாசம் வளர கர்த்தர் தாமே நமக்கு உதவி செய்வாராக! ஆமென்!

29. ராகாப் (யோசுவா 2-ம் அதிகாரம்)

எரிகோ பட்டணத்தை வேவுபார்க்க யோசுவா இரண்டு மனிதரை அனுப்பினுன். இது அந்த நாட்டு, ராஜாவின் மனிதருக்குத் தெரிய வந்த போது அவர்கள் பயந்து ஒரு வீட்டிற்குள் பிரவேசித்தனர். அவ்வீடு ராகாப்

என்னும் வேசிக்குச் சொந்தமாயிருந்தது கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்குத்துணை நின்று எரிகோவை அவர்கள் கையில் நிச்சயமாய் ஒப்புக் கொடுப்பார் என்று அவள் விசுவாசித்த படியால் அவள் அவர்களை ஏற்றுக்கொண்டு அவர்களைத் தன் வீட்டில் ஒளித்து வைத்தாள். அவர்களைத் தேடிவந்த மனிதரிடம் அவர்கள் இங்கு வந்தது உண்மை தான் ஆனுல் அவர்கள் இங்கிருந்து போய் விட்டார்கள் எனக்கூறி அவர்களைத் திசை மாறச் செய்தாள். கர்த்தர் இஸ்ரவேலரை எகிப்திலிருந்து விடுவித்து, அவர்களை ஆச்சரியமாய் வழிநடத்தி வந்த எல்லா விவரங்களையும் பற்றிக் கேள்விப்பட்டிருந்தாள். அந்நாட்டிலுள்ள மற்ற ஜனங்களும் கேள்விப் பட்டிருந்தனர். அதனுல் பயந்து ஜனங்களின் இருதயம் கரைந்துபோய் அவர்கள் அதைரியம் அடைந்தார்கள்.

அவள் அம்மனிதரிடம் ''இப்போதும் நான் உங்களுக்குத் தயவு செய்த படியால், நீங்களும் என் தகப்பன் குடும்பத்துக்கு தயவு செய்வோம் என்று கர்த்தர் பேரில் எனக்கு ஆணையிட்டு நீங்கள் என் தகப்பனையும் என் தாயையும் என் சகோதரரையும் என் சகோதரிகளையும் அவர்களுக்கு உண்டான எல்லாவற்றையும் உயிரோடே வைத்து, எங்கள் ஜீவனைச் சாவுக்குத் தப்புவிக்கும்படி எனக்கு நிச்சயமான அடையாளத்தைக் கொடுக்க வேண்டும் என்ருள். அப்பொழுது அவர்கள் அவளுக்கு ஆணையிட்டுக் கொடுத்தனர் அவள் ஒரு ஜன்னலில் சிவப்பு நூல் கயிற்றைக் கட்டி அவர்களை அதின் வழியே இறக்கி விட்டாள். அவர்களும் அக்கயிற்றை ஜன்னலிலேயே கட்டி வைக்குமாறும், அது அவர்களுக்கு அடையாளமாயிருக்குமென்றும் சிவப்பு நூல் இல்லாவிடில் அவர்கள் ஆணைக்குத் தப்புவார் என்றும் கூறிச்சென்றனர். வ்வாறே எரிகோபட்டணம் அழிக்கப்பட்டபோது அச் சிவப்புக்கயிற்ருல் அவள் வீடு அடையாளம் கண்டு பிடிக்கப்பட்டு அவளும் அவளுக்குரியவையாவும் அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டன.

ராகாப் ஒரு இழிவான வாழ்க்கையை நடத்தி யிருந்த புறஜாதிப் பெண்ணுயிருந்தாலும், அவள் இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தரை வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர் எனக் கண்டு கொண்டாள். அவருடைய மகிமையையும் மேன்மையையும் குறித்து சாட்சி சொன்னுள். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் அவரது மேன்மைக்கும் மகத்துவத்திற்கும் சாட்சியாக அவரை ஏற்றுக் கொண்டு அவரது இனிய நாமத்திற்கு களங்க மேற்படுத்தாது அவருக்குகந்த ஒரு வாழ்க்கை வாழ்கிறோமா? இல்லையேல் இப்பொழுதே நாம் நம்மைத் திருத்திக் கொள்வோம்.

அவ்வாறு ராகாப் கர்த்தரை ஏற்றுக்கொண்ட தினுல் அவருடைய பிள்ளைகளையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்தாள். சத்துருவான ராஜாவின் ஆட்களுக்கு அவர்களைத் தப்பு வித்தாள். நாமும் இவ்வாறு தேவனுடைய பிள்ளைகள் நம்மிடையே வரும்போது அல்லது தேவனுடைய ஊழி யக்காரர் வரும்போது அவர்களுக்கு உதவி செய்யப் பழகிக் கொள்ளவேண்டும். மேலும் ராகாப் தன் குடும் பத்தினர் மீது பற்றும் பாசமும் உடையவளாயிருந்தாள். அதனுல் தான் அவள் இஸ்ரவேல் மக்கள் தன் குடும்ப மனைத்தையும் காப்பாற்ற வேண்டுமென வேண்டுகிறுள். அவள் தன் குடும்பத்தாரின் இரட்சிப்புக்குக் காரணமாயி ருந்தாள். நாமும் நம்முடைய குடும்பத்தினருக்காகவும் தேவனிடம் மன்றுடி அவர்களும் நாதன் இயேசு சம்பாதித்த இரட்சிப்பைப்பெற உதவவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் எரிகோவை பிடித்தப்பின் யோசுவா ராகாபையும் அவள் உடைமைகளையும் முதலா வது காப்பாற்றும்படி கூறினான் (யோசுவா 6:22,23) அவ்வாறு அவள் காப்பாற்றப்பட அந்த வீட்டு ஜன்னலில் கட்டி வைக்கப்பட்டிருந்த சிவப்பு நூல்கயிறு அடையாள மாய் அமைந்தது. இஸ்ரவேல் மக்கள் எகிப்திலிருந்து புறப்பட்டபோது அவர்கள் தலைச்சன்கள் காக்கப்படும்

படி வாசல் நிலைக்கால்களில் ஆட்டுக் குட்டியின் இரத்தம் பூசப்பட வேண்டியதாயிருந்தது. அவ்வாறே நமது சத்துருவாகிய சாத்தான் நமக்கு எதிர்த்துப் போராடும் போது நாம் காக்கப்பட நாமும் கிறிஸ்துவின் இரத்தம் பூசப்பட்டுச் சுத்தமானவர்களாயிருக்க வேண்டும். அன்றியும் அவளது வீடு உயரமான அலங்கத்தின் மேல் கட்டப்பட்டிருந்ததால் அது எளிதாகக் கண்டுபிடிக்கக் கூடியதாயிருந்தது அது போல நமது சிந்தனைகளும் செயல்களும் வார்த்தைகளும் உயர்ந்தவையாயிருப்பின் மக்கள் எளிதில் நம்மைத் தேவனுடைய பிள்ளைகளெனக் கண்டு கொள்வார்கள்.

அவள் இவ்வாறு அழிவினின்றும் காக்கப்பட்டபின் இஸ்ரவேல் மக்களோடு ஒன்றாய் இணைந்து விட்டாள். இவ்வாறு ராகாப் இஸ்ரவேலின் கர்த்தரே மெய்யான தேவன் என்பதை விசுவாசித்துப் பற்றிக்கொண்டதினாலேயே பவுலப்போஸ்தலன் கொடுக்கும் விசுவாசிகளின் பட்டியலில் அவள் பெயரும் காணப்படுகிறது. விசுவாசத்தினாலே ராகாப் என்னும் வேசி வேவுக்காரரை சமாதானத்தோடு ஏற்றுக்கொண்டு கீழ்படியாதவர்களோடேகூட சேதமாகாதிருந்தாள் (எபிரேயர் 11:31) இப்பேர்ப்பட்ட பெரிதான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொண்ட ராகாபின் சந்ததியில் தான் பின்னர் இயேசுவும் தோன்றினார் (மத்தேயு 1:5) எனவே நாமும் விசுவாசிகளின் கூட்டத்தில் சேர்ந்து, இயேசு நம் உள்ளங்களில் தோன்ற நம்மை அவருக்கு முழுவதுமாக ஒப்புக் கொடுப்போமாக ராகாப் என்னும் வேசி ஆண்டவரை விசுவாசித்துத் தன் குடும்பத்தை அழிவுக்கு விலக்கிக் காத்தது போல, நாமும் வரப்போகிற கொடுமையான அழிவுக்கு நம் ஜனத்தை விடுவிக்கும்படி ஆண்டவரது சமூகத்தில் மன்றாடி நம் மக்களை வழி நடத்துவோம்.

30. பெரும்பாடுள்ள ஸ்திரீ *(மாற்கு 5:25–34)*

பன்னிரெண்டு ஆண்டுகளாக பெரும் பாடு வியாதியுள்ள ஒரு ஸ்திரீ, அநேக வைத்தியரிடம் போய்த் தனக்குண்

டானவைகளையெல்லாம் செலவழித்தும் சற்றும் சுகமடையாது வேதனைப்படும் போது இயேசுவைக் குறித்துக் கேள்விப்பட்டு ''நான் அவருடைய வஸ்திரங்களையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்'' என்று சொல்லி அவரைப் பின் சென்ற திரளான கூட்டத்திற்குள் நுழைந்து அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள். உடனே அவள் தன் வேதனை நீங்கி சுகம்பெற்றாள். இயேசு தம்மிடத்திலிருந்து வல்லமை வெளிப்பட்டதையறிந்து ''என் வஸ்திரத்தை தொட்டது யார்?'' என்றார். சீஷரும் மற்றோரும் ''திரளான ஜனங்கள் உம்மை நெருக்கிக் கொண்டிருக்கிறதைப் பார்த்தும் என்னைத் தொட்டது யார் என்று கேட்கிறீரே'' என்றார்கள். அப்பொழுது அந்தஸ்திரீ தான் மறைந்திருக்கவில்லை என்று கண்டு அவருக்கு முன்பாக வந்து விழுந்து உண்மையையெல்லாம் அவருக்குச் சொன்னாள். அவர் அவளைப் பார்த்து ''மகளே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, நீ சமாதானத்தோடே போய் உன் வேதனை நீங்கி சுகமாயிரு'' என்றார்.

இந்த ஸ்திரீயினுடைய ஜீவியத்தைப் பார்க்கும் பொழுது, அவள் எவ்வளவு வேதனையுடனிருந்தாள். எனத் தெரிகிறது. அவள் தன் சரீர வேதனையோடு மிகுந்த மன வேதனையையும் அடைந்திருப்பாள். தன் ஆஸ்தியையும் இழந்தவளானாள். இந்நிலையில் தான் அவள் இயேசுவைப் பற்றிக் கேள்விப்பட்டாள். அவளது விசுவாசம் துளிர்த்தது. நம்பிக்கை வளர்ந்தது. அவள் ஆண்டவரிடம் சென்றாள். இவ்விதமான நிலையில் எல்லா நம்பிக்கையும் இழந்துதாயே, அருமைசகோதரியே, அந்தப்பெண் இயேசுவே தனது ஒரே நம்பிக்கை என அறிந்து, யாருமறியாவண்ணம் சென்று அவருடைய வஸ்திரங்களைத் தொட்டது போல், அவரிடம் செல்லுங்கள். ''வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்று விளம்பியநம் இரட்சகர்

உங்களுக்கும் உங்கள் வேதனைகளிலிருந்து விடுதலை அளிப்பார் (மத்தேயு 11:28)

சாதாரணமாக யூதப் பெண்கள் இவ்வித சமயங்களில் அசுத்தமுள்ளவர்களெனக் கருதப்படுவார்கள். இந்தப் பெண்ணின் வேதனை அவ்வளவு கொடியதாக இருந்ததால் அவள் அதையும் மறந்து கூட்டத்திற்குள் நுழைந்து இயேசுவைத் தொட்டாள். இவ்விதமாகவே பாவச் சேற்றில் விழுந்து அசுத்தமாகி, மற்றவர்களால் ஒதுக்கப்பட்டு வேறுகதியில்லை என நாம் கலங்குகையில் நாம் கிறிஸ்துவிடம் வந்து அவரைத் தொடும்போதும், அவர் நம்மைத் தொடும்போது அவரது வல்லமை நமக்குள் பாய்ந்து நம்மைச் சுத்திகரிக்கும். நமக்கு விடுதலை கிடைக்கும்பொழுது நமது ஆத்துமா பெலனடையும் விசுவாசம் பெருகும் நமது பெலவீனங்களெல்லாம் நீங்கி, கிறிஸ்துவில் நமது உடலும் உள்ளமும் ஆன்மாவும் பெலனடையும் அவரது வல்லமை நமக்குள் பாய்ந்து செல்லுகையில் நாம் அவரோடு ஐக்கியப்படுவோம் ஆனந்தமடைவோம்.

இயேசு தமது வல்லமை வெளிப்பட்டதையறிந்து தன்னைத் தொட்டதுயாரெனக் கேட்கும்பொழுது அப்பெண் அவர் முன்னே வந்து அவர் பாதத்தில் விழுந்து தனக்கு நேரிட்டதைப் பற்றிச் சாட்சி கூறினள் அவ்வாறே நாமும் இயேசுவினிடத்திலிருந்து நாம் கேட்டுப் பெற்றுக் கொள்ளும் நன்மைகளை மறைத்து வைக்காமல், பலருக்குச் சாட்சியாக எடுத்துக் கூறும்போது அநேகரை விசுவாசத்தின் பாதைக்கு வழி நடத்துகிறவர்களாயிருப்போம் தேவனும் சந்தோஷப்படுவார்.

அந்தஸ்திரீக்கு கிறிஸ்து அருளிய கிருபைகள் கவனிக்கத்தக்கவை ''மகளே உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது. நீ சமாதானத்தோடே போய் உன்வேதனை நீங்கி சுகமாயிரு'' என்றார். அவளுக்கு அவர் முதலில் அருளியது இரட்சிப்பு. பவுலப்போஸ்தலன் அச்சிறைச் சாலைக் காவலாளிக்குக்கூறிய ''கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் (அப்போஸ்தலர் 16:31) என்ற வார்த்தைகளின்படி இவளும் தன் விசுவாசத்தின் மூலம் இரட்சிப்பைப் பெற்றுக்கொண்டாள். இரண்டாவது அவள் பெற்றுக்கொண்டது சமாதானம். இயேசுவை நம்பி, அவரிடம் வந்து அப்பெண்ணைப்போல் நாம் நமது பாரங்களை அவர் பாதத்தில் வைத்து விடுவோமானால், உலகம் கொடுக்கக் கூடாத தேவ சமாதானத்தை அவர் நமக்கு அருளிச்செய்வார். மூன்றாவதாக அவள் தன் வேதனை நீங்கப்பெற்றாள். அவள் இயேசுவிடம் எப்படிப் பட்ட சரீர ஆத்தும வேதனைகளோடு வந்திருப்பாள். நமக்காக எல்லா வேதனைகளையும் தாமே ஏற்றுக் கொண்ட அன்பின் உருவாய் நம் இயேசு இரட்சகர் தம் பிள்ளைகள் வேதனைப் படுவதை விரும்புவதில்லை. நாம் அவரை அழைத்தவுடனேயே வந்து நமது வேதனைகளை நீக்குவார். கடைசியாக அவர் அருளியது சுகம். இவ்வுலகில் பலர் சரீர ஆத்தும வியாதிகளால் பீடிக்கப்பட்டுச் சமாதானமிழந்து நம்பிக்கையற்ற நிலையில் வாழ்கின்றனர். அவர்கள் இந்தப் பெரும்பாடுள்ள ஸ்திரீயைப் போல், அவரை விசுவாசித்து, அவரையே தன் ஒரே நம்பிக்கையாகக்கொண்டு அவரது பாதங்களில் விழுந்து, தங்களைத் தாழ்த்தி அவருக்குச் சாட்சிகளாக விளங்கும்போது, நாமும் இப்பெண்ணைப்போல இரட்சிப்பையும், சமாதானத்தையும், சரீர ஆத்தும சுகத்தையும் பெறுவோம். இவ்வித ஆசீர்வாதத்தைத் தேவன் தாமே நமக்கு அருள்வாராக!

31. கூனியான ஸ்திரீ (லூக்கா. 13:10-17)

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகில் ஜீவித்த காலத்தில் ஜெப ஆலயங்களுக்குச் சென்று போதகம் பண்ணி வந்தார். அப்படி ஒரு ஓய்வு நாளில் ஒரு ஜெப ஆலயத்தில் பிரசங்கித்துக் கொண்டிருக்கும் வேளையில், அங்கு ஒரு கூனியான ஸ்திரீயைக் கண்டார். ஒரு பெலவீனப்படுத்தும் ஆவி அவளை பதினெட்டு வருடங்

களாய் ஆட்கொண்டிருந்தபடியால், அவள் எவ்வளவும் நிமிரக்கூடாதவளாயிருந்தாள் என்றாலும் தேவனுடைய வீட்டைப்பற்றிய வைராக்கியம் அவளை நிறைத்திருந்த தால், அவள் ஜெப ஆலயத்திற்கு வந்திருந்தாள் அவள் தேவனிடத்திலும் விசுவாசமுள்ளவளாயிருந்த படியினுல் தான், அந்த நிலைமையிலும் அவள் தேவனைத் தரிசிக்க அங்கு வந்திருந்தாள். இதை இயேசுவானவர் அறிந்தார். எனவே, அவள்மீது மனதுருக்கம் கொண்டார்.

இயேசு இதைக்கண்டு அவளைத் தம்மிடத்திற்கு அழைத்தார். அந்த அழைப்பைஏற்றுக்கொண்டு, அவருக்கு அவள் கீழ்படிந்து அவரிடம் சென்றுள். அதே அழைப்பை இயேசு பாவப்பிடியிலும், நோயிலும், பிசாசுக்கட்டிலும் இன்னும் பலவிதமான பிரச்சனைகளிலும் சிக்கித்தவிக்கும் ஒவ்வொருவருக்கும் இன்றும் கொடுக்கிறுர். அந்த அழைப்பைஏற்றுக்கொண்டு அவருக்கு கீழ்ப்படிந்து, அவரைக் கிட்டிச்சேர அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். அவள் அவ்வழைப்பை ஏற்றுக்கொண்டு, அவரிடம் வந்தபோது, அவர் அவள்மீது தமது கைகளை வைத்தார். கைகளை வைத்தபோது அவரது வல்லமை அவளுடைய உடலில் பாய்ந்து சென்றது. இந்தப் பெல வீனமான பெண் இயேசுவின் வல்லமையான கரம் அவளைத் தொட்டதாலேற்பட்ட ஐக்கியத்தின் பலனுய், சரீர பெல மடைந்து, நிமிர்ந்து நின்றுள். அதே விதமாகப் பாவப் பிடியில் சிக்கித்தவித்து அவரது பாதங்களை விசுவாசத் தால் பற்றிக்கொள்ளும் ஒவ்வொருவரையும் அவர் அணைத் துக்கொள்வார். அவர் கரங்கள் பட்டவுடன் அந்த ஸ்திரீ தன் சரீர கூன் வியாதி நீங்கப்பெற்று நிமிர்ந்து நின்ற வண்ணமாய் அவரது அன்பின் அணைப்பிற்குள் அடங்கிய ஒவ்வொருவரும், தனது பாவத்தினின்றும், பிசாசின் கட்டினின்றும் விடுபட்டு, அவருக்குள் புதுபெலனடைந்து உலகத்தில் நேர்மையுடன் வாழக்கூடும் அல்லேலூயா.

அவ்வாறு சுகம்பெற்ற அந்த ஸ்திரீ உடனே தேவனை மகிமைப் படுத்தினுள், பலர் தேவனிடமிருந்து பல

நன்மைகளைப் பெற்றுக்கொண்ட போதிலும், அவருக்கு மகிமையைச் செலுத்த தவறிவிடுகிறார்கள். அதினால் அவர்கள் பல ஆசீர்வாதங்களை இழக்கக்கூடும். எனவே நாம் ஆண்டவருக்கு, அவர் நமக்கருளிய ஆத்தும சரீர நன்மைகளுக்காக என்றும் நன்றி செலுத்தி அவருக்கு மகிமையாக விளங்கவேண்டும்.

இந்த நிகழ்ச்சி ஓர் ஓய்வு நாளில் நடந்ததினால் ஜெப ஆலயத் தலைவன் கோபமடைந்து ஜனங்களை நோக்கி ''வேலை செய்கிறதற்கு ஆறு நாள் உண்டே, அந்த நாட்களில் நீங்கள் வந்து சொஸ்தமாக்கிக் கொள்ளுங்கள், ஓய்வுநாளிலே அப்படிச்செய்யலாகாது'' என்றான். இன்றும் கூட நம்மில் அநேகர் இந்த ஜெப ஆலயத் தலைவனுடைய நிலையிலேயே இருக்கிறோம். வெளிச்சடங்காசாரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம். இயேசு ஜனங்களைப் பார்த்து ''உங்களில் ஒருவனும் ஓய்வு நாளில் தன் எருதையாவது தன் கழுதையையாவது தொழுவத்திலிருந்து அவிழ்த்துக் கொண்டுபோய், அதற்குத் தண்ணீர் காட்டுகிறதில்லையா? இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியான இவளை ஓய்வு நாளில் இந்தக் கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா'' என்றார். அப்போது அங்கேயிருந்த அவரது விரோதிகள் வெட்கப்பட்டார்கள். இதர மக்களோ அவரால் செய்யப்பட்ட சகல மகிமையான செய்கைகளைக் குறித்துச் சந்தோஷப்பட்டனர்.

ஓய்வுநாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டதால் அந்நாளில் கர்த்தருக்கேற்ற நற்கிரியைகளைச் செய்ய வேண்டும். ஏசாயா 58:13-14-ல் சொல்லப்பட்டுள்ளபடியே ஓய்வு நாளை நாம் பரிசுத்தமாய் ஆசரிப்போமானால் அந்த ஸ்திரீ பெற்ற ஆசீர்வாதங்களை நாமும் பெறுவோம் இயேசுவானவர் தமது பிதாவின் சித்தப்படியே அந்த ஓய்வு நாளில் அப்பெண்ணின் பலவீன ஆவியை விடுவித்தது போலவே நாமும் எல்லா நாட்களிலும் வியாதியினால் வாடுபவர்களுக்காகவும் பிசாசின் பிடியில் சிக்குண்டு தவிப்பவர்களுக்காகவும், பாவக்கட்டுகளில்

கட்டுண்டு கிடப்பவர்களுக்கு விடுதலையளிப்பதற்காகவும் செலவழிக்க வேண்டும். அப்பொழுது தேவன் நம்மை அபரிதமாய் ஆசீர்வதிப்பார்.

32 செபதேயுவின் மனைவி

(மத்தேயு 20:20–23)

கர்த்தருக்கு பயந்த செபதேயுவின் மனைவி தன் பிள்ளைகள் இருவரையும் அழைத்து வந்து, தன் பிள்ளைகள் இருவரும் ஆண்டவருடைய வலது பக்கத்திலும், இடது பக்கத்திலும் இருக்க விரும்பினாள்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் குடும்ப பொறுப்பேற்று நடக்கும் பெண்கள் தங்களது பிள்ளைகள் படித்து பட்டம்பெற்று சிறந்த உத்தியோகஸ்தர்களாக வரவேண்டுமென்று விரும்புகின்றார்கள். மிகவும் வரவேற்க வேண்டியதே! ஆனால் கிறிஸ்தவ அன்பிலும் பண்பிலும், பிறர்க்கு உதவி செய்வதிலும் ஆண்டவருக்காக ஊழியம் செய்வதற்கும் பிள்ளைகளை தத்தம் செய்து வளர்ப்பதே சிறந்ததும், ஆசீர்வாதமானதும், மகிழ்ச்சியானதுமான வாழ்க்கையாகும்.

செபதேயுவின் மனைவியைப் போன்று, நாம் நம்முடைய பிள்ளைகளை வளர்க்கிறோமா? கர்த்தருக்கென்று ஒப்புக் கொடுக்கிறோமா? செபதேயுவின் மனைவி தன் பிள்ளைகள் இருவரையும் கர்த்தருக்கேற்ற ஊழியம் செய்வதற்கு வளர்த்தாள். அந்த பிள்ளைகளை ஆண்டவருக்கே அர்ப்பணித்தாள். அவள் குமாரர்கள் ஆண்டவரது வலது பாரிசத்திலும், இடது பாரிசத்திலும் இருக்க வேண்டுமென்று மிகவும் விரும்பினாள். அந்த பிள்ளைகளும் ஆண்டவரோடு இருக்க வேண்டுமென்று விரும்பினார்கள்.

இயேசுவை பின்பற்றிஊழியம் செய்தபன்னிரண்டு சீடர்களில் முக்கியமானவர்கள் பேதுரு, யாக்கோபு, யோவான், இவர்களில் யாக்கோபு யோவான் இருவரும் செபதேயுவின் குமாரர்கள். யோவான் இயேசுவின்

மார்பில் சாய்ந்திருந்தவன். இறைமகன் இயேசு கல்வாரி சிலுவையில் வைத்து, தான்அன்பாக நேசித்த தனதருமை தாயை பராமரிக்கும் பொறுப்பை செபதேயுவின் குமாரனாகிய யோவானிடத்திலே ஒப்படைத்தார். பிற்காலத்தில் யோவானை கொதித்த எண்ணெயில் போட்டபோது எண்ணெய் குளிர்ந்து போய் எந்த பாதிப்பும் ஏற்படாததால் அவனை பத்மு என்னும் தீவுக்கு நாடு கடத்தினார்கள். ஆனால் யோவானுக்கோ பத்மு தீவில் வைத்து நடந்தது, நடக்கிறது, இனிமேல் நடக்க இருப்பது ஆகிய காரியங்களை இறைவன் அதிசயமாக வெளிப்படுத்தினார். அதுதான் வெளிப்படுத்தல் விசேஷம். யாக்கோபை ஏரோது ராஜா பட்டயத்தால் கொலை செய்தார் (அப்போஸ்தலர் 12:1,2) சிறந்த அறிவாளிகளுக்குப் பின்னால் ஒரு அறிவுள்ள பண்புள்ள பெண்ணொருத்தி இருக்கிறாள் என்பது பேரறிஞர்களின் கூற்று! அமெரிக்காவில் அடிமை விலங்கை அறுத்தெறிந்த ஆபிரகாம் லிங்கனை ஜனாதிபதி பதவிக்கு உகந்தவராகச் செய்தது அவரது ஏழைத்தாய். இதை வாசிக்கும் அருமை தாயே, சகோதரியே உங்கள் பிள்ளைகளை ஆண்டவர் பணிக்கென்று ஒப்புக்கொடுக்கிறீர்களா? செபதேயுவின் பிள்ளைகள் ஆண்டவரின் வருகையின் போது இரத்த சாட்சிகளின் கூட்டத்தின் முன்னே வருவார்கள். நீங்கள் உங்கள் பிள்ளைகளை அன்னாள் சாமுவேலை வளர்த்தது போன்று ஆண்டவருக்கென்று வளர்த்து சிறந்த சாட்சியாக சொல்லிலும், செயலிலும் வளர, வாழ உதவி செய்து முன்னேற்ற பாதையமைப்பீர்களா? செபதேயுவின் மனைவி தன் பிள்ளைகளை ஆண்டவருக்கென்று ஒப்புக் கொடுத்து மகிழ்ச்சியும், அமைதியும் நிறைந்த தாயாக மாறினாள். நீங்களும் உங்கள் பிள்ளைகளை யாக்கோபு, யோவான் ஆகியோரைப் போன்று ஆண்டவருக்கென்று வளர்த்து வந்தால் இறையன்பு பெருகி மிகுந்த பாக்கிய சாலிகளாக தேவனை சந்திப்பீர்கள். இதுவே கிறிஸ்தவ வாழ்வு கிறிஸ்தவ குடும்பம் ஆகும்.

அத்தியாயம் VI

கணவனை கனம்பண்ணி கீழ்ப்படிந்த ஸ்திரீ

33. சாராள் (எபிரேயர் 11:11; ஆதியாகமம் 12)

சாராள் ஆபிரகாமின் மனைவி. பரிசுத்த பவுலப் போஸ்தலன் கொடுத்துள்ள விசுவாசிகளின் பட்டியலில் சாராள்பெயரும் இடம் பெற்றுள்ளது. ''விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்.

சாராள் ஆபிரகாமுக்கு ஒரு சிறந்த மனைவியாக அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள். ஆபிரகாம் தன்னை அவனது சகோதரியெனச் சொல்லச் சொல்லும் பொழுது கூட அவள் அவனுக்குக் கீழ்ப்படிந்தாள். பரிசுத்த பேதுருவும் தமது நிருபத்தில் ''இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள் அந்தபடியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள் ''என அவளது கீழ்ப்படிதலையும், நம்பிக்கையையும் சுட்டிக் காட்டுகிறார் (I பேதுரு 3:4-6) தேவன் ஆபிரகாமை நோக்கி ''நீ உன் தேசத்தையும், உன் ஜனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ'' என்று சொன்ன போது, ஆபிரகாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தான். சாராளும் கர்த்தரை நம்பி, ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்தாள்.

சாராள் மலடியாயிருந்தாள். தேவன் ஆபிரகாமுக்கு அவன் 75 வயதாயிருக்கும் பொழுது, ''நான் உன் சந்ததியைக் கடற்கரை மணலைப் போலவும், வானத்து நட்சத்திரங்களைப் போலவும் பெருகப் பண்ணுவேன்'' என வாக்குக் கொடுத்தார். ஆபிரகாம் கர்த்தரை விசுவாசித்தான். சாராளோ ஒரு வேளை நேரிடையாக அவ்வாக்குத்தத்தம் அவளுக்குக் கொடுக்கப் படாததினால், அவ்வளவாக விசுவாசம் வையாது, தனது கணவர் தனது அடிமைப்பெண்ணான ஆகாரை மனைவியாக எடுத்துக் கொள்ளும் படி தன் சொந்த ஆலோசனையைக் கூறினாள். இந்த ஆலோசனை கர்த்தரிடத்திலிருந்து வந்ததல்ல. தன் குடும்பத்தில் ஒரு குழந்தையைப் பார்க்க அதிக துரிதப்பட்டாள். இதன் விளைவாக அவளது குடும்பத்தில் தொல்லைகள் உண்டாயின. ஆகார் ஆபிரகாமுக்கு ஒரு குமாரனைப் பெற்றவுடன், தன் நாச்சியாரை அற்பமாக எண்ணினாள். சாராளுடைய விசுவாசக் குறைவும், ஆண்டவர் பால் சாரும் தன்மையில்லாமையும் அவளுக்கு இத்துன்பத்தைக் கொண்டு வந்தது.

இந்த நிலைமையில் சாராள் அதிக நாள் இருக்கவில்லை. அவள் விசுவாசத்தில் வளர்ந்தாள். கர்த்தர் மறுபடியும் ஆபிரகாமுக்கு தரிசனமாகி, தனது வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்தினார். அப்பொழுது ஆபிரகாம் தனது பழைய நாமமாகிய ஆபிராம் என்ற நாமத்தைப் பெற்றுக் கொண்டான். அதுபோலவே சாராளும், சாரால் என்னும் பழைய நாமம் மாற்றப்பட்டு சாராள் என்ற புதியநாமத்தைப் பெற்றுக் கொண்டாள். அவளது குடும்பம் அப்பொழுது தேவதூதர்கள் வருவதற்கேற்ற இடமாயிற்று. அவர்களை உபசரிப்பதில் சாராளும் பங்கு பெற்றாள். மம்ரேயின் சமபூமியில் ஆபிரகாம் இருக்கும் பொழுது மூன்று தேவதூதர்கள் அவனிடம் வந்தனர். சாராளும் ஆபிரகாமோடு சேர்ந்து அவர்களுக்கு ஆகாரம் ஆயத்தம் செய்தாள். அவர்கள் ஒரு மரத்தடியில் உணவருந்தும் பொழுது சாராள் கூடார வாசலில் நின்று கொண்டிருந்தாள். இம்முறை அவள் திட்டமாக ஒரு

குமாரனைப்பெறுவாள் என்ற கர்த்தருடைய வார்த்தையே அவளே கேட்டாள். முதலில் அவள் நகைத்தபோதிலும், அவருடைய வாக்கிலே அவள் விசுவாசம் வைத்தாள்.

அந்த விசுவாசத்தினால் தான் அவளும் அவள் கணவனும் வயது சென்றவர்களாயிருந்தும், அவள் ஒரு குமாரனைப் பெற்றாள். ''விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவரென்று எண்ணி, கர்ப்பந்தரிக்க பெலனடைந்து, வயது சென்ற வளாயிருந்தும் பிள்ளை பெற்றாள் (எபிரெயர் 11:11). இந்த விசுவாசம் அவளது பிள்ளைக்குள்ளும், ஆபிரகாமின் உத்தம ஊழியக்காரனான எலெயாசாருக்குள்ளும் வளர்ந்தது ஈசாக்குக்கு தேவனுடைய சித்தத்தின் படியே பெண்பார்க்கும் பெரிய பொறுப்பை அதனால் தான் எலெயாசாருக்குக் கொடுக்க முடிந்தது. சாராளின் குடுபத்தின் மூன்று அங்கத்தினர்களின் பெயரும் எபிரெயர் பதினேராம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ள விசுவாசிகளின் பட்டியலில் இடம் பெற்றிருக்கின்றன.

சாராளைப் போல் பெண்கள் தங்கள் கணவர் களுக்குக் கீழ்ப்படியும் போது, சாராள் பெற்ற ஆசீர் வாதத்தைப் பெறுவோம். அதேவிதமாக மனையாட்டி யாகிய சபையும், மணவாளனான கர்த்தருக்குக் கீழ்ப் படிந்து. அவரது சித்தத்தை நிறைவேற்றும் சபையாக இருந்தால், அச்சபை ஆசீர்வதிக்கப்பட்ட சபையாகத் துலங்கும். சாராள் தன விசுவாசத்தில் வளர்ந்தது போல், நாமும் நமது விசுவாசத்தில் வளர்ந்து கர்த்தரைப் பற்றிப் பிடித்துக் கொள்வோமானால், கர்த்தர் ஆபிரகா முக்குக் கொடுத்த வாக்குத்தத்தமாகிய, ''நான் உன்னை ஆசீர்வதித்து உன் பேரை பெருமைப் படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்'' என்பதை நாமும் சுதந்த ரித்துக் கொள்ளுவோம். (ஆதியாகமம் 12:2).

அத்தியாயம் VI

தேவனோடு நெருங்கிய தொடர்பும் அன்பும் கொண்ட ஸ்திரீகள்

34. பெத்தானியா மரியாள்

(லூக்கா 10:38-42, யோவான் 11:1-45)

பெத்தானியா என்ற கிராமத்தில் மார்த்தாள் மரியாள் என்ற இரு சகோதரிகள் வசித்து வந்தனர். இவர்களுக்கு லாசரு என்ற ஒரு சகோதரனிருந்தான் இயேசு பெத்தானியாவுக்கு வந்த போது மார்த்தாள் அவரைத்தன் இல்லத்தில் ஏற்றுக் கொண்டாள் மார்த்தாள் இயேசுவுக்கும் அவரோடிருந்தவர்களுக்கும் வேண்டியவற்றைச் செய்வதில் ஈடுபட்டிருந்தாள். மரியாளோ அவரது பாதத்தில் அமர்ந்து அவர் சொல்வதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்தாள். மார்த்தாள் பற்பல வேலைகளைச் செய்வதினால் மிகவும் வருத்தமடைந்து இயேசுவிடம் வந்து ''ஆண்டவரே நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்குச் சொல்லும்'' என்றாள். இயேசு அவளை நோக்கி 'மார்த்தாளே, மார்த்தாளே, நீ அநேகக் காரியங்களைக்குறித்துக் கவலைப்பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே. மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கைத் தெரிந்து கொண்டாள்'' என்றார்.

மார்த்தாள் உலகப் பிரகாரமான பல காரியங்களைக் குறித்து கவலைப்படுகிறவளாகத் தோன்றினாள். அப்படி அவள் கவலைப் பட்டதினால் இயேசுவிடம் வரத் தவறி விட்டாள். அவரது போதனைகளை விட அவரை உபசரிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தாள். இவ்வுலகத்தில் நாம் கொண்டு வந்ததும் ஒன்றுமில்லை

நாம் இங்கிருந்து கொண்டு போவதும் ஒன்றுமில்லை. ஆனால் நாம் இவ்வுலகில் வாழும் பொழுதே நமது நித்திய வீடாகிய பரலோகத்தில் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டும் (மத்:6:19-21)

இயேசுவானவருக்கு சாத்தானால் கொடுக்கப்பட்ட முதல் சோதனையே அப்பத்தைப் பற்றியது தான். இயேசுவுக்குப் பசியுண்டானபோது, சாத்தான் அவரை அங்குள்ள கற்களை அப்பமாக்கிப் புசிக்குமாறு சொன்னான். அவரோ, அப்பொழுது 'மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்' என்றார். வார்த்தையாகிய கிறிஸ்து மானிட ரூபத்தில் வந்த சமயம் 'நானே ஜீவ அப்பம்' என்றார். எனவே, அந்த அப்பமாகிய ஜீவ வார்த்தைகளை ஒருவன் உட்கொள்ளும் போது அவன் அவரில் நிலை கொண்டு தேவனுடைய ராஜ்யத்திற்குத் தகுதியுள்ளவனாகிறான். இப்படிப்பட்ட மகிமையான ஜீவ வார்த்தைகளையே மரியாள் தன்னிருதயத்திற்குள் வாங்கிக் கொண்டிருந்தாள். அவ்விதமாகவே நாமும் அவரது பாதத்தில் அமர்ந்து அவரது ஜீவவார்த்தைகளைப் படித்து அதனால் கிடைக்கும் ஆத்தும பெலனை அடைந்து, நமது எதிரிகளான உலகையும், பிசாசையும், மாமிசத்தையும், எதிர்த்துப் போராடி வெற்றி பெற வேண்டும்.

இவ்வாறு இயேசுவுக்கு அன்பாயிருந்த குடும்பத்தில் ஒரு பெரும் புயல் வீசலாயிற்று. மரியாளின் ஒரே சகோதரனான லாசரு வியாதிப்பட்டான். உடனே இயேசுவுக்கு ஆள் அனுப்பினார்கள். ஆனால் இயேசுவோ வரத் தாமதித்தார். லாசரு மரித்து விட்டான். இயேசு அங்கு வந்து சேர்ந்த பொழுது அவன் அடக்கம் பண்ணப்பட்டு நான்கு நாட்களாயிற்று. தேவனுடையநாமம் மகிமைப்படுவதற்காக இது நடந்தது. இயேசு வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன் மார்த்தாள் சென்று இயேசுவிடம் கதறினாள். இயேசு அவளிடம் பேசிய பின், மரியாளும் அங்கு வந்து சேர்ந்தாள். அவளும் தனது சகோதரியாகிய

மார்த்தாளைப் போலவே, 'ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான்' என்றாள். இயேசு அவள் அழுகிறதையும், அவளோடிருந்த யூதர்கள் அழுவதையும் பார்த்து ஆவியிலே கலங்கி, அவனை வைத்த இடத்தைக்காட்டச் சொன்னார். இயேசு கண்ணீர் விட்டார். பின் கல்லறையை அடைத்திருந்த கல்லை எடுத்துப் போடும்படி சொன்னார். நாலு நாட்களாகி விட்டதால் 'நாறுமே' என மார்த்தாள் கூறினாள். ஆனால் இயேசுவோ நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா?' என்றார். கல்லைப் புரட்டினார்கள் இயேசு, 'லாசருவே, வெளியே வா' என்றார். லாசரு உயிர்பெற்று எழுந்து வெளியே வந்தான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு அவரை விசுவாசித்து பின்பற்றினார்கள். சங்கீதம் 88:10, 11–இல் உள்ளபடி, லாசருவின் பிரேதக்குழியில் ஆண்டவருடைய மகிமை வெளிப்பட்டது.

நம்முடைய வாழ்க்கையிலும் துன்பங்கள் துயரங்கள், மரணக்கண்ணிகள், புயல்கள் எழும்பும் போது, நாம் அவற்றில் அமிழ்ந்து போகாமல், அந்த மரியாளைப்போல் அவருடைய பாதத்தில் விழுவோமானால் நம்முடைய கண்ணிகள் தெறிக்கும். கண்ணீர் துடைக்கப்படும். படகில் ஏறி, காற்றைப் பார்த்து, 'இரையாதே' என்றும் கடலைப் பார்த்து, 'அமர்ந்திரு' என்றும் சொன்னவர் மக்களுக்கு அமைதியைக் கொடுத்தவர் – நம் வாழ்க்கையிலும், குடும்பத்திலும் அமைதியையும், சமாதானத்தையும் தர இயேசு வல்லவராயிருக்கிறார்.

மார்த்தாள், மரியாள் இவர்களின் ஒரே சகோதரனான லாசருவின் மரணமாகிய புயலில் இந்தக்குடும்பம் அமிழ்ந்திருக்கும் போது, குடும்பத்தின் புயலை அமர்த்தி சமாதானம் அருளிச் செய்த ஆண்டவர், நம் வாழ்க்கைப் படகிலும் ஏற்படும் புயலை நீக்கி நம் வாழ்வில் நமக்கு சமாதானத்தைத் தர வல்லவராயிருக்கிறார். அவர் பாதத்தை ஓயாமல் மரியாள் பற்றிக் கொண்டது போல நாமும் பற்றிக் கொள்ளுவோம் நீதிமொழிகள் 8:34இல்

கூறியுள்ளபடி நாம் நித்தம் விழித்திருந்து கதவு நிலையருகே காத்திருந்து அவருக்குச் செவி கொடுப்போமானால் நம் வாழ்க்கையிலும், சமாதானத்தையும், மனமகிழ்ச்சியையும் தேவன் கட்டளையிடுவார். 'நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால் நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார்' என இயேசு உரைத்தார். (யோவான் 15:7,8) ஆகவே நாமும் அவரது வார்த்தைகளைக் கேட்டு, உட்கொண்டு அவைகளை நம் இருதயமாகிய பேழையில் வைத்து, அதன்படி நடப்போமானால், அவரது வார்த்தைகள் நம்மில் நிலைக்கும். அப்பொழுது நாம் ஆண்டவரில் நிலை கொண்டு மிகுதியான கனிகளைக் கொடுப்போம். இப்படியாகக் கனிதரும் வாழ்க்கையினால் தேவனுக்கு மகிமையுண்டாக்க நாம் நமது வாழ்வைச் சீர்திருத்துவோமாக.

35. மகதலேனா மரியாள் (லூக்கா 8:2)

இந்த மகதலேனா மரியாளிடமிருந்து இயேசு ஏழு பிசாசுகளைத் துரத்தினார். இவள் கலிலேயாக்கடலுக்கு வடமேற்கு ஓரத்திலுள்ள மக்தலா என்னும் ஊரைச் சேர்ந்தவளாதலால் மற்ற மரியாள்களிடமிருந்து இவளை வேறுபடுத்வலாம்.

இயேசு இவ்வுலகில் சஞ்சரித்த காலத்தில் அநேகரிடமிருந்து பிசாசுகளைத் துரத்தினார். பிசாசு துரத்தப்பட்ட பின்னா, அவர்கள் தெளிந்த புத்தியுடையவர்களாய் மாறினர். லேகியோன் என்ற பிசாசு பிடித்த மனிதன் பிரேதக் குழிகளண்டையில் தன்னைக் காயப்படுத்திக் கொண்டு இருந்தான். ஒருவராலும் அவனைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அவனிடமிருந்த பிசாசு விரட்டப்பட்ட பின், அவன் தெளிந்த புத்தியுடையவனாய் இயேசுவின் பாதத்தில் அமர்ந்திருந்தான். இவ்விதமாகவே இந்த மரியாளிடமிருந்து ஏழு பிசாசுகள் துரத்தப்பட்ட பின் அவளும் தெளிந்த புத்தி அடைந்தவளாய்த் தன்

பாவ வாழ்க்கையைவிட்டு இயேசுவுக்கு உகந்த சீஷி ஆனாள்.

இக்காலத்திலும், அநேக மக்கள் தேவனிடமிருந்து பல வகையான ஆத்தும சரீர நன்மைகளைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள். ஆனால் சிலர், சிலநாட்களுக்குள்ளேயே அதை மறந்து தங்கள் பழைய வாழ்வுக்கே பின் திரும்பி விடுகின்றனர். இந்த மரியாள் தான் இயேசுவிடமிருந்து பெற்ற அந்தப்பெரிய கிருபையை நினைத்தவளாய் நன்றியறிதலுடனும், இயேசுவின்பால் கொண்ட அன்பினாலும் தன் வாழ்நாளெல்லாம் அவருக்கு உண்மையுள்ளவளாயிருந்தாள். அதுபோலவே இன்றும் பலர் தாங்கள் பெற்றுக் கொண்ட நன்மைகளை நினைத்து நன்றியறிதலுள்ள இதயத்துடன் தங்கள் வாழ்நாளெல்லாம் அவருக்குகந்த சாட்சிகளாக ஜீவிப்பதுடன், அவருக்கு ஊழியம் செய்யவும் தொடங்குகின்றனர்.

இயேசு கடைசியாக எருசலேமுக்குப் பயணமான போது, அவருக்குப் பணிவிடை செய்ய வந்த ஸ்திரீகளுடன் இவளும் இருந்தாள். இயேசு சிலுவையிலறையப் பட்ட போதுங்கூட, அவள் சிலுவையை விட்டகலாது அங்கேயே நின்று கொண்டிருந்தாள். (மத்தேயு 27:55. யோவான் 19:25) இயேசுவின் சரீரம் கல்லறையில் வைக்கப்படும் பொழுதும் அவள் அருகே இருந்தாள். (மாற்கு 15:47) இயேசு உயிர்த்தெழுந்தநாள் அதிகாலையில் இவள் கல்லறைக்குப் போனாள். (யோவான் 20:1) கல்லறையில் இயேசுவின் சடலத்தைக் காணாததினால் மிகவும் கலங்கி, ஓடிப்போய், பேதுருவினிடமும், யோவானிடமும், ''சத்துருக்கள் இயேசுவின் சடலத்தை எடுத்துக் கொண்டுபோய் விட்டார்கள்.'' அவர்களுடன் அவளும் கல்லறைக்குத் திரும்பி வந்த பொழுது, கல்லறைக்குக் காவலாயிருந்த இரண்டு தேவதூதர்களைக் கண்டாள். பிறகு இயேசு அருகில் நிற்பதைக் கண்டாள்.

ஒரு வேளை கண்ணீர்த்திரை அவரைச் சரியாகக் காணக் கூடாது மறைத்திருக்கலாம். அதினால் அவள்

அவரைத் தோட்டக்காரன் என நினைத்தாள். ஆனல் இயேசு, 'மரியாளே' என்று அழைத்தவுடன், அவரின் அன்பின் குரலை அடையாளம் கண்டு கொண்டாள். உடனே அவள், 'ரபூனி' என்ருள். இவ்வாறு அவர் மரித்த பின் னரும், அவரது உயிர்த்தெழுதலின் நிச்சயம் சீஷர்கள் பத்தியில் பரவாததற்கு முன்னரும், அவள் அவரது குரலை அடையாளங் கண்டு கொள்ளுவதாயிருந்தால் அவள் அவர்மேல் வைத்த அன்பு எவ்வளவு விசேஷித்ததாயி ருந்திருக்க வேண்டும்! அவள் இவ்வாறு அவர் மீது தன் முழு ஆத்துமாவோடும், முழுமனதோடும் அன்பு கூர்ந்த தால் தான் அவர் உயிர்த்தெழுந்தபின், அவரை முதல் முதலில் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்ருள்.

இந்த மகதலேனு மரியாளைப் போல நாமும் அண்டவரிடமிருந்து எவ்வளவோ ஆத்தும சரீர நன்மைகளைப் பெற்று வருகிருேம். அவள் அதை நினைத்து அவரிடம் நன்றியோடு அன்பு செலுத்திய வண்ணம் நாம் அவரிடம் கூறுகிருேமா? அவ்வாறு அன்பு கூறும்போது நாம் அவரது இதயத்தை இந்த மகதலேனு மரியாளைப்போல் மகிழ்விப் போம். அதனுலேயே உயிர்த்தெழுந்தபின் அவளை அன்புடன் பெயர் சொல்லி அழைக்கும் பாக்கியத்தைப்பெற்ருள். அது போலவே, நாமும் அவருக்கு நன்றி செலுத்தி அவரிடம் நம் முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் அன்பு கூர்ந்து, வாழ்நாளெல்லாம் அவருக்கு உத்தம சாட்சிகளாய் ஜீவித்து, அவரைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, அவருக்கு ஊழியம் செய்து வந்தால், நிச்சயமாகக் கர்த்தர் நம்மையும் அன்புடன் பேர் சொல்லி அழைத்து, தமது ஆசீர்வாதங்களால் நிரப்பி மரியாளைப் மகிமைப்படுத்தியது போல நம்மையும் மகிமைப்படுத்துவார்.

36. கிலேயோப்பா மரியாள்.

(யோவான் 19:25)

கிலேயோப்பா மரியாள் இயேசுவின் தாயாருக்குச்

சகோதரி ஆவாள். ஆகவே இவள், இயேசு சிறுபாலகனாக இருந்த காலந்தொட்டே அவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்க வேண்டும். அவரது குணங்கள் அவளை அவர்பால் இழுத்திருக்க வேண்டும். இயேசுவோடு அவள் தொடர்பு கொண்டது மாத்திரமல்லாது, அவர் பால் மிகுந்த அன்பு கொண்டவளுமாக இருந்தாள். எனவே தான் இயேசுவின் சிலுவையினடியில் நின்ற ஒரு சில மக்களுள் இவளும் நின்றிருந்தாள்.

இயேசு தமது அன்பினாலே மற்றவர்களைத் தன்பால் இழுத்து கொண்டார். அந்த அன்பிலே கட்டுண்டவர்கள் அவரோடு நெருங்கி ஜீவித்து அவர் அருளும் கிருபைகளைப் பெற்றுக்கொள்ளுவார்கள். இயேசு சொன்ன பிரகாரம், செடியோடு ஒட்டியிருக்கும் திராட்சக்கொடியே மிகுந்த கனிகளைக் கொடுக்கும். அதுபோல இயேசுவோடு நெருங்கி ஜீவிக்கும் மக்களே மிகுந்த ஆவியின் கனிகளைக் கொடுப்பார்கள். நாமும் இவ்விதமாகக் கனிகளைக் கொடுக்கும் படியாக நமது ஆண்டவரோடு நெருங்கி ஜீவிக்கப்பழகுவோமாக.

கிலேயோப்பா மரியாள் இயேசுவை அவரது சிலுவையின் மரணபரியந்தம் பின்பற்றி மகத்துவமான ஊழியத்தில் பங்குபெற்றவள். இவளைப்போன்று ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாமும் நம் கடைசி சுவாசம் வரையும் ஆண்டவருக்காக நல்ல போர் புரிய முன் வருவோமா? அப்படியானால் இமைப் பொழுதும் கர்த்தர் நம்மைக்கைவிடாமல் அவருக்குள் நம்மை மறைத்து, அவருடைய பரிபூரண சித்தத்தை நம்மில் நிறைவேற்றுவார் முடிவில் ஒருநாள் அநேக ஆத்துமாக்களோடு அவர் சந்நிதானத்தையடைய அவர் நமக்கு உதவிசெய்வார்.

37. லேயாள் (ஆதியாகமம் 29:10:35)

யாக்கோபு தன் தமயன் எசாவுக்குப் பயந்து தன் மாமனாகிய லாபானிடம் ஓடினான். லாபானுக்கு லேயாள், ராகேல் என இரு குமாரத்திகள் இருந்தனர். ராகேல்

மிகுந்த அழகுள்ளவள். லேயாளோ கூச்சப்பார்வையுடைய வளாயிருந்தாள். யாக்கோபு ராகேலை விரும்பினான். அதற்காக லாபானிடம் ஏழு வருடங்கள் ஊழியஞ்செய்ய ஒப்புக்கொண்டான். அந்த ஏழு வருடங்கள் முடிந்தவுடன் யாக்கோபு ராகேலைக் கொடுக்கும்படி கேட்டான். ஆனால் இரவில் லாபான் லேயாளை அவனுக்கு கொடுத்தான். இந்த ஏமாற்றத்தை யாக்கோபால் தாங்கிக் கொள்ளுவது கடினமாயிருந்தது லாபான் யாக்கோபை நோக்கி ராகேலுக்காகப் பின்னும் ஏழு வருடங்கள் ஊழியம் செய்யும்படி கூறினான். அதையும் அவன் ஏற்று, ராகேலையும் மனைவியாக அடைந்தான்.

யாக்கோபு ராகேலை அதிகமாக நேசித்தான். லேயாள் மனமுடைந்தவளாய்க் கர்த்தரையே நோக்கிப் பார்த்தாள். அவர் அவளுக்கு முதலில் நான்கு குமாரர்களைக் கொடுத்தார். ராகேலின் கர்ப்பத்தையோ கர்த்தர் அடைந்திருந்தார். லேயாள் தன் முதல் குமாரனைப் பெற்றெடுத்தபோது, ''கர்த்தர் என் சிறுமையைப் பார்த்தருளினார்,'' என்றும், இரண்டாவது குமாரன் பிறந்தபோது, ''நான் அற்பமாய் எண்ணப்பட்டதைக் கர்த்தர் கேட்டருளினார்'' என்றும் எப்பொழுதும் கர்த்தர் மீதே சார்ந்திருந்தாள். நான்காவது குமாரன் பிறந்த போதோ அவள், ''இப்பொழுது கர்த்தரைத் துதிப்பேன்'' என்றாள். இவ்வாறாக அவள் அற்பமாய் எண்ணப்பட்ட காலத்தில் எந்த மனிதரிடமும் செல்லாது, கர்த்தரையே சார்ந்ததால், கர்த்தர் மறுபடியும் அவளுக்கு இரு குமாரரை அருளிச் செய்தார்.

இவ்வாறு நாம் எக்காலத்தும், நமது துன்ப துக்க சமயங்களில் இந்த லேயாளைப் போல நமது ஆண்டவரையே நோக்கிப் பார்ப்போமானால், லேயாளுக்கு இரங்கி அவள் நிந்தையைப் போக்கியது போல, தேவன் நமது துன்பங்களையும் நீக்கி, நம்மை ஆதரித்து, நம்மை மகிமைப்படுத்துவார். லேயாள் யாக்கோபினால் அதிகமாய் நேசிக்கப்படாமல், தனது

சகோதரியான ராகேலினால் அற்பமாய் எண்ணப்பட்ட சமயத்திலுங்கூட தனது கணவனுக்கு அடங்கினவளாய், அமைதியும், சாந்தமுமுள்ள ஆவியைத் தரித்திருந்தாள். கணவனோடோ, சகோதரியோடோ கடினமாய்ப் பேசவில்லை. மிகுந்த தாழ்மையோடு தேவனுடைய சித்தத்திற்கு தன்னை ஒப்படைத்தாள். தன் கணவனால் விரும்பப்படாத மனைவியாயிருந்தும், யாக்கோபு தன் மாமனாகிய லாபானின் வீட்டை விட்டுக் கிளம்பும்போது, அவனது விருப்பத்திற்கிணங்கி, தன் கணவனின் சித்தமே தன் பாக்கியம் எனக்கருதித் தன் தகப்பன வீட்டை விட்டுச் சென்றாள். இவ்விதமாக பரி. பேதுரு கூறியுள்ளபடி, லேயாள் ஓர் உத்தம மனைவியாகத் திகழ்ந்தாள். அவளிடத்தில் காணப்பட்ட அக அழகு நம்மிடத்திலும் காணப்படத்தக்கதாய் நாம் கர்த்தரோடு மிகுந்த தொடர்பு கொண்டு ஜீவிப்போமாக லேயாள் கர்த்தரை பற்றிக் கொண்டபடியே நாம் நம் ஆண்டவரைப் பற்றிக் கொண்டோமானால் ஆண்டவரின் பெரிய ஆசீர்வாதங்களை நாம் அடையலாம்.

நம் வாழ்வில், நம் துன்பத்தில் நம் பிரச்சனை நேரங்களில், மனிதரால் நிந்திக்கப்படும் வேளையில் உலகம் நமக்குக் கோபமாய்த்தோன்றும் சமயங்களில், எல்லா நிலைமையிலும் நாம் அவரைப் பற்றிக் கொள்வோம். அப்பொழுது லேயாளைக் கடைசி மட்டும் காப்பாற்றி, எபிரோனுக்குக் கொண்டுபோய், பிதாக்களின் கல்லறையில் சேர்த்த ஆண்டவர் நம்மையும் முடிவு மட்டும் காப்பாற்றி அநேக ஆவிக்குரிய பிள்ளைகளை நமக்குத் தந்து ஆண்டவருடைய வருகையில் அவரைச் சந்திக்க நமக்குக் கிருபை செய்வார். எனவே, நாம் அவரைப் பற்றிக் கொண்டு அவருக்காகவே ஜீவிப்போமாக.

38. சமாரியர் ஸ்திரீ (யோவான் 4:4–43)

இயேசு இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் ஒரு நாள் சமாரியா நாட்டைக் கடந்து சென்றார். அது மத்தியான வேளையாயிருந்தது. அவர் மிகவும் களைப்புற்றவராய் ஒரு கிணற்றினருகே உட்கார்ந்தார். சீஷர்கள்

உணவு வாங்கி வரும்படி ஊருக்குள் சென்றிருந்தனர். அவர் இவ்வாறு தனித்திருக்கையில், ஒரு சமாரிய ஸ்திரீ தண்ணீர் மொண்டு கொள்ளும்படி அங்கு வந்தாள். அப்பொழுது இயேசு அவளிடம் தாகத்துக்குத் தா என்று தண்ணீர் கேட்டார். அவள், ''நீர் யூதனாயிருக்க சமாரியஸ்திரீயாகிய என்னிடத்தில், தாகத்துக்குத்தா என்று எப்படி கேட்கலாம்?'' என்று கேட்டாள். அப்பொழுது அவர், ''நீ தேவனுடைய ஈவையும், தாகத்துக்குத்தா என்று உன்னிடம் கேட்பவர் இன்னார் என்பதையும் அறிந்திருந்தாயானால், நீயே அவரிடத்தில் கேட்டிருப்பாய், அவர் உனக்கு ஜீவ தண்ணீரைக் கொடுத்திருப்பார்,'' என்றார். அவள் அவரது கருத்தை உணராது, ''அந்த ஆழமான கிணற்றிலிருந்து ஒரு பாத்திரமுமில்லாமல் எவ்வாறு தண்ணீரை மொண்டு கொள்ள முடியுமென்றும், தங்கள் முற்பிதாக்களை விட அவர் பெரியவரோ என்றும் கேட்டாள். அதற்கு அவர், ''இந்தத் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும். நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது.

நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள் நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும்'' என்றார். அவளோ தன்சரீரத் தேவைக்காக மறுபடியும் தாகமுண்டாகாமலிருக்கவும், அவள் அங்கே தண்ணீரை மொண்டு கொள்ளாமலிருக்கவும் தக்கதாக அந்த ஜீவ தண்ணீரைத்தனக்கு கொடுக்குமாறு அவரைக் கேட்டாள் இயேசு இதையறிந்தவராய் அவளிடம் அவளது கணவனை அழைத்து வரும்படிக்கூறினார். அவள் உண்மையுடன் தனக்குப் புருஷன் இல்லை என்றாள். அப்பொழுது அவர் அதை ஆமோதித்து, முன்பு அவளுக்கு ஐந்து புருஷர்கள் இருந்தார்களெனவும், இப்பொழுது இருக்கிறவன் புருஷன் அல்ல என்றும் சொன்னார். அப்பொழுது அவள் அவரை ஓர் தீர்க்கதரிசி என்றும், யூதர்கள் கர்த்தரை எருசலேமில் சென்று தொழ வேண்டும் என்று சொல்லுகிறார்களே என்றும் கூறினாள். அப்பொழுது அவர், ''ஸ்திரீயே,

நான் சொல்லுகிறதை நம்பு; நீங்கள் இந்த மலையிலும், எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவைத் தொழுதுக் கொள்ளுங்காலம் வருகிறது ...... இரட்சிப்பு யூதர்கள் வழியாய் வருகிறது' என்றார். மேலும் அவர் பிதாவைத் தொழுது கொள்ளுபவர்கள், அவரை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும் என்றும் கூறினார்,

இயேசு கிறிஸ்து உலகில் வாழ்ந்த காலத்தில் செய்த மிக உன்னதமான வெளிப்பாடுகள் பெரும்பாலும் பெண்களின் மூலமாகவும் உலகிற்கு கொடுக்கப்பட்டுள்ளன மகதலேனா மரியாள், பெத்தானியா, மார்த்தாள், இந்தச் சகாரியப்பெண் இவர்கள் இதில் முதலிடம் வகிக்கின்றனர் பெண்களுக்கு இயல்பாகவே ஆவிக்குரிய வாழ்வில் மிகுந்த நாட்டமுண்டென்றும், அதைப்பற்றி ஆழமாக அறிய ஆவலுண்டென்றும் அறிவார். அதுமாத்திரமல்ல, இப்படி வாழ்வில் கீழ்நிலையிலிருந்த இப்பெண்ணை ஏன் தெரிந்து கொண்டார்? யாருமே இதை எதிர்பார்க்க மாட்டார்கள். இயேசு இப்பெண்ணின் இருதயத்தில் மறைந்து கிடந்த அந்த ஏக்கத்தை அறிந்தார், தனது வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்படாதா என அவள் ஏங்கியிருக்கக்கூடும். இப்படிப்பட்ட பெண்களின் வாழ்வில் ஒரு திருப்பம் ஏற்பட்டு, மறுவாழ்வு அவர்கள் பெற்று, தேவனோடு ஒப்புரவு ஆக முடியுமென்பதை அவர் அறிந்தும், அதனை உலகத்திற்கு எடுத்துக் காட்டவே இதனைச் செய்திருக்கிறார்.

இவை யாவும் இவளுடைய வாழ்வில் காணப்படும் உண்மைகளாகும். இயேசு ஜீவ தண்ணீரைப்பற்றிப் பேசிய போது, அவள் அதில்காட்டிய ஆர்வம், இன்னும் ஆழமான சத்தியங்களை அவளுக்கு எடுத்துக்கூற தூண்டிற்று. அந்த ஆர்வமும், அவரோடு கொண்டதொடர்பும் அவளைத் தன் வாழ்வின் இழிநிலையை உணரச்செய்தது. அவள் அதை ஒத்துக்கொண்டாள் அவளது வாழ்வில் மேசியாவைக் கண்ட மகிழ்ச்சி ஏற்பட்டது. அத்துடன் ஒரு திருப்பமும் ஏற்பட்டது. இதோடு அவள் நின்றுவிடாது ''யான்கண்ட இன்பம் இவ்வையகம் பெறுக'' என்ற எண்ணத்துடன் ஊருக்குள் ஓடி மற்றவர்களையும் இயேசுவிடம் அழைத்து

வரும் நற்செய்திப் பணியைச் செய்யத் தூண்டிற்று. அவர்கள் வந்து அவரது வசனங்களைக் கேட்டு அவரை மேசியாவாகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு அவரை விசுவாசித்தார்கள்.

''ஓ தாகமாயிருக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள். ஏசாயா (55:1) என்று அழைத்த ஆண்டவர் இந்தச் சமாரியஸ்திரீயின் ஆத்மீக தாகத்தைத் தீர்த்து, திருப்தி அடையும்படி செய்தார். உங்கள் செவியைச் சாய்த்து, என்னிடத்தில் வாருங்கள். கேளுங்கள் அப்பொழுது உங்கள் ஆத்துமா பிழைக்கும்.'' (ஏசாயா 55:3) என்றபடி அந்த ஸ்திரீயின் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் ஆண்டவருக்கு சாட்சியாக மாற அது அனுகூலமாயிருந்தது. நீதிமொழிகள் 4:23-ல் கூறியுள்ளபடி அவரை விசுவாசிக்கிற அவரது பிள்ளைகளின் உள்ளத்திலிருந்து ஜீவ ஊற்று புறப்படும். தவனமுள்ள ஆத்துமாவை கர்த்தர் திருப்தி யாக்கி பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறுர். (சங்கீதம் 107:8)

நமது வாழ்க்கை இச்சமாரியஸ்திரீ ஆண்டவரோடு அளவளாவி, அவரது மகத்துவங்களைப் பிறருக்கு எடுத்துக்கூறி, அவர்களை இயேசுவிடம் அழைத்து வந்தது போல், நாமும் அழிவுக்கு நேராகச் சென்று கொண்டிருக்கும் மக்களை ஆண்டவரது அன்பிற்கு நேராக வழி நடத்த, நம்மைத் தாழ்த்தி, அவரது கையில் ஒப்புக் கொடுப்போம். அவரது கிருபையில் பலப்படுவோம். ஆத்தும பாரத்தோடு அவரது சந்நிதியில் கண்ணீர் விட்டு ஜெபிப்போம். எல்லா மனிதரும் இரட்சிக்கப் படுவதும், சத்தியத்தை அறிகிற அறிவை அடைவதும் ஆண்டவருடைய சித்தமாயுள்ளது. நாம் அவரிலும் அவர் நம்மிலும் நிலைத்திருந்தால் நாம் கேட்டுக் கொள்வது எதுவோ, அதைத் தருவேன் என்று வாக்கு கொடுத் திருக்கிறுர். (யோவான் 17:9,50) !மூர்ச்சித்துக் கிடக்கும் ஆத்துமாக்களுக்காக நாம் பெருமூச்சோடு அழுவோ

மானுல், (எசேக்கியல் 9:4) அந்த சமாரியஸ்திரீயைப் போல் கும்பல் கும்பலாய் மக்களை ஆண்டவருக்கு நேராக வழி நடத்த அவர் அருள்புரிவார்.

39 இரண்டு காசு காணிக்கை போட்ட விதவை. (லூக்கா 1:1-4)

இயேசுவானவர் இவ்வுலகில் மானிடனுக வாழ்ந்த காலத்தில், தேவாலயத்திற்கு அடிக்கடிச் சென்ருர் என்று பார்க்கிறோம். அப்படி அவர் கர்த்தருடைய சந்நிதியில் ஒரு நாள் வந்தபோது, காணிக்கைப் பெட்டியினருகில் உட்கார்ந்து, காணிக்கை போடுகிறவர்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். அநேக மக்கள் வந்து ஏராளமான காணிக்கைகளைப் படைத்தார்கள். ஆனால் ஒரு ஏழை விதவை வந்து இரண்டு காசைக் காணிக்கையாகப் போட்டாள். ஆண்டவர் அவளை புகழ்ந்து பேசினார். இந்த ஏழை விதவை மற்றெல்லாரைப்பார்க்கிலும் அதிகம் போட்டாள்'' என்ருர் அவர் அவ்வாறு கூறக்காரணமென்ன?

உள்ளிந்திரியங்களை ஆராயும் தேவன் அவர். அந்த ஏழை விதவையின் உள்ளத்தில் உறைந்து கிடந்த அந்த அன்பை அவர் உணர்ந்தார். அவள் தேவனிடத்தில் அவ்வளவு, அன்பும் விசுவாசமும் வைத்திருந்ததால் தான் அவள் தன் ஜீவனத்துக்கு உண்டானதெல்லாமான அந்த இரண்டு காசையும் கூடப் போட்டுவிட்டாள். இன்றுங்கூட அநேகர் தங்கள் பரிபூரணத்தினின்றும் கடவுளுக்குத்தங்கள் தசமபாகத்தை செலுத்துகிருர்கள். அவர்கள் உள்ளான அன்பினால் ஏவப்பட்டு அதைச்செய்கிருர்களா என்பது கேள்விக்குறியே. நாம் கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தும் பொழுது மனப்பூர்வமாய்ச் செலுத்த வேண்டும் மனப்பூர்வமாய்க் கொடுக்கிறவர்களிடத்தில் கர்த்தர் பிரியமாயிருக்கிருர்.

அந்த ஸ்திரி தேவனுடைய வாக்கின் மீது நம்பிக்கை வைத்து, தனக்கு நாளைக்கு வேண்டுமே என்ற கவலையற்றவளாய் அவரை விசுவாசித்துத் தனக்குண்டானதெல்லா

வற்றையும் காணிக்கையாகக் கொடுத்து விட்டாள். நாளை தினத்தைக் கவலைப்படாதவள் அவள். அந்தந்த நாளுக்கு அதனதன் பாடு போதும் என்றிருப்பவள். தேவனுடைய அளவற்ற அன்பையும், பராமரிப்பையும் நன்குணர்ந்தாள் நீங்கள் ஒற்தலாமிலும் வெந்தயத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயபிரமாணத்தில் கற்பித்திருக்கிற விஷேஷித்தவைகளாகிய நீதியையும் இரக்கத்தையும் விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள், இவைகளையும் செய்யவேண்டும், அவைகளையும் விட்டுவிடாதிருக்கவேண்டும்.'' (மத்தேயு 23:23) என்று நம் இரட்சகர் விளப்பியபிரகாரம் காணிக்கை செலுத்துவதோடு விசுவாசத்தையும், நீதியையும், இரக்கத்தையும் விட்டுவிடாதிருக்கவேண்டும்.

''கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குப் கொடுக்கப்படும்' என்றார் கர்த்தர். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவின்படி உங்களுக்கு அளக்கப்படும், அமுக்கி, குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள் (லூக்கா 6:38) ஆகவே, மனப்பூர்வமாக நமது காணிக்கைகளை ஆண்டவருக்கு செலுத்துவோமாக. அந்த ஏழை விதவை தனக்கு உண்டானதெல்லாவற்றையும் செலுத்தி விட்டால், அது போல நாமும் நம்மை அவருக்கு முற்றிலுமாக அர்ப்பணம் செய்வோமாக. அவர் நம்முடைய காணிக்கைகளின் மீதல்ல, நம்மீதே அன்பு கொண்டவர். ஆகையால் அவர் நம்மையே தமக்கு சொந்தமாக்கி கொள்ள விரும்புகிறார். பரிசுத்த பவுல் சொன்ன பிரகாரம், நாம் நமது சரீரங்களை பரிசுத்தமும், தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுப்போமாக இவ்வாறு நாம் ஆண்டவருக்கு நன்மையும், நமது பொருளையும் காணிக்கையாகக் செலுத்தும் பொழுது, அவர் நம்மையும் நமது காணிக்கையையும் அங்கீகரித்து, தமது பணியில் ஈடுபடுத்துவார். இம்மையில் அவர் நம் தேவைகளையெல்லாம் சந்திப்பார். மறுமையில் நமக்கு நித்திய ஜீவன் அளிப்பார்.

40. எலிசபெத் (லூக்கா 1:5-25)

யூதேயா தேசத்து ராஜாவாகிய ஏரோதின் நாட்களிலே அபியா என்னும் ஆசாரிய வகுப்பில் சகரியாஎன்று ஒரு ஆசாரியன் இருந்தான். அவனுடைய மனைவியின் பெயர் எலிசபெத் அவர்களுக்குப் பிள்ளையில்லாதிருந்தது. அவர்களிருவரும் வயது சென்றவர்களாயிருந்தனர். ஒரு நாள் அவன் ஆசாரிய முறைமையின்படி தூபங்காட்டும் போது, ஒரு தூதன் வந்து, ''சகரியாவே, பயப்படாதே. உன் வேண்டுதல் கேட்கப்பட்டது; உன் மனைவியாகிய எலிசபெத்து உனக்கு ஒரு குமாரனைப் பெறுவாள்; அவனுக்கு யோவான் என்று பேரிடுவாயாக'' என்றான். அன்றியும் அத்தூதன், பிறக்கப்போகும் குழந்தையைப் பற்றி, அது கர்ப்பத்திலிருக்கும் போதே பரிசுத்த ஆவியால் நிரப்பப்படும் என்றும், அநேகரை தேவனாகிய கர்த்தரிடத்திற்குத் திரும்புவான் என்றும் கர்த்தருக்கு அவன் வழியை ஆயத்தப்படுத்துவான் என்றும் கூறினான். அப்பொழுது சகரியா தானும் தனது மனைவியும் வயது சென்றவர்களாதலால், இது நடக்கும் என்பதைத் தான் எவ்வாறு அறிந்து கொள்வது என்று கேட்டான். அப்பொழுது அந்தத் தூதன் அக்குழந்தை பிறக்கும் வரை சகரியா ஊமையாயிருப்பான் எனக் கூறினான்.

இந்த எலிசபெத் எப்படிப்பட்ட ஸ்திரீ என்று நாம் பார்க்கையில், அவளும் அவள் கணவனும், ''கர்த்தரிட்ட சகல கற்பனைகளின் படியேயும், குற்றமற்றவர்களாய் நடந்து, தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாயிருந்தார்கள்'' என வேதம் சொல்லுகிறதைப் பார்க்கிறோம். இப்படிப்பட்ட ஒரு பரிசுத்த ஜீவியம் செய்து கர்த்தருக்குப் பிரியமான வழியில் நடந்து, அவருக்கு ஊழியஞ் செய்ததினால் தான் கர்த்தருக்கு முன்னோடியான யோவான் ஸ்நானகனைப் பெற்றெடுக்கும் பெரும் பாக்கியத்தைப் பெற்றாள்.

எலிசபெத் கர்ப்பமுற்ற ஆரும் மாதத்தில் நமது ஆண்டவராகிய இயேசுவின் தாயாகிய மரியாள் தனது இனத்தாளான இந்த எலிசபெத்தும் கர்ப்பந்தரித்துள்ளாள் என்பதை தேவதூதன்மூலம் அறிந்து, அவளிடம் வந்தாள் மரியாள். எலிசபெத்தை வாழ்த்தும்போது எலிசபெத்தின் வயிற்றிலுள்ள பிள்ளை களிப்பால் துள்ளிற்று. அப்பொழுது எலிசபெத் பரிசுத்த ஆவியினுல் நிரப்பப்பட்டு, மரியாளிடம் பிறக்கப்போவது நமது ஆண்டவரே என அறிந்து "என் ஆண்டவருடைய தாயார் என்னிடத்தில் வந்தது எனக்கு எதினுல் கிடைத்தது' என்ருள். அச்சமயத்தில் தான் நாம் மரியாளின் கீதம் எனப்போற்றும் ஒரு அருமையான கீதத்தை மரியாள் பாடினாள். காலம் கிட்டிய போது எலிசபெத்துக்குத் தூதன் கூறிய வண்ணமே ஒரு ஆண் குழந்தை பிறந்தது. எட்டாம் நாளில் யூதர்களின் முறைமையின்படியே அக்குழந்தைக்குப் பெயர் வைக்கும் பொழுது, அதற்கு யோவான் எனப் பெயர் வைக்கும்படி கூறினுள். சகரியாவும் எழுத்துப் பலகையில் அதே பெயரை எழுதிக் காட்டினுன். உடனே அவனுடைய நாவின்கட்டு அவிழ்க்கப்பட்டு அவன் கர்த்தரைத் துதித்தான். அவனும் பரிசுத்த ஆவியினுல் நிரப்பப்பட்டவனுய், நாம் சகரியாவின் கீதம் என்று சொல்லும் கீதத்தைப்பாடினுன்.

மரியாளின் கீதமும், சகரியாவின் கீதமும் எலிசபெத்தில் இருந்த பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதாலேயே பாடப்பட்டவை என நாம் யூகிக்கலாம். பரிசுத்த ஆவியை எலிசபெத் பெறக் காரணம் அவள் ஒரு ஜெபிக்கும் பெண்ணுய் இருந்ததுதான். அதனுல் தான் இத்தம்பதிகளின் வேண்டுதலுக்கிணங்கி ஆண்டவர் அவர்களுக்கு அரியதோர் மகவை ஈந்தார். இந்த எலிசபெத்தைப் போல நாமும் தேவனுடைய பாதையில் நீதியாய் நடந்து, ஜெபஜீவியம் செய்யும்போது, அவளுடைய வேண்டுதலைக்கேட்டு அவளுக்கு மழலைச் செல்வத்தையளித்த ஆண்டவர், நம் வேண்டுதல்களையும் கேட்டு, நமது ஆத்தும சரீர தேவைகளையெல்லாம் சந்திப்பார் என்பது நிச்சயம்.

41. பினெகாசின் மனைவி (I சாமுவேல் 4:19-22)

கர்த்தருடைய ஆசாரியனுன ஏலிக்கு பினெகாஸ், ஒப்னி என்ற இரு குமாரர்கள் இருந்தார்கள். இப்பெண் பினெகாஸின் மனைவி. ஒப்னியும், பினெகாஸீம் பேலியாளின் மக்களாயிருந்தனர். அவர்கள் தேவனுக்குச் சிறிதளவேனும் பயப்படாதவர்களாயிருந்தனர். ஆதலால் தேவன் அவர்களை நிர்மூலமாக்கச் சித்தங்கொண்டார். பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம் மூண்டபோது, ஜனங்கள் உடன்படிக்கைப் பெட்டியைப் பாளயத்திற்கு எடுத்து வரச்செய்தனர். பெலிஸ்தருக்கு எதிராக இஸ்ரவேல் மக்கள் முறிந்தோடினார்கள். ஏலியின் இரு குமாரர்களும் யுத்தத்தில் இறந்து போனுர்கள். உடன்படிக்கைப் பெட்டியும் பிடிபட்டது.

இச்செய்தி ஏலிக்கு அறிவிக்கப்பட்டது. அவனது இருகுமாரரும் இறந்துபோன செய்தியையும், உடன்படிக்கைப்பெட்டி பிடிபட்ட செய்தியையும் கேள்விப்பட்ட போது அவன் உட்கார்ந்திருக்கும் ஆசனத்திலிருந்து விழுந்து பிடரி முறிந்து செத்துப்போனுன். அப்பொழுது பினெகாசின் மனைவி நிறை கர்ப்பிணியாயிருந்தாள். தன் புருஷனும், மாமனுரும் இறந்து பட்ட செய்தியுடன் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி பிடிபட்ட செய்தியையும் அறிந்தவுடன், அவ்வதிர்ச்சியால் ஓர் ஆண் மகவைப் பெற்றுள். அங்கிருந்த ஸ்திரீகள் அதை ஒரு சந்தோஷமான செய்தியாக அவளுக்கு அறிவித்த போது, அவள் அவ்வதிர்ச்சியைத் தாங்காது ''தேவனுடைய பெட்டி பிடிபட்டுப் போனபடியால், மகிமை இஸ்ரவேலை விட்டு விலகிப் போயிற்று என்று கூறி விட்டு இறந்து போனுள்.

ஒரு பேலியாளின் மகனுக்கு மனைவியாயிருந்தும்; இந்த ஸ்திரீ தன் கணவன் மீதும், மாமன் மீதும் மிகுந்த அன்பு வைத்திருந்தாள். அதற்கும் மேலாக அவள் கர்த்தரிடத்தில் அன்பும், பயபக்தியும் உடையவளாயிருந்தாள். உடன்படிக்கைப் பெட்டி பிடிபட்டதால், கர்த்தர் இஸ்ர

வேல்மக்கள் செய்த குற்றங்களுக்காக அவர்களை விட்டு நீங்கிவிட்டார் என்ற ஏக்கங்கொண்டவளாய், இஸ்ரவேலின் மகிமைபோய்விட்டது என்றாள். இதிலிருந்து அவள் கர்த்தர் மேலும், அவரது ஜனமாகிய இஸ்ரவேலர்மீதும் எவ்வளவு அன்பு வைத்திருந்தாள் என்பது புலனாகிறது. நாமும் நம் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவுக்காக வைராக்கியமுள்ளவர்களாய் ஜீவித்து, அவரது பிள்ளைகள் அவருக்காக வாழவும் அவரை வேண்டிக்கொள்வோமாக.

நீதிமான் நீதியை விட்டு விலகும்போது, கர்த்தர் அவன் முன் இடறுதலை வைக்கிறார். அவன் வீட்டிற்கு வரப்போகிற கஷ்டத்தையும், சாபத்தையும் அறிந்தும் ஏலி தன் பிள்ளைகளைக் கண்டிக்காமல், ''அவர் கர்த்தர்; அவர் விருப்பப்படி செய்வாராக'' என்று சொல்லி நிறுத்திக் கொண்டான். (I சாமுவேல் 3-ம் அதிகாரம்) சாமுவேல் மூலம் ஏலிக்கும், இஸ்ரவேல் மக்களுக்கும் வரப் போகிறஎல்லா கஷ்டங்களையும் கர்த்தர் வெளிப்படுத்தினார். அந்த சமயம் ஏலி தன் பிள்ளைகளைத் திருத்தி இருப்பானானால், இந்தக் கஷ்டமும், நஷ்டமும் அவனுக்கு வந்திராது. ஆண்டவர் தம் பிள்ளைகள் நல்ல வழியை விட்டுத் தவறிபோகும் போது தம் பிள்ளைகள் மூலமாய் அல்லது தனது திருவசனம் மூலமாய் எச்சரிக்கிறார். (எசேக்கியேல் 3:17-21) அப்படி எச்சரிக்கப் படும் போது; அவர்கள் மனந்திரும்பினால் அவர் அவர்கள் பாவங்களை மன்னித்து, அவர்கள் கஷ்டங்களை நிவர்த்தி செய்து, தேவமகிமையினால் மீண்டும் நிரப்புவார். இதை வாசிக்கிற நீங்கள் சிந்தித்து உங்கள் வாழ்க்கையைத் திருத்திக் கொள்ளுங்கள்.

42. மன்னிப்பைப் பெற்ற ஸ்திரீ

(லூக்கா 7:36-50)

ஆண்டவராகிய இயேசுவைப் பரிசேயன் ஒருவன் தன் வீட்டிலே போஜனம் பண்ண அழைத்தான். அவர் அங்கே பந்தியிருக்கையில் அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டுவந்து,

அவருடைய பாதங்களினருகே பின்னாலே நின்று, அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்துத் தன் தலைமயிரினால் துடைத்து முத்தஞ் செய்து பரிமளதைலத்தைப் பூசினாள்.

இந்த ஸ்திரீ தன் பாவ நிலையை உணர்ந்து, தனது மனங்கசந்து அழுது அவரிடம் வந்தாள். ',நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நறுங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார். (சங்கீதம் 34:18) அவள் அவருக்குமுன் வருவதற்குக்கூட தன்னைத் தகுதியற்றவளாகக்கருதி அவருடைய பாதங்களுக்கருகே பின்னால் நின்றாள். ''தேவனே, பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்'' என்று தன்னைத் தாழ்த்தி ஜெபித்த ஆயக்காரன் போல் அவள் தன்னைத்தானே கர்த்தருக்கு முன்பாகத் தாழ்த்தினாள். பின்னர் அவள், அவர் பாதங்களைத் தன் மனஸ்தாபக் கண்ணீரினால் கழுவினாள். 'தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.'' (நீதிமொழிகள் 28:13) அடுத்ததாக அவள் ஸ்திரீகளுக்கு மகிமையாக விளங்கும் தலைமயிரால் அவர் பாதங்களைத் துடைத்தாள். பின்னர் தைலத்தை அவர் பாதங்களில் ஊற்றி முத்தம் செய்தாள். அவளதுமிகுதியான பாவங்கள் அவளுக்கு மன்னிக்கப்பட்டு, விசுவாசத்தோடும், சந்தோஷத்தோடும், சமாதானத்தோடும் திரும்பி சென்றாள்.

இந்தப் பாவியான ஸ்திரீ செய்த பிரகாரம் நாம் நமது பாவங்களை மறைக்காது, நம்மைக் கர்த்தருடைய சந்நிதியில் தாழ்த்தி, நொறுங்குண்ட இருதயத்தோடு அவரை அண்டி, நமது மனஸ்தாபக் கண்ணீரை அவர் அவர் பாதத்தில் ஊற்றுவோமானால், அவர் தமது திரு ரத்தத்தால் நம்மைச் சுத்திகரித்து, அந்தப்பாவியாகிய ஸ்திரீக்கு அருளின பாவ மன்னிப்பையும், நமக்கு அருளுவார். இப்பேர்ப்பட்ட பெரிய ஆசீர்வாதத்தைப்பெற நாம்அவரது பாதங்களைப் பற்றிக் கொள்வோமாக. அன்றியும் அந்தப் பெண்ணை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பளிக்க விரும்பிய

மனிதரைப் போலல்லாது, கிறிஸ்துவைப் போல் மன்னிக்கும் சுபாவமுள்ளவர்களாய் இருப்போம்.

"என்னிடத்தில் வருகிறவன் நான் ஒருக்காலும் புறம்பே தள்ளுவதில்லை என்று வாக்களித்த தேவன், இந்தப் பெண் பாவி என்றறிந்தும் கூட அவளைப் புறம்பே தள்ளவில்லை. "பாவிகளை இரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார். எனவே, அவர் அவளை மன்னித்து, அவளது பாவக் கட்டினின்றும் விடுவித்து, சமாதானத்தை அளித்து, ஒரு நல்வாழ்வையும் சுட்டிக் காட்டினார். நாம் பாவி என்றுணர்ந்து, நாமும் அவரண்டைப் போவோமானால், அவர் நம்முடைய பாவங்களையும் நமக்கு மன்னித்து விடுவதால், நாமும் சமாதானமடைந்தவர்களாய் அவருக்குச் சாட்சியாக வாழத் தேவன் அருள்புரிவார்.

இந்தப் பெண் தேவசமுகத்தில் தன் பாவத்திற்காக மனங்கசந்து அழுதபோது, மன்னித்து, "உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது. உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ" என்று சொன்ன ஆண்டவர் இன்றும் மனங்கசந்து யார் தேவ சமுகத்தில் வருகிறார்களோ, அவர்கள் பாவங்களை மன்னிக்கவும், அவர்களுக்கு சமாதானம் அளிக்கவும் காத்துக் கொண்டிருக்கிறார். அன்போடு உங்களை அழைக்கிறார். எப்பேர்ப்பட்ட பாவியையும் அவர் தள்ளிப் போடுகிறவரல்ல இருதயம் நொறுங்கி, அன்னாளைப் போலும், ஆயக்காரனைப் போலும், நினிவேயின் மக்களைப் போலும், சிலுவையின் வலதுபக்கத்துக் கள்ளனைப் போலவும் ஆண்டவர் பாதத்தில் வருவோம். அவர் நம்மை இரட்சித்து, நமது பெயரை ஜீவ புஸ்தகத்தில் எழுதுவார். அவரது சாட்சிகளாக்குவார். முடிவில் நித்திய ஜீவனை அருளுவார்.

43. பாவியான ஸ்திரீ (யோவான் 8:1-11)

இங்கே விபச்சாரத்தில் கையும் மெய்யுமாகப் பிடிக்

கப்பட்ட ஒரு ஸ்திரீயைப் பார்க்கிறோம். யூதரது நியாயப் பிரமாணத்தின்படி அப்பெண்ணோடு அம்மனிதனும் கல்லெறியப்பட வேண்டும். (லேவியராகமம் 20:10) ஆனால் இயேசுவிடம் இப்பெண் மாத்திரம் கொண்டுவரப்பட்டாள். இயேசுவும் ''அம்மனிதன் எங்கே? என்று கேட்காது, ''உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலில் கல்லெறியக்கடவன்' என்று சொல்லிவிட்டுக்குனிந்து தரையில் எழுதினார். கூடியிருந்த அனைவரும் தங்கள் மனசாட்சியில் குத்தப்பட்டதால் அவர்கள் விலகிப்போய் விட்டார்கள். இயேசு நிமிர்ந்து பார்த்த போது அந்த ஸ்திரீயைத் தவிர வேறொருவரையும் காணவில்லை. அப்போது இயேசு அவளை நோக்கி ''ஸ்திரீயே, உன்மேல் குற்றஞ்சாட்டினவர்கள் எங்கே? ஒருவனாகிலும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கவில்லையா என்றார். அவள் ''இல்லை ஆண்டவரே'' என்றாள். அப்பொழுது இயேசு அவளை நோக்கி, ''நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை; நீ போ, இனிப் பாவஞ் செய்யாதே'' என்றார்.

இந்தப் பாவியாகிய ஸ்திரீ, ''இவ்வுலகில் நான் இனி வாழுங்காலமெல்லாம் பாவஞ்செய்யாது, ஆண்டவருக்காகவே ஜீவிப்பேன்'' என்று தன் உள்ளத்தில் தீர்மானம் செய்து, தன் பழைய வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டாள். இதை வாசிக்கும் அருமைத்தாயே, சகோதரியே நம்முடைய பாவங்கள் நமக்கு உணர்த்தப்படும் போது, நாம் நமது பாவங்களை அறிக்கை செய்து விட்டு விடுவதுடன் அவருக்காக நாம் வாழத் தீர்மானம் செய்வது மிக அவசியம் எப்பேர்ப்பட்ட பாவியாயிருந்தாலும் அவரிடத்தில் வருகிறவர்களை அவர்புறம்பே தள்ளுகிறதில்லை. வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கும் எந்தப் பாவியும் அவரிடம் வரலாம். மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளலாம்.

அருமையானவர்களே, இப்பகுதியிலிருந்து நான் என்ன புரிந்து கொள்ளுகிறோம்? சங்கீதம் 32:1,2 வசனங்களின்படி நம் வாழ்க்கையில் நாம் முன்னேற முடியாமல் தடுத்துக் கொண்டிருக்கிற எந்தப் பாவமானாலும், எந்தவித அக்கிரமம் ஆனாலும், எந்தக் கெட்ட

பழக்க வழக்கங்கள், அநீதியான காரியங்கள் ஆகியவை யானாலும், அவற்றினின்று விடுதலை தர ஆண்டவர் காத்துக் கொண்டிருக்கிறார். (மத்தேயு 11:28-30 ஏசாயா 58:6, எரேமியா 33:8) எல்லா அக்கிரமங்களையும் மன்னிக்கிற ஆண்டவர் மரணக் கட்டுகளிலிருந்தும், பாவக் கட்டுகளிலிருந்தும், அந்த ஸ்திரீக்கு விடுதலை கொடுத்தார். ''இனிப் பாவஞ்செய்யாதே'' என்றார். மன்னிக்கிற ஆண்டவரை நாம் திரும்ப திரும்ப சிலுவையிலறைவது போல பாவஞ்செய்து வேதனைப்படுத்தாமலும் கழுவப் பட்ட பன்றி திரும்ப திரும்ப சேற்றில் போய்ப் புரளுவது போலும், நாய் தான் கக்கினதைத் திரும்பத் தின்னுவது போலவும் நாம் எச்சரிக்கையுடனிருந்து மறுபடியுமாக நம் பாவ வாழ்க்கைக்குத் திரும்பாது, தண்டனைக்குத் தப்பித்துக் கொள்வோம். கொஞ்சக் காலத்தில் அவரது கோபம் பற்றி எரியப் போகிறது. அவரை அண்டிக் கொள்ளுகிற யாவரும் பாக்கியவான்கள். நாம் ஆண்டவரை அண்டிக் கொள்ளுவோம். அவரே நம்மை இரட்சிப்பார். (சங்கீதம் 2:12)

அன்றியும் அவளைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத் திய மனிதரைப்போல் நாம் இல்லாது இயேசு கூறிய ''நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்ற வர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில் நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்; நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்'' மத்தேயு (7:1,2) என்ற வசனங்களை கடைபிடித்து மற்றவர்களைக் குற்றங்கண்டு பிடிக்காதிருப்போமாக. முதலில் நமது கண்ணிலுள்ள துரும்பை நீக்குவோம். இன்று அநேகருடைய ஜீவியத்திலே சன்மார்க்க ஜீவியம் இருக்கிறது. ஆண்டவ ராகிய தேவன் துன்மார்க்கனையும், சன்மார்க்கனையும் ஒரே பட்டயத்தால் சங்காரம் பண்ணுவேன் என்று உரைக்கிறார். (எசே 21:3) துன்மார்க்கனையும், சன்மார்க்கனையும் நியா யம் தீர்ப்பார் (பிர 3:17) துன்மார்க்கனையும், சன்மார்க் கனையும் அவர் அழிக்கிறார் (யோபு 9:22) இன்று நம்மில்

அநேகர் சன்மார்க்கமான ஜீவியத்தை தந்தருளும் என்று ஜெபிக்கிறோம். யோபை குறித்து சொல்லும் போது கூட உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவனாகிய அவனைப்போல் பூமியில் ஒரு மனுஷனையும் காணேன் என்றார். சன்மார்க்கத்தில் சிறந்து விளங்கிய யோபு நான் சோதிக்கப்பட்ட பின்பு பொன்னாக விளங்குவேன் என்றார். யோபு 42:5-ல் என் காதினால் உம்மைக் குறித்து கேள்விப்பட்டேன் இப்பொழுதோ என் கண் உம்மைக் காண்கிறது என்றார். (சங் 91:14–16) வரை நாம் பார்க்கும்போது அவன் என்னிடத்தில் வாஞ்சையாய் இருக்கிறபடியால் நான் அவனை விடுவிப்பேன். என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்தில் வைப்பேன். என்னை நோக்கிக் கூப்பிடுவான். மறு உத்தரவு அருளி செய்வேன். நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன். ஆண்டவர் சமுகத்தில் வருகிற எந்த பாவியையும் அவர் தள்ளி விடுகிறவர் அல்ல, பாவி தன் பாவங்களை உணரமுடியும்; ஆனல் சன்மார்க்க ஜீவியத்தில் இருக்கும் அனேகருக்கு தங்கள் பாவங்களை உணரமுடியவில்லை. இந்த நிலைமையில் சன்மார்க்க வாழ்க்கையில் இருக்கும் அநேகர் அந்தரங்கத்தில் என்னை பலவிதமான சிந்தனைகள் வந்து அழுத்துகிறது; அதிலிருந்து எனக்கு விடுதலை வேண்டும் என்று கேட்கிறார்கள். தாவீது வீண் சிந்தனையை என்னை விட்டு அகற்றும் என்று கேட்கிறார். எவ்வளவு சன்மார்க்கமாய் இருந்தாலும் இருதயம் மகாகேடும், திருக்குள்ளதுமாயிருக்கிறது. (எரே 17:9) அதை அறியத்தக்கவன் யார்? அந்த திருக்கு நிறைந்த உள்ளத்தை அவர்கையில் கொடுக்கும்போது அவர் உள்ளத்தில் கடந்து வருகிறார்; பாவத்தை மன்னிக்கிறார்; ஜீவபுத்தகத்தில் பேரை எழுதுகிறார்; கேடான சிந்தனைகளை விலக்குகிறார். நம்மை புதுசிருஷ்டியாக மாற்றுகிறார். பழைய வாழ்க்கை நம்மை விட்டு விலகுகிறது (II கொ 5:17) இருள் நீங்கி கிறிஸ்துவின் ஒளி நம்மில் பிரகாசிக்கிறது.

அத்தியாயம் VIII

தேவனுக்கென்று பணிவிடை செய்த ஸ்திரீகள்

இயேசு இவ்வுலகில் இருந்த பொழுது அவர் தம்மைக் குறித்து, ''மனுஷகுமாரனும் ஊழியம்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்ய வந்தேன் என்ருர். (மத்தேயு 20:28) எவனாகிலும் முதன்மையாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்க கடவன்'' இது இயேசுவின் வாக்கு. அவ்வாறே தேவனுக்கென்று ஊழியஞ்செய்து, முதன்மையான இடத்தைப் பெற்ற பல ஸ்திரீகளே நாம் வேதாகமத்தில் சந்திக்கிறோம். அவர்கள் தங்களுக்காக மாத்திரமல்ல, பிறருக்காகவும் வாழ்ந்தவர்கள். ''அவனவன் தனக்கானவைகளல்ல, பிறருக்கானவைகளேயும் நோக்குவாருக'' என்ற பிரகாரம் இவர்கள் தேவனுக்கும், அவருடைய ஊழியக்காரருக்கும், மற்றும் பலருக்கும் தங்கள் ஆஸ்தியினுலும், உடலாலும் உதவி செய்தவர்கள். இப்படிப்பட்டவர்கள்மேல் தேவன் பிரியமாயிருக்கிருர்.

ஊழியத்தில் பலவகை உண்டு. வரங்கள் பல. ஊழியங்களும் பல. ஆகையினுல் தான் பவுல் அப்போஸ்தலன் ஒவ்வொருவரும் செய்யும் ஊழியம் கர்த்தருக்குள் உண்மையுள்ளதாயும், பயனுள்ளதாயும் இருக்கும்படி, ''ஊழியஞ் செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்தி சொல்லுகிறவன் புத்தி சொல்லுகிறதிலும் தரித்திருக்கக் கடவன் என்ருர். (ரோமர் 12:7,8)

இப்படி கர்த்தருக்காக ஊழியம் செய்த ஸ்திரீகளில் தீர்க்கதரிசினிகளும் இருந்தனர். அன்றியும் இயேசுவானவர் இவ்வுலகில் ஜீவித்த காலத்தில் அவருக்குப்

பணிவிடை செய்தவர்கள் உண்டு. ஆதித் திருச்சபையில், சபைக்கும், அப்போஸ்தலருக்கும், சுவிசேஷகர்களுக்கும் பணிவிடை செய்த ஸ்திரீகளும் இருந்தனர். இவர்களின் ஊழியத்தைப் பற்றியும், அந்த ஊழியத்தினுல் அவர்கள் பெற்றுக்கொண்ட நன்மைகளையும் பற்றியும் ஒரு சிறிது ஆராய்வோம்.

44. மார்த்தாள்

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில் அவர்பால் அன்புகொண்டு, தங்களது ஆஸ்தியாலும், உடலாலும் அவருக்கு ஊழியஞ்செய்த பெண்கள் பலர் இருந்தனர். அவர்களுக்குள் மார்த்தாள் என்ற பெண்மணி ஒரு முக்கிய இடம் வகித்தாள். இயேசு பெத்தானியாவுக்கு வரும்பொழுதெல்லாம் அவரைத்தன் இல்லத்தில் ஏற்றுக்கொண்டு அவரது தேவைகளைக்கவனித்து வந்தாள். அவள் அவ்வீட்டில் தன் சகோதரியாகிய மரியாளுடனும், சகோதரனுன லாசருவுடனும் வசித்துவந்தாள்.

இது இவ்வாறிருக்கையில், லாசரு வியாதிப்பட்டு மரிக்கும் தருவாயிலிருந்தான். இயேசுவுக்கு ஆள் அனுப்பினுர்கள். ஆனுல் அவர் வரத்தாமதித்தார். இதற்கிடையில் லாசரு மரித்து அடக்கம் பண்ணப்பட்டான். நான்கு நாட்களுக்குப்பின் இயேசு பெத்தானியாவுக்கு வந்தார்.

'போதகர் வருகிருர்' என்றவுடன், மார்த்தாள் ஓடோடிச் சென்று அவர் பாதங்களில் விழுந்து, ''ஆண்டவரே நீர் இங்கே இருந்தீராஞல் என் சகோதரன் மரிக்க மாட்டான். இப்பொழுதும் நீர் தேவனிடத்தில் கேட்டுக் கொள்ளுவதெதுவோ அதைத் தேவன் உமக்குத் தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன்,'' என்ருள். ''இயேசு, உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான்'' என்ருர். அவளோ, அவன் அச்சமயத்திலேயே உயிர்ப்பிக்கப்படுவான் என்பதை உணராதவளாய், ''உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்ருள். அப்பொழுது இயேசு, வேதத்திலேயே கிறிஸ்தவ அடிப்படை

யான ஓர் உன்னத சத்தியத்தை அவளுக்கு விடையாக அளித்தார். இயேசு, "நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்: உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்; இதை விசுவாசிக்கிறாயா?" எனக் கேட்டார். அதற்கு அவள் மறுமொழியாக, "ஆம், ஆண்டவரே, நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவாசிக்கிறேன்" என்றாள்.

மார்த்தாளைப் பற்றி நாம் யோசிக்கும்போது, அவளும் உலகப் பிரகாரமான அநேக காரியங்களைக் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்த ஒருபெண்மணி எனத்தெரிகிறது. (லூக்கா 10:41) இயேசு வந்திருக்கிறார் என்று அவள் கேள்விப்பட்டவுடன் அவரிடம் ஓடியதும் மார்த்தாளே. மரியாளை அழைத்ததும் மார்த்தாளே. மார்த்தாள் எப்பொழுதும் சுறுசுறுப்புடன் செயல்கள் செய்யும் இயல்புடையவள், அதனால் தான் அவள் இயேசு வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டவுடன் செயலில் இறங்கினாள். (நீதிமொழிகள் 31:2)ல் கூறியுள்ளபடி, "அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறதென்று" கண்ணோக்கமாயிருந்தாள். அவளது கள்ளங்கபடமற்ற தன்மையே முதலில் மரியாளைத் தனக்கு உதவிக்கு அனுப்புமாறு இயேசுவிடம் கேட்க வைத்தது. அதே சுபாவம்தான் இப்பொழுதும் அவரிடம் ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான் என்று கேட்கும்படி தூண்டியது. ஆனாலும் அவர்மேல் வைத்த விசுவாசத்தால் அவள், "இப்பொழுது நீர் தேவனிடத்தில் கேட்டுக்கொள்ளுவதெதுவோ, அதைத் தேவன் உமக்குத்தந்தருளுவாரென்று அறிந்திருக்கிறேன் என்றாள்.

ஆண்டவரது தோட்டத்தில் வேலை செய்ய பல தரப்பட்ட மனிதரும் தேவை. மார்த்தாளும் தனது பங்கை இதில் செய்தாள். இயேசுவையும், அவருடையவர்களையும் அவள் தன் வீட்டில் வைத்துப் போஷித்தாள். அதோடு

கூட கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அடிப்படையான ஒரு தத்துவத்தை இயேசு உலகுக்கு எடுத்துரைக்க அவள் ஒரு கருவியாகவும் அமைந்தாள்.

ஆகிலும் இயேசு கல்லறையை மூடியிருந்த கல்லை எடுத்துப் போடும்படி கூறியபோது, அவளது விசுவாசம் சற்று தடுமாற்றம் கண்டது. ''நாலுநாளாயிற்றே, நாறுமே'' என்றாள். இயேசு அவளிடத்தில், ''நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்று நான் உனக்குச் சொல்லவில்லையா?'' என்று கேட்டார். மறுதலித்த பேதுருவைக் கைவிடாது, திரும்பிப் பார்த்து, அவனை மனம் திரும்ப வைத்த நம் அன்புருவாம் இயேசு, இந்த மார்த்தாளின் விசுவாசத்தையும், இந்தக் கேள்வியின் மூலம் பலப்படச் செய்தார். அவள் இயேசுவின் மகிமையைக் கண்டாள்.

''மிகவும் சிறியவர்களாகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள்'' என்றும் ''சீஷன் என்னும் நாமத்தினிமித்தம் இச்சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுக்கிறவனும் தன் பலனை அடையாமற்போகான்'' (மத்தேயு 10:42) என்றும் சொன்ன இரட்சகராகிய கிறிஸ்து, மார்த்தாள் தன்னையும், தன்னுடையசீஷர்களையும் ஏற்றுக்கொண்டதினிமித்தம் அவளது விசுவாசத்தைப் பலப்படுத்தி, அவள் மூலமாய் உலகுக்கு ஒரு அரிய போதனையை அளித்து, தேவனுடைய மகிமையையும் காணச்செய்தார். அவ்விதமாகவே நாமும் அவரையும், அவரது அடியார்களையும் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பணிவிடை செய்யும் பொழுது, நிச்சயமாகவே மார்த்தாள் பெற்ற ஆசீர்வாதங்களை நாமும் பெறுவோம்.

45. சாரிபாத் ஊர் விதவை

(I ராஜாக்கள் 17:9-34)

ஆகாப் ராஜாவின் காலத்தில் இஸ்ரவேல்

ஜனங்கள் மறுபடியுமாகக் கர்த்தரை விட்டு விலகிப் பாவஞ்செய்த போது, எலியா தீர்க்கதரிசி அவனிடம்; தேசத்தில் மூன்று வருஷம் பனியும், மழையும் பெய்யாதிருக்கும் எனக்கர்த்தர் உரைத்ததாகக் கூறினுன். அவ்வாறே மழை பெய்யாததால் தேசத்தில் கொடிய பஞ்சம் உண்டாயிற்று. அப்பொழுது எலியா கர்த்தர் சொன்னபடியே சாரிபாத் என்ற ஊருக்குச் சென்ருன். ஒலிமுக வாசலில் ஒரு விதவை விறகு பொறுக்கிக் கொண்டிருந்தாள். அவளிடம் எலியா குடிக்கத் தண்ணீர் கேட்டான். அவள் போகையில் தனக்குக் கொஞ்சம் அப்பமும் கொண்டுவரும்படிக் கூறினுன். அப்பொழுது அந்த விதவை தன்னிடம் ஒரு டிமாவும், கொஞ்சம் எண்ணெயுமே உள்ளதென்றும், அதைச் சுட்டுக் கடைசி முறையாக சாப்பிட்டுச் செத்துப்போகத் தக்கதாக விறகு பொறுக்குவதாகவும் கூறினுள். எலியா அவளிடம் முதலில் தனக்கு ஒரு சிறிய அடையைச் செய்து எடுத்துக் கொண்டு வரச்சொல்லிவிட்டு ''கர்த்தர் தேசத்தின் மேல் மழையைக் கட்டளையிடும் நாள் மட்டும் பானையின் மா செலவழிந்து போவதும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்து போவதும் இல்லை; என்று இஸ்ரவேலின் தேவனுகிய கர்த்தர் சொல்லுகிருர்'' என்ருன்.

அந்த விதவை கர்த்தருடைய வாக்கை நம்பினுள். எலியா சொன்ன பிரகாரமே செய்தாள். பானையின் மா செலவழிந்துபோகவுமில்லை, கலசத்தின் எண்ணெய்குறைந்து போகவுமில்லை. ஐந்து அப்பத்தையும், இரண்டு மீனையுங் கொண்டு ஐயாயிரம் பேரைப் போஷித்த ஆண்டவர், எல்லாவற்றையும் செய்து முடிக்க வல்லவராயிருக்கிறார். ''சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும்; கர்த்தரைத் தேடுகிறவர்களுக்கோ ஒரு நன்மையும் குறைவுபடாது'' (சங்கீதம் 34:10) அதுபோலவே அவரை நம்பும் பிள்ளைகள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதம் போல் இருக்கிருர்கள்.

இந்த விதவையின் வீட்டில் துன்பம் புகுந்தது. அவளுடைய குமாரனை மரணம் தழுவியது. அவள் எலியா

விடம் அதைக் கூறியபோது எலியா, ''என் தேவனாகிய கர்த்தாவே நான் தங்கியிருக்க இடம் கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப் பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரோ'' எனக்கூறி ஆண்டவரிடம் மன்றாடினான். பின்னர் எலியா அப்பிள்ளையின்மேல் மூன்று தரம் குப்புறவிழுந்து, அப்பிள்ளைக்காக ஜெபித்தபோது, கர்த்தர் அவனது ஜெபத்தைக்கேட்டார். பிள்ளையின் உயிர் திரும்ப அவனுக்குள் வந்தது. தாயினிடத்தில் பிள்ளையை ஒப்படைத்தான். அப்பொழுது அவள், ''நீர் தேவனுடைய மனுஷன்என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன்'' என்றாள்.

இந்த விதவை தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தாள். தேவனுடைய மனிதனை ஏற்றுக் கொண்டாள். அவனது வார்த்தைகளுக்குக்கீழ்ப்படிந்தாள், என்ற போதிலும் அவள் துன்பத்தையடைந்தாள். இந்த விதவையின்பால் விசேஷித்த கிருபையைத் தேவன் இதன்மூலம் அருளிச்செய்தார். தன் மகனைத் திரும்பப் பெற்ற பின் அவளது விசுவாசம் பன் மடங்கு பெருகியது. தேவனுடைய வார்த்தைகள் உண்மையானவை எனக்கண்டு கொண்டாள். நம்மில் அநேகருக்குக் கூட இவ்வித சோதனைகள் ஏற்படக்கூடும். அப்படிப்பட்ட சமயங்களிலும் நாம் கர்த்தரது பாதங்களை விடாது பற்றிக் கொண்டால் நாம் நினைப்பதற்கும் மேலான ஆசீர்வாதங்களை நம் தேவன் நம் மீது பொழிவார். சாரிபாத் விதவை அந்த எலியா தீர்க்கதரிசியின் சொற் கேட்டுக் கீழ்ப்படிந்து அப்பத்தையும், தண்ணீரையும் கொடுத்தாள். எனவே அவள் உயிரோடிருக்கும் நாளளவும் பாத்திரத்தில் மாவும், எண்ணெயும் குறையாது இருந்ததுடன் தனது இறந்து போன மகனையும் திரும்ப உயிரோடு பெற்றுக் கொண்டாள்.

கடைசி அப்பத்தைத் தின்று மரித்துப் போக வேண்டுமென்றிருந்த அந்த ஏழை விதவையையும், அவளது மகனையும் உயிரோடு வைத்துக் காப்பாற்ற

வேண்டுமென்றே தேவன் எலியாவை இந்தக் குறிப்பிட்ட விதவையிடம் அனுப்பினார். அவர் விதவைகளின் நாயகன். திக்கற்ற பிள்ளைகளின் தகப்பன். தம்மிடத்தில் அன்பு கூரும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கிறது.

46. லீதியாள் (அப்போஸ்தலர் 16:14,15,40)

இந்த லீதியாள் விலையுயர்ந்த இரத்தாம்பரத்தை விற்கிறவளும், தேவபக்தி நிறைந்தவளுமான தியத்தீரா ஊரைச் சேர்ந்த ஒரு பெண். பிலிப்பி பட்டணத்திலே பெண்கள் வழக்கமாக ஆற்றங்கரையில் கூடி ஜெபித்துக் கொள்ளுவார்கள். அங்கே ஒருநாள் பவுல் பேசுகையில், இம்மாதும் அங்கே இருந்தாள். பவுலின் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளும்படி கர்த்தர் அவர் உள்ளத்தை ஏவினார். அவளும் அவள் வீட்டாரும் கர்த்தரை ஏற்றுக் கொண்டு அதற்கடையாளமாக ஞானஸ்நானம் பெற்றனர். பிறகு அவர்கள் பவுலையும், சீலாவையும் தங்கள் வீட்டில் வந்து தங்கும்படி வருந்தி கேட்டுக்கொண்டார்கள். எனவே பவுலும் சீலாவும் பிலிப்பிபட்டணத்தில் அவளுடைய வீட்டில் தங்கினார். இவ்வாறாக அவளுடைய வீடு தேவனுடைய பிள்ளைகளை ஆதரிக்கும் வீடாக மாறியது.

அன்றியும் இந்த லீதியாளின் குடும்பத்தினிமித்தம் ஐரோப்பாவில் அநேகர் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை தங்கள் ரட்சகராக ஏற்றுக்கொண்டு, சிலுவைக்கு சாட்சியாக விளங்கினார்கள். ஆண்டவருக்கும், அவரது பிள்ளைகளுக்கும் நம் இல்லங்களில் இடம் உண்டா? நாம் ஆண்டவரை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும் போது அவரது அடியார்களையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட பின்பு லீதியாளின் இல்லம் ஒரு ஜெப வீடாக மாறியது. நம் வாழ்க்கையிலும் உண்மையாகவே கர்த்தர் கிரியை செய்வாராகில், நமது இல்லங்களும் துதிகளுக்கு வாசஸ்தலமான ஒரு ஜெப வீடாகவும் பெத்தேலாகவும் மாறும். நம் வீடுகளிலிருந்து இரட்சிப்பின் கெம்பீர சத்தம் தொனித்துக் கொண்டி

ருக்கும். நாம் நமது ஜெபத்தினாலும், வாழ்க்கையினாலும் எத்தனை பேரை கர்த்தரண்டை வழி நடத்தியிருக்கிறோம்? ஆண்டவர் வரும் நாளில் துக்கத்தோடே வெறும் கையுடன் தேவ சமுகத்தில் நிற்காதபடி, அநேக ஆத்துமாக்களுடன் அவரது சந்நிதியை அடையுமாறு, இந்த லீதியாளிடத்தில் காணப்பட்ட ஆத்தும தாகம் நம்மில் காணப்படவும், அதற்கு அடையளமாக நமது இல்லங்கள் ஜெபவீடாகவும், தேவனுடைய பிள்ளைகளை ஏற்றுக்கொள்ளும் இல்லங்களாக மாறவும், நமது உடல், பொருள், ஆவியால் அவர்களை தாங்கவும் தக்கதாய், நாம் அனுதினமும் ஆண்டவரது சந்நிதியில் ஜெபித்து, கர்த்தருக்குள் அவர் கிருபையில் பெலப்படுவோமாக.

47. பேதுருவின் மாமி

(மத்தேயு 9:14-16, லூக்கா 4:38-41)

இயேசு கப்பர் நகூமுக்கு வந்தபோது, பேதுருவின் வீட்டிற்குச் சென்றார். அங்கே அவனுடைய மாமி கடும் ஜுரத்தால் பீடிக்கப்பட்டிருந்தாள். அங்குள்ளவர்கள் அவளுக்காக இயேசுவை மிகவும் வேண்டிக்கொண்டார்கள். இயேசு அவளருகில் சென்று, ஜுரம் அவளை விட்டு நீங்குமாறு கட்டளை கொடுத்தார். உடனே ஜுரம் நீங்கி, அவள் எழுந்து, அவருக்கு பணிவிடை செய்தாள்.

பெத்தானியா மார்த்தாளைபோலவே, பேதுருவின் மாமியும் இயேசுவையும் அவரோடிருந்தவர்களையும் தன் வீட்டில் ஏற்றுக்கொண்டு அவர்களுக்குப் பணிவிடை செய்து, அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தாள். அன்றியும் மாலைவேளையிலே அவளது வீட்டிற்கு முன்னால் பல வியாதியஸ்தர்கள் வந்து இயேசுவினால் சொஸ்தமாக்கப்பட்டார்கள்.

48. யோவன்னாள் சூசன்னாள்

(லூக்கா 8:2,3)

இயேசு இவ்வுலகில் சஞ்சரித்த பொழுது, அவர்

பட்டணங்கள் தோறும், கிராமங்கள் தோறும் சென்று, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறி பிரசங்கித்து வந்தார். அப்போது அவருடனேகூட அவரது பன்னிரண்டு சீஷர்களும் இருந்தனர். அவர்களோடுகூட பல ஸ்திரீகளும் இருந்தார்கள். (மாற்கு 8:2) அப்படிப் பட்டவர்களுள் யோவன்னாளும் சூசன்னாளும் இருவர். இவ்விருவரும் கண்ணியம் மிகுந்த பெண்கள். யோவன்னாள் ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவி, இயேசு உயிர்த்தெழுந்த காலையில் அவரது சடலத்திற்கு கந்த வர்க்கமிட, கந்தவர்க்கங்களையும், பரிமள தைலத்தையும் எடுத்துக்கொண்டு அவரது கல்லறைக்குச் சென்ற ஸ்திரீகளின் கூட்டத்தில் இவளும் இருந்தாள். சூசன்னா, இயேசுவின்மூலம் அற்புத சுகம் பெற்றவள். இவள் ஒரு கற்புள்ள ஸ்திரீயாக இருந்தாள் எனக்கூறப்படுகிறது. இவ்விரு பெண்களும் இயேசுவோடிருந்ததால், அவரோடு நெருங்கிய தொடர்புகொண்டவர்கள். இயேசுவினுடைய அன்பும், கனிவும், மனதுருக்கமும் இவர்களை கவர்ந்தன. அவருடைய பரிசுத்தமான வாழ்க்கை இவர்களை அவரிடம் அன்பு கொள்ளச் செய்தது. ஆதலால், அவர்கள் இயேசுவை பின்பற்றி அவரோடு நெருங்கி ஜீவித்ததுமன்றி தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்தனர். அவர்கள் தங்கள் ஆஸ்தியை மட்டுமல்ல, தங்களையே அவரது ஊழியத்திற்கு ஒப்பு கொடுத்தது அவர்கள் அவரோடு ஊழியத்தில் ஈடுபட்டதிலிருந்து தெரிகிறது.

நாமும் நம் ஆண்டவர் மீது முழு இருதயத்தோடும் முழு மனதோடும் அன்பு கூர்ந்து, அவரோடு நெருங்கிய தொடர்பு கொள்ளும்போது, அவர் நமக்கு அவருடைய ஊழியத்தில் பங்கு கொடுப்பார். இந்த ஊழியத்தை நாம் நமக்கு கொடுக்கப்பட்டிருக்கும் தாலந்துகளுக்கு ஏற்றவாறு செய்யலாம். நாம் நேரடியாக நற்செய்தி பணியில் ஈடுபடக்கூடாமல் போனால், நமக்கு தேவன் கொடுத்திருக்கும் ஆஸ்தியை அதற்கு பயன்படுத்தலாம். முடிந்தவர்கள் கிராமங்களுக்குச் சென்று, கிறிஸ்துவைப் பற்றி அக்கிராம மக்களுக்கு எடுத்துக்கூறி, துண்டு பிரதிகள், வேதாகம பகுதிகள், வேதாகமம் இவற்றை வழங்கலாம்.

எழுப்புதல் கூட்டங்கள் ஏற்படுத்துவதின் மூலமும், அதற்கான காரியங்கள் செய்து தருவதின் மூலமும் தேவனுக்கு ஊழியம் செய்யலாம். ஏழை, எளியவர்களுக்கு தேவையான உதவிகள் செய்யலாம். இவ்வாறு நாம் இந்த யோவன்னுளையும், சூசன்னுளையும் போல் அவருக்காக ஊழியம் செய்யும் போது, தேவனுடைய ஆசீர்வாதங்களை நிச்சயம் பெற்றுக்கொள்ளலாம்.

49. எயோதியாள் சிந்திகேயாள்

(பிலிப்பியர் 4:2,3)

இவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு ஊழியம் செய்கிறவர்கள் என்றுமே குன்றிப் போனதில்லை? எயோதியாளும், சிந்திகேயாளும் கர்த்தருக்கென்று நல் ஊழியம் செய்தவர்கள் இவர்களைக் குறித்து, புனித பவுலடியார் பாராட்டுகின்றூர். இவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டிருப்பதை பிலிப்பியர் 4:2,3-ல் எடுத்துக் கூறுகிறூர். ஆண்டவர் தம்முடைய ஜனங்களை சேர்க்கும் நாளில், அவருடைய ஊழியக்காரர்கள். அவரோடுகூட இருப்பார்கள் என்று சொல்கிறூர்.

தகப்பன் தனக்கு பணிவிடை செய்கிற தன் குமாரனை கடாட்சிப்பது போன்று, கர்த்தர் தமக்கு ஊழியம் செய்யும் மக்களை கடாட்சிப்பேன் என்று சொல்கிறூர். கடைசி நாளில் ஊழியம் செய்கிறவர்களுக்கும், செய்யாதவர்களுக்கும் உள்ள வித்தியாசத்தை காண்பீர்களென்று சொல்கிறூர் (மல்கியா 3:17,18) ஊழியம் செய்யும் பிள்ளைகளை வர்த்திக்கச் செய்வேனென்று சொல்கிறூர். (எரேமியா 33:22) நாம் அவர் ஊழியத்தை உண்மையோடும், உற்சாகத்தோடும், மகிழ்ச்சியோடும் செய்தால் அவர் நம்மை கனம் பண்ணுவார். (யோவான் 12:26) சிங்கக்குட்டிகள் தாழ்ச்சியடைந்து பட்டினியாயிருக்கும் அவரை தேடுகிற மக்கள் குறைவடைய மாட்டார்கள். என்னில் கனி கொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக்கொடுக்கும்படி அதை சுத்தம் பண்ணுவேன்

என்றார். உண்மையாய் அவரைபின்பற்றி ஊழியம் செய்யும் போது, நமது வாழ்க்கையின் இருண்ட மேகங்கள் நம்மை விட்டு விலகிச் செல்வதை காணமுடியும். விசுவாசத்தோடு நம் வாழ்க்கையில் முன்னேறிச் செல்லும்போது, அழிவுக்கு நேராய்ச் செல்லும் ஆயிரமாயிரம் மக்களை அவரது அன் பிற்குள் கொண்டு வருவதற்கு உதவி செய்வார். அவர் கள் நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் எழுதப்படும்.

இறுதி நாட்கள் வரும்போது, நிறைவேற்றப்பட வேண்டிய காரியங்களை செய்தோம் என்னும் கூட்டத்தில் நாம் அவரது திருவடிகளை அடைவோம் அநேகரை நீதிக்கு உட்படுத்தினவர்கள் என்றென்றுமுள்ள சதாகாலங் களிலும் நட்சத்திரங்களைப்போல் பிரகாசிப்பார்கள் (தானியேல் 12:3) இதை வாசிக்கும் அருமையானவர்களே அவர் சந்நிதானத்தில் நானும் ஒரு நட்சத்திரமாய் இருக் கிறேனா என்பதை சிந்தித்து செயல்பட முன் வாருங்கள் அந்த அனுபவம் இல்லாவிட்டால் இன்றைக்கே அவர் கரத்தில் உங்களையே அர்ப்பணம் செய்யுங்கள். உங்கள் வாழ்க்கையில் பெரிய காரியங்களைச் செய்து தர, உங்களை பயன்படுத்தவே விரும்புகிறார்.

சென்னையில் கர்த்தருக்கென்று ஊழியம் செய்த பிஷப் நூப்ளிக்கன், இங்கிலாந்து தேசத்தை சார்ந்தவர் அவரது அறுபதாவது பிறந்த நாள் விழா அன்றைக்கு சென்னை கத்தீடரில் மாபெரும் கூட்டமாக நடந்து கொண்டிருந்த நேரம், நமது முன்னாள் முதல்வர் கருணாநிதியும் வருகை தந்திருந்தார். அவர் பிஷப் நூப்ளிக்களை ஏழை எளிய மக்கள் மத்தியில், மிகச்சிறந்த ஊழியத்தை செய்து வருகிறார் என்று அதிகமாக பாராட்டி பேசினார். பாராட்டிற்கு இறுதியில் பிஷப் நூப்ளிக்கன் பேசினார். (நீதிமொழிகள் 31:10) அவர்தம் மனைவியை, இறைவன் கொடுத்த அனேக முத்துக்களில் சிறந்த முத்து அவரது மனைவி என்றும், அவரது ஊழியத்தை இவ்வளவு திறம்பட செய்வதற்கு உதவியதும், மேலும் ஊழியத்தில் வலக்கரமாக இருந்து ஊக்குவித்ததும், தனது மனைவியாகும் என்று கூறினார். அனேக சகோதரிமாரும், சகோதரன்

மாரும் ஆண்டவருடைய ஊழியத்தை முன்னின்று செய்ய அவரோடு பாடுபடுகின்றார்கள். அனேக தாய்மார் ஊழியம் செய்வதற்கு அவர்களுடைய புருஷர்களும், பிள்ளைகளும் உதவியாயிருக்கிறார்கள்.

சைனு தேசத்தில் இரு சகோதரிகள் மிஷனரிகளாக ஊழியம் செய்து வரும் போது அந்நாட்களில் ஊழியம் செய்யக் கூடாத காலம், சைனு அரசு, நான்கு குதிரைகளை நிறுத்தி, ஒரு சகோதரியின் இரண்டு கால்களை இரண்டு குதிரையின் மேலும், இரண்டு கைகளை இரண்டு குதிரையின் மேலும் வைத்து நன்றாக கட்டி நான்கு குதிரைகளையும் நான்கு பக்கமாக விரட்டினுர்கள். என்ன நடந்திருக்கும் என்பதை சிந்தித்துப் பாருங்கள். இந்த கோர காட்சியைப் பார்த்து நின்ற மக்களைப் பார்த்து இவர்கள் ஏற்றுக் கொண்ட கிறிஸ்துவை நீங்களும் பின்பற்ற விரும்பினால் உங்களுக்கும் இது தான் கதி என்று சொன்னார்களாம். இரண்டாவது மிஷனரியையும், இரண்டு குதிரைகளின் மேல் கால்களையும், கைகளையும் கட்டி, இரண்டாகப் பிரித்தார்களாம், கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்களுக்கு இதை விட மிக கடுமையான தண்டனை கிடைக்கும் என்று கூறினார்களாம். இதை கண்ணுற்ற மிஷனரி ஒருவர் ஐந்து விதமான ஊழியத்தைக் குறித்து எழுதியிருக்கிறார்.

1 ஜெபத்தினால் ஊழியம் 2 நண்பர்களுக்கு அறிவிப்பதினால் 3 துண்டுப் பிரதிகளைக் கொடுப்பதினால் 4 பொருளாதார உதவியினால் 5 உன்னையே ஆண்டவருக்கென்று அர்ப்பணம் செய்வதனால். இதில் ஒன்றையாவது தெரிந்து கொள்ளாத நீ ஒரு கிறிஸ்தவனல்ல !

நாம் இன்று மருத்துவமனையில் நோயினால் வாடும் மக்களை சந்தித்து, ஊழியம் ஜெபத்தின் மூலமாக செய்யலாம். மரண தருவாயில் தத்தளித்துக் கொண்டி

ருக்கும் மக்களுக்கு ஆறுதல் கூறுவது இரட்சகரை சொல்வது, சில நேரங்களில் மிகப் பயனுள்ளதாகக் கூட மாறலாம். அந்த வார்த்தைகளை கேட்பவர் இந்த உலகத்திற்கு சலாம் சொல்லி ஆண்டவரின் ராஜ்யத்தை அடையலாம். அவர்களும் ஆண்டவருக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தால் மோட்ச பாக்கியம் கிடைக்கும்.

திக்கற்றவர், அனாதைகள், விதவைகள் எந்த வேலையுமே செய்ய முடியாத அங்கவீனர்கள் அவர்களுக்கு உதவி செய்து ஆண்டவரை அறிகிற அளவில் அவர்களைக் கொண்டு வரவேண்டும். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒரு கலியாணத்தைக் குறித்து சொல்கிறார். (மத்தேயு 22:1-14). ஒருவன் தன் மகனுக்கு கலியாண விருந்தை ஆயத்தம் பண்ணி அனேகருக்கு அழைப்பைக் கொடுத்தான். அனேகர் பலவிதமான சாக்குப்போக்குகளை சொன்னார்கள் என்பதை அறிவோம். கலியாண விருந்திற்குஅழைக்கப்பட்டஎல்லாரும் அபாத்திரரானார்கள் ராஜா கலியாண விருந்திற்கு நீங்கள் சந்திகளிலும், தெருக்களிலும் போய்எல்லோரையும் விருந்திற்குஅழைத்து வாருங்கள் என்று சொன்னார். அவர்கள் போய், நல்லோர், பொல்லோர் எல்லோரையும் அழைத்து வந்தார்கள். கலியாண வீடுவிருந்தாளிகளால் சூழப்பட்டிருந்தது. ஆயக்காரரும், வேசிகளும் பரலோக ராஜ்யத்தையடைகிறார்கள். அவர்களுடைய நாமங்களையும் பரலோகத்தில் ஜீவ புஸ்தகத்தில் எழுதுகிறார்.

அத்தியாயம் IX

தேவனுக்கு ஊழியம் செய்த ஸ்திரீகள்

50. தபீத்தாள் (அப்போஸ்தலர் 9:36-41)

"யோப்பா பட்டணத்திலே கிரேக்கு பாஷையிலே தொற்காள் என்று அர்த்தம் கொள்ளும் தபீத்தாள் என்னும் பெயருடைய ஒரு சீஷி இருந்தாள். அவள் நற்கிரியைகளையும், தருமங்களையும் மிகுதியாக செய்து வந்தாள்"

தபீத்தாள் என்றால் "சாந்தமான கண்களை உடைய பெண்மான்" என்றும், தொற்காள் என்றால் 'சௌந்தரியம்' என்றும் பொருள். வேத புத்தகத்திலே சீஷி என்ற பெயர் தொற்காளுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத் தக்கது. அப்படியானால் தொற்காள் நமது குருவாகிய இயேசு கிறிஸ்துவின் கட்டளைகளுக்கும் கற்பனைகளுக்கும் கீழ்ப்படிந்து ஜீவித்திருக்க வேண்டும். தொற்காள் ஒரு உத்தம கிறிஸ்தவளாக இருந்து, நற்கிரியைகளையும் தருமங்களையும் மிகுதியாக செய்து வந்தாள். இஸ்ரவேலில் ஆசரிப்புகூடாரம் செய்கையில் ஞான இருதயமுள்ள ஸ்திரீகள் எல்லாரும் தங்கள் கைகளினால் நூற்று, தாங்கள் நூற்ற இளநீலநூலையும் கொடுத்து உதவி செய்தனர். அவ்வாறே தொற்காளும் தன்னுடைய கையின் பிரயாசத்தினால் ஏழைகளுக்கும், விதவைகளுக்கும் உதவி செய்தாள் என காண்கிறோம். வேதபுத்தகத்தில் தொற்காளின் சரித்திரம் மிக சுருக்கமாக கூறப்பட்டிருப்பினும் அது மிகுந்த புகழ்ச்சிக்குரியதாகும்.

ஆகவேதான் அவள் மரித்தபோது விதவைகளெல்லாரும் அழுது, தொற்காள் தங்களுடனே இருந்த காலத்தில் செய்திருந்த அங்கிகளையும், வஸ்திரங்களையும் காண்பித்து

அவனை சூழ்ந்து நின்றனர் என வேதம் கூறுகிறது. நாமும் அவ்வாறே நற்கிரியைகளை செய்ய வேண்டும். அருமை யான தேவனுடைய பிள்ளைகளே, உங்களுக்கு உடுக்கத் தேவைக்கு மேலாக வஸ்திரங்களை வைத்துக் கொண்டு, வித விதமாக உடுத்தி, உல்லாசமாக திரிந்தாலும், அது போதாதென எண்ணி மேலும் மேலும் சேகரிக்க விரும்பு கிறீர்கள். உங்களை சுற்றி எவ்வளவோ மக்கள் மாற்றுடை இல்லாதிருக்கும் போது, அவர்களைப்பற்றி கவலை உங்க ளுக்கு சிறிதாவது உண்டா? என்றைக்காவது அப்படிப் பட்ட ஏழை மக்களுக்கு உடைகொடுத்து உதவியிருக்கிறீர் களா? ஏழை எளியவருக்கும், சுகவீனமானவர்களுக்கும் உதவி செய்யுங்கள். தேவன் உங்களை ஆசீர்வதிப்பார். தேவனுடைய கரம் உங்களோடிருக்கும். நற்கிரியைகளை செய்யவே தேவன் விரும்புகிறார்.

ஆகவே தான் கிறிஸ்து ''மனுஷர் உங்கள் நற் கிரியைகளைக் கண்டுபரலோகத்திலிருக்கிறஉங்கள் பிதாவை மகிமைப்படுத்தும் படி, உங்கள் வெளிச்சம் அவர்களுக்கு முன்பாக பிரகாசிக்கக் கடவது'' என்றார் (மத்தேயு 5:16) நீங்கள் உங்கள் நற்கிரியைகளின் மூலம் உலகத்திற்கு ஒளி யாயிருந்து பிதாவின் நாமம் மகிமைப்பட வாழ வேண்டும் ''ஏனெனில் நற்கிரியைகளை செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கை யாயிருக்கிறோம்.'' (எபேசியர் 2:10) என்று வேதம் கூறு கிறது. பரிசுத்த பவுல் தீமோத்தேயுவிற்கு எழுதும் போது ஸ்திரீகள் நற்கிரியைகளினால் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டும் என்றார். (1 தீமோத்தேயு 2:10)

ஆம் சகோதரிகளே, மற்றெல்லா அலங்கரிப்புகளும் அழிந்து போகக் கூடியதே. நற்கிரியைகளோ, நமக்கு பரத் திலே அழியாத பொக்கிஷம் சேர்த்து வைக்கும். எனவே, சோர்ந்து போகாமல் நன்மை செய்யுங்கள். ''அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினாலே சிலர் அறியாமல் தேவ தூதரையும் உபசரித்ததுண்டு. ''(எபிரேயர் 13;2) ''கிரியையில்லாத விசுவாசம் செத்தது.'' (யாக்கோபு 2:20) கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகிமை பொருந்திய

சபையை துன்பப்படுத்தி... யாக்கோபை பட்டயத்தால் கொலை செய்தான். பே... யாக்கோபை கொலை செய்ய வகை தேடினான். அது போல் ...வையும் கொலை செய்ய வகை தேடினான். அது போல் ...வையும் ... விரோதமாக பிசாசு தேவனுடைய ஊழியக்காரருக்கு விரோ...ன்றும் பிசாசு தேவனுடைய ...மாக கொர்ச்சித்து, பலவித தீமையான காரியங்களை செய்துக் கொண்டு வருகிறான். நாம் கர்த்தருடைய சமுகத்தில் ஊ...மாக போராடி ஜெபித்து, அவர் கிருபையில் பலப்படுவோம். தேவனுடையபிள்ளைகளைதுன்பப்படுத்தினவனும், தேவ மகிமையை திருடினவனுமான ஏரோது புளுபுளுத்து செத்தது போல, வேறு யாருக்கும் நேரிடாதப்படி நாம் தேவனை நோக்கி ஜெபிப்போமாக.

52. பெபேயாள் (ரோமர் 16:1,2)

கெங்கிரேயா ஊர் சபைக்கு பெபேயாள் ஊழியக்காரியாக இருந்தாள். ஆதித்திருச்சபையின் வளர்ச்சிக்காக உழைத்த பெண்கள் பலர் இருந்திருக்கின்றனர். அவர்களில் ஒருவள் தான் இந்த பெபேயாள். இவள் மூலம் தான் பரிசுத்த பவுல் ரோமாபுரியாருக்கு தான் எழுதிய நிருபத்தை அனுப்பினார். ஏனெனில், அந்நிருபத்தில் அவளை அச்சபையாரிடம், தான் ஒப்புவிப்பதாக எழுதியுள்ளார்.

பவுல் அவளைப்பற்றிக் கூறும் போது, அவள் அநேகருக்கும், எனக்கும் ஆதரவாக இருந்தாள் என்று கூறியுள்ளார். பெபேயாளின் அருங்குணங்களை வைத்துத்தான் பவுல் ரோமாபுரி மக்களை, பெபேயாளை கர்த்தருக்குள், பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறார். எனவே, அவளது வாழ்க்கை, தூய்மையானதாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு உத்தம ஸ்திரீயாக இருந்ததால் தான் அவள் ஒரு ஊழியக்காரியாக மாறினாள்.

நாமும் நமது சபைகளில், ஆண்டவர் எந்தெந்த விதத்தில் பணிசெய்ய ஏவுகிறாரோ, அவ்விதத்திலெல்லாம் பணிபுரிய வேண்டும். நாம் தேவனை உயர்த்தி அநேகரை, அவரிடம் கொண்டு வரத்தக்கதாக நம்மை அவரது கைகளில் ஒப்புகொடுக்க வேண்டும். பெபேயாளைப்போல்

பாதைகளில் நம்மை ஆண்டவர் வழி நடத்த தொடங்குவார்.

இந்த பிரிஸ்கில்லாளும், ஆக்கில்லாவும், அப்பொல்லோவை கிறிஸ்து மார்க்கத்தின் ஆழ்ந்த அனுபவத்திற்குள் கொண்டு வந்தது போல, நமது சபைகளிலும், மற்றுமிடங்களிலும், புதிதாகக் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களை சந்தித்து, விசுவாசத்திலும், அன்பிலும், பரிசுத்தத்திலும், அவர்களை வளரச் செய்வது நம் கடமையல்லவா! அப்படி புதிதாக கிறிஸ்துவை தழுவிக் கொண்டவர்களை, நாம் முழுமனதோடு ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு கிறிஸ்துமார்க்க சத்தியங்களை போதிப்பதுடன், நாம் அச்சத்தியங்களை கடைபிடித்து, அவர்களுக்கு முன் மாதிரியாக வாழவேண்டும். இல்லையேல் நாம் அவர்களுக்கு இடறலாகி விடுவோம். அப்படிப்பட்டவர்களுக்கு தேவன் விடுத்துள்ள எச்சரிக்கையை மனதில் கொண்டு, நம் வாழ்க்கையை சீர்படுத்தி, அவரது திவ்விய நாமத்திற்கு மகிமையுண்டாக நம் வாழ்க்கையை அமைத்துக் கொள்வோமாக.

54. சின்ன யாக்கோபுக்கும், யோசேக்கும் தாயாகிய மரியாள். (மாற்கு 15:40,41)

இந்த மரியாளை பற்றி அதிகமாக நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனால் இயேசுவை விசுவாசித்து, அவரது சிலுவையின் பாதையில் அவரை பின் சென்று, சிலுவையின் அடியில் நின்ற ஸ்திரீகளில் இவளும் ஒருத்தி என்பது மாத்திரம் தெரிகிறது. அப்படி அவள் அங்கே அந்த பரிசுத்த கூட்டத்தில் பங்கு பெற்றாள். இயேசுவின் உபதேசங்களைக் கேட்டும், அவரது அற்புத அடையாளங்களைக் கண்டும், அவர்பால் இழுக்கப்பட்டு அவர்மீது அன்பு செலுத்தினாள். மகதலேனா மரியாள் போன்ற ஸ்திரீகளின் கூட்டத்தில் அவள் காணப்பட்டதால் அவர்களைப்போலவே இவளும் இயேசுவுக்கு ஊழியம் செய்திருக்கவேண்டும். இயேசு சிலுவை மரத்தில்

தொங்கும்போது அவரது சீசர்கள் யூதருக்கு பயந்ததினால் அவரைவிட்டு ஓடிப்போனார்கள். ஆனால் இந்த மரியாள் அங்கே தைரியமாய் நின்றாள். இயேசுவின் மூச்சு ஒடுங்கும் வரை அவள் அங்கே காணப்பட்டாள். அவளைப்போலவே நாமும் அவரை பின்பற்றி, எந்த துன்ப நேரத்திலும் அவரது பாதங்களையே சரணடையும்போது அவர் நமக்கும் மேலான ஆசீர்வாதங்களை அளித்து, இவ்வுலகை நீத்தபின் மறுஉலகிலும் அவரோடு நித்திய நித்தியமாய் வாழும் சிலாக்கியத்தையும் கொடுப்பார்.

55 அப்பியாள் (பிலேமோன் 2.)

அப்பியாளைப் பற்றி வேதத்தில் ஒரே ஒரு வசனத்தை மட்டும் காண்கிறோம். இவள் பிலெமோனின் மனைவி. ஏனெனில் பவுல்பிலெமோனுக்கு எழுதிய நிருபத்தில் அவனது பெயரும் இவளது பெயரும் அடுத்தடுத்துச் காணப்படுகின்றன ஆதித்திருச்சபையில் இவளும் ஒரு கனம் பொருந்தியஸ்திரியாக இருந்தாள் பரிசுத்தபவுல்அந்நிருபத்தில், ''உம்முடைய வீட்டில் கட்டிவருகிற சபைக்கும்'' என்று எழுதுவதால், இவளது வீடும் சபை கட்டும் ஒரு ஜெப வீடாக இருந்தது. அவர்களது அடிமையான ஒநேசிமு ரோமாபுரிக்கு ஓடிப்போனான். அங்கே அவன் பவுலடியாரால் குணப்பட்டு கிறிஸ்தவரான போது, பவுல் அவனை பிலேமோனிடம் திருப்பி அனுப்பினார். அவனை ஒருஅடிமையாக அல்ல, ஒரு சகோதரனாக ஏற்றுக் கொள்ளும்படி வேண்டினார். அந்தநிருபத்தின் முடிவில் பிலேமோன் தனது வீட்டில் பவுலுக்கு ஒரு அறையை ஆயத்தம் பண்ணும்படி எழுதினார்.

அப்பியாள் விருந்தோம்பும் குணமும், அந்நியரை உபசரிக்கும் குணமும் உடையவளாக இருந்ததால் தான் பவுல் சகல உரிமையோடும் தனக்கு ஒரு அறையை அவர்கள் வீட்டில் ஆயத்தம் பண்ணும்படியாக எழுதினார். கணவனும், மனைவியும் கிறிஸ்தவ அன்பும், விசுவாசமுமுள்ளவளாய் விளங்கியதால் அவர்களைப்பற்றி நினைக்கும் போது பவுலின் உள்ளம் உவகையால்

நிறைந்தது. அவர்களது அன்பில் பவுலுக்கு அவ்வளவு உறுதியிருந்ததால் தான் ஒநேசிமுவை கிறிஸ்துவில் உங்கள் சகோதரனாக ஏற்றுக் கொள்ளும்படி எழுதினார். ''பரிசுத்தவான்களின் உள்ளங்கள் உம்மாலே இளைப்பாறின படியால், உம்முடைய அன்பினாலே மிகுந்த சந்தோஷமும் ஆறுதலும் அடைந்திருக்கிறோம்'' என பவுலடியார் அவர்களைப்பற்றி நற்சாட்சி அளிக்கிறார். பரிசுத்தவான்கள் என்று எழுதுவதால், அவர்கள், பவுலை மாத்திரமல்ல, அநேக பரிசுத்தவான்களை ஆதரித்தார்கள் என்பது புலனாகிறது.

அவ்விதமாகவே, நாமும் நமது இல்லங்களை ஜெப வீடாக மாற்றி பரிசுத்தவான்களை ஏற்றுக் கொண்டு, அவர்களை இளைப்பாறப்பண்ணி, அவர்களது உள்ளங்கள் மகிழ்ச்சியினாலும், அன்பினாலும் நிறையப் பண்ணுவோமானால், நாம் அவர்களது உள்ளங்களை மாத்திரமல்ல, நமது ஆண்டவரின் உள்ளத்தையும் குளிரப் பண்ணி மகிழ்ச்சியால் நிரப்புவோம். அப்பேர்ப்பட்ட கிருபையை ஆண்டவர் தாமே நமக்கு அருளிச் செய்வாராக.

அத்தியாயம் X

தீர்க்க தரிசினிகள்

56. மிரியாம் (யாத்திராகமம் 15:20, 21; மீகா 6:4).

யோசேப்பை அறியாத ஒரு ராஜா எகிப்தில் தோன்றிய பொழுது, அவன் இஸ்ரவேல் மக்களை ஒடுக்குவதற்கு பல வழிகளைக் கையாண்டான். அது பலிக்காது போகவே அவன் அம்மக்களுக்குப் பிறக்கும் ஆண்பிள்ளைகளையெல்லாம் நதியில் போட்டு விடுமாறு கட்டளை பிறப்பித்

தான். அச்சமயம் யோகேபேத் என்னும் லேவி குடும்பத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீக்கு ஒரு அழகிய ஆண்குழந்தை பிறந்தது. அவள் அதை நதியில் போட மனதில்லாமல், மூன்று மாதமளவும் அதை ஒளித்து வைத்து வளர்த்தாள். மேலும் அந்தக் குழந்தையை ஒளித்து வைக்க முடியாதக் காரணத்தால், அவள் ஒரு நாணற்பெட்டியைச் செய்து, அதற்குள் தண்ணீர் புகாவண்ணம் உள்ளும் புறம்புப, கீல்பூசி, அதில் குழந்தையைக் கிடத்தி, நாணற் புதரின் மத்தியில் வைத்தாள். நதியில் நீராட வந்த பார்வோனின் குமாரத்தி அக்குழந்தையைக் கண்டு, அதை வளர்க்க ஆசைப்பட்டாள். தாயின் உத்தரவின் படியே அங்கு மறைந்திருந்த சுமார் ஏழு வயதான சிறுமி மிரியாம் பார்வோனின் குமாரத்தியிடம் வந்து, அதை வளர்க்க ஒரு தாதியைக் கொண்டு வரவா எனக் கேட்டாள் பார்வோனின் குமாரத்தி அதற்கு இசையவே அவள் தன் தாயையே அழைத்துக் கொண்டு வந்தாள். பார்வோனின் குமாரத்தி அக்குழந்தைக்கு 'மோசே' எனப் பெயரிட்டாள்.

இந்த சிறிய பெண் தன் தாயினுல் நல்வழியில் வளர்க்கப் பட்டதால் தான், தனது தம்பி மீது அன்பு கொண்டதுடன், தாயின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, மறைந்திருந்து சம்பவிப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அதோடு கூட தேவன் மீது தாய் கொண்டிருந்த பற்றுதலும், விசுவாசமும் இவளுக்குள்ளும் வளர்ந்தது. அதினுல் தான், மோசே பின்னுல் ஏற்கவிருந்த பெரும் பொறுப்புகளுக்கும், பதவிக்கும், அவனைக் காக்கும் படியான பெரிய பொறுப்பை யேகோவாவிடமிருந்து இவர்கள் பெற்றனர்.

இஸ்ரவேல் புத்திரர் சிவந்த சமுத்திரத்தை கால் நடையாக கடந்த பின், கர்த்தரைத் துதித்துப் பாடினுர்கள். அப்பொழுது மிரியாம் கையிலே தன் தம்புரை எடுத்துக் கொண்டாள், சகல ஸ்திரீகளும் தம்புராக்களோடும், நடனத்தோடும் அவளுக்குப் பின்னே சென்ருர்கள்.

இவள் மோசேயோடும், ஆ[illegible]ேடும் சேர்ந்து, தன் வாழ்நாளெல்லாம் கர்த்தருக்[illegible]று வாழ்ந்தாள். மீகா 6:4-ல் ''நான் உன்னை [illegible]கிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி, அடிமைத்தன வீட்[illegible]லிருந்த உன்னை மீட்டுக் கொண்டு, மோசே, ஆரோன், மிரியாம் என்பவர்களை உனக்கு முன்பாக அனுப்பினேன்'' என்று கர்த்தர் சொல்வதாக வாசிக்கிறோம். எனவே இஸ்ரவேல் மக்களை அடிமைத்தனத்திலிருந்து அழைத்து வந்த பெரும் பணியில் மோசே, ஆரோன் இவர்களோடு மிரியாமுக்கும் ஒரு பங்குண்டு.

இந்த மிரியாமைகூட சாத்தான் சோதித்தான். இவள் ஆரோனோடு சேர்ந்து மோசேயை நிந்தித்தாள். அதன் தண்டனையாக அவள் குஷ்டரோகியானாள். (எண்ணாகமம் 12:1-16) ஆனால் அவள் தனது தப்பிதத்தை உணர்ந்து ஆண்டவரிடம் அறிக்கையிட்டாள். அவளது குஷ்டரோகம் நீங்கி சுகம் பெற்றாள். நம்மில் அநேகர் கூட தெய்வ பிள்ளைகளையும், ஊழியர்களையும் நிந்தித்துப் பேசி, பாவ குஷ்டம் பிடித்து அலைகிறோம். இக்குஷ்டம் தீர வேண்டுமாயின், நாமும் தேவனுடைய சமூகத்தில் நமது குற்றங்களை அறிக்கை செய்து, மன்னிப்பு வேண்டினால் நாம் மன்னிப்பு பெற்று வாழ்வடைவோம்.

ஆரோனும், மிரியாமும் மோசேயுடன் பிறந்தவர்கள் தான். இவர்களும் கர்த்தருடைய ஊழியக்காரர் தாம், மற்ற ஊழியர்களைக் குறித்து புறங்கூறுகிறதை தேவன் விரும்புவதில்லை. ''மோசேயைக் கொண்டு மாத்திரம் தேவன் பேசுகிறாரோ? எங்களைக் கொண்டும் பேசுகிறார்'' என்றார்கள். அதை கர்த்தர் கேட்டார்.

கேட்கும் போது கள் கணக்கு கொடுத்து விடுவார்கள். அதைக் த்து நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர் டத்தில் குறைகள் கண்டு கொண்டால் அவர்களுக்காக ஜெபியுங்கள். ஜெபிப்பதே யன்றி தூற்றுதீர்கள். ஊழியக்காரர்களைப் பற்றிக் குறை கூறுவது கர்த்தர் விரும்பாத காரியமாகும்.

57. தெபோராள் *(நியாயாதிபதிகள் 4:4-24)*

கி. மு. பன்னிரண்டாம் நூற்றுண்டில் இஸ்ரவேல் மக்கள் மிகவும் இக்கட்டான ஓர் நிலையில் இருக்கும் பொழுது, இம்மாது இஸ்ரவேலில் நியாயாதிபதியானுள். இவள் நியாயாதிபதிகளில் மூன்ருவது முக்கிய இடத்தையும், தன் ஜனங்களை விடுதலை செய்தவள் என்ற நிலையையும் அடைந்தாள். லபீதோத்தின் மனைவி யாகிய இந்த தெபோராள் ராமாவுக்கும், பெத்தேலுக்கு மிடையிலிருந்த தெபோராளின் ஈச்சமரத்தடியில் குடியிருந்தாள். அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாய விசாரணை செய்ய வருவார்கள். இஸ்ரவேல் மக்கள் இருபது வருடங்களாகக் கானுனியரால் ஒடுக்கப்பட்ட போது தெபோராள் தோன்றினாள். இவள் ஒரு எளிய குடும்பத்தில் தோன்றிய போதிலும், அவளது நீதியும், ஏழைகளின் மீதுள்ள இரக்கமும், தன் ஜனத்திற்காக கொண்டிருந்த வைராக்கியமும் அவளுக்கு இஸ்ரவேல் மக்களின் தலைவி ஸ்தானத்தைக் கொண்டு வந்தன.

அவள் பாராக் என்னும் பராக்கிரமசாலியை அழைத்து, நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும்

பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு, தாபோர் மலைக்குப் போகும் படியாக பணித்தாள். தான் பின்னர் யாபீனின் சேனாபதியாகிய சிசெராவையும், அவன் சேனையையும், கீசோன் பள்ளத்தாக்கிலே அவனிடத்திற்கு வரவழைப்பதாகவும் வாக்குப் பண்ணினாள். அன்றியும் அவள், அன்று கர்த்தர் நிச்சயமாக சிசெராவை அவன் கைகளில் ஒப்புக் கொடுப்பார் என்றாள். ஆகிலும் பாராக், ''நீ என்னோடு கூட வராவிட்டால், நான் போகமாட்டேன்'' என்றான். அப்பொழுது அவள் தீர்க்கதரிசனமாக, ''நான் உன்னோடே வருகிறேன்; ஆனாலும் இதில் கிடைக்கும் மேன்மை உனக்கல்ல; சர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கையில் ஒப்புக் கொடுப்பார்'' என்றாள், அவ்விதமே, கானானியர் முறிந்தோடுகையில், சிசெரா, யாகேலின் கூடாரத்துக்குள் அடைக்கலம் புகுந்தான். அங்கே அவன் தூங்கும்போது, அவன் சாகும்படியாக, யாகேல் ஒரு கூடார ஆணியை அவன் நெற்றியில் அடித்துவிட்டாள்.

எபிரெய இலக்கியத்திலே சிறந்து விளங்கக் கூடிய ஒரு வெற்றிப் பாடலை இந்த இரட்சிப்பைக் குறித்து பாராக்கும், தெபோராளும் பாடினர். இஸ்ரவேல் அழிந்துப் போகத் தக்கதான ஒரு இக்கட்டு நிலையிலே தெபோராள் எழுந்து, தீர்க்கதரிசனம் மூலம் தன் ஜனங்களை இரட்சித்தாள். அதினால் இஸ்ரவேலுக்கு சமாதானம் உண்டாயிற்று.

தெபோராளைப் போன்ற தீர்க்கதரிசிகள் நம்மிடையேயும் எழும்ப வேண்டுமென தேவன் விரும்புகிறார். தெபோராளைப் போல் நாம் நம்மை கர்த்தரிடத்தில் ஒப்புவிக்கும் போது, நிச்சயம் ஆண்டவர் நம் வாழ்க்கையிலும் அற்புதங்களைச் செய்வார். தீர்க்கதரிசனம் இல்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள். அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்திலும், யோவேல் இரண்டாம் அதிகாரத்திலும், தேவனுடைய ஆவி, அவரது மக்கள் மேல் இறங்குவதால், அவர்கள் தீர்க்கதரிசனம் உரைப்பார்கள் எனப் பார்க்கிறோம். அப்படி தீர்க்கதரிசிகள் எழும்பும் போது, சபை

வளர்ந்து, சீரடைந்து பெருகும். இப்படி தேவனுடைய சபை வளருவதற்கு நாம் அவரது வரத்தை, அவரது பாதபடியில் காத்திருந்து பெற்று, அவருக்காக வாழ் நாளெல்லாம் ஊழியம் செய்ய ஆசிப்போமாக. அப்படி வாஞ்சிக்கும் கர்த்தருடைய பிள்ளைகளை தேவன் அன்பின் ஆவியினால் நிரப்பி, கிருபா பாத்திரங்களாக உபயோகிக்க ஆண்டவருக்கு இடம் கொடுப்போமா? அப்படி இடம் கொடுப்போமேயாகில், கர்த்தர் நம்முடைய வாழ்க்கையில் அநேக அற்புதமான காரியங்களைச் செய்வார். தெபோராளின் மூலம் இஸ்ரவேலுக்கு மீட்பைக் கொண்டு வந்த ஆண்டவர், தமக்குத் தங்களை அர்ப்பணிக்கும் தேவபிள்ளைகளின் மூலம் வீட்டிற்கும், சபைக்கும், நாட்டுக்கும் மிக ஆசீர்வாதமான இரட்சிப்பை அருளுவார். நாம் நமது வாழ்க்கையை அதற்காக அர்ப்பணிப்போம், ஜெபிப்போம், கிருபையில் பலப்படுவோம்.

58. உல்தாள் (II நாளாகமம் 34:21-33; 35:16-27)

உல்தாள் ஒரு சிலருக்கே அருளப்படும் தீர்க்கதரிசன வரத்தை உடையவளாயிருந்தாள். அன்றியும் அவள் வேத வாக்கியங்களை நன்கு அறிந்திருக்க வேண்டும். அவள் நியாயப்பிரமாண புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்ததையெல்லாம் அறிந்திருந்தாள். யோசியா ராஜாவின் நாட்களில், ராஜாவின் ஆட்கள் ஆலயத்தைப் பழுது பார்க்கையில் நியாயப்பிரமாணப் புத்தகம் கண்டு பிடிக்கப்பட்டது. அப்புத்தகத்தில் கூறியிருப்பனவற்றைப் பற்றி விசாரிக்க ராஜா உல்தாளிடம் தன் ஆட்களை அனுப்பினான். அவர்கள் அவளோடே அதைப்பற்றிப் பேசினார்கள். அவள், ''இந்தப் புத்தகத்திலே கூறியுள்ளதெல்லாம் நிச்சயமாகவே இத்தேசத்தின் மீது வரும். ஏனெனில் நீங்கள் என்னைவிட்டு வேறே தேவர்களைப் பற்றிக்கொண்டீர்கள். ஆயினும் நீ இதை வாசித்த பின் எனக்கு முன்பாக உன்னை தாழ்த்திப் பணிந்தால், நான் உன் விண்ணப்பத்தைக் கேட்பேன். நீ சமாதானத்தோடே நித்திரையடைவாய். ஏனெனில் இவைகளை உன் கண்கள்

காணுது என்று கர்த்தர் உரைக்கிறுர்'' என்று சொல்லி யனுப்பினார்.

இந்த வரம் உல்தாளுக்கு எங்ஙனம் கிடைத்தது? அவள் தேவனிடத்தில் தன் முழு மனதோடும், முழு ஆவியோடும் அன்பு கூர்ந்து, அவருக்கு உண்மையா யிருந்து, அவரது பாதங்களை வணங்கி வந்ததால்தான், இவ்வரம் அவளுக்கு அருளப்பட்டது. கர்த்தர் அவளைத் தமது ஜனத்திற்கு தீர்க்கதரிசினியாக தெரிந்துக் கொண்டார். அவள் மூலமாக யோசியா ராஜா கர்த்தரி டத்தில் திரும்பி, சமாதானமாக வாழ்ந்து, சமாதானமாக நித்திரையடையும் பாக்கியத்தைப் பெற்றுன். அவன் கர்த்தரை ஏற்றுக் கொண்டதுமல்லாமல், தன் ஜனங்களையும் கர்த்தரிடமாகத் திருப்பி தேசத்திலுள்ள அந்நிய தேவர்களையெல்லாம் அகற்றிப் போட்டான்.

இதை வாசிக்கும் அருமையானவர்களே, யோசியா தன் வழியைத் திருத்திக் கொண்டது போல, ஆண்டவர் நமக்கு முன்பாக இடறல்களை வைக்கும் போது, நாமும் அவற்றைக் கண்டு பிடித்து, நம்மை தாழ்த்தி, மனந்திரும்பி, நமது வாழ்க்கையில் திருப்பத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். அன்றியும் நாம் நம்மை அவரது கைகளில் ஒப்புக் கொடுப்போமேயானல், பேரா சிர்வாதங்களைப் பெறுவோம். ஆனுல் ஆண்டவரது வார்த்தைகளை முதுகுக்குப் பின்னுல் எறிந்து விடுவோ மானுல், வாழ்க்கை கசப்பாகும். கண்ணீரின் வெள்ளத் தாக்கின் வழியாய் ஓட வேண்டியது வரும். அவ்விதத் துன்பங்கள் நம்மைத் தொடராதபடி நம்மைத் தாழ்த்தி, ஆண்டவரின் பாதங்களில் விழுவோம். அப்பொழுது ''உங்களுக்கு இரங்கும் படி கர்த்தர் காத்திருப்பார். உங்கள் மேல் மனதுருகும் படி எழுந்திருப்பார். கர்த்தர் நீதிசெய்கிற தேவன் அவருக்கு காத்திருக் கிறவர்கள் பாக்கியவான்கள்'' (ஏசாயா 30:18) என்ற படி நாமும் பாக்கியசாலிகளாவோம். உல்தாளைப் போல அநேகரை இந்த பாக்கிய நிலைக்குக் கொண்டுவர

நாமும் தேவனோடு சஞ்சரித்து, அவரது வசனங்களை ஆராய்ந்து அறிந்து; மற்றவர்களுக்கு புத்தி சொல்ல நாம் முன் வருவோமா? உல்தாளின் சொற்கேட்டு அந்நிய தேவர்களை அகற்றி, அப்பலிபீடங்களை இடித்து ஆண்டவருக்கேற்ற படி நடந்துக்கொள்ள தன்னை அழைத்துக் கொண்ட யோசியா ராஜாவைப் போல், நாமும் தீர்க்கதரிசன வரங்களையுடைய தேவ ஊழியர்கள் நமக்கு காட்டும் பாதையில் நடக்க முன் வருவோம்.

59. பிலிப்புவின் நான்கு குமாரத்திகள்

(அப்போஸ்தலர் 21:8)

பரிசுத்த பவுல் தன்னுடைய மூன்றுவது சுவிசேஷ பிரயாணத்தின்போது செசரியா பட்டணத்திற்கு வந்தார். அப்பொழுது அவர் அங்கே இருந்த பிலிப்பு என்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே தங்கினர். அவனுக்கு நான்கு குமாரத்திகள் இருந்தனர். அந்த நான்கு பேருமே தீர்க்கதரிசன வரத்தையுடையவர்களாய் இருந்தார்கள். அவர்கள் தகப்பனோடு சேர்ந்து, சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டிருக்கக் கூடும். ஏழைகளுக்கான தர்ம காரியங்களிலும் பங்கு பெற்றிருக்கலாம். இந்த நான்கு சகோதரிகளும் கன்னிகைகள். தங்களுடைய முழு நேரத்தையும் தீர்க்கதரிசன வரத்தை பயன்படுத்தி கர்த்தருக்குள் செலவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் இவர்கள் திருமணம் செய்யாதிருந்தார்கள் என நாம் யூகிக்கலாம். பரிசுத்த பவுல் I கொரிந்தியர் 7:32,33-ல் கூறியபடி, ''விவாகமில்லாதவன் கர்த்தருக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்று கர்த்தருக்குரியவைகளுக்காக கவலைப்படுகிறான்'' என்ற தத்துவத்தின் படி, கர்த்தருக்காகவே வாழவேண்டுமென்ற வாஞ்சையால் ஆட்கொள்ளப்பட்டார்கள்.

பெந்தேகோஸ்தே நாளில் பரிசுத்த ஆவியானவரால் அருளப்பட்ட வரங்கள் இருபாலருக்கும் பொதுவானதே என்பது இவர்களின் மூலம் தெளிவாகிறது. ஆவியால் நிறைந்த இப்பெண்கள் தங்கள் முழு வாழ்க்கையையும் இந்த ஊழியத்திற்கென்றே அர்ப்பணித்து விட்டனர்.

பவுல் அங்கிருக்கும் போது ... பா என்னும் தீர்க்க தரிசி அவ்விடம் வந்து, பவுல் சந்திக்க வேண்டிய உபத்தி ரவங்களைக் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்தான். அச்சம யத்தில் பவுல் I கொரிந்தியர் 14.3-ல் கூறியுள்ளபடி தீர்க்க தரிசனம் உரைக்கும் இப்பெண்கள் நால்வரும் பவுலுக்கு ஆறுதல் உண்டாகும்படி பேசினார்கள்.

பவுல் அப்போஸ்தலன் கூறியபடி இப்பெண்கள் தீர்க்கதரிசன வரத்தை நாடி பெற்றுக்கொண்டனர். இதற்காக அவர்கள் ஊக்கமாய் ஜெபித்தார்கள். இயேசு வின்பால் அவர்கள் கொண்ட அந்த ஆழ்ந்த அன்பினால் தங்கள் வாழ்நாளெல்லாம் ஆண்டவருக்கே ஊழியம் செய்ய வேண்டுமென்று விவாகம் செய்து கொள்ளாதிருந்து விட் டனர். தங்களது தீர்க்க தரிசன வரத்தால், ''மனுஷருக்கு பக்தி விருத்தியும், புத்தியும். ஆறுதலும்'' உண்டாக்கி னார்கள். அவர்கள் தேவன் மீது கொண்ட அன்பினால், அவரது ஊழியர் மீதும் அன்பு செலுத்தி அவர்களை ஆதரித்தனர்.

இப்படிப்பட்ட ஓர் உன்னத வாழ்வை நமது மக்க ளும் பெற்று, ஆண்டவருக்காக வாழ, நாம் சுவிசேஷகனு கிய பிலிப்புவின் குடும்பத்தாரை போல நமது பிள்ளை களுக்கு மாதிரியாக வாழ்ந்து காட்டுவோம். தேவனுடைய சந்நிதியில் அனுதினமும் ஜெபிப்போம். அப்பொழுது தேவன் நமது பிள்ளைகளையும் அவருக்குகந்த ஜீவனுள்ள சாட்சிகளாக மாற்றி, பயன் படுத்தி, நித்தியத்தில் அவரோடே கூட இருக்கும் சிலாக்கியத்தையும் அருளுவார்.

60 அன்னாள் - பானுவேலின் குமாரத்தி

(லூக்கா 2:36-38)

ஆசேருடைய கோத்திரத்தாளும், பானுவேலின் குமாரத்தியுமான அன்னாள் என்னும் ஒரு தீர்க்கதரிசினி இருந்தாள். அவள் கன்னிப் பிராயத்தில் விவாகமானது முதல் புருஷனுடன் ஏழு வருடங்கள் வாழ்ந்தவளும், அதிக வயது சென்றவளுமாயிருந்தாள். அவள் தேவால

யத்தை விட்டு நீங்கா[illegible]ஆலயத்திலே தரித்திருந்தாள். ''கர்த்தாவே, உமது ஆலயமாகிய வாசஸ்தலத்தையும், உமது மகிமை தங்கிய ஸ்தானத்தையும் வாஞ்சிக்கிறேன்'' (சங்கீதம் 26:8) என்று தாவீதரசன் கூறிய பிரகாரம் அவள் கர்த்தருடைய ஆலயத்தின் மீது வாஞ்சையாயிருந்தாள். அவள் ''கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சி செய்யும்படியாகவும், தன் (நான்) ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே'' நாடினாள் (சங்கீதம் 27:4). அவள் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்துக் கொண்டாள்.

அவள் இவ்வாறு ஆலயத்தில் ஆராதனை செய்துக் கொண்டு வந்தபோதுதான், இயேசு பாலகனைக் காணும் பெரும் பாக்கியத்தைப் பெற்றாள். அவள் உள்ளம் உவகையால் பொங்கியது. எனவே, அவள் கர்த்தரை புகழ்ந்ததோடு, எருசலேமிலே மீட்புண்டாகும்படி, மேசியாவின் வருகைக்காக காத்திருந்தயாவருக்கும் அவரைக் குறித்துப் பேசினாள்.

நாமும் இந்த அன்னாளைப் போல ஆலய வாஞ்சையும், கர்த்தரை தரிசிக்கும் ஆவலும் கொண்டவர்களாய் அவரது பாதபடியில் அவளைப்போல உபவாசித்து, ஜெபித்து, ஆராதனை செய்வோமானால், நிச்சயமாகவே நாம் அவரது அருளைப்பெறுவோம். அவரது அருளைப் பெற்று தேவனுக்கு நன்றி செலுத்துவதோடு, அன்னாளைப் போல ஆண்டவரைப் பற்றியும், அவரது அன்பினைப் பற்றியும், அவரது இரண்டாம் வருகை, நியாயத்தீர்ப்பு இவற்றைப் பற்றியும், மக்களுக்கு எடுத்துரைத்து, நித்ய நித்யமாய் அவர்கள் தேவனோடு வாழ வழி நடத்த நம்மை அவரது கைகளில் அர்ப்பணிப்போமாக. குயவன் கைகளி மண்ணாய் ஆண்டவரது கரங்களில் அமைந்து அவர் நம்மை எவ்வழியில் பயன்படுத்த விரும்புகிறாரோ அந்த தேவ சித்தத்திற்கு அடங்கி வாழ்வோமாக. அப்பொழுது நம்மில்

அவரது நாமம் மகிமைப்படும் மெழுகுவர்த்தி உருக உருக வெளிச்சம் கொடுப்பது போலவும், நாம் இயேசுவுக்காக நம்மை மறைத்து தியாக வாழ்வு வாழும் போது நாம் உலகிற்கு வெளிச்சம் ஈந்து, அவர்களது வாழ்க்கைக்கு சாரமூட்டுகிறவர்களாய் அமைவோம். இதையே கர்த்தர் நம்மில் எதிர்பார்க்கிறார்.

அத்தியாயம் XI

தேவனுக்கு பயந்த ஸ்திரீகள்

61. சிம்சோனின் தாய் (நியாயாதிபதிகள் 13, 14)

தாண் வம்சத்தில் மனோவா என்று ஒரு மனுஷன் இருந்தான். அவனுக்கு குழந்தைகள் இல்லை. ஒரு நாள் கர்த்தருடைய தூதன் அவனுடைய மனைவிக்கு தரிசனமாகி அவளுக்கு ஒரு குமாரன் பிறப்பானென்றும், அவன் தேவனுக்கென்று நசரேயனாயிருக்க அவனது தலையில் சவரகன் கத்தி படலாகாதென்றும், அவன் இஸ்ரவேலைபெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பானென்றும் சொன்னான். இதை அவள் தன் கணவனிடம் கூறியபோது அவன் அவளை நம்பியதால், அவன் கர்த்தரிடம் அந்த பிள்ளையை வளர்க்கும் விதத்தை தங்களுக்கு போதிக்க வேண்டுமென ஜெபித்தான். அந்த தூதன் மறுபடியும் அந்த ஸ்திரீக்கு வயல் வெளியில் தரிசனமானார். அவள் ஓடிப்போய் தன் கணவனை அழைத்து வந்தாள். மனோவா அக்குழந்தையை எவ்வாறு நசரேய விரதத்தில் வளர்க்க வேண்டுமென அத்தூதனிடமிருந்து அறிந்து கொண்டான். பின்னர் அவர்கள் அந்த தூதனுக்கு உணவு சமைத்து கொண்டு வந்தனர். மனோவா அவரை தேவதூதனென்று அறிந்து கொள்ளாததால் அவரிடம் அவரது பெயரைக் கேட்டான். அவர் 'அதிசயம்' என்றார். அன்றியும், அந்த உணவை தான் புசிப்பதில்லையென்றும், அதை

சர்வாங்க தகனபலியாக செலுத்தும்படியாகவும் கூறினர். அப்படியே செலுத்தும் பொழுது, பலியின் அக்கினி ஜுவாலை வானத்திற்கு நேராக எழும்பும் போது அவர் அதிலே ஏறிப்போனார். அதைக் கண்ட அவ்விருவரும் அவரை தேவதூதரென அறிந்து முகங்குப்புற விழுந்து வணங்கினர். மனோவா தன்மனைவியைப் பார்த்து, "நாம் தேவனைக் கண்டோம். சாகவே சாவோம்" என்றான். ஆனால் அவன் மனைவியோ, "கர்த்தர் நம்மை கொன்று போட சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே, சர்வாங்க தகனபலியையும், போஜனபலியையும் ஒப்புக் கொள்ள மாட்டார். இவைகளையெல்லாம் நமக்கு காண்பிக்கவுமாட்டார். இவைகளை நமக்கு அறிவிக்கவுமாட்டார்" என்றார்.

இந்த தாய் தேவனுக்கு பயந்த ஒரு ஸ்திரீயாயிருந்தாள். சங்கீதக்காரன் சொன்னபடி, "அவருக்கு பயந்தவர்களுக்கு குறைவில்லை" இப்படி அவள் தேவனுக்கு பயந்து, அவருடைய வழிகளில் நடந்ததினால் தான், இஸ்ரவேலை பெலிஸ்தரிடமிருந்து மீட்ட மாபெரும் வீரனை சிம்சோனுக்கு தாயாகும் பேற்றைப்பெற்றாள். அன்றியும் அவள் தன் கணவன் மீதும் அன்பு செலுத்தி அவனுக்கு கீழ்படிந்து, அவனோடு இணைந்து வாழ்ந்து ஒரு நல்ல குடும்பத்தை நடத்தி வந்தாள். எனவே தான் அவள் கணவனும் அவள் சொல்லைக்கேட்டு, அவளை நம்பி, கர்த்தரிடம் ஜெபித்து பிள்ளையை வளர்க்கும் முறையைக் கற்று கொண்டாள். அப்பிள்ளைக்காக அந்த தாயும், திராட்சைச் செடியிலே உண்டாகிற யாதொன்றையும் சாப்பிடாமலும், திராட்சரசமும், மதுபானமும் குடியாமலும், தீட்டானதொன்றும் புசியாமலும், கர்த்தருடைய வார்த்தைகளுக்கு விரதம் அனுசரித்தாள்.

பிள்ளை பிறந்து வளர்ந்த போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனோடிருந்தார். சிம்சோன் பெரியவனான போது அவன் ஒரு பெலிஸ்திய பெண்ணை விவாகம் பண்ண வண்டுமென்று ஆசைப்பட்டான். அப்பொழுது பெற்றோர் இது வேண்டாமென அறிவுரை வழங்கினர். ஆனால்

பெலிஸ்தரிடம் அவன் குற்றம் கண்டு பிடிக்க இது முகாந்தரமாயிருக்கும் படி, இது கர்த்தரால் உண்டான என்பதை அறியாமல் போனார்கள். ஆயினும் எல்லாவற்றையும் தேவனுடைய சித்தத்திற்கு ஒப்புக் கொடுத்து அவனுடன் பெண் பார்க்க சென்றனர். தங்கள் மகன் வழிவிலகி விடக்கூடாதே என்ற, தங்கள் மகனின் மீதுள்ள அன்பாலேயே இவர்கள் இதைச் செய்தனர்.

இந்த மனோவாவின் மனைவி மாதிரி நாமும் தேவனுக்கு பயந்து, அவர் வழிகளில் நடந்து, அவருக்கு கீழ்படிந்து, அவருடைய சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்போமானல் மனோவாவின் மனைவி ஆசீர்வதிக்கப் பட்டபடியே நாமும் ஆசீர்வதிக்கப்படுவோம்.

62 சிப்பிராள், பூவாள் (யாத்திராகமம் 1:8-22)

யோசேப்பை அறியாத ஒரு ராஜா எகிப்தில் அரசனுனன். அக்காலத்தில் கர்த்தருடைய வாக்குத் தத்தத்தின் படியே இஸ்ரவேல் மக்கள் பலுகி பெருகி எகிப்து தேசத்தில் மிகுதியான எண்ணிக்கையுடன் வாழ்ந்தனர். இந்த மக்கள் இவ்வாறு பெருகுவதை அந்த அரசன் விரும்பவில்லை. அத்துடன் ஏதாவது யுத்தம் வந்தால் அம்மக்கள் தங்கள் பகைவரோடு சேர்ந்து அவனுக்கு விரோதமாக செயல்படலாமென கருதி, அவர்களை அழிக்க பல உபாயங்களை கையாளலானான். ஆனால் கர்த்தர் இஸ்ரவேல் மக்களோடு இருந்ததால் அவை பலிக்கவில்லை. எனவே அவன் அங்குள்ள சிப்பிராள் பூவாள் என்ற மருத்துவச்சிகளை கூப்பிட்டு, அவர்கள் எபிரேய பெண்களுக்கு மருத்துவம் செய்யும் பொழுது பிறக்கும் பிள்ளைகள் ஆண்பிள்ளைகளானல் அவற்றைக் கொன்று போடும்படி கூறினன். ஆனல் அந்த மருத்துவச்சிகளோ அதை நிறைவேற்றவில்லை. அவர்கள் தேவனுக்கு பயந்தவர்களானதால் அக்கட்டளைக்கு இணங்கவில்லை. ராஜா அவர்களை அழைத்து, ஏன் அவர்கள் எபிரேய ஆண்பிள்ளைகளை கொல்லவில்லை என விசாரித்தான். அப்பொழுது அவர்கள், ''எபிரேய ஸ்திரீகள் எகிப்திய

ஸ்திரீசளைப் போலல்ல அவர்கள் நல்ல பலமுள்ளவர்கள்; மருத்துவச்சிகள் அவர்களிடம் போகுமுன்னே அவர்களுக்கு குழந்தைகள் பிறந்து விடுகின்றன'' என்றூர்கள். இவ்வாறு அந்த மருத்துவச்சிகள் தேவனுக்கு பயந்ததினுல் அவர்களது குடும்பங்களை கர்த்தர் தழைக்கும்படி செய்தார்.

இந்த மருத்துவச்சிகள், ராஜா செய்யும் காரியம் தீமை என்று உணர்ந்தனர். உண்மை வெளி வந்தால் தங்கள் உயிருக்கே ஆபத்து நேரிடும் என உணர்ந்தும், அவர்கள் அரசனுடைய கட்டளைக்கு கீழ்ப்படியாது, தீமைக்கு எதிர்த்து நின்றனர். கள்ளங்கபடில்லா அச்சிறு குழந்தைகள் மீதுள்ள, இரக்கத்தால், அவர்கள் இத்தீச் செயலை செய்ய உடன்படவில்லை. அதுபோலவே, நாமும் தீயச்செயல்களுக்கு எப்பொழுதும் விலகியிருக்க வேண்டும். நாமும் மீகா தீர்க்கதரிசியின் மூலம் தேவன் விடுக்கும் செய்தியை ஏற்று அதின்படி நடக்க பிரயாசப்படுவோம். ''மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்திருக்கிறூர்; நியாயஞ்செய்து, இரக்கத்தை ஸ்நேகித்து, உன் தேவனுக்கு முன்பாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தை கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறூர்'' (மீகா 6:8). கர்த்தருடைய இந்த வார்த்தைகளுக்குச் செவிகொடுத்து தீமையை விடுத்து, இந்த மருத்துவச்சிகளைப் போல் நன்மை செய்யப் பழகுவோம்.

அன்றியும் மருத்துவப்பணியில் ஈடுபட்டிருக்கும் சகோதரிகளே, அந்த மருத்துவச்சிகள் தேவனுக்குப் பயந்து நடந்தது போல நீங்களும் அவருக்குப் பயந்து, செம்மையான வழியிலே நடப்பீர்களாளுல் கர்த்தர் உங்களையும், உங்கள் சந்ததிகளையும் ஆசீர்வதிப்பார். மருத்துவப் பணி உயிரினை காக்கும் உயர்ந்த பணி. அதில் நீங்கள் கர்த்தரின் துணையைக் கொண்டு உண்மையான சேவை செய்வீர்களாளுல் கர்த்தரது கிருபை எப்போதும் உங்களோடிருக்கும் ''பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்; கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்''. அந்த மருத்துவச்சிகள்

இதை உணர்ந்து கர்த்தருக்குப் பயந்து மன சாட்சிக்கு விரோதமாக நடவாது, கர்த்தருடைய வழியில் நடந்தது போல நீங்களும் செய்வீர்களானல் உயிரை காப்பாற்றும் பணியில் கர்த்தர் உங்களோடிருந்து உங்கள் தொழிலேயும், உங்கள் குடும்பங்களேயும் ஆசீர்வதிப்பார். கருத்தடை செய்வதும், குடும்பக்கட்டுபாடு செய்து கருவிலிருக்கும் சிறு சிசுக்களே அழித்து விடும்படி மருத்துவம் செய்வதும், ஜீவனுள்ள தேவனுக்கு விரோதமான பாவமாகும்.

63. யோபின் குமாரத்திகள் (யோபு 42:13-15)

யோபின் கதையை நாமெல்லாரும் நன்கு அறிவோம். யோபு தன் சோதனேகளில் வெற்றி பெற்ற பின், யோபின் முன்னிலமையைப் பார்க்கிலும், பின்னிலமையை ஆசீர்வதித்தார். அவனுக்கு ஏழு குமாரரும், மூன்று குமாரத்திகளும் பிறந்தனர். மூத்த மகளுக்கு எமீமாள் என்றும், இரண்டாவது குமாரத்திக்கு கெத்சியாள் என்றும், மூன்ரும் குமாரத்திக்கு கேரேனுப்புக் என்றும் பெயரிட்டான். தேசத்தில் எங்கும் யோபின் குமாரத்திகளேப்போல சௌந்தரியமான பெண்களேக் காணமுடியவில்லே. யோபு அவர்களுக்கு எல்லாவற்றிலும் சுதந்தரம் கொடுத்திருந்தான். அந்தப் பெண்கள் தங்கள் புறம்பான அழகோடு, அக அழகும் பெற்றுச் சிறந்து விளங்கினர். பெற்ருேருக்குக் கீழ்ப்படிந்து நடந்தனர் ''பிள்ளேகளே, உங்களைப் பெற்ருேருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியம்'' (கொலோசேயர் 3:20). ''பிள்ளேகளே, உங்கள் பெற்ருேருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம் உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும், உன் தகப்பனேயும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனேயாயிருக்கிறது'' (எபேசியர் 6:1-3). எனவே, என் அருமை பிள்ளேகளே, நீங்கள் உங்கள் பெற்ருேரை கனம்பண்ணி, அவர்களுக்கு கீழ்ப்படிந்து நடப்பீர்களானல் கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார். இயேசுகிறிஸ்துவும் கூட தமது சிலுவையின்

மரண பரியந்தம் தமது பிதாவுக்கு கீழ்ப்படிந்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார். அது போலவே, பெற்றோர்களும் தங்கள் பிள்ளைகளைகோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் அவர்களை பொறுமையாய் வழிநடத்த வேண்டும். இப்படி பிள்ளைகள் நடக்க வேண்டிய வழியில் அவர்களை நடத்துவோமானால், முதிர் வயதிலும் அவர்கள் அதை விடாதிருப்பார்கள். யோபின் பிள்ளைகள் இவ்வாறு போதிக்கப்பட்டிருந்தனர். பிள்ளைகளின் மதியீனத்தைப் போக்கி அவர்களை நல்வழிப்படுத்த, நாம் யோபைபோல பொறுமையைக் கையாண்டு, கர்த்தரைப் பற்றிக்கொண்டு, அவரது கரத்தில் நம் பிள்ளைகளை ஒப்புவிப்போம்.

64. தீர்க்கதரிசியின் மனைவி

(II ராஜாக்கள் 4:1-7)

தீர்க்கத்தரிசி ஒருவனின் மனைவி ஒரு நாள் தீர்க்கதரிசியாகிய எலிசாவிடம் வந்து, ''என் புருஷன் இறந்துப் போனான். உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை அறிவீர்; கடன் கொடுத்தவன் இப்போது என் இரண்டு குமாரரையும் தனக்கு அடிமையாக்கிக் கொள்ள வந்தான்'' என்றாள். அப்பொழுது எலிசா அவளிடம் இருப்பது என்ன என விசாரித்தான். அவள் தன்னிடம் ஒரு குடம் எண்ணெய் மாத்திரம் உண்டு என்றாள். அப்பொழுது எலிசா அவளை, அவளது அயலகத்தாரிடம் வெறும் பாத்திரங்களை வாங்கி வீட்டிற்குள் சென்று, கதவைப்பூட்டி, அந்த எண்ணெயை அந்தப் பாத்திரங்களில் நிரப்புப்படிச் சொன்னான். அவள் அவ்வாறே செய்தாள். வேறு பாத்திரங்கள் கிடையாமற் போகுமட்டும் அந்த எண்ணெய் குறையவில்லை. எல்லா பாத்திரங்களும் நிரப்பிய பின் எண்ணெய் நின்று போயிற்று. அவள் போய் இதை எலிசாவிடம் அறிவித்தாள். அவன் அவளை அந்த எண்ணெய் முழுவதையும் விற்று, கடனை தீர்க்குப்படிச் சொல்லியனுப்பினான்.

அந்த தீர்க்கதரிசி தேவனுக்கு பயந்து நடந்தவன் எனக் கூறப்பட்டுள்ளது. அதினால் அவன் குடும்பமும்

தேவனுக்குப் பய ந்த ஒரு குடும்பமாக இருந்தது. அதினால் தான் அவனுடைய மனைவி தனக்கு ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்ட பொழுது நேரே ஒரு தேவனுடைய மனிதனை நாடிச் சென்றாள். எலிசா அவளிடம் என்ன செய்ய வேண்டுமென்று சொன்ன போது, அவள் எவ்விதமான கேள்வியையும் எழுப்பாது, அவன் மூலமாய் தேவனுடைய வாக்கே தனக்கு அருளப்பட்டது என்று நம்பி, அவன் சொன்னபடி அவ்வார்த்தைகளுக்குக் கீழ்படிந்து நடந்தாள். எனவே தான், அங்கே தேவனுடைய அற்புதம் நிகழ்ந்தது. தேவையான எண்ணெய் கிடைத்தவுடன் எண்ணெய் நின்று போயிற்று என்று பார்க்கிறோம். தேவனுக்கு நமது தேவைகள் யாவும் தெரியும். ஆகையால் நாம் அவரை விசுவாசித்து அவர் வழிகளில் நடந்து, நமது தேவைகளை அவரிடம் தெரிவிக்கும் போது அவர் தமது ஆசீர்வாதங்களைப் பொழிந்து, நமது தேவைகளை சந்திப்பார். எண்ணெய் கிடைத்தவுடன் அந்த ஸ்திரீ தன்னிச்சையாக அந்த எண்ணெயை விற்காது மறுபடியும் எலிசாவிடம் போய் அதை நன்றியுடன் தெரிவித்து, அவனது ஆலோசனையைக் கேட்டாள். அதுபோல நமது தேவைகளும், நமது அருமை ஆண்டவரால் சந்திக்கப் படும் போது அவருக்கு நமது உள்ளங்கனிந்த நன்றியை தெரிவித்து கொள்ள வேண்டும். மறுபடியுமாக அவள் எலிசா சொன்ன பிரகாரமே அந்த எண்ணெயை விற்று, தன் கடனை தீர்த்து தன் குமாரரை காப்பாற்றினாள். நாமும் கர்த்தரிடம் போகும்போது, நமது இக்கட்டுகளும், துன்பங்களும் நீங்கப் பெற்று சமாதானமாக வாழ முடியும்.

65. பிலாத்துவின் மனைவி (மத்தேயு 27:19-26)

இயேசு நியாயம் விசாரிக்கபடுவதற்காகத் தேசாதிபதியாகிய பிலாத்துவின் முன் நின்றார். பிலாத்து அவரிடம் ஒரு குற்றத்தையும் காணாததினால் யூதர்கள் பொறாமையால் அவரை ஒப்புக்கொடுத்தார்களென அறிந்து, அவரை விடுவிக்க மனதுள்ளவனாய், "எவனை நான் உங்களுக்கு விடுதலையாக்க வேண்டுமென்றிருக்கி

றீர்கள்? பரபாசையயோ? கிறிஸ்து என்னப்படுகிற இயேசுவையோ?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது தான் அவனுடைய மனைவி அனுப்பிய ஆள் அங்கு வந்து சேர்ந்தான் அவன் மூலமாய் அவள், ''நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்ய வேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகுபாடு பட்டேன்'' என்று சொல்லியனுப்பியிருந்தாள்.

இயேசுவை இந்த ஸ்திரீ நீதிமான் எனக் கண்டு கொண்டாள். எனவே தான் அவள் இச்செய்தியைப் பிலாத்துவுக்கு சொல்லி அனுப்பினாள். அவள் இந்த நீதிக்காகப் பிலாத்துவிடம் மன்றாடினாள். ''நீதியின்மேலே பசி தாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்'' என்று இயேசு சொன்ன பிரகாரம், இந்த ஸ்திரீ தன் கணவன் நீதி தவறி விடக்கூடாதே என்ற நோக்குடன் இச்செய்தியைத் தன் கணவனுக்கு அனுப்பினாள். இதன் மூலமே அவள் தன் கணவனை நேர்வழியில் திருப்ப முயன்றாள். ஆனால் பிலாத்துவோ தன் மனைவியின் சொற்களுக்கு மதிப்புக் கொடாது, அநீதியான தீர்ப்பு என்றறிந்தும் இயேசுவை சிலுவையிலறையப்படும்படி ஒப்புக் கொடுத்தான். அவரை விடுதலை பண்ணுவதே நியாயம் என்றறிந்தும், கலகம் அதிகமானதினால், இந்த நீதிமானின் இரத்தப் பழிக்கு நீங்கலாக இருக்கும் பொருட்டுத், தன் கைகளைக் கழுவினான். இயேசு சிலுவையில் அறையப்பட வேண்டும் என்பதே பிதாவின் சித்தம் இது இயேசுவுக்கும் தெரியும். (மத்தேயு 26:2) பிதாவின் சித்தம் நிறைவேற வேண்டியிருந்ததால் தான், பிலாத்து இயேசுவைக் குறித்து, 'நீதிமான்' என அறிந்தும் அவரைச் சிலுவையிலறைய ஒப்புக்கொடுத்தான்.

இன்றுங்கூட தவறான பாதையில் செல்லும் கணவன்மாரை நேர்வழிப்படுத்த முயலும் ஸ்திரீகள் பலர் உண்டு. ஆனால் அவர்கள் தங்கள் மனைவியின் சொல்லைக் கேளாது, தாங்களே தங்களையும், தங்கள் ஆத்துமாவையும், தங்கள் குடும்பத்தையும் கெடுத்து விடுகிறார்கள். அவர்களது குடும்பங்கள் பலவிதமான

வெளிவரவில்லை. அதைக் கவனித்த ஆசாரியனாகிய ஏலி அவள் குடி வெறியில் இருப்பதாக எண்ணி அவளைக்கண்டித்தார். அன்னாளோ பொறுமையாக, ''அப்படியல்ல என் ஆண்டவனே; நான் மனகிலேசமுள்ள ஸ்திரீ; நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றி விட்டேன் மிகுதியான விசாரத்தினாலும், மனக்கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம் பண்ணினேன் என்றாள். ஏலி, ''நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில்கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்கு கட்டளையிடுவாராக'' என்றார். அவள் அதன்பின்பு போய் போஜனம் பண்ணினாள் அப்புறம் அவள் துக்கமுகமாயிருக்கவில்லை

இந்த அன்னாள், தன்னுடைய நிந்தனையை தாங்கமுடியாதபடி மனக்கிலேசத்தில் இருக்கையில், மனிதர் தயவை நாடாது, கர்த்தரிடத்தில் போய் தன் இருதயத்தை ஊற்றி ஜெபித்தாள். பிறகு அவள் துக்கமுகமாயிருக்கவில்லை. கர்த்தர் தன் குறையை எவ்வாறாயினும் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை அவளுக்கு ஏற்பட்டது. எனவே அவள் துக்கமுகமாயிருக்கவில்லை. பெனின்னாள் அவளை நிந்தித்தபோது அதைப் பொறுமையுடன் சகித்தது போலவே, ஏலி அவளை நிந்தித்தபோதும் பொறுமையாய் பதிலுரைத்தாள்.

சிலநாள் சென்றபின், அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெற்று, கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்றுச்சொல்லி, அவனுக்கு 'சாமுவேல்' என்று பெயரிட்டாள். அன்னாளின் கண்ணீர் ஜெபம், அவள் வாழ்க்கையில் குறையையும், நிந்தனையையும், கவலையையும், போக்கிற்று ''ஜெபமே ஜெயம்'' ஆகும், அவள் தேவ சமுகத்தில் செய்த பொருத்தனையை நிறைவேற்றுகிறவளாகக் காணப்பட்டாள். கர்த்தருக்கு பயப்படும் பயம் அவள் உள்ளத்திலிருந்து ''இந்தப் பிள்ளைக்காக விண்ணப்பம் பண்ணினேன்; நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின்படி எனக்கு கட்டளையிட்டார். ஆகையால் அவனை கர்த்தருக்கே ஒப்புக்கொடுக்கிறேன். என்று சொல்லி அவனை ஏலியினிடத்தில் கொண்டுபோய்விட்டாள். பிள்ளை குழந்தை

யாயிருந்த போதிலும், கர்த்தரை அங்கே பணிந்துகொண்டான். இவ்வாறு சிறு பிராயத்திலே, அவன் கர்த்தருக்கு பயப்படும் பயத்தில் வளர்க்கப்பட்டான். தான் ஜெபித்து பெற்ற பிள்ளையை பிரிய நேரிட்டாலும், அவள் தன் பொருத்தனையை உண்மையாய் நிறைவேற்றினுள் அன்னுளை தேவன் ஆசீர்வதித்தார். அவள் தன் முதற் பேருன குமாரனை கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்ததால் அவர் அவளுக்கு மேலும் ஐந்து பிள்ளைகளை கட்டளையிட்டார். ''கொடுங்கள் அப்பொழுது உங்களுக்கு கொடுக்கப்படும்'' என்ற வசனத்தின்படி, அவள் கர்த்தரிடத்தில் கேட்டு பெற்ற பிள்ளையை கர்த்தருக்கே மனப் பூர்வமாய் ஒப்படைத்த போது, அவன் கர்த்தருடைய ஆலயத்திலே ஏலிக்கு முன்பாக வளர்க்கப்பட்டு, இஸ்ரவேலிலே சிறந்த தீர்க்கதரிசியாக விளங்கினான் விசுவாசிகளின் பட்டியலில், அவனது பெயர் இடம்பெற்றது.

எனக்கு ஒரு குழந்தை இல்லையே என ஏங்கி தவிக்கும் தாயே, சகோதரியே, அன்னுளின் கண்ணீரைக் கண்டு அதை துடைத்த தேவன், உங்கள் கண்ணீரையும் கண்டு துடைக்க வல்லவராயிருக்கிருர். ஆண்டவர் உங்களுக்கு கொடுக்கும் பிள்ளைகளை சாமுவேலைப்போல் வளர்ப்பீர்களா? அல்லது ஏலியின் பிள்ளைகளைப்போல் வளர்ப்பீர்களா? சிந்தியுங்கள் யாருமே தங்கள் பிள்ளைகள் ஏலியின் பிள்ளைகள் போல் வளருவதை விரும்ப மாட்டார்கள். ஆகையால் அன்னுளைப்போல் நீங்கள் பிள்ளைகளைக் கேட்டு பெற்றுக் கொள்ளும் போது, அவர்களை கர்த்தருக்கு பயப்படுகிற பயத்திலும், விசுவாசத்திலும் வளருங்கள் அப்படி வளர்ப்பீர்களாகில் நீதிமொழிகள் 31:28-ல் கூறியுள்ள, ''அவள் பிள்ளைகள் எழும்பி, அவளை பாக்கியவதி என்கிருர்கள். அவள் புருஷனும், அவளைப் பார்த்து அனேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்களெல்லாருக்கும் மேற்பட்டவள் என்று புகழுகிறான்'' என்ற வார்த்தைகள் உங்கள் வாழ்க்கையிலும் நிறைவேறும் இப் பேர்பட்ட ஆசீர்வாதங்களை ஆண்டவர் உங்கள் வாழ்க்கையில் கிருபையாய் பொழிந்திடுவாராக! ஆமேன்.

ராஜாவும் தனது முத்திரை மோதிரத்தை அவனிடம் அளித்து அவனது இஷ்டப்படி செய்ய அனுமதி ஈந்து, வெள்ளியை அவனை வைத்துக் கொள்ளுமாறும் கூறினன். அப்படியே ஆமான் முதல் மாதம் பதிமூன்றும் தேதியிலே பெண்கள், குழந்தைகள் உட்பட எல்லா யூதமக்களையும் கொன்று, அவர்கள் உடைமைகளைக் கொள்ளையிடும் படியான கட்டளையை ராஜாவின் பேரில் பிறப்பித்து, சகல நாட்டின் அதிகாரிகளுக்கும், அவரவர் மொழியில் எழுதியனுப்பினன்.

இதை மொர்தெகாய் அறிந்த போது, அவன் இரட்டுடுத்தி, சாம்பல் பூசியவனாய் அரன்மனை வாசலுக்கு வந்தான். அக்கோலத்தில் ஒருவரும் அரன்மனைக்குள் அனுமதிக்கப் பட மாட்டார்கள். இதை எஸ்தரின் தாதிமாரும், அவளுடைய பிரதானிகளும் அவளுக்கு அறிவித்தனர். எனவே அவள் தன் பிரதானிகளில் ஒருவனான ஆத்தாகை அழைப்பித்து, காரணத்தைக்கேட்டறிய அவனை மொர்தெகாயிடம் அனுப்பினாள். மொர்தெகாய் விஷயங்களெல்லாவற்றையும் விளக்கி, ராஜாவிடம் எஸ்தர் போய்' தன் ஜனங்களுக்காக விண்ணப்பம் பண்ணவேண்டுமென்று கூறியனுப்பினான். அப்பொழுது எஸ்தர், ராஜா அழைத்தாலன்றி எந்தப் பெண்ணும் அவரிடம் செல்ல முடியாதென்றும், கடந்த முப்பது நாட்களாக அவள் அழைக்கப்படவுமில்லைஎன்றும் கூறியனுப்பினள் அப்பொழுது மொர்தெகாய், "நீ ராஜாவின் அரன்மனையிலிருக்கிறதால், மற்ற யூதர் தப்பக் கூடாதிருக்க, நீ தப்புவாயென்று உன் மனதிலே நினைவுக் கொள்ளாதே நீ இந்தகாலத்திலேமவுனமாயிருந்தால், யூதருக்குசகாயமும் ரட்சிப்பும்,வேறொருஇடத்திலிருந்துஎழும்பும்; அப்பொழுது நீயும், உன் தகப்பன் குடும்பத்தாரும் அழிவீர்கள்; நீ இப்படிபட்ட காலத்திற்கு உதவியாயிருக்கும் படி உனக்கு ராஜ மேன்மை கிடைத்திருக்கலாமே. யாருக்குத் தெரியும்" என்று சொல்லியனுப்பினான்.

அப்பொழுது எஸ்தர் மொர்தெகாய்க்கு, "எல்லா நாடுகளிலுமுள்ள யூதர்களும் அல்லும், பகலும் எனக்காக

மூன்று நாள் உபவாசியுங்கள். நானும், என் தாதிமாருங் கூட உபவாசிப்போம். நான் என் உயிரை பொருட்படுத் தாது ராஜாவிடம் சொல்லுகிறேன்'' எனக்கூறி அனுப்பி ஞள். அவ்வாறே மொர்தெகாய் செய்தான். மூன்றாம் நாளிலே எஸ்தர் ராஜஉடையணிந்து, அரண்மனை முற்றத் தில் ராஜா கொலுவிருக்கும் ராஜாசனம் வைக்கப் பட்டி ருந்த அரண்மனை வாசலருகே நின்ருள். எஸ்தரைக்கண்ட ராஜாவின் கண்களில் அவளுக்குத் தயை கிடைத்தது. அதனால் அவன் தன் செங்கோலை நீட்டினான். எஸ்தர் வந்து அதன் நுனியைத் தொட்டாள். ராஜா அவளது விருப்பதைக் கேட்க அவள் ''ராஜாவுக்கு சித்தமானால், நான் செய்வித்த விருந்துக்கு ராஜாவும், ஆமானும் இன்றைக்கு வரவேண்டும்'' என்ருள். அந்தப்படியே ராஜாவும், ஆமானும் விருந்துக்கு சென்றனர். திராட்ச ரசம்பரிமாறப்படுகையில்ராஜா எஸ்தரிடம், ''இப்பொழுது உன் வேண்டுதல் என்ன? நீ எதைக் கேட்டாலும் கொடுப் பேன்'' என்ருன். எஸ்தர் மறுநாளும் அவர்களிருவரும் அவளது விருந்துக்கு வரவேண்டுமெனக் கேட்டுக் கொண் டாள். ஆமான் சந்தோஷத்தோடு செல்கையில், வாசலில் மொர்தெகாய் தனக்கு மரியாதை செய்யாததைக் கண்டு கடுங்கோபம் கொண்டவனாய்த் தன் வீட்டிற்குச் சென் ருன். அங்கே அவனது மனைவி சிரேஷீம், மற்றும் சிநேகிதரும் கொடுத்த துராலோசனை பேரில், அவன் ஒரு தூக்கு மரம் செய்து, அன்றிரவே அரசனிடம் உத்த ரவு வாங்கி, மொர்தெகாயை அதில் தூக்கிப்போட எண்ணினான்.

அன்று இரவு அகாஸ்வேருக்கு நித்திரை வராத தால் நளபடி புஸ்தகத்தைக் கொண்டு வந்து அதை ராஜா வுக்கு முன்வாசிக்கும் படிச்சென்னான். அதில், மொர்தெ காய் அரசனைக் காப்பாற்றிய வரலாறு கூறப்பட்டி ருந்தது. அப்பொழுது ராஜா மொர்தெகாயுவுக்கு அதனுல் ஏதாவது கனமும், மேன்மையும் செய்யப் பட்டதா? என வினவினுன். ''இல்லை'' என விடைகிடைத்தது. அந்நேரத்தில் தானே தான் செய்த தூக்கு மரத்தைப் பற்றிப்பேச ஆமான் அரண்மனை வெளிமுற்றத்திலே

வந்திருந்தான். ஆமான் வந்திருப்பதை யறிந்த அரசன் அவனை அழைப்பித்து "ராஜா கனம்பண்ண விரும்புகிற மனுஷனுக்கு என்ன செய்யப்பட வேண்டும்?" என்றுக் கேட்டான். ஆமான் தன்னைத்தவிர வேறு யாரை அரசன் கனம் பண்ணப் போகிறான் எனக் கருதியவனாய், "அந்த மனிதனுக்கு ராஜவஸ்திரம் தரித்து, சிரசில் முடிசூட்டி, ராஜாவின் குதிரையின் மீது நகர வீதியில் உலவுப்படிச் செய்ய வேண்டும்" என்றான். ராஜா அப்படியானால் இவ்வளவு மேன்மையையும் மொர்தெகாய்க்குச் செய்யும் படி கட்டளையிட்டான்.

ஆமான் வீட்டிற்கு மிக்க துக்கத்துடன் திரும்பினான். பின்னர் அவன் எஸ்தரது இரண்டாவது விருந்திற்குச் சென்றான். விருந்தில் திராட்சரசம் பரிமாறப் படுக்கையில், ராஜா முன் போலவே எஸ்தரின் வேண்டுதல் என்ன என்றுக் கேட்டான். அப்பொழுது எஸ்தர், ராஜாவுக்கு சித்தமானால், அவருடைய கண்களில் தயைக் கிடைத்தால்; என் வேண்டுதலுக்கு என் ஜீவனும், என் மன்றாட்டுக்கு என் ஜனங்களும் எனக்குக் கட்டளையிடப் படுவதாக. எங்களை அழித்து நிர்மூலமாக்கும் படி நாங்களெல்லாரும் விற்கப்பட்டோம். அப்படியானாலும் நான் மவுனமாயிருப்பேன். ஆனால் இப்போது ராஜாவுக்கு ஏற்படும் நஷ்டத்திற்கு அந்தச் சத்துரு உத்தரவாதம் பண்ண முடியாது" என்றாள். அன்றியும் ராஜா அந்தச் சத்துரு யார் என வினவ, எஸ்தர் ஆமானை சுட்டிக் காட்டி, "அந்த மனிதன் இந்த துஷ்ட ஆமான் தான்" என்றாள். இதைக் கேட்ட மன்னன் மகா உக்கிரத்தோடு தோட்டத்துக்குப் போனான். திகிலடைந்த ஆமான் எஸ்தரிடத்தில் தன் பிராணனுக்காக விண்ணப்பம் பண்ண எழுந்தான் ராஜா அவ்விடத்திற்கு திரும்பி வந்தபோது, ஆமான், எஸ்தர் உட்கார்ந்த மெத்தையின் மீது விழுந்துக் கிடந்தான். அப்பொழுது ராஜா, "நான் அரன்மனையி லிருக்கும் போதே என் கண்முன்னே இவன் ராஜாத்தியை பலவந்தம் செய்ய வேண்டுமென்றிருக்கிறானோ" என்றான். உடனே ஆமானின் முகத்தை மூடிப்போட்டார்கள். ஆமான் மொர்தெகாய்க்காக செய்வித்திருந்த தூக்கு மரத்

தைப் பற்றி ராஜா கேள்விப்பட்டவுடனே, அதிலே ஆமானையே தூக்கிப்போடுவித்தான். அவனது வீடு எஸ்தருக்கு கொடுக்கப் பட்டது.

எஸ்தர் 8:3-17 பின்னும் எஸ்தர், ராஜாவின் பாதங்களில் விழுந்து ஆமானின் தீவினையையும், அவன் யூதருக்கு விரோதமாக செய்த சதியையும் பிரிக்கமன்றாடினாள். மறுபடியும் எஸ்தருக்கு செங்கோல் நீட்டப்பட்டது. அப்பொழுது அவள் ஆமான் யூதரை அழிக்க பிறப்பித்த தாக்கீது செல்லாமல் போக வேண்டுமென்றும், தன் ஜனத்திற்கு ஏற்படவிருந்த பொல்லாப்பு நீக்கப்பட வேண்டுமென்றும் மன்றாடினாள். அப்பொழுது ராஜா எஸ்தரிடமும், மொர்தெகாயினிடமும் அவர்கள் தங்களுக்கு பிரியமானபடி, ராஜாவின் பெயரால் யூதருக்காக கட்டளை எழுதியனுப்பக் கூறினான். அப்படியே அவர்கள் யூதர்கள் தங்கள் சத்துருக்களை அழிக்கும்படியான உத்தரவை அகாஸ்வேரு ராஜாவின் பெயரால் எழுதி, எல்லா நாடுகளுக்கும் அனுப்பினார்கள், யூத ஜனம் இவ்வாறு காக்கப்பட்டது.

இதுவே எஸ்தரின் சரிதை, இதிலிருந்து நாம் அவளது பண்புகளை ஆராய்ந்தறிந்துக் கொள்ள இயலும்.

எஸ்தர், ராஜாவின் சந்நிதிக்குப்போகுமுன் சுத்திகரிக்கப்பட வேண்டியதாயிருந்தது. அதுபோலவே, கிறிஸ்துவின் மணையாட்டியாகிய திருச்சபையில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு ஆத்துமாவும் பரிசுத்த ஆவியினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியது அவசியம். அப்படி சுத்திகரிக்கப்பட்ட ஆத்துமாவுக்கே தேவனோடு உறவாடும் மேன்மை கிடைக்கும். அகாஸ்வேரு ராஜாவின் கண்களில் எஸ்தருக்கு தயை கிடைத்தது போலவே, நமது ஆண்டவராகிய ராஜாதி ராஜன் இயேசுகிறிஸ்துவின் கண்களில் தயையும், கிருபையும், இரக்கமும் கிடைக்கும் இதற்காக நாம் அவரது கிருபாசனத்தை நெருங்கிச்சேருவோம். அவ்வாறு நெருங்கிச் சேரும் பொழுது அகாஸ்வேரு ராஜா எஸ்தருக்குப்பல வெகுமதிகளை அளித்து மேன்மைப் படுத்தியது போலவே, நாமும் கிறிஸ்துவுக்காக இவ்வுலகில் வாழும் போது, அவர்

தேவனுக்காக செலவழிக்கிறோமா, அல்லது புதைத்து வைத்திருக்கிறோமா, அல்லது தாலந்துகளை தீயவழியில் செலவிடுகிறோமா என்று சிந்தித்துப் பார்ப்போம். சரியான முறையில் உபயோகித்தவனுக்கு கூட்டிக் கொடுக்கப் பட்டது. அவன் தன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்தான். அவ்வாறே நாமும் நற்பேற்றினை பெற்றிட நமது தாலந்துகளை அவருக்காக பயன்படுத்தவும், உபத்திரவங்களை அவருக்காக சகிக்கவும், நம்மையே அவருக்கு அர்ப்பணிக்கவும், தேவன் தமது கிருபையை நமக்கு தந்தருளுவாராக.

அத்தியாயம் XIII

அன்பில் சிறந்த பெண்கள்

68. ரெபேக்காள் (ஆதியாகமம் 24:15-67)

ரெபேக்காள், சாராளின் சகோதரனுன பெத்துவேலின் மகள் ஆபிரகாம் தனது முதிர்ந்த வயதில் தனது நம்பிக்கைக்கும் பாத்திரமான எலியேசர் என்ற தனது ஊழியக்காரனை அழைத்துத் தன் குமாரனுக்கு பெண் பார்க்கும் பொறுப்பை அவனிடம் ஒப்புவித்தான். ஆபிரகாம் எலியேசரிடம் கானனியஸ்திரீகளில் தன் குமாரனுக்கு பெண் தேடாமல் தனது இனத்தாரிடம் போகும்படிக் கூறினுன். அன்றியும், அவனை இதற்கு ஆணையிடச் செய்து, அப்படி அவனது இனத்தாரின் பெண்கள் சம்மதியாவிடில் எலியேசர் அவ்வாணைக்கு நீங்கலாயிருப்பான் என்றுன். எலியேசரும் தனது எஜமானின் ஆணைக்குக் கீழ்ப்படிந்தான். மேலும் ஆபிரகாம் கர்த்தர் மேல் நம்பிக்கையாய், அவர் எலியேசருக்கு முன் ஒரு தூதனை அனுப்புவார் என்றுன்.

எலியேசர் புறப்பட்டுப்போய் நாகோருடைய ஊரில் சேர்ந்து, ஒரு துரவண்டையில் அமர்ந்து, "என்

எஜமானுகிய ஆபிரகாமுக்கு தேவனாகிய கர்த்தாவே, இன்றைக்கு நீர் எனக்குக் காரியம் சித்திக்கப்பண்ணி என் எஜமானாகிய ஆபிரகாமுக்குத் தயவு செய்தருளும். இதோ, நான் இந்தத்தண்ணீர்த் துரவண்டையில் நிற்கிறேன். நான் கேட்குப்போது குடி என்றும் உன் ஒட்டகங்களுக்கும் வார்ப்பேன் என்று சொல்லுகிற பெண்ணே என் எஜமானின் குமாரனுக்கு நீர் நியமித்த பெண் என்று நான் அறிந்து கொள்ளுவேன் என்று ஜெபம் பண்ணினுன். சிறிது நேரத்தில் ரெபேக்காள் அவ்விடம் வநதாள். எலியேசர் அவளைப் பார்த்து, ''குடிக்க எனக்குத்தண்ணீர் வேண்டும் என்றுன். உடனே அவள் குடத்தை சாய்த்து அவனுக்கு தண்ணீர் கொடுத்ததுமல்லாமல், அவனுடைய ஒட்டகங்களுக்கும் வார்ப்பதாகச் சொல்லி, அவைகளுக்கும் தண்ணீர் வளர்த்தாள். எலியேசர் ஆச்சரியப்பட்டு, ''நீயாருடைய மகள் என்று கேட்டான். அதற்கு அவள் தான் பெத்துவேலின் மகள் என்றுள். பின்னும், எலியேசர் அவர்கள் வீட்டில் ராத்தங்க இடமுண்டா என்று வினவியபோது, அவள் அவனுக்கு இடமும் ஒட்டகங்களுக்கு தீவனமும் உண்டென்றுள். பின்னர் அவள் போய் இச்செய்தியைத் தன் வீட்டிலுள்ளவர்களுக்கு அறிவித்தாள். எலியேசர் ஆண்டவரைப் பணிந்து கொண்டான் பெத்துவேல் வந்து அவனைத்தன்வீட்டிற்கு அழைத்துச் சென்றுன்.

எலியேசர் ஒரு அந்நியனானாலும், அவன் இன்னார் என்று அறியும் முன்னரே ரெபேக்காள் அவனை உபசரிதது, அவனுக்கும், அவன் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் கொடுத்தாள். அவள் இருதயத்தில் சுரந்த அன்பும். இரக்கமுமே அவளை இவ்வாறு செய்ய வைத்தது, பரிசுத்த பவுலுங்கூட, ''அந்நியரை, உபசரிக்க நாடுங்கள் (ரோமர் 12:13) என்று கூறியுள்ளார். அன்றியும் அவர், கண்காணியானவன் அந்நியரை உபசரிக்கிறவனுமாயிருக்க வேண்டும் என்றுர். எபிரேய நிருப ஆக்கியோனும், ''அந்நியரை உபசரிக்க மறவாதிருங்கள்; அதினுலே சிலர் அறியாமல் தேவதூதரையும் உபசரித்தது உண்டு'' என்றுர். (எபிரேயர் 13:2) இவ்விதமாகத் தன் ரெபோக்காளும் தனக்கு மணவாளனாய் வரப்போகும் ஈசாக்கின் ஊழியக்

காரனே எலியேசர் என்பதையறியாது அவனை உபசரித்தாள். இந்த உபசரிப்பின் மூலமே எலியேசர் செய்த ஜெபத்தின் படி அவள் ஈசாக்கின் மனைவியாகும் பாக்கியத்தைப் பெற்றாள், ஒரு ஒட்டகம் பல குடங்கள் தண்ணீரை குடிக்கு மென அறிவோம். ரெபேக்காளே தன் சிரமத்தையும் பாராது, தன் களைப்பையும் மறந்து, அத்தனை ஒட்டகங் களுக்கும் தண்ணீர் வார்த்தாள்.

பின்னர் லாபான், எலியேசரைத் தண்ணீர் துரவண்டையிலே சந்தித்து, ''கர்த்தரால் ஆசீர்வதிக்கப் பட்டவரே உள்ளே வாரும்'' என்று சொல்லி அவனை அழைத்துப் போய் உபசரித்தான். எலியேசருக்கு முன் போஜனம் வைக்கப் பட்டபோது, அவன் தான் வந்த காரியத்தைச் சொல்லுமுன் போஜனம் புசிப்பதில்லை என்றான் அப்பொழுது அவன், ''சொல்லும்'' என்றான். எலியேசர் அவனிடம் கர்த்தர் எவ்வாறு தன் எஜமானாகிய ஆபிரகாமை ஆசீர்வதித்திருக்கிறார் என்றும், எவ்வாறு தன் மகனுக்குத் தன் இனத்தாரிடத்திலேயே பெண் கொள்ள வேண்டுமென்று ஆணை விடுவித்துக் கொண்டாரென்றும், எவ்வாறு கர்த்தர் தன் ஜெபத்தைக் கேட்டுத் தன்னை நேர்வழியில் நடத்தி வந்திருக்கிறார் என்றும் கூறி மறுபடியுமாகக் கர்த்தரைப் பணிந்து கொண்டான். அப் பொழுது லாபானும், பெத்துவேலும், ''இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது, உமக்கு நாங்கள் நலம் பொலம் ஒன்றும் சொல்லக் கூடாது'' எனக்கூறி, ரெபேக்காளை ஈசாக்குக்கு மனைவியாகக் கொடுக்கச் சம்மதித்தார்கள். எலியேசர் கர்த்தருக்கு நன்றி செலுத்தி, ரெபேக்காளைத் தன்னுடன் அனுப்புமாறு கேட்டான். அவளது தகப்பனும், சகோதரனும் ரெபேக்காளைக் கேட்க அவளும் சம்மதித்தாள்.

ரெபேக்காள் எலியேசரின் வாயால், அவனைக் கர்த்தர் எவ்வாறு வழி நடத்தி அங்கு கொண்டு வந்து சேர்த்தார் என்று சொல்லக் கேட்டதாலும், தன் தந்தையும் தமையனும், ''இது கர்த்தரால் வந்தது'' என்று சொல்லக்கேட்டதாலும், இது கர்த்தரின் செயலே என அறிந்து, தன்னை அவரது சித்தத்திற்கு ஒப்புக்

கொடுத்தாள். அதனால் அவள் அம்மனிதனுடன் போக சம்மதித்தாள். அவ்வாறே நாமும் கர்த்தருடைய சித்தத்தை அறிந்து அதற்கு கீழ்ப்படிந்து நடக்க வேண்டும்.

ரெபேக்காளும் எலியேசரும் ஆபிரகாமின் இடத்திற்கு திரும்பினார்கள். வழியில் ஒரு மனிதனை ரெபேக்காள் கண்டு "அது யார்", எனக் கேட்டாள். அவன் தான் தன் கணவனாகப் போகும் ஈசாக்கு என்று அறிந்தவுடன், அவள் தன் ஒட்டகத்திலிருந்து இறங்கி முக்காடிட்டுக் கொண்டு, அவனை வணங்கி, இவ்வாறு தன்னைத்தானே ஈசாக்குக்கு அர்ப்பணித்தாள். அவளது அன்பினால் கட்டுண்ட ஈசாக்கும் தன் தாய்க்காகக் கொண்டிருந்த துக்கம் நீங்கப் பெற்றான். "குமாரத்தியே, கேள், நீ உன் செவியைச் சாய்த்து சிந்தித்துக் கொள்; உன் ஜனத்தையும், உன் தகப்பன் வீட்டையும் மறந்து விடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார்: அவர் உன் ஆண்டவர், ஆகையால் அவரைப் பணிந்து கொள்," (சங்கீதம் 45:10,11) என்ற வாக்கின்படி ரெபேக்காள் தன் ஜனத்தையும், தகப்பன் வீட்டையும் துறந்து, தனது கணவனைப் பணிந்து கொண்டதால், ஈசாக்கும் அவளில் அன்பு கூர்ந்தான்.

இதை வாசிக்கும் அருமையான சகோதரியே, ஆண்டவருக்கு மகிமை கொண்டுவராத யாவற்றையும் விலக்கி, ரெபேக்காள் ஈசாக்கை பணிந்து கொண்டு அன்பு செலுத்தியது போல் நீயும் கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவரிடத்தில் முழுமனதோடும் முழு ஆத்துமாவோடும் அன்பு செலுத்தி, உன்னையே அவருக்கு அர்ப்பணிக்கும் போது, அவர் உன்னை அணைத்து, நித்திய மண வறைக்கு உன்னை அழைத்து செல்வார். இவ்வித பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள நாம் நம்மையே ஆயத்தப் படுத்துவோமாக.

69. ரோதை (அப்போஸ்தலர் 12:12-14)

இவள், ஆதித்திருச்சபை கூடி ஜெபித்த, மாற்கு வின் தாயாகிய மரியாள் வீட்டிலுள்ள ஒரு வேலைக்கார

பெண்ணாக இருந்திருக்கலாம். எனக் கருதப்படுகிறது. பேதுரு அப்போஸ்தலனை ஒரு தூதன் வந்து சிறைச்சாலையிலிருந்து விடுவித்தான். பேதுரு வந்து, அந்த வீட்டின் கதவைத்தட்டினார். திருச்சபையின் மக்கள் யூதருக்கும் ஏரோதுக்கும் பயந்ததினால், கதவைப் பூட்டிக்கொண்டு பேதுருவுக்காக ஜெபித்துக் கொண்டிருந்தனர். அக்கூட்டத்தில் இப்பெண்ணும் இருந்தாள். கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு அவள் போய் கதவை திறக்காது உள்ளிருந்தவாறே வந்திருப்பதுயாரென அறிய ஒற்றுக்கேட்டாள். அவள் பேதுருவின் சத்தத்தைக் கேட்டு, அடையாளங்கண்டுக் கொண்டு, மிகுந்த சந்தோஷத்தினால் கதவைத் திறக்க கூட மறந்தவளாய்'' உள்ளே ஓடி, கூடியிருந்தவர்களுக்கு அதை அறிவித்தாள்.

இவள் ஒரு சிறிய பெண் எனத்தெரிகிறது. என்ற போதிலும், அவள் ஜெபிக்கும் அக்கூட்டத்தில் காணப் பட்டாள். அவளும் பேதுருவின் விடுதலைக்காக அவர் களோடு சேர்ந்து ஜெபித்தாள். பேதுருவினிடத்தில் இவள் மிகுந்த அன்பும், மரியாதையும் வைத்திருந்தாள். எனவே தான், கதவைத்தட்டுவது பேதுரு என்றறிந்தும், அவள் தன் சந்தோஷ மிகுதியினால், கதவைத் திறக்க வேண்டுமே என்பதைக்கூட மறந்து, அந்த சந்தோஷ செய்தியை மற்றவர்களுக்கு அறிவிக்க ஓடினாள். அவள் பேதுருவிடத்தில் அவ்வளவு அன்பு வைத்திருந்ததால், அவரை அவர் குரலிலிருந்தே அடையாளம் கண்டுக்கொண்டு, வந்திருப்பது பேதுரு தான் என்று உறுதியாய் சாதித்தாள். அதுபேதுருவின் தூதனாயிருக்கலாம். என்று அவர்கள்சொல்லியதைக் கூட அவள் ஏற்றுக்கொள்ள தயாராயில்லை. பேதுருவை சிறைச்சாலையிலிருந்து விடுதலை பண்ணும்படி ஜெபித்த ஜெபம் நிச்சயமாய் கேட்கப்பட்டது. என்ற நம்பிக்கையுடன் வாசலினருகே வந்து உற்றுப்பார்த்தாள். அவள் விசுவாசித்தப்படியே பேதுரு விடுதலைபெற்று அங்கே வந்திருந்தான். ஆதலால் ''ஜெபம் பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ. அவைகளைப்பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள். அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்'' (மாற்கு 11:24)

நாமும் கூட, இந்த ரோதையைப் போல விசுவாசத்தோடு ஜெபிக்கும் பெண்களாகவும் தேவனிடத்திலும், அவருடைய பிள்ளைகளிடத்திலும் அன்புகூரும் பெண்களாகவும் மாற தேவன் தமது பரம கிருபையைத் தந்தருளுவாராக.

70. நாகமானின் வேலைக்காரி

(II ராஜாக்கள் 5:1-19)

சீரியா ராஜாவின் படைத்தலைவன் நாகமான். அவன் மிகுந்த செல்வாக்குடையவனாயிருந்த போதிலும், அவன் ஒரு குஷ்டரோகியாயிருந்தான். அதினால் அவனும் அவன் மனைவியும் மன அமைதியற்று இருந்தனர். இஸ்ரவேல் தேசத்திலிருந்து ஒரு சிறு பெண்ணை சீரியர் சிறை பிடித்துக்கொண்டு வந்திருந்தனர். அந்த பெண்ணை நாகமான் தன் மனைவிக்குப் பணிவிடை செய்து வந்தாள். அவள் தன் எஜமானிடமும், எஜமாட்டியிடமும் கொண்டிருந்த அன்பினால், அவர்கள்படும் மனவேதனையையறிந்து தனது எஜமாட்டியிடம், ''நம் எஜமான் சமாரியா தேசத்திலுள்ள தீர்க்கதரிசியிடம் போவாரானால், அவர் தமது குஷ்டம் நீங்கி சுத்தமாவார்'' எனக் கூறினாள். அவ்வாறே நாகமானும், சமாரியாவிலே இருந்த தீர்க்கதரிசியாகிய எலிசாவிடம் சென்று தன் குஷ்டரோகம் நீங்கித்திரும்பி வந்தான். அவன் தான் சுகமடைந்த பின் எலிசாவிடம், ''உமது அடியேன் இனி கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்கு சர்வாங்க தகனத்தையும், பலியையும் செலுத்துவதில்லை'' என்றான்.

இச்சிறு பெண் தன் சொந்த நாட்டை விட்டு ஒரு அந்நிய நாட்டிலே, அந்நியருச்குப் பணிவிடை செய்து வாழ்ந்த பொழுதும், தன் சொந்த நாட்டையும், தனது தேவனாகிய கர்த்தரையும் மறந்து போகவில்லை. தேவனிடத்திலுள்ள விசுவாசமும் குறையவில்லை. அவள் அங்கு ஒரு பணிப்பெண்ணாகவும், அடிமையாகவும் வாழ நேரிட்டாலும், தனது நாச்சியார் படும் துயரத்தில்

பங்கு கொண்டு, அவள் மீது கொண்ட அன்பினால், தனது எஜமானுக்கு ஒரு நல்ல வழியைக் காண்பித்தாள். தேவனிடத்திற்கு நேராக அவனை வழிநடத்தினாள். நாமும் கூட இச்சிறு பெண்ணைப் போல, நம் அண்டை அயலாரிடத்திலும், வேலை செய்யுமிடங்களில் உள்ளவர்களிடத்திலும் நம் அன்பை செலுத்தி, அவர்களை தேவனிடம் நடத்த முயலுவோமாக.

இந்த சிறிய பெண்கூறிய இஸ்ரவேலின் தேவனுடைய தீர்க்கதரிசியைப் பற்றிய செய்தியைத் தன் மனைவியின் வாயிலாக அறிந்துக் கொண்ட நாகமான், அதை அசட்டை செய்யாது, அது ஒரு சிறிய பெண்ணின் செய்தியாயினும், அதை சீரியா ராஜாவுக்கு அறிவித்தான். அதற்கு அந்த ராஜாவும், ''நீ போகலாம்'' என உத்தரவு வழங்கினான். அத்துடன் அவன் இஸ்ரவேல் ராஜாவுக்கு ஒரு நிருபமும், ஆறுயிரச் சேக்கல் நிறையான பொன்னும், பத்து மாற்று வஸ்திரங்களும், பத்து தாலந்து வெள்ளியும் கொடுத்தனுப்பினான். இஸ்ரவேல் ராஜா நிருபத்தைப் படித்து கலங்கினான். எலிசா அதை அறிந்து இஸ்ரவேலில் ஒரு தேவன் உண்டென்று அறிந்துக் கொள்ளும் படி, அவனைத் தன்னிடம் அனுப்பும்படி ராஜாவுக்குச் சொல்லியனுப்பினான். அவ்வாறே ராஜா நாகமானை எலிசாவிடம் அனுப்பினான். நாகமானும் தேவனுடைய மனுஷனின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து யோர்தான் நதியில் ஏழு தரம் முழுகித் தன் குஷ்டரோகம் நீங்கப் பெற்றான். மெய்யான தேவனை வணங்கும் ஒரு மனிதனாக மாறினான். ஒரு சிறிய நெருப்பு ஒரு பெரிய காட்டைக் கொழுத்துவது போல, ஒரு பெரிய இரட்சிப்பு நாகமானுக்கும், அவன் குடும்பத்துக்கும் ஒரு சிறிய பெண்ணின் மூலம் கிடைத்தது. இச்சிறு பெண்ணின் வாழ்க்கையைப் போல நமது வாழ்க்கையும் அநேகருக்குப் பிரயோஜனமாக அமைய தேவன் கிருபை சய்வாராக.

71. பார்வோனின் குமாரத்தி

(யாத்திராகமம் 2:1-10)

எபிரேய மக்களுக்கு ஒரு துக்ககரமான சமயம் பிறந்தது. அவர்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளை யெல்லாம் நதியில் போட்டு விடவேண்டுமென்று, பார்வோன் ஒரு கட்டளை பிறப்பித்தான். ஒரு நாள் பார்வோனின் குமாரத்தி குளிப்பதற்காக நைல் நதிக்கு வந்தாள். அப்பொழுது ஒரு நாணற் பெட்டி நதியில் மிதக்கக் கண்டாள். அதிலிருந்து ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது. அவள் தன் தோழியிடம் கூறி அதை எடுத்து வரச் சொல்லி, அதை திறந்து பார்த்தாள். உள்ளே ஒரு அழகான ஆண்குழந்தை இருந்தது.

பார்வோனின் குமாரத்தியின் பெயர் தெர்முதிஸ் என்பதாகும். அவள் அக்குழந்தை எபிரெயக் குழந்தை என அறிந்தும், அக்குழந்தை மீது இரக்கம் கொண்டு, அதை தன் குமாரனாக வளர்த்து வந்தாள். இஸ்ரவேல் ராஜ்ஜியம் கட்டப்பட இச்செய்கை மிகவும் உதவியது. இயேசு கிறிஸ்துவின் சாம்ராஜ்யம் கட்டப்பட வேண்டுமானல், நமது குழந்தைகள் சிறுவயதிலிருந்தே இயேசு கிறிஸ்துவுக்காக வளர்க்கப்பட வேண்டும். தெருவில் விளையாடும் குழந்தைகளுக்கு இயேசு கிறிஸ்துவைப் பற்றிக் கூறுவோமேயானல், அவர்கள் இரட்சிக்கப் படுவதோடு, தேவனுடைய ராஜ்யத்தில் நமது பங்கு இன்னும் அதிகமாக இருக்கும். ஆறுநாளும் வேலை செய்து, ஏழாம் நாளை இதற்காக பயன்படுத்துங்கள்.

பார்வோனின் குமாரத்தி அக்குழந்தையை அன்போடு வளர்த்து, அவனுக்கு நாற்பது வருடங்களாக எல்லாக் 'கலைகளையும் கற்றுக் கொடுத்தாள்; அவள் அவனை நீரிலிருந்து எடுத்ததினால் அவனுக்கு 'மோசே' என்று பெயரிட்டாள். ஆனால் மோசேயோ அவளை வீட்டு நீங்கித் தன் சொந்த ஜனத்தாரிடத்திற்குப் போய்ச் சேர்ந்து விட்டான்.

அந்தக் குழந்தை தங்கள் எதிரியின் குழந்தை என்று தெரிந்திருந்த போதிலும், அந்த திக்கற்ற குழந்தையின் பால் அன்புக் கொண்டு, அப்பார்வோனின் குமாரத்தி, தன் தந்தையின் கட்டளையையும் மீறி அதை வளர்த்து வந்தாள். மோசேயை வளர்த்து, அவனை ஒரு பெரிய ஜனத்திற்குத் தலைவனாகிய பெருமை அவளையே சாரும்.

அன்பான சகோதரியே, நீ உன் வாழ்க்கையில் எத்தனை குழந்தைகளுக்கு உதவி செய்திருக்கிறாய்? சிறு பிள்ளைகளை அணைத்து, ஆசீர்வதித்த உன்தேவன் உன்னிடமும் அதே அன்பை எதிர்பார்க்கிறார். கபடற்ற அச்சிறு குழந்தைகளைப் போன்றவர்களே, தேவனுடைய ராஜ்யத்துக்கும் பாத்திரர் என நமது ஆண்டவர் கூறுகிறார் எனவே, அக்குழந்தைகளின் உள்ளங்களில் கசப்பு வளராத படி, அனாதை குழந்தைகளுக்கும், திக்கற்ற குழந்தைகளுக்கும் உன்னாலியன்ற உதவியைச் செய். தேவன் உன்னை ஆசீர்வதிப்பார்.

72. சூலமித்தியாள் (உன்னதப்பாட்டு)

சூலமித்தியாள் என்றால் சூலேம் என்ற ஊரைச் சேர்ந்த பெண் என்னலாம் இவள் சாலொமோன் ராஜா எழுதிய உன்னதப் பாட்டின் கதாநாயகி ஆவாள். இந்த நூலைப் பற்றிய சர்ச்சைகள் பல. என்ற போதிலும், ஞானத்தில் தனக்கு இணைதானே என்ற நிலையிலிருந்த சாலொமோன் ராஜா தனது அபூர்வமான தெய்வீகஞான த்தைக் கொண்டே இதை எழுதினார். ஒரு வேளை இது அவரது மனையாட்டிகளில் ஒருவரைப் பற்றி பாடியதா யிருக்கலாம். அது எப்படியாயிருப்பினும் இதனில் பொழிந்து கிடக்கும் நேசத்தின் வலிமை மிகவும் அற்புதமானது.

சூலமித்தியாளை மனையாட்டியின் உருவமாகக் கொண்டு, வரப்போகும் மணவாளனாகிய இயேசுகிறிஸ்துவைப் பற்றியும், அவருக்காக ஆயத்தம் செய்துக் கொண்

டிருக்கும் மனேயாட்டியாகிய சபையைப் பற்றியும், ஆண், பெண் பலரது உரையாடலின் வடிவில் தீர்க்க தரிசனமாக இது வரையப்பட்டுள்ளது என்றும் கூறுவர்.

இந்த சூலமித்தியாள், தன் மணவாளன் மீதுக் கொண்டிருந்த அன்பு அளவிடப்படாதது. அதிஞல் தான் அவள், ''என் நேசர் என்னுடையவள்; நான் அவருடையவள்; என்கிருள். தன்னேயே அவள் தன் நாயகனுக்கு அர்ப்பணித்து விட்டாள். மேலும் அவள் ''என் நேசத்தின் உச்சிதங்களே உமக்குத் தருவேன்'' என்றும், ''என் நேசரே, அவைகளே உமக்கு வைத்திருக்கிறேன்'' என்றும் தன்னுடைய யாவற்றையும், தன்னேடு கூட அவருக்குக் கொடுக்க ஆயத்தமாயிருந்தாள். அவள் இவ்வாறு அர்ப்பணிப்பதால் அவளது நேசரோடு ஒன்றிப் போய். ''அவருடைய மாம்சத்துக்கும், அவருடைய எலும்புகளுக்கும்'' உரியவளானுள் திரளான தண்ணீர்கள் கூட இந்த தேசத்தை அவிக்கமாட்டாது எனக் கூறிஞள். அவளது நேசம் அவ்வளவு ஆழமானதால் எப்படிப்பட்ட கஷ்டங்கள் தண்ணீர் போல் புரண்டு வந்தாலும், அந்த அன்பின் அக்கினியை அவை அணேக்க முடியாது.

இப்படிப்பட்ட ஆழமான அன்பை கண்டுக்கொண்டதால் தான் அவளது நேசரும், ''என் புருவோ, என் உத்தமியோ, ஒருத்தியே'' என பாராட்டுகிருர். இருவரும் ஒருவர் மேல் ஒருவர் கொண்ட அன்பிஞல், ஒருவரையொருவர் புகழ்நதுக் கொள்ளுகின்றனர்.

மணவாளனுகிய இயேசுகிறிஸ்து சபையாகிய மனேயாட்டியை கூட்டிச் சேர்க்க வரப்போகிருர். நாம் ஒவ்வொருவரும் மனேயாட்டியாகிய திருச்சபையின் சரீரத்தில் அங்கங்களாக இருக்கிறேம். இந்த சூலமித்தியாள் தன் நேசர் மீது கொண்ட அன்பின் ஆழத்தைக் கண்டோம், நமது மணவாளனுகிய இயேசுவின் பால் நாம் கொள்ளும் அன்பு எத்தகையது? அவள் தன்னையும், தனக்குண்டான யாவற்றையும், தன் நேசருக்கு ஒப்புவித்தது போல, நாமும் நமது சரீரங்களே பரிசுத்தமும் தேவனுக்குப் பிரிய

மான ஜீவ பலியாக ஒப்புக் கொடுப்போமா? (ரோமர் 12:1,2). அவர் வரும்போது அவருக்குகந்த கனிகளைக் கொடுக்க வேண்டாமா? நாம் அவரோடு ஒட்டியிருந்தாலல்லவா சிறந்த கனிகளைக் கொடுக்க முடியும். அதனுல் தான் பவுலடியாரும். ''இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிருர்'' என்ருர் (கலாத்தியர் 2:20). மணவாளனுகிய கிறிஸ்துவுக்கு நம்மை ஒப்புவித்து, அவர் நம்மை பயன்படுத்த விரும்பும் வழியில் நம்மை பயன்படுத்த அர்ப்பணித்து, அவர் காட்டும் பாதையில் நடப்போமாக.

மணவாட்டியின் நேசம் அவ்வளவு ஆழமானதால், அவள் தன் நேசம் மரணத்தைப்போல் வலிது என்றும், திரளான தண்ணீர்சள் கூட அந்த நேசத்தை அறிவிக்கு முடியாதென்றுப் கூறினுள் பரிசுத்தபவுல்அப்போஸ்தலனும், ''கிறிஸ்துவின் அன்பை விட்டு நம்மை பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்பு கூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறேம்'' என்ருர். (ரோமர் 8:36-39) எவ்வளவு கஷ்டங்கள் நேரிடினும், மணவாட்டி தன் நேசர் தன்மீது செலுத்தும் அன்பினுல் இன்பத்தை நுகருகிருள், இதனுல் தான் ஆபகூக் தீர்க்கதரிசியும், ''அத்திமரம் துளிர்விடமாற் போனுலும், திராட்சைச் செடிகளில் பழம் உண்டாகாமற் போனுலும்,ஒலிவமரத்தின் பலன் அற்றுப்போனுலும். கிடையில் ஆட்டு மந்தைகள் முதலற்றுப் போனுலும், தொழுவத்தில் மாடு இல்லாமற் போனுலும் நான் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பேன். ஆண்டவராகிய கர்த்தர் என் பெலன்'' என்ருர் (ஆபகூக் 3:17-19, ரோமர் 4:17, கொலோசேயர் 3:1-4)- இவ்வாறு நாம் நமது மணவாளனைச் சார்ந்து, அவரது பெலனில், ஜீவித்து, எந்தச் சூழ்நிலையிலும் அவரால் பாதுகாக்கப்பட்டு, இன்பமான வாழ்க்கை வாழ்ந்து, அவரோடு கூட மகிமையில் காணப்பட கர்த்தர் அருள்புரிவாராக.

73 யோனத்தானின் தாதி (II சாமுவேல் 4:4)

பெலிஸ்தருக்கு எதிராக நடந்த யுத்தத்தில், இஸ்ரவேலின் ராஜாவாகிய சவுலும், அவன் குமாரனாகிய யோனத்தானும் மடிந்த செய்தி வந்தபோது யோனத்தானின் மகனாகிய மேவிபோசேத்துக்கு ஐந்து வயதாயிருந்தது. அக்குழந்தையின் மீது அன்பு கொண்ட அவன் தாதி எதிரிகளிடமிருந்து அவனைத் தப்புவிப்பதற்காகத் தன் உயிரையும் பணயம் வைத்து அவனை தூக்கிக் கொண்டு ஓடினாள். அப்பொழுது அவன் கீழே விழுந்து விட்டதால், அவனது இருகால்களும் முடமாகி விட்டன. ஆனாலும் தன் எஜமான் மீதுள்ள அன்பால் அவள் அவனைத் தூக்கிக் கொண்டு, லோதேபாரிலே இருந்த மாகீரின் வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தாள். தாவீது அவனைப்பற்றி விசாரித்தறிந்து அவனைத் தன் வீட்டில் சேர்த்துக் கொண்டான.

எதிரிகள் வரும்போது இந்தத்தாதி, மேவிபோசேத்தை விட்டுவிட்டுத் தன்னுயிரைக் காப்பாற்ற ஓடியிருக்கலாம். அல்லது அவன் கீழே விழுந்தவுடன் அவனை அங்கேயே போட்டு விட்டு ஓடிப் போயிருக்கலாம். ஆனால் அவளோ, தன்னலமற்ற அன்புடன் அக்குழந்தையைத் தூக்கிக் கொண்டு போய், அதை ஆதரித்து வளர்த்தாள். இதை வாசிக்கும் அருமை சகோதரியே, அநாதைக் குழந்தைகளிடமும், ஏழைகளிடமும், திக்கற்றவர்களிடமும், நீங்கள் இந்தத் தாதியைப் போல் கபடற்ற அன்போடு அவர்களை ஆதரிப்பீர்களானால், நிச்சயமாகவே, ''வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்'' ஏனென்றால் இந்தச் சிறியரில் ஒருவனுக்கு எதைச் செய்தீர்களோ; அதை எனக்கே செய்தீர்கள்'' என்று கூறப்படும் அழைப்பை நீங்களும் பெற்றுக் கொள்ளும் பாக்கியத்தை அடைவீர்கள் (மத்தேயு 25:34)

டோனவூரின் கார்மைக்கேல் அம்மையாரைப் பற்றி நாமெல்லாரும் அறிந்திருக்கிறோம். தம் நாட்டையும்

ஜனத்தையும் விட்டு இந்திய மக்கள் மீது அன்பு கொண்டு டோனுவூர் என்ற இடத்தில் தங்கியிருந்து, பெற்றோரால் கைவிடப்பட்ட எத்தனையோ குழந்தைகளைப் பராமரித்து, ஆண்டவரது மகத்துவமான பணியும் செய்து, அநேகரை கர்த்தருக்குள் கொண்டு வந்து சேர்த்து, இன்று மறைந்த ஒரு மாணிக்கமாக விளங்குகிறார்கள் அதேபோல் தேவனுடைய பிள்ளைகளாகிய நாமும், திக்கற்ற பிள்ளைகளுக்கு உதவி செய்ய முன்வருவோமா? அவர்களை இரட்சிப்பிற்குள் வழி நடத்துவோமா? அவர்களுக்காக ஜெபிப்போமா? அப்படியானல் ஆண்டவர் நம்மை நிச்சயமாக ஆசீர்வதித்து பயன்படுத்துவார். அன்னை தெரெசாவும் ஆண்டவருக்காக தன்னை தியாக பலியாக ஆண்டவர் கையில் ஒப்படைத்து, பாடுபடுகிறார்கள். அன்னை தெரெசாள் கர்த்தருக்காக உலகு பாராட்டும் வண்ணம் நல்ல காரியங்களை செய்யக் கூடுமானுல் இதை வாசிக்கும் பெண் மணிகளாகிய நாம் ஏன் அன்னை தெரசா, கார்மிக்கேல் அம்மையார் போன்று செயல்படக் கூடாது? இன்றைக்கும் இப்பூமியில் இலைக்குள் மறைந்து கிடக்கும் கனிகள் போல், அநேக பெண்மணிகள் ஆண்டவருக்காக பாடுபட முன் வருவோமா? முன் வருவோமானுல், நம் ஆண்டவரின் பேராசீர்வாதம் நம் சிரசின்மேல் தங்கும்.

74. அபிஷாக் (I இராஜாக்கள் 1:3,4)

இந்த அபிஷாக்கைப் பற்றி வேதத்திலிருந்து அதிகமாக ஒன்றும் அறிய முடியவில்லை. தாவீது ராஜா முதிர்வயதாயிருக்கையில், அவருக்கு பணிவிடை செய்யும் படி தேசமெங்கும் தேடி, மகா ரூபவதியான இந்த அபிஸாக்கை கண்டு பிடித்தனர். இவள் தாவீதுக்கு உதவியாக இருந்து அவருக்கு பணிவிடை செய்தாள் என பார்க்கிறோம். வயதான பின் மனிதர் பிறர் உதவியுடன் தான் வாழ முடிகிறது. வயதானவர் தானே என அப் பெண் தாவீதை அசட்டை செய்யாது அவனுக்கு உதவி செய்தாள்

இதை வாசிக்கும் தாயே, சகோதரியே உங்கள் குடும்பங்களிலுள்ள வயோதிபனிடம் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ளுகிறீர்கள் அவர்கள் வேண்டாதவர்களாக கருதி அவர்களை அசட்டை செய்து, அவர்கள் மரணத்திற்காக காத்திருக்கிறீர்களா? அவர்களது தள்ளாடிய வயதில் அவர்களுக்கு ஆறுதல் அளிக்கிறீர்களா? பிள்ளைகளிருந்தும், முதியோார் இல்லங்களில் தங்கள் இறுதி காலத்தை கடத்துப. பெற்றோர் எத்தனைபேர். பெற்றோரையும், பெரியவர்களையும் கனம் பண்ணுங்கள். அன்னை தெரேசாவின் நல் வழியை கடைபிடியுங்கள் அந்திம காலத்தில் தங்கள் அரவணைப்பில் வைத்து சமாதானத்தோடு இவ்வுலகை விட்டு செல்ல உதவும் அன்னை தெரசவை எவ்வளவு பாராட்டினாலும் தகும் அவ்வாறே நாமும் நம் இல்லங்களிலுள்ள முதியோர்கள் தங்கள் இறுதி காலத்தை சமாதானத்துடன் கழித்து இவ்வுலகை நீத்து செல்லத் தக்கதாக, அவர்களிடம் அன்பு செலுத்தி, ஆறுதலாக இருந்து அவர்களுக்குத் தேவையான உதவிகள் செய்வோமாக.

75. திரிபேனாள், திரிபோசாள்

(ரோமர் 16:12)

பவுல் அப்போஸ்தலன் இவ்விரு பெண்களையும் பற்றி குறிப்பிடும் போது, அவர்களைப் பற்றி, அவர்கள் ''கர்த்தருக்குள் பிரயாசப்படுகிறவர்கள்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். எனவே இவ்விரு பெண்களும் கர்த்தருக்காக மிகவும் உழைத்திருக்க வேண்டும். இவர்கள் பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருந்ததால், கிறிஸ்துவுக்காக சிறந்த சாட்சிகளாக வாழ்ந்தார்கள். இவர்களது வாழ்க்கையைப் பார்த்த அனேகர் இவர்கள் மூலமாய் கிறிஸ்துவிடம் வந்தனர். அவர்கள் தங்களையும், தங்களுக்கு உண்டான யாவையும் கிறிஸ்துவுக்கு ஒப்புவித்தனர். அவர்களது ஜெபஜீவியம், மற்றவர்களை உற்சாகப்படுத்தி, ஆவியில் வளர உதவியது. ஒருவேளை இவர்களது இல்லத்திலுங்கூட ஆதிதிருச்சபைக் கூடி ஜெபித்திருக்கலாம்.

அவர்கள் பிரயாசப்பட்டார்கள். என்பதிலிருந்து, அவர்களை எதிர்நோக்கி பல பிரச்சனைகள் இருந்திருக்க லாப் எனத் தோன்றுகிறது. ஆகிலும் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை குறித்த வைராக்கியமுள்ள வர்களாய் ஆத்தும ஆதாயம் செய்ய வெகுவாக பிரயாசப் பட்டார்கள். நாமும் கூட கிறிஸ்துவுக்காக இப்பெண் களைப்போல் நம்மையும், நமக்கு உண்டான யாவற்றையும், ஒப்படைத்து வாழும் போது, நிச்சயமாகவே மறு உலகில் அவரோடு வாழும பேற்றினைப் பெறுவோம்.

76, 77, ஒரு வேலைக் காரியும், ஒரு வீட்டுக் காரியும் (II சாமுவேல் 17:17-20)

தாவீதரசன் தன் மகனாகிய அப்சலோமுக்கு தப்பி செல்லுகையில், அவனது சினேகிதனான ஊசாய் உடன் வர வேண்டாமென்றும், அரண்மனைக்குச் சென்று அங்கு நடப்பவற்றை தனக்கு அறிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டான். அப்பொழுது ஊசாய் அறிவித்த செய்தியை யோனத்தானும், அகிமாசும் எடுத்துச் சென்றனர் கீதரோன் பள்ளத்தாக்கில் எருசலேமுக்கரு காமையிலுள்ள இன்ரூகேல் என்ற துரவண்டையில் இவ் விருவரும நின்றுக் கொண்டிருந்தனர். அவர்கள் பட்ட ணத்திற்குள் செல்வதை யாரும் காணக்கூடாது. என நினைத்தனர். இதை ஒரு வேலைக்காரி கண்டு, அவனுக்கு தாவீதின் மனிதரைப் பற்றிக் கூறினாள். உடனே அவர்கள் தாங்கள் கொண்டு வந்த செய்தியை தாவீது ராஜாவுக்கு அறிவிக்க போனார்கள். இவள் ஒரு எளியவேலைக்காரப் பெண்ணாக இருந்த போதிலும், தாவீதின் சேனையோடு தொடர்பு கொண்ட மக்களுக்கு செய்தி அறிவித்து, இவ் வாறு தாவீது ராஜாவை ஆபத்திினின்று காப்பாற்றினாள். தாவீதரசன் மீதுள்ள பற்றும், பாசமுமே அவளை இவ்வாறு செய்ய தூண்டிற்று. எவ்வளவு ஏழை எளியவர்களாயிருந் தாலும், நாம் தேவனிடம் அன்புக் கொண்டுஒழுகும்போது, தாவீதரசனுக்கு செய்தி அனுப்ப கர்த்தர் இவ்வெளிய வேலைக்காரப்பெண்ணை பயன்படுத்தியது போல், தமது

ராஜ்யத்தைக் கட்டும் பணியில் அவர் நன்மையும் ஈடுபடுத்துவார்.

இதனை ஒரு பிள்ளையாண்டான் பார்த்து விட்டு, அதை அப்சலோமுக்கு அறிவித்தான். அப்சலோம் தங்களை பிடிக்க தன் சேவகரை அனுப்புவான் என்று அறிந்துக் கொண்ட யோனத்தானும், அகிமாசும், பகடரீமிலிருந்த ஒருவனுடையவீட்டிற்குள் நுழைந்து விட்டனர். நடந்ததை அறிந்த அந்த வீட்டுக்காரி தாவீதின்பால் உள்ள அன்பினால், அவ்விருவரையும் காப்பாற்றத் துணிந்தாள். அவள் வீட்டின் முற்றத்தில் ஒரு கிணறு இருந்தது அவர்களிருவரும் அதற்குள் இறங்கி விட்டனர் அந்த வீட்டுக்காரி ஒரு பாயை எடுத்து வந்து, கிணற்றின் மேல் விரித்து, காரியம் வெளிப்படாதபடி, அதன்மேல் நெய்யைப்பரப்பி வைத்தாள். அப்சலோமின் சேவகர் அங்கு அவர்களைத் தேடி வந்தபோது, அவள், அவ்விருவரும் வாய்க்காலுக்கப் பால் போய் விட்டனர் என்றுக்கூறிவிட்டாள். இவ்விதமாக இந்த ஸ்திரீ தன் சமயோசித டத்தியால் தாவீதரசனுக்கு உதவக்கூட்டியவளாயிருந்தாள்.

இவ்விரு பெண்களுமே தாவீதரசனின் சிநேகிதருக்கு யாதொரு கைமாறும் கருதாது உதவினர். அதோடு அப்சலோமுக்கு இது தெரிய வந்தால், தங்கள் உயிருக்கே ஆபத்து நேரிடக்கூடுமே என்றும் சிந்தியாது, நீதிக்காக பாடு பட்டனர். (செப்பனியா 2:3-ல் கூறியுள்ளபடி அவர்கள் நீதியும், மனத்தாழ்மையும் கைப்பிடித்தார்கள். எனவே, நோவா, தானியேல், யோபு இவர்களைப்போல் இவ்விரு பெண்களும், தங்கள் நீதியினால், தங்கள் ஆத்துமாக்களை தப்புவித்துக் கொண்டனர்.

78 ஒரு அம்மாள் (II யோவான்)

பரிசுத்த யோவான் இந்த நிருபத்தை ஒரு குறிப்பிட்ட அம்மாளுக்கு எழுதினார். அவர் அந்தஅம்மாளைக் குறித்து எழுதிய போது, அவர்கள் கர்த்தரால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்கள் என்றும், சத்தியத்தை நேசிக்கிற

எல்லாராலும், நேசிக்கப் பட்டவர்கள் ஒன்றும் குறிப் பிடுகிருர். அந்த அம்மாள் கிறிஸ்துவில் அன்புக் கொண்ட வர்களாயும், அவருடைய கற்பனைகளை கைக்கொள்ளுகிற வர்களுமாய் இருந்தார்கள். அப்படிப் பட்ட அம்மாளைக் கூட சாத்தான் தன் வலையில் வீழ்த்தப் பார்த்ததால் யோவான் இந்நிருபத்தை அவர்களுக்கு எழுதினுர். மாம்சத்தில் வந்திருக்கிற இயேசு கிறிஸ்துவை அறிக்கைப் பண்ணுத அனேக வஞ்சகர் தோன்றி, அக்காலத்தில் விசுவாசிகளை விசுவாசத்தினின்றும் வழுவ செய்ய முயன்றனர். அந்த வஞ்சகரும், அந்திக் கிறிஸ்துவும் யாரென்று அடையாளம் கண்டுக் கொள்ளும் படி அப்படிப் பட்டவர்களைப் பற்றியும், அவர்களது உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிருக்கும் படிக்கு அந்த அம்மா ளுக்குப் போதனையாக இந்த நிருபத்தை எழுதினுர். ஆகவே நமக்கு கொடுக்கப் பட்டிருக்கிற அந்த பரம அழைப்புக்கு நாம் பாத்திரராயிருக்கும் படி, ஆவிகளை பகுத்துணர்ந்து, கிறிஸ்துவின் சத்திய உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவர் காட்டும் பாதையில் நடக்க வேண்டும். நாம் ஒருவரி லொருவர் அன்புக்கூர வேண்டும் என்பதும் இந்த அம்மா ளுக்குப் முக்கியமாய் எழுதப்பட்டிருக்கிறது. அப்போஸ் தலனுகிய யூதா எழுதிய பிரகாரம், ''பிரியமானவர்களே உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை உறுதிப் படுத்திக் கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி, தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுவினுடைய இரக்கத்தைப் பெற காத்தி ருங்கள், (யூதா 20.21) ''அப்பொழுது எல்லா புத்திக்கும் மேலான சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்துவுக்குள்ளாக காத்துக் கொள்ளும் (பிலிப்பியர் 4:7)

அத்தியாயம் XIV

கைவிடப்பட்ட ஸ்திரீகள்

79. நாயினூர் விதவை (லூக்கா 7:12-16)

இயேசு ஒரு நாள் நாயினூர் என்னும் ஊருக்குப் போனார். திரளான ஜனங்கள் அவரைப் பின்சென்றார்கள். அவர் அவர்கள் ஊரின் வாசலுக்கு சமீபித்த போது, மரித்துப் போன ஒருவனை அடக்கம் பண்ணும் படிக் கொண்டு வந்தனர் அவன் தன் தாய்க்கு ஒரே மகனாய் இருந்தான். அவளோ ஒரு கைம்பெண். இயேசு அவளைப் பார்த்தார். விதவைகளை விசாரிக்கிற தேவனாகிய அவர் அவளது பரிதாபமான அனாதை நிலையை அறிந்து, அவள் மேல் மனதுருகினார். இயேசு எக்காலத்தும், கஷ்டம் அனுபவிப்பவர்களை பார்த்து மனதுருகுகிறவராயிருக்கிறார் இந்த மனதுருக்கமே, அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்து மக்களை வியாதியினின்றும், பிசாசின் கட்டுகளிலிருந்தும், மற்றும் பல்வேறு பிரச்சனைகளிலிருந்தும் விடுவிக்கத் தூண்டியது. இயேசுவின் அடியார்கள் என்றுக் கூறிக் கொள்ளும் நாமும், அவரது அடிச்சுவடுகளை பின் பற்ற வேண்டாமா? ஏழை எளியவருக்குப், துன்பப் படுகிறவர்களுக்கும் நாம் இரக்கம் காட்டுகிறோமா என்று சிறிது சிந்தித்து பார்ப்போம்.

அவளது கண்ணீரைக் கண்ட இயேசு-லாசருவின் கல்லறையண்டை கண்ணீர் வடித்த இயேசு-அவளது துயரத்தைக் கண்டு மனதுருகி, அவளண்டை வந்து, ''அழாதே'' என்றார். இவ்வாறு சொல்லி, அவளை ஆறுதல் படுத்தி, கண்ணீரை துடைக்க முற்பட்டார். இன்னும் அவரை நோக்கி பார்க்கும் எல்லா மக்களின் துயரையும் கண்டு, அழாதே என்று சொல்லி அவர்களது கண்ணீரைத் துடைக்க வல்லவராயிருக்கிறார். இப்பொழுதும் கூட அவர் துன்ப துயரத்தால் வாடும் மக்களை, தம் திருவசன

மாகிய வார்த்தைகள் மூலம் ஆற்றி தேற்றிக்கொண்டே யிருக்கிறார். எத்தனையோ தரம் அவர் இவ்வாறு நம்மை ஆற்றி, தேற்றி, நமது கண்ணீரை துடைத்திருக்கிறார்! அவரால் ஆறுதல் பெற்றுக்கொண்ட நாம், கண்ணீர் துடைக்கப்பட்ட நாம் மற்றவர்களது கண்ணீரைத்துடைத்து அவர்களது துயரை களைவது நம்மேல் விழுந்த கடமை என நினைத்து, அப்படிப்பட்டவர்களுக்கு இரங்கி உதவி செய்வோமா?

இயேசு வெறும் வார்த்தைகளைச் சொல்லி நிற்க வில்லை. அனுதாபமிருந்தால் மட்டும் போதாது. அதை செயலில்காட்டவேண்டும். இயேசு கிட்டவந்துபாடையைத் தொட்டார். அதைக்கண்டு பாடையை சுமந்தவர்கள் நின்று விட்டனர். அவர்கள் இயேசுவால் ஏதாவது நன்மை கிடைக்குமென்று உணர்ந்தனர். ஆகையால் நம்பிக்கையோ டும், விசுவாசத்தோடும் அவர் கிரியை செய்யும் படியாய் அவர்கள் நின்று விட்டனர். நமது வாழ்விலும், கஷ்டங் கள் துக்க துயரங்கள் நேரிடும் போது, இயேசு நமது வாழ்வில் கிரியை செய்யும்படியாக நாம் அவரிடம் நமது காரியங்களை சமர்ப்பித்து, அவர் முன்பாக அமை தியாயிருக்க பழகுவோமாக.

அவர் பாடையைத் தொட்டு, அவர்கள் நின்ற வுடனே, ''வாலிபனே எழுந்திரு'' என்றார். காற்றையும் கடலையும் அமர்த்தி, இயற்கையை தம் சித்தப்படி இயங்க வைக்கிற, வல்லவராகிய ஆண்டவர், இம்மகனையும் பார்த்து, ''எழுந்திரு'' என்று கூறியவுடன் மரணத்தின் கட்டுகளினின்று அவ்வாலிபன் விடுபட்டு எழுந்தான். ஆண்டவர் அவனை அவனது தாயினிடத்தில் ஒப்புவித்தார் அழுது கலங்கின தாயின் மனம் ஆறுதலடைந்தது தம் பிள்ளைகள் எல்லாவற்றிலேயும் பலப்படும் படியே அவர் விரும்புகிறார். இந்த ஏழை விதவையின் விசுவாசமும் விருத்தியடைந்திருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை. தேவனுடைய மகிமை இதில் விளங்கியதால் அருகில் நின்ற மக்கள் தேவனை துதித்தார்கள்.

நாமும், திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படும் உபத்திரவத்திலே அவர்களை விசாரித்து, உலகத்தால் கறைபடாத படிக்கு நர்மையும் காத்துக் கொள்வோமாக இதுவே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத, சுத்தமான பக்தியாயிருக்கிறது

80. யூதாவின் மருமகள் தாமார்

(ஆதியாகமம் 38:6-26)

யூதாவுக்கு மூன்று குமாரர்கள் இருந்தனர். அவன் தன் மூத்தமகனுகிய ஏர் என்பவனுக்கு தாமார் என்ற பெண்ணை விவாகம் பண்ணி வைத்தான். அவன் கர்த்தரின் பார்வையில் பொல்லாதவனுய் இருந்ததிஞல், கர்த்தர் அவனை அடித்தார். அவன் மடிந்துபோனுன் யூதரின் முறைமையின்படி யூதா தன் இரண்டாம் மகனை ஓனுனுக்கு அவளைக்கொடுத்தான். அவனும் தேவனுக்கு முன்பாகப்பொல்லாதகிரியை செய்ததிஞல் அவனையும் அவர் அடித்தார். அவனும் மாண்டு போனுன். தன் மூன்றும் மகனும் அவ்வாறே மடிந்து போவானே என்ற பயத்தால், யூதா அவளிடம் தனது மூன்றும் மகனுகிய சேலா பெரியவனுகும் வரை அவளது தகப்பன் வீட்டிற்குச் சென்று அங்கு ஒரு கைப்பெண்ணுக வாழச் சொன்னுன் அவ்வாறே அவளும் தன் தகப்பனூர் வீட்டில் வாழ்ந்து வந்தாள்.

நாட்கள் பல கழிந்தும், அவள் மாமனூர் அவளை அழைக்கவில்லை. அவள் கைவிடப்பட்ட பெண் ஆனுள் அவளுடைய மாமனூர் திம்னுவுக்கு ஆடுகளை மயிர்க்கத்தரிப்பதற்காகச் சென்றிருக்கிருர் என்று கேள்விப்பட்டாள். அவள் தன் கைப்பெண் உடையைக் களைந்து, ஒரு தாசி போல் தன்னை சிங்காரித்துக்கொண்டு, முக்காடிட்டு, திம்னுவுக்குப் போகிற வழியில் ஒரு துரவண்டையில் உட்கார்ந்தாள். யூதா அவள் ஒரு வேசி எனக்கருதி அவளை அழைத்தான். அவள் அவனிடம் தனக்கு அவன் என்னத் தருவான் என வினவ, அவன் அவளுக்கு ஒரு வெள்ளாட்டுக் குட்டியை அனுப்புவதாகச் சொன்னுன். அதுவரை அவள் தனக்கு அடையாளமாக அவனுடைய முத்திரை மோதி

ரத்தையும், ஆரத்தையும் கைக்கோலையும் கேட்டு வாங்கிக் கொண்டாள் யூதா வெள்ளாட்டுக் குட்டியை அவளுக்கு அனுப்பிய போது, அந்த ஆட்கள் அவளைக் காணாது, அங்கேயுள்ளவர்களை விசாரிக்க, அவர்கள் அவ்வூரில் ஒரு தாசியும் கிடையாது என்று சொன்னார்கள். அனுப்பப்பட்ட மனிதர் திரும்பி வந்து இதை யூதாவுக்கு அறிவித்தனர்.

மூன்று மாதங்கள் சென்றபின் தாமார் கருவுற்ற செய்தியை யூதா கேட்டபோது, அவள் தவறுதலாக நடந்ததாகக் கருதி அவளை சுட்டெரிக்கும்படி வெளியே கொண்டுவரச் சொன்னான்.

மூன்று காலங்கள் ஆதாம் முதல் மோசே வரை (1) மனசாட்சியின் காலம் இந்த மனசாட்சியின் காலத்தில் மக்கள் தங்கள் மனதிற்கு செம்மையாய் தோன்றினது எல்லார் செய்தார்கள். (2) ஆனால் மோசே காலமுதல் நியாயப்பிரமாணம் கொடுக்கப்பட்டது. இந்தக்காலத்தில் தாமாரின் காரியர் நடந்திருந்தால் இவ்விருவரும் கல்லெறிந்து கொல்லப்பட்டிருப்பார்கள் (லேவியராகமம் 20:5–10) (3) கிறிஸ்துவின் காலமுதல் கிருபையின் காலம் இந்தக் காலத்தில் எப்பேர்ப்பட்ட பாவியையும், தான் பாவி என்று உணர்ந்து, மனம் கசந்து அவர் பாதத்தில் விழுகிறவர்களை மன்னித்து, தன் மந்தையில் சேர்த்துக் கொள்ளுகிறார்.

அப்பொழுது அவள் அடைமானமாகப் பெற்றுக் கொண்ட பொருள்களை அவனிடம் அனுப்பி, இவை யாருடையதோ, அவரால் தான், அவள் கர்ப்பமுற்றிருப்பதாகச் சொல்லியனுப்பினாள் யூதா அவைகளைப் பார்த்ததும், எல்லாவற்றையும் அறிந்தவனாய், ''என்னிலும் அவள் நீதியுள்ளவள்; அவளை என் குமாரனாகிய சேலாவுக்கு கொடாமற் போனேனே'' என்றான் இவ்விதமாக அந்த கைவிடப்பட்டப் பெண்ணுக்கு கர்த்தர் துணைநின்று, நியாயம் செய்தார்.

81. ஆகார் (ஆதியாகமம் 16)

ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் குழந்தையில்லா திருந்தது அப்பொழுது சாராள், ''கர்த்தர் என்கர்ப் பத்தை அடைத்திருக்கிறார் என் அடிமைப் பெண்ணாகிய ஆகாரை மறுமனையாட்டியாக கொள்ளும் அவளால் ஒரு வேளை என் வீடு கட்டப்படும் என்றாள் ''அப்படியே ஆபிரகாம் ஆகாரை மறுமனையாட்டியாகக் கொண்டான் அவள் கர்ப்பந்தரித்தாள் அப்பொழுது அவள் தன் நாச்சியாராகிய சாராளை அற்பமாக எண்ணத் தொடங் கினாள் அதனால் சாராள் அவளை கடினமாக நடத்தினாள் அதை பொறுக்காத ஆகார் வீட்டைவிட்டு ஓடிப்போனாள். வழியிலே ஒரு தேவதூதன் அவளைக்கண்டு, விசாரித்து பின் அவளை நோக்கி, ''நீ உன் நாச்சியாரண்டைக்குப் போய், அவள் கையின் கீழ் அடங்கியிரு'' என்றார். அனறி யும், கர்த்தர் அவள் மகனை ஒரு பெரிய ஜாதியாக்குவார் என்றும் கூறினார்.

கர்த்தருடைய சொல்லுக்கு ஆகார் கீழ்ப்படிந்து தன் நாச்சியாரிடம் திரும்பிப் போய் அவளுக்கு அடங்கி நடந்தாள். ஆகையால் கர்த்தர் அவளை ஆசீர்வதித்து அவளுக்கு ஒரு குமாரனை அருளிச் செய்தார். அவனுக்கு இஸ்மவேல் என பெயரிட்டனர். ஆபிரகாமுக்கு தேவன் வாக்குத்தத்தம் பண்ணின படியே, சாராளுக்கும் ஒரு குமாரனை கொடுத்தார். ஆபிரகாம் அவனுக்கு ஈசாக்கு என்று பெயரிட்டான். இஸ்மவேல் ஈசாக்கைப் பரிகாசம் பண்ணுவதை சாராள் பார்த்து அதைப்பொறுக்காது, ''இந்த அடிமைப் பெண்ணையும் அவள் மகனையும் புறம்பே தள்ளும்; இந்த அடிமைப்பெண்ணின் மகள்என் குமாரனாகிய ஈசாக்கோடே சுதந்தரவாளியாயிருப்பதில்லை'' என்றாள் ஆபிரகாமுக்கு இது விசனமாயிருந்தது. ஆனால் கர்த்தரோ ஆபிரகாமிடம், அவன் அதற்காக துக்கப்பட வேண்டா மென்றும், இஸ்மவேலும் ஒருபெரிய ஜாதியாவான் என்றும் கூறினார்.

அப்படியே ஆபிரகாம் அப்பத்தையும், ஒரு துருத்தி திராட்சரசத்தையும் அவளுக்குக் கொடுத்து அவளை

அனுப்பிவிட்டான். அவள்புறப்பட்டுப்போய் பெயர்செபாவின் வனாந்தரத்திலே அலைந்து திரிந்தாள். துருத்தியிலிருந்த தண்ணீரும் செலவழிந்து போயிற்று. அவள் தன் பிள்ளையை ஒரு செடியின் கீழ் விட்டு விட்டு "பிள்ளை சாகிறதை நான் பார்க்க மாட்டேன்" என்று சொல்லி சற்று தூரத்திலே போய் உட்கார்ந்துக் கொண்டாள்.

இவ்வாறுகணவனால்கைவிடப்பட்டு, நாச்சியாரால் துரத்தப்பட்ட அநாதையான பெண்ணை கைவிடுபவரல்ல நம் தேவன். அவர் பிள்ளையின் அழுகுரலைக் கேட்டார். ஆகாரின் அழுகுரலும் அவர் செவியில் எட்டியிருக்க வேண்டும். அவர் ஆகாரை கூப்பிட்டு "ஆகாரே, உனக்கு என்ன சம்பவித்தது, பயப்படாதே, பிள்ளையிருக்கும் இடத்திலே தேவன். அவள் சத்தத்தைக் கேட்டார். நீ எழுந்து பிள்ளையை எடுத்து அவனை உன் கையிலே பிடித்துக் கொண்டு போ, அவளைப் பெரிய ஜாதியாக்குவேன்" என்றார். தேவன் அவளுடைய கண்களைத் திறந்தார். அவள் ஒரு தண்ணீர்த் துரவைக் கண்டு, துருத்தியில் தண்ணீர் கொண்டு வந்து பிள்ளைக்குக் குடிக்கக்கொடுத்தாள். தேவன் பிள்ளையுடனே இருந்தார். அவன்வளர்ந்து வனாந்தரத்திலே குடியிருந்து, வில்வித்தையில் வல்லவனானான்.

நம்முடைய வாழ்விலும், நாம் யாவராலும் கைவிடப்பட்டது போல் தோன்றும் நேரத்திலும், கஷ்டங்கள் மத்தியிலும் நாம் கலங்க வேண்டியதில்லை. அச்சமயங்களில் நாம் கர்த்தரைத் தேடுவோமானால், அவர் நமக்கு மிக சமீபத்தில் இருப்பதை உணர்வோம். அவர் இம்மானுவேல் என்றும் நம்மோடிருப்பவர். இந்த உலகில் வாழ்நத காலத்தில் இப்படிப்பட்ட கடினமான பாதையைக் கடந்து சென்றவர். எனவே, அவர் என்றும் நமக்கு உதவி செய்ய வல்லவராயும், ஆவலுள்ளவராயும் இருக்கிறார். நாம் அவரைக் கூப்பிடுகையில் அவர் விரைந்து வந்து நமது துன்பங்களையும் இன்னல்களையும் நீக்கி நம்மை ஆதரிப்பார்.

ஆகார் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தாள். தன்னுடைய நாச்சியாருக்கு அடங்கி நடந்தாள்.

தேவனை நோக்கிப் பார்த்தாள். அவள் ''என்னைக் காண்பவரை நானும் இவ்விடத்தில் கண்டேன்'' என்று சொல்லி தன்னோடே பேசின கர்த்தருக்கு ''நீர் என்னைக் காண்கிற தேவன்'' எனப் பெயரிட்டாள். ஆம் அவர் நம்மைக் காண்கிற தேவனானபடியால், அவருக்கு முன்பாகக் குற்ற மற்றவர்களாக நடப்போமானால், நமது தேவைகளை அவர் கண்டு, அவற்றை நிவிர்த்தி செய்ய அவர் வல்லவராயிருக்கிறார்.

82. அப்சலோமின் சகோதரி தாமார்

(II சாமுவேல் 13:1-20)

தாவீதின் குமாரனாகிய அம்னோன், அப்சலோமின் சகோதரியான தாமாரின் மீது காதல் கொண்டு அவளையடையும் மார்க்கம் தேடினான். அவன் தனது நண்பனை யோனதாப்பின் ஆலோசனைப்படி ஒரு வியாதிக்காரன்போல் நடித்து தாமார் தன் வீட்டிற்கு வந்து தன் கையினாலே பணியாரங்களை பண்ணித் தருமாறு சொல்ல வேண்டுமென தன் தந்தையாகிய தாவீதரசனைக் கேட்டான். அவனது சூழ்ச்சியை அறியாத ராஜாவும் அவ்வாறே தாமாரை அங்கு போகும்படி சொல்லியனுப்பினான். தாமார் அங்குசென்று அவ்வாறே பணியாரங்களைப் பண்ணி அவனுக்குக் கொடுக்க செல்லும்போது, அவன் எல்லோரையும் வெளியே அனுப்பி விட்டு அவளைத் தன்னருகே அழைத்துத் தன் இச்சைக்கு இணங்குமாறு கூறினான். அவள் மறுத்தாள். அன்றியும் அவள் அவனை ராஜாவிடம் கேட்டுத் தன்னை மணந்து கொள்ளுமாறு கெஞ்சினாள். ஆனால் அவனோ அவள் சொற்களுக்குச்செவிக்கொடுக்காமல் அவளைக் கெடுத்தான். அதன் பின்னர் அவன் அவளை வெறுத்தான். அவன் அவளை விரும்பிய விருப்பத்தைப் பார்க்கிலும், அவளை வெறுத்த வெறுப்பு அதிகமாயிருந்தது. எனவே அவன் அவளைத்தன்னைவிட்டுப்போய் விடுமாறு சொன்னான். அவளோ, ''நான் இனி எங்கே போவேன்? நீ என்னை துரத்திவிடும் இச்செய்கையோ, முந்திய அநியாயத்தைப் பார்க்கிலும் அதிகமாயிருக்கிறது'' என்றாள். ஆனால் அம்னோன் மனம் இரங்கவில்லை. தன் வேலைக்காரனை

விட்டு அவளை வெளியே துரத்தினான். அவள் தனது தமையன் வீட்டில் தனித்துக் கிலேசப்பட்டுக்கொண்டிருந்தாள் என வேதம் கூறுகிறது.

இன்றும் இவ்வாறு கெடுக்கப்படுகிற பெண்கள் எத்தனையோ பேர் நம் சமுதாயத்தில் காணப்படுகின்றனர். இப்படிப்பட்ட காரியங்களில் பெண்களின் மீதே சமுதாயம் குற்றத்தை சுமத்துகிறது. அந்நாட்களில் கூட விபசாரத்தில் கையும் மெய்யுமாகக் கண்டு பிடிக்கப்பட்ட பெண் மாத்திரம் இயேசுவினிடத்தில் கொண்டு வரப்பட்டு, அவள் கல்லெறியப்பட வேண்டும் என்று கூறப்பட்டது. யூத சட்டத்தின்படி அந்த ஆணும் கொலை செய்யப்பட வேண்டும். ஆனால் இயேசு அந்த பாவியான ஸ்திரீயைக் கூட மன்னித்துத்தனக்கு வந்த ஒரு சீஷியாக மாற்றினார். (யோவான் 8:1-11) அவ்வாறிருக்க இக்காலத்தில் இவ்வாறு ஆண்களின் ஆணவத்தால் சீரிழிந்த பெண்களுக்கு உதவ முன்வருபவர்கள் யார்? பெண்களாகிய நாமும் கூட அவர்களை இகழ்ச்சியாக மதிப்பதில்லையா? எனவே இப்படிப்பட்ட துர்ப்பாக்கிய சாலிகளான பெண்களின் மறு வாழ்வுக்காக எடுக்கப்படும் முயற்சிகளை மனமுவந்து ஏற்றுக் கொண்டு, அதற்கு எவ்வாறெல்லாம் உதவ முடியுமோ அவ்வாறெல்லாம் உதவ நாம் முன் வருவோமா? இப்படிப்பட்ட தீய சம்பவங்கள், தீய பாவங்கள், தீயநோக்கங்கள் நிறை வேறுதபடி, சாத்தானுக்கு மக்கள் இடங் கொடாதபடி கர்த்தருக்குப்பயப்படும் பயத்தையடைய தீமையை விட்டு விலக நாம் ஜெபிப்போமா? ஜெபிப்போம.

அத்தியாயம் XV

விசுவாசத்தில் குன்றின ஸ்திரீகள்

83. ராகேல் (ஆதியாகமம் 29,30)

ஈசாக்கு முதிர்வயதாயிருக்கையில் தன் மகன் யாக்கோபை அழைத்து, ஏசா செய்தது போல, அவன் அந்நிய நாட்டுப் பெண்ணை மணக்காது, தன் ஜனத்தாரிடத்தில் போய் பெண் கொள்ளும்படி ஆசீர்வதித்து அனுப்பினுன். யாக்கோபு அவ்வாறே தன் பெற்ருேருக்குகீழ்ப்படிந்து தன் தாயின் சகோதரனாகியலாபானின் தேசத்தைப்போய்ச் சேர்ந்தான். அங்கே வயல் வெளியில் ஒருகிணறு இருந்தது அங்கு மூன்று மந்தைகள் இருந்தன அந்த மேய்ப்பர்களிடம் அவன் லாபானைப்பற்றி விசாரித்தான். அப்பொழுது ராகேல் அங்கே தன் தந்தையின் ஆடுகளை ஓட்டிக் கொண்டு வநதாள் அந்த மேய்ப்பர்கள் வாயிலாக அவள் லாபானின் மகள் என அறிந்து, அவளை அவன் முத்தம் செய்து சத்தமிட்டு அழுதான் அவள் தன் தகப்பனிடம் சென்று அதை அறிவித்தாள் லாபான் வந்து யாக்கோபை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்ருன். யாக்கோபு ராகேலை விருப்பினான் ஆகவே அவன் அங்கே ஏழு வருஷம் அவளுக்காக உழைத்தான். அந்த நாட்கள் நிறைவேறிய போது, யாக்கோபு ராகேலைக் கொடுக்குமாறு லாபானிடம் கேட்டான். இரவில் லாபான ராகேலுக்குப் பதிலாகி அவளது சகோதரியான லேயாளை அனுப்பி விட்டான். லேயாள் கூச்சப்பார்வையுடையவள். யாக்கோபு லாபானிடம் இதைப் பற்றிக் கேட்டபோது ஏழு நாட்களுக்குப்பின் ராகேலும் மனைவியாகக்கொடுக்கப் பட்டாள். ஆனால் அவளுக்காக யாக்கோபு மேலும் ஏழு வருடங்கள் லாபானிடம் வேலை செய்தான்.

யாக்கோபு ராகோலை அதிகமாக நேசித்தான். லேயாள் அற்பமாகக் கருதப்பட்ட போது, கர்த்தர் லேயாளுக்குக் குமாரரைக் கொடுத்தார். ராகேலுக்கோ

பிள்ளையில்லாதிருந்தது. அவள் தனக்குப் பிள்ளை இல்லாததால் தன் சகோதரிமேல் பொறாமை கொண்டு, கர்த்தரிடம் போகாது தனது கணவனிடம், "எனக்குப்பிள்ளை கொடும் என்று கேட்டாள். யாக்கோபு கோபங்கொண்டு அவளிடம் "தேவனல்லவோ உன் கர்ப்பத்தை அடைத்திருக்கிறார்" என்று சுட்டிக் காட்டினான். ஆனாலும் ராகேல் தனது தவறை, லேயாள் ஆறுகுமாரரைப்பெற்ற பின்னரே உணர்ந்து, கர்த்தரிடம் விண்ணப்பம் பண்ணினாள். "தேவன் ராகேலை நினைந்தருளினார் அவளுக்கு தேவன் செவிகொடுத்து அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார். அவள் கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெற்று; தேவன் என் நிந்தையை நீக்கி விட்டார் என்றும் இன்னும் ஒரு குமாரனைக்கர்த்தர்எனக்குத் தருவார் என்றும் சொல்லி, அவனுக்கு யோசேப்பு என்று பெயரிட்டாள் (ஆதியாகமம் 30:22-24) அவன் தேவனே தன் நித்தையை நீக்கினார் எனக்கண்டு கொண்டாள். அன்றியும் தேவன் தனக்கு மற்றுமொரு குமாரனைத் தருவார் என்றும் விசுவாசித்தாள் "விசுவாசித்தவளே பாக்கியவதி" என்ற பிரகாரம் தேவன் அவளுக்கு மற்றுமொரு குமாரனைக் கொடுத்தருளினார்.

ராகேல் மரித்தபோது, யாக்கோபு அவளுக்காக மிகவும் துக்கித்தான். அவளிடத்தில் தனக்குப்பிறந்த குமாரரிடத்தில் தனி அன்பு கொண்டான். ராகேலுடன் ஒருமித்து வாழ்ந்து அவளது அன்பால் கவரப்பட்ட யாக்கோபு அவளது பிரிவால் மிகவும் பாதிக்கப்பட்டான். இது அவளுடைய புற அழகை மட்டும் பொறுத்ததாயிருந்திருக்க முடியாது. முதலில் ராகேல் சற்று ஆத்திரத்துடன் நடந்து கொண்ட போதிலும், பின்பு தன்னைத் திருத்திக் கொண்டு யாக்கோபுக்கு ஏற்ற மனைவியாக இருந்திருக்க வேண்டும். அவளது அன்பு அவனை அவளுக்கு அடிமையாக்கி விட்டது. அவ்வாறே நாம் நம் தேவனிடத்தில் பூரண அன்புடையவர்களாய் வாழ்வோமானால் அவர் நமது அன்பையும் அங்கீகரித்து, நமது மேல் தமது அன்பைச்சொரிவார். அப்படிப்பட்ட உன்னத அனுபவத்திற்குள் தேவன் உங்களை நடத்துவாராக.

84. யோபின் மனைவி (யோபு 2:9,10)

சாத்தானின் மூலமாய் யோபின் சோதனைகள் பெருகிற்று. தனது பிள்ளைகள், ஆஸ்தி முதலியவற்றை இழந்ததுடன், தோல் வியாதியால் பீடிக்கப்பட்டு உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை பருக்களால் பாதிக்கப்பட்டான். அப்பொழுது யோபோடு கூடி அவன் மனைவியும் கஷ்டமடைந்திருக்க வேண்டும். ஆஸ்திகளையும், மக்களையும் இழந்த போது கூட பொறுமையாயிருந்த யோபின் மனைவி, அவன் வியாதியால் பீடிக்கப்பட்ட பொழுது பொறுமையை இழந்தாள். தேவன் பேரில் அவள் வைத்திருந்த விசுவாசம் ஆட்டம் கண்டது, ஆகவே தான் அவள் யோபைப் பார்த்து "நீர் இன்னும் உம்முடைய உத்தமத்தில் உறுதியாய் நிற்கிறீரே? தேவனை தூஷித்து ஜீவனை விடும்" என்றாள்.

இன்றும் இந்நிலையில் காணப்படும் மக்கள் அநேகர் துன்பங்கள் தொல்லைகள் சூழும்போது தேவனை தூஷிக்க துணிகின்றனர். நாம் அச்சமயங்களிலும் சோர்ந்து போகாது, "ஆபத்துக் காலத்தில்என்னை நோக்கிகூப்பிடு, நான் உன்னை விடுவிப்பேன், நீ என்னை மகிமைப்படுத்துவாய்" (சங் 50:15) என்று சொன்ன நம் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட வேண்டும். அப்போது நம்மை அவர் விடுவிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார், அவ்வாக்கை நாம் நம்புவோமானால், விடுவிக்கப்படுவோம். கர்த்தரை நாம் மகிமைப்படுத்த வேண்டும்.

இப்படிப்பட்ட துன்பகாலத்தில் கணவனுக்கு ஆறுதலாக விருந்து அவனைத் தேற்றி, அழைத்துச் செல்ல வேண்டிய யோபின் மனைவி, தன் கடமையினின்றும் தவறி விட்டாள் நீதிமானும் பொறுமைசாலியுமான யோபோ, அவளுக்கு புத்தி சொன்னான். அவன், "நீ பயித்தியக்காரி பேசுகிறதுபோல் பேசுகிறாய்;தேவன்கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெற வேண்டாமோ" என்றான். யோபின் மனைவியை போலல்லாது, கணவனுக்கு ஏற்ற துணையாயும் ஆறுதலாயும் வாழமுற்படுங்கள், துன்பங்கள்,

தொல்லைகள் துயரங்கள் உங்களைத் தொடரும் போது கணவனோடு சேர்ந்து ஜெபியுங்கள்.

இப்படிப்பட்ட சோதனைகள் நமக்கு நேரிடும் போது அவைகள் நம்மை ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேறச் செய்யுமென்பதை மறந்து போக வேண்டாம் ''நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும், நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது'' (யாக்கோபு 1:2,3.4) எனவே சோதனையை பொறுமையுடனும், அமைதலுடனும் ஏற்றுக் கொள்ளுவோம்.

''சோதனையை சகிக்கிற மனுஷன் பாக்கியவான், அவன் உத்தமனென்றுவிளங்கிய பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவ கிரீடத்தைப் பெறுவான் (யாக்கோபு 1:12) யோபு தன் சோதனையில் வெற்றி பெற்று, பொன்னாக விளங்கி, உத்தமனென தனது நிலையை நிலை நாட்டினான். அவன் ஆசீர்வதிக்கப்பட்டான். ஆனால் யோபின் மனைவியோ சோதனையில் தோற்று விட்டாள். நாமும் சோதனைகளை ஜெயித்து, உத்தமராக விளங்கும் போது, கர்த்தரால் இம்மையில் பல ஆசீர்வாதங்களைப் பெறுவதோடு, மறுமையில் அவர் வாக்குப்பண்ணியுள்ள ஜீவகிரீடத்தைப் பெறுவோம்.

யோபின் மனைவி இச்சோதனைகளில் தன் விசுவாசத்தை இழந்து விட்டாள். நாம் விசுவாசத்தோடு காத்திருக்கும்போது, கர்த்தர் நம்மைசுற்றியிருக்கும் இருளை நீக்கச் செய்வார், அவரும் நமக்கு உதவுமாறு காத்திருக்கிறார். எச்சமயத்திலும் நாம் நமது விசுவாசத்தைக் கைவிடாமல் வாழ்வோமானால் பவுல் அப்போஸ்தலனோடு கூட நாமும் சேர்ந்து, ''நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன்; விசுவாசத்தைக்

காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்'' (II தீமோத்தேயு 4.7,8) என்று வெற்றிகீதம் பாடக்கூடியவர்களாயிருப்போம்.

துன்பகாலத்தில் யோபைப் பழித்து பேசிய அவனது மனைவி அவனது துன்பங்கள் நீங்கியபின் அவனுடைய உத்தமத்தால் அவனோடு சேர்த்து பல ஆசீர்வாதங்களைப் பெற்றாள். அவள் தன் தவறுகளை நினைத்து அப்போது திருந்தியிருக்க வேண்டும். அவ்வாறே நாம் தீயவழியில் செல்லும்போது நம் கணவன்மாரோ அல்லது மற்றவர்களோ நமக்கு அறிவுரை வழங்கும்போது அவற்றை ஏற்றுக் நம்மைத்திருத்திக் கொள்வோமானால் யோபின் மனைவி இறுதியில் பெற்ற ஆசீர்வாதங்களை நாமும் பெறுவாம்.

85. ஓர்பாள் (ரூத் முதலாம் அதிகாரம்)

நகோமி தன் நாட்டில் பஞ்சம் வந்த போது, மோவாபிய தேசத்திற்குத் தன் கணவனுடனும், இரு குமாரர்களுடனும் சென்றாள். அங்கே தன் குமாரருக்கு மோவாபிய பெண்களை விவாகம் செய்வித்தாள். சிறிது காலம் சென்று, அவளது கணவனும், குமாரரும் இறந்துவிட்டனர். சிறிது காலம் அவள் தன் மருமக்களாகிய ஓர்பாளோடும், ரூத்தோடும் வாழ்ந்தாள். இஸ்ரவேல் நாட்டில் பஞ்சம் நீங்கியதையறிந்து, தன் சொந்த ஊருக்கு திரும்ப ஆயத்தமானாள். அப்பொழுது அவள் தன் மருமக்களின் நலனைக்கருத்தில் கொண்டு அவர்களைத் தங்கள் பெற்றோரிடம் சென்று மோவாபிய வாலிபர்களை மணந்து கொள்ளும்படிச் சொன்னாள். ஆனால் அவர்களுக்கு அவளைப்பிரிய மனதில்லாதலால் அவளுடன் வருவதாகச் சொன்னார்கள். ஆனால்நகோமியோ, அவர்கள் தன்னுடன் வருவதினால் அவர்களுக்கு யாதொரு பிரயோஜனமுமில்லையென்றும் கூறினாள். அதன் பின்னர் ஓர்பாள் தன்மாமியை முத்தஞ்செய்து அழுது கொண்டே திரும்பிப் போய் விட்டாள்.

ஓர்பாள் தன் ஜனத்திடத்திற்குப் போகும்படிக் கேட்டுக் கொண்டவள் நகோமியே. அதனால் அவள் திரும்பிப் போனதில் அதிகத் தவறு சொல்லமுடியாது. ஆனால், ரூத் தன் மாமியாரைப் பிடித்துக் கொண்டது போல், ஓர்பாள் அவ்வளவு அன்புடன் நடந்து கொள்ளவில்லை. இரு மருமக்களும் நகோமியின் குடும்பத்தில் வாழ்ந்தவர்கள்தான். ரூத், அவர்கள் தேவனை மெய்யான தேவனென்று கண்டுகொண்டாள். எனவே அவள், ''உம்முடைய தேவன் என்னுடைய தேவன்'' எனத் திட்டவட்டமாகக்கூறி, கர்த்தரைத் தன் தேவனாக ஏற்றுக்கொண்டாள். ஓர்பாள் இதை அறிந்து கொள்ள தவறி விட்டாள் அன்றியும் அவள் அதை அறிந்திருந்தாலும்கூட அந்த விசுவாசத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளவில்லை.

எனவே அவள் முன்னேக்கி மேலானவைகளை நோக்கி, மெய்த்தேவனிடம் சேருவதற்கு பதிலாக, அந்நிய தேவர்களை வணங்கும் தன் ஜனத்தாரிடத்திற்குத் திரும்பி விட்டாள். இன்று நம்முடைய நிலை என்ன? மாமியாருக்கும், மருமகளுக்குமிடையிலுள்ள உறவு எவ்வாறுள்ளது நாம் மேலானவைகளைத் தேடி கர்த்தரண்டை செல்லுகிறோமா? அன்றி பின்னுக விட்டுவந்த இவ்வுலகத்தையும் அதன் ஆசாபாசங்களையும் நாடுகிறோமா? ரூத், நகோமியையும் அவளது உண்மை தெய்வத்தையும் பற்றிக்கொண்டதால் தன் புருஷனுக்குள்ள சுதந்தர வீதத்தைப் பெற்றுக் கொண்டாள். ஆனால் ஓர்பாள் அதை இழந்துவிட்டாள். பரம தேசத்தை நாடின ரூத் தன் மாமியாருடன் சென்றாள்.

அத்தியாயம் XVI

குடும்பத்தை இடித்த ஸ்திரீகள்

86. யேசபேல் (I இராஜாக்கள் 17, 18)

யேசபேல் ஆகாப் ராஜாவின் மனைவி இவள் அந்நிய நாட்டுப் பெண் விக்கிரக ஆராதனை செய்பவள் இவளை ஆகாப் விவாகம் பண்ணினான். பெண்களுக்கு இயற்கையாக கொடுக்கப்பட்டுள்ள சக்தியை இவள் துர்ப் பிரயோகம் பண்ணினாள். தன் கணவனை அடக்கி ஆண்டு, அவனைத் தனது சகலவிதமான தீயச் செயல்களிலும் ஈடுபடச் செய்தாள். "அந்நிய தேவர்களை நாடிப் பின் பற்றுபவர்களுக்கு வேதனைகள் பெருகும், அவர்கள் செலுத்தும் பலிகளை அங்கீகரிக்க மாட்டேன்" என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இப்படியே தன் மனைவியின் சொற்கேட்டு, அந்நிய தேவர்களைப் பின்பற்றின ஆகாபின் முடிவும். யேசபேலின் முடிவும் யாவருக்கும் ஒரு எச்சரிப்பாகவே உள்ளது. யேசபேல் பாகாலின் தீர்க்கதரிசிகள் நானூறு பேரைத் தன்னிடத்தில் வைத்திருந்தாள். அவள் கர்த்தருடைய தீர்க்க தரிசிகளைக் கொலை செய்தாள். எலியா மாத்திரமே தப்பினார் ஆகிலும் பாகாலுக்குப் பணிபாத 7000 பேரைக் கர்த்தர் மீதியாக வைத்திருந்தார். எலியாவையும் கொலைசெய்ய அவள் வகை தேடினாள். எலியா, தான் சொன்னாலன்றி தேசத்தில் மூன்றரை வருடங்கள் மழையாவது, பனியாவது பெய்யாது என்றான். அவ்வாறே 3½ வருடங்கள் மழை பெய்யவில்லை. 3½ வருடங்கள் கழித்து எலியா ஆகாபிடம் வந்து, பாகாலுக்கு பலியிடும் தீர்க்கதரிசிகளும், தானும், பலியிடுவதாகவும், எந்தத் தெய்வம் வானத்திலிருந்திறங்கி அதை பட்சிக்குமோ அவரே உண்மையான தெய்வம் எனக்கொள்ளவேண்டும் என்று சொன்னான். அவ்வாறே ஒழுங்கு செய்யப்பட்டது. பாகாலின் தீர்க்க தரிசிகள் எவ்வளவு முயன்றும்

அவர்களால் அக்கினியைக் கொண்டுவர முடியவில்லை. பின்னர் எலியா கர்த்தரின் பலிபீடத்தை செப்பனிட்டு, பலியிடப்பட்ட காளைகளை அதன் மீது வைத்து அதன் மீதும், பலிபீடத்தை சுற்றியும் தண்ணீர் வார்த்தான் பின்னர் அவன் தேவனிடத்தில் ஒருக்கமாக வேண்டுதல் செய்தான். அப்பொழுது அக்கினி வானத்திலிருந்து இறங்கி அதை பட்சித்துப்போட்டது ஜனங்களெல்லாரும் கர்த்தரே தெய்வமென ஏற்றுக்கொண்டனர். எலியா பாகாலின் தீர்க்கதரிசிகளை கொன்றுப்போட்டான். எலியா சொன்ன பிரகாரம் மழை பெய்யத்தொடங்கியது, ஆகாப் வீட்டையடைந்து நடந்த யாவற்றையும் யோசபேலிடம் கூறினான். அவள் மனந்திருப்பி கர்த்தரை ஏற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக எலியாவைக்கொல்ல முனைந்தாள். கர்த்தர் எலியாவை தப்புவித்தார் (!இராஜாக்கள் 19).

அது மாத்திரமல்ல, அவர்களது வீட்டின் அருகாமையிலுள்ள நாபோத்தின் திராட்ச தோட்டத்தை ஆகாப் இச்சித்து, அவனிடம் அத்தோட்டத்தைக் கொடுக்குமாறு கேட்டபோது. நாபோத் அது தன் பிதாக்களின் சுதந்தரமானதால் அதை கொடுக்க மறுத்துவிட்டான். அதனால் ஆகாப் மனமடிவாகி வியாதிப்பட்டான் இதையறிந்த யேசபேல், நாபோத்துக்கு விரோதமாக குற்றச்சாட்டுகளை ஏற்படுத்தி, பல பேலியாளின் மக்களை சாட்சி சொல்ல வைத்து நாபோத்தைக் கல்லெறிந்து கொல்லுமாறு ஆகாபின் பெயரால் நிருபங்களை அனுப்பினாள். இதன் மூலம் அவள் தன் மீது சாபத்தை வருவித்துக் கொண்டாள். கர்த்தர் தீர்க்கதரிசியான எலியாவை ஆகாபிடம் அனுப்பி. ''நீ கொலை செய்ததும் எடுத்துக் கொண்டதுமில்லையோ, நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கின ஸ்தலத்திலே உன்னுடைய இரத்தத்தையும் நாய்கள் நக்கும்'' என்று சொல்லச்சொன்னார். அன்றியும் யேசபேலைப்பற்றியும், ''நாய்கள் யேசபேலை யெஸ்ரயேலின் மதில் அருகே தின்னும்'' என்றார். இவ்விதமாக யேசபேல் தன் தகாத நடத்தையினாலே தனக்கும், தன் கணவனுக்கும் தன் பிற்கால சந்ததிக்கும் சாபத்தை வருவித்துக்கொண்டாள்.

ஆகாபின் மகனுன யோராம் யெகூவை எதிர் கொண்டுபோய், ''யெகூவே சமாதானம்'' என்ருன். அப்பொழுது யெகூ, ''உன் தாயாகிய யேசபேலின் வேசித் தனங்களும், அவளுடைய பில்லிசூனியங்களும், இத்தனை ஏராளமாயிருக்கையில் சமாதானம் ஏது'' என்ருன். இவ் வாருக அந்த யேசபேல் இழிவான பெண்களின் கூட்டத்தில் சேர்க்கப்பட்டாள். அதற்கேற்றவாறு யெகூ யெஸ்ரயே லுக்கு வந்ததைக் கேள்விப்பட்டவுடன் யேசபேல், ''தன் கண்ணுக்கு மையிட்டுத், தன் தலையை சிங்காரித்துக் கொண்டு' ஜன்னல் வழியாய் எட்டிப் பார்த்தாள். (II இராஜாக்கள் 9:30-36, எசேக்கியேல் 23:40, எரேமியா 4:30 ''அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி, தன் நெற்றிப் பட்டயங்களினுலும் தன் ஆபரணங்களினுலும் தன்னை சிங்காரித்துக் கொண்டு தன் நேசரைப் பின் தொடர்ந்து போனுள்'' (ஒசியா 2:1)

''அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும், சிவப்பான ஆடையும் தரித்து, பொன்னினுலும், இரத்தினங்களி னுலும், முத்துக்களினுலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித் தனமாகிய அருவருப்புகளாலும், அசுத்தத்தாலும் நிறை பொற் பாத்திரத்தை தன் கையிலே பிடித்திருந்தாள்'' (வெளிப்படுத்தல் 17:4) இவள் வேசிக்குத் தாய், யேசபேலும் வேசிகளுக்குத் தாய் இப்படிப்பட்ட அலங்கரிப்பு எவ்வளவு அருவருப்பானது. இது ஒரு பெண்ணை நரகத்திற்கும், நாசத்திற்கும் தான் வழி நடத்தும் ஆனுல் பவுலடியாரின் போதனையான, ந'ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினுவது, பொன்னினா லாவது, முத்துக்களினுலாவது, விலையேறப் பெற்ற வஸ் திரத்தினுலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினுலும், நாணத்தினுலும், தெளிந்த புத்தியி னுலும், தேவ பக்தியுள்ளவர்களென்று சொல்லிக் கொள் ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே அலங்கரித்தால் அவர்கள் கிறிஸ்துவண்டை சேரத் தகுதியுடையவர் களாவார்கள்.

இந்த யேசபேலின் முடிவு நமக்கெல்லாம் எச்சரிப் பாய் அமைதல் வேண்டும். யெகூவின் வார்த்தையின்படி அவள் கீழே தள்ளப்பட்ட போது அவளது இரத்தம்

கவரிலும், குதிரைகளின் மேலும் தெறித்தது. யெகூவின் சொற்படி, அவளை ஒரு ராஜகுமாரத்திக் கேற்றவாறு அடக்கம் செய்யச்சென்றபோது, அவளுடைய தலையோட்டையும், கால்களையும், உள்ளங்கால்களையும் அல்லாமல் வேறொன்றையும் காணமுடியவில்லை. இவள் செத்த பின்னருங்கூட அவள்மீது உள்ள சாபம் அவளைத் தொடர்ந்து பிடித்தது. உண்மையாக நாம் கர்த்தருக்குள் ஜீவித்து, அவருக்குள் மரிப்போமானால், "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது" என்றது போல் நமது மரணமும் அவரது பார்வையில் அருமையாயிருக்கும் நாம்மகிழ்ச்சியோடு ஆண்டவரை சந்திப்போமா? சந்திப்போம்.

87. அத்தாலியாள் (II இராஜாக்கள் 11)

அத்தாலியாள் யேசபேலின் மகள். தனது தாயின் வழியில் நடந்து பாகாலை வணங்கி வந்தாள். தனது மகன் அகசியா ராஜ்ய பாரம் பண்ணும்போது, அவன் துன்மார்க்கமாய் நடக்க இவள் ஆலோசனை கூறினாள் (II நாளாகமம் 22 3). அது மட்டுமல்லாது, "அந்தப் பொல்லாத ஸ்திரீயாகிய அத்தாலியாளுடைய மக்கள் தேவனுடைய ஆலயத்தைப் பலவந்தமாக திறந்து, கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பிரதிஷ்டைப்பண்ணப்பட்டவைகளையெல்லாம் பாகால்களுக்காக செலவு பண்ணிப்போட்டார்கள்" (II நாளாகமம் 24:7). இதுவும் அவளுடைய ஆலோசனையின் படியே நடந்தது.

இவளது மகன் அகசியா மரித்தபின், இவள் ராஜ்ய பாரத்தை தானே கைக்கொள்ளும்படியாக எழும்பி, ராஜ வம்சமான யாவரையும் சங்காரம் பண்ணினாள். அச்சமயம அவளது மகளான யோசேபியாத், அகசியாவின் ஆண் குழந்தையான யோவாசை களவாயெடுத்துப்போய் அவனையும் அவன் தாதியையும் சயன வீட்டிலே ஆறு வருடங்கள் ஒளித்து வைத்தாள்.

இந்த அத்தாலியாள், தானே ராஜ்யத்தை ஆள வேண்டும் என்ற எண்ணம், தனக்கு நிகர் தானே என்ற பெருமையான எண்ணம் இவைகளைக் கொண்டிருந்தாள்.

தன் மகனின் ஸ்தானத்தில் வேறொருவரும் வரக்கூடா தெனக்கருதித் தனது சொந்த இரத்தம் எனவும் பாராது, அவள் ராஜ வம்சத்தார் அனைவரையும் கொலை செய்தாள். இது பெண்மைக்கே இழுக்குண்டாகக்கூடிய ஒரு செயல். பெண், அன்பும், இரக்கமுள்ளவளாக இருக்க வேண்டும். ஆனால் இந்த அத்தாலியாளோ, அடக்கம், இரக்கம், அன்பு என்ற மேலான பண்புகளைக்காற்றில் பறக்கவிட்டு, பொறாமையாலும், ஆணவத்தாலும் நிறைந்து, கொடூர மான செயல்களில் ஈடுபட்டாள். அவளுடைய முடிவு பரிதாபமாயிற்று ''தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்: பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார். (I பேதுரு 5:5-8).

ஏழு வருடங்கள் இவ்வாறு அரசாண்ட அத்தாலி யாளின் வாழ்வில் புயல் வீசத்தொடங்கிற்று எதிர்பாராத விதத்தில், ஏழாம் வருடத்திலே, கர்த்தருடைய சந்நிதி யிலே ஆர்ப்பரிப்பு சத்தம் கேட்டுத்திகைத்தாள். அரச குமாரனாகிய யோவாசை ராஜாவாக்கி, அவனுக்கு மணி முடி தரிக்கப்படுவதைக்கண்ட அவள், தன் வஸ்திரங்களை கிழித்துக்கொண்டு, ''துரோகம் துரோகம்'' எனக்கூவினாள் ஆகிலும் அவள் கொல்லப்பட்டாள். ''துன்மார்க்கனுக்கு நல் முடிவு இல்லை. துன்மார்க்கனுடைய விளக்கு அணைந்து போம்'' (நீதிமொழிகள் 24;20) என்றபடி அவளது முடிவு நல்ல முடிவாக இல்லை.

இந்த அத்தாலியாள் கர்த்தருக்கு விரோதமாய் நடந்து, அந்நிய தேவர்களைப்பின்பற்றினாள் அதினால் அவளுக்கு வேதனை அதிகமாயிற்று. நாமும் நமது இரட்ச கரை விட்டகலாது, அவரை அண்டி, அத்தாலியாளிடத் தில் காணப்பட்ட தீய குணங்களைக் கைக்கொள்ளாது வாழ்வோமானால், அவர் நம்மை ஆசீர்வதித்து, நம்மையும் எடுத்து தமது ஊழியத்தில் பயன்படுத்துவார்.

88. சிரேஷ் *(எஸ்தர் 5:9-14)*

அகாஸ்வேரு ராஜாவின் பிரதான மந்திரியாக இருந்தவன் ஆமான். யூதனான மொர்தெகாய் அவனை

மதியாததால் சினங்கொண்டு யூத குலமனத்தையும் வேரோடு அழிக்கத்திட்டமிட்டு, அதற்கான விகிதங்களை ராஜாவின் முத்திரையோடு பெற்று, அவனது ஆட்சிக்குட்பட்ட அனைத்து நாடுகளுக்கும் அனுப்பினான். இதைக் கேள்வியுற்ற மொர்தெகாய் எஸ்தரை ராஜாவிடம் பேசும்படி சொல்லியனுப்பினான். அவள் தன் இன்னுயிரையும் தன் இனத்தவரை காக்கப் பணயமாக வைத்து ராஜாவிடம் சென்றாள். அவனது கண்களில் அவளுக்கு தயை கிடைத்தது. அரசன் எஸ்தருக்கு என்ன வேண்டுமென கேட்க, அவள், தான் செய்வித்த விருந்துக்கு ராஜாவும், ஆமானும் வரவேண்டுமென கேட்டுக் கொண்டாள். விருந்தின் போது, ராஜா எஸ்தரிடம் மறுபடியும் அவளுக்கு என்ன வேண்டுமென கேட்க, அவள் மறு தினமும் தான் செய்யும் விருந்துக்கு அவ்விருவரும் வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டாள். ஆமான் மிகுந்த சந்தோஷத்துடன் வெளியேறுகையில் வாசலில் மொர்தெகாய் அவனை மதியாது உட்கார்ந்திருப்பதைக் கண்டு கோபமடைந்தான்.

ஆமான் வீட்டையடைந்து தன் சிநேகிதருக்கும் தன் மனைவியாகிய சிரேஷிக்கும் தான் விருந்திற்கு அழைக்கப்பட்டிருப்பதை பெருமையாகச் சொன்னான். அதோடு கூட அவன் மொர்தெகாய் தன்னை அவமதித்ததைப்பற்றிச் சொல்லி, அதற்கு என்ன செய்யாலாமென அவர்களிடம் ஆலோசனைக் கேட்டான். இச்சந்தர்ப்பத்தில் கணவனின் தவறான போக்கை அவனுக்கு அவள் அறிவுறுத்தாது, ''ஐம்பது முழ உயரமான ஒரு தூக்குமரம் செய்யப்பட வேண்டும்; அதிலே மொர்தெகாயை தூக்கிப் போடும்படி நாளை தினம் நீ ராஜாவுக்கு சொல்ல வேண்டும்'' என்ற துராலோசனையைக் கொடுத்தாள்.

அன்று இரவு தூக்கம் வராததால் ராஜா, தனது வர்த்தமான புஸ்தகங்களையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். அப்போது, அவனை மொர்தெகாய் எவ்வாறு காப்பாற்றினான் என்பதை வாசித்து, அதற்காக அவனுக்கு யாதொரு வெகுமதியும் கொடுக்கப்படவில்லை என்பதை அறிந்து, அவனை கனப்படுத்தக் கருதினான்.

அச்சமயம் தான் செய்வித்த தூக்குமரத்தைப் பற்றி பேச ஆமான் அங்கு வந்தான். அவனிடம் ராஜா, ''ராஜா கனம் பண்ண விரும்பும் மனிதன் எவ்வாறு கனம் பண்ணப் பட வேண்டும் எனக் கேட்டான். தன்னையல்லாது வேறு யாரை ராஜா கனம் பண்ணப் போகிருரென எண்ணி, அவன், ''ராஜா உடுத்திக் கொள்ளுகிற வஸ்திரமும், அவர் சிரசில் தரிக்கப்படும் ராஜ முடியும் கொண்டு வரப்பட வேண்டும் அவை அவனுக்கு தரிப்பிக்கப்பட்டு, ராஜா ஏறுகிற குதிரையில் அவனை ராஜா வீதியில் உலா வரும்படிச் செய்யவேண்டும்'' என்ருன். ராஜா அவ்வாறே மொர்தெகாய்க்குச் செய்யும் படிச் கூறினான். ஆமானும் அவ்வாறே செய்தான்.

ஆமான் தன் வீட்டிற்கு சஞ்சலத்துடன் திரும்பி, தனக்கு நேரிட்ட யாவையும் தன் மனைவியிடம் கூறினான். அவளோ அவனுக்கு அச்சமயம் ஆறுதல் கூற தவறி அவனிடம், ''மொர்தெகாய்க்கு முன்பாகத் தாழ்ந்து போகத்தொடங்கினீர்: அவன் யூதகுலமானால், நீர் அவனை மேற்கொள்ளாமல், அவனுக்கு முன்பாகத் தாழ்ந்து போவது நிச்சயம்'' என்ருள். ஆமான் அவன் செய்வித்திருந்த தூக்கு மரத்திலே தொங்கவிடப்பட்டதை அறிவோம். '‛நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ; பாவம் உன் வாசற்படியில் படுத்திருக்கும்''

சிரேஷ், யூதருடைய மெய்யான கடவுளின் வல்லமையை நன்கு அறிந்திருந்தாள். என்ற போதிலும் அவள் தனது கணவனுக்கு முதலிலேயே அதை எடுத்துக் கூறி, அவனை நல்வழியில் திருப்பியிருக்க வேண்டும். அதற்கு மாருக அவனை தீய வழியில் நடத்தினாள். இன்றும்கூட அநேகப் பெண்கள் தங்கள் கணவன்மார்களை திருப்தி செய்யும் பொருட்டு, அவர்கள் தீயவழியில் செல்ல முற்படும் போது அவர்களைத் தடுத்து நல் வழிப்படுத்துவதற்கு பதிலாக, அவர்களோடு ஒத்துழைக் கின்றனர். ஆமானின் வீடும் எஸ்தருக்கு கொடுக்கப் பட்டது. சிரேஷ் தன் கணவனையும், பிள்ளைகளையும், வீட்டையும், தனக்குள்ள எல்லா மகிமையையும் இழந்தாள்

காரணம் அவளுக்கிருந்த மேட்டிமைமைய கணவன் சஞ்சலத்துடன் வரும் போது, அவனுக்கு ஒரு மனைவி ஆறுதல் சொல்லவேண்டும். இப்படியெல்லாம் தனது கணவனின் நல்வாழ்வுக்காக பாடுபடும் மனைவி நிச்சயமாக கனம் பெறுவாள் சிரேஷை போன்றவர்கள் சஞ்சலத்தோடே தங்கள் படுக்கையை பாதாளத்தில் விரிப்பார்கள் (ரோமர் 12:19,21)

89. சப்பீராள் (அப்போஸ்தலர் 5:1-11)

ஆதித்திருச்சபையில், சபையின் மக்கள் தங்களுக்கு உண்டானதையெல்லாம் விற்று, அப்போஸ்தலரது பாத படியில் வைத்து, ஒருமனப்பட்டு, ஒன்றாகவாழ்ந்து வந்தனர் அச்சமயம் அங்கு அனனியா என்பவன் தன் மனைவியாகிய சப்பீராளோடு வாழ்ந்து வந்தான். அவன் தன் காணியாட்சியை விற்று, தனது மனைவி அறிய, அதில் ஒரு பாகத்தை மறைத்து, மீதியை அப்போஸ்தலரிடம் கொண்டுவந்தான். பேதுரு அவனைப் பார்த்து, ''நீங்கள் இவ்வளவுக்குத்தானா விற்றீர்கள்?'' என்று கேட்டார். அவன் ''அவ்வளவு தான்'' என்றான். அப்பொழுது பேதுரு, ''அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொல்லும்படி சாத்தான் உன் இருதயத்தை நிரப்பியதென்ன? அதை விற்குமுன்னே அது உன்னுடையதாயிருக்கவில்லையோ? அதை விற்ற பின்பும் அதின் கிரயம் உன வசத்திலிருக்கவில்லையோ? .. நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய்'' என்றான். அக்கணமே அவன் கீழே விழுந்து மரித்தான்.

இதையறியாத அவனுடைய மனைவி சப்பீராள், அங்கு வந்தாள். பேதுரு அவளை அதே கேள்வியை கேட்க, அவளும் அவ்வாறே பொய் சொன்னாள். அப்பொழுது பேதுரு, ''கர்த்தருடைய ஆவியை சோதிக்கிறதற்கு நீங்கள் ஒரு மனப்பட்டதென்ன? இதோ உன்புருஷனை அடக்கம் பண்ணினவர்களுடைய கால்கள் வாசற்படியிலே வந்திருக்கிறது; உன்னையும் வெளியேக் கொண்டு

போவார்கள்'' என்றார். உடனே அவள் அவர் பாதத்தில் விழுந்தாள். உயிர் பிரிந்தது.

இன்றும் அனேக குடும்பங்களில் கணவனும், மனைவியும் சேர்ந்து தீய காரியங்களில் ஈடுபடுகின்றனர். ஆனால் கணவன் தீய வழியில் செல்ல முற்படும்போது, மனைவியானவள் அவனை நல்வழி படுத்தவேண்டும். அதே விதமாக மனைவி தீய வழியில் சென்றால், கணவன் அதைத் தடுக்க வேண்டும். மனைவியும் தன் கணவனின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

இந்த தம்பதிகள் தாங்கள் செய்யும் வஞ்சகச் செயல் ஒருவருக்கும் தெரியவராது எனக் கருதினர். ஆனால் ''இருதயங்களை சோதிக்கிறவரோ கர்த்தர் (நீதிமொழிகள் 17:3). ''மனுஷன் முகத்தைப் பார்ப்பான், கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்'' (I சாமுவேல் 16:7). ஆகவே, நாம் செம்மையான இருதயமுள்ளவர்களாயிருந்து, நேர்மையாய் நடக்கவேண்டும். இந்த தம்பதிகளின் வஞ்சக செயலினால், அவர்கள் தேவனுக்கும், பேதுருவுக்கும் முன்பாக பொய் சொன்னார்கள். நாம் பொய்யை களைந்து, மெய்யே பேச வேண்டுமென வேதம் கூறுகிறது. சங்கீதக்காரன் தன் வாயை பொய் வசனிப்புக்கு காக்குமாறு வேண்டிக்கொண்டதுபோல, நாமும் நமது நாவை பொய்க்கு விலக்கி காத்துக்கொள்ள வேண்டும்.

இவ்விருவரும் பரிசுத்த ஆவியை வஞ்சித்ததாக பேதுரு கூறுகிறார். மனிதனுக்கு எல்லா விதமான பாவங்களும் மன்னிக்கப்படும். ஆனால் பரிசுத்த ஆவியானவருக்கு விரோதமாக செய்யப்படும பாவங்களோ, இம்மையிலும், மறுமையிலும் மன்னிக்கப்படுவது அரிது. எனவே தான், இவ்விருவரும் தேவ கோபாக்கினைக்குள்ளானார்கள். சாபத்தை சம்பாதித்துக் கொண்டனர். சில சமயங்களில் இதினால் பிள்ளைகளும் பாதிக்கப்படுகின்றனர். (யாத்திராகமம் 34:7). பெற்றோரின் நற்கிரியைகள் பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். நமது

பிள்ளைகள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால், தீமையை நீக்கி நன்மை செய்யவேண்டும். (சங்கீதம் 103:10-17)

இவ்வளவு சாபத்திற்கும் காரணம் அவர்களிடம் காணப்பட்ட பண ஆசையே இந்த பணஆசை அவர்களை எவ்வளவு துணிகரமான பாவத்தில் வீழ்த்தியது! இப்பண ஆசை நம்மை தேவனிடமிருந்து பிரித்துவிடுகிறது. ''பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது; சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தை விட்டு விலகி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்தி கொண்டிருக்கிறார்கள்'' (1 தீமோத்தேயு 6 10). இதேவிதமாகத் தான் அனனியாவும், சப்பீராளும் பணத்தை இச்சித்து, விசுவாசத்தை விட்டுவிலகி, சாபத்தை ஏற்றுக்கொண்டனர். இவர்கள் முடிவு மனுகுலத்துக்கு ஒரு எச்சரிப்பாக இருக்கிறது.

இவ்விருவரது உள்ளங்களும் தேவனுக்கு முன்பாக செம்மையாக இருக்கவில்லை. தேவனோடு நடக்கவும், பேசவும் அவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. அப்படியிருந்தும் ஜெப ஜீவியத்திலும், பரிசுத்த ஆவியின் வல்லமையிலும் நிறைந்து காணப்பட இயேசுவின் சீடருடன் சேர விரும்பினார்கள். அவர்களது அற்புதங்களும், அடையாளங்களும் இவர்களை கவர்ந்தன. இந்த பரிசுத்தக் கூட்டத்தில் இவர்கள் பொய்களினாலும், வஞ்சகங்களினாலும் நுழைந்தனர். அவர்கள் இன்னும் உலகப் பாசத்திலிருந்து விடுதலையாகாததால், பரிசுத்த ஆவியானவரையும் தேவனுடைய அடியார்களையும் வஞ்சித்தனர். பக்தியின் வேஷம் போட்டனர். முடிவில் சாபத்தைப் பெற்றனர்.

அத்தியாயம் XVII

சீர்கெட்ட துஷ்ட ஸ்திரீகள்

90. போத்திபாரின் மனைவி

(ஆதியாகமம் 39:1-23)

வேதாகமத்தின் படி ஒரு விபசார ஸ்திரீ ஒரு வேசிக்கு சமம். போத்திபார் தான் அடிமையாக வாங்கிய யோசேப்பின் நற்குணத்தையும், நல்லொழுக்கத்தையும் கண்டு, அவனை தன் வீட்டுக்குத் தலைவனாக வைத்தான். யோசேப்பின் அழகிலும், வாலிபத்திலும் மயங்கிய அவனது மனைவி, அவன்மேல்மோகங்கொண்டு. அவனை தன் இச்சைக்கு இணங்குமாறு வற்புறுத்தி வந்தாள். ஆனால் யோசேப்போ கர்த்தருக்கு பயந்து ஜீவித்ததால் அவன்,'' இதோ வீட்டிலே என்னிடத்திலிருக்கிறவைகளில் யாதொன்றையும் குறித்து என் ஆண்டவன் விசாரியாமல், தமக்கு உண்டான யாவற்றையும் என் கையில் ஒப்புவித்திருக்கிறார். இந்த வீட்டிலே என்னிலும் பெரியவன் இல்லை; நீ அவரிடம் மனைவாயிருக்கிற படியால் உன்னைத்தவிர யாதொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை. இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாங்குக்கு உட்பட்டு; தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்வது எப்படி?'' என்று சொல்லி, அவளது இச்சைக்கு இணங்கவில்லை. ஒருநாள் ஒருவரும் வீட்டிலில்லாத சமயம் அவள், அவனை வற்புறுத்தவே. அவன் அவளைவிட்டு ஓடிபோனான். அப்பொழுது அவனது வஸ்திரம் அவள் கையில் அகப்பட்டது. ''ஒரு பாவம் மற்றொரு பாவத்தை பிறப்பிக்கும்'' அவ்வாறே தனக்கு இணங்க மறுத்த யோசேப்பின் மீது அவள் துவேஷங்கொண்டு, அவனைப் பழிவாங்க நினைத்தாள். எனவே அவள் தன் கணவன் வந்தவுடன், அவன் மீது அபாண்டமான பழியை சுமத்தினாள். அவனும் அதை நம்பி, யோசேப்பை காவலில் வைக்க உத்தரவிட்டான்.

இவள் முதலாவது தனது இருதயத்தில் பாவ இச்சைச்கொண்டு, தனது கணவனுக்கு துரோகம் செய்தாள். யோசேப்பின் விஷயத்தில் மிகவும் கேவலமாக நடந்துக்கொண்டாள். அவன்மீது வன்மம் கொண்டு, அவன்மீது வீண்பழி சுமத்தினுள். இப்படிப்பட்ட பாவ வாழ்க்கையில் நாம் விழுந்து விடாதபடி கவனமாயிருப்போம். மாம்சஇச்சையை அறவேஒழிப்போம். அப்பொழுது யோசேப்பை தேவன் உயர்த்தி, எகிப்து தேசம் முழுவதுக்கும் அவனை அதிகாரியாக்கியதுபோல், நம்மையும் ஆண்டவர் நமது ஆத்தும, சரீர வாழ்வில் உயர்த்துவார்.

91. ஏரோதியாள் (மாற்கு 6:17-28)

ஏரோதியாள் மிகவும் துன்மார்க்க ஜீவியம் செய்தவள். மகா ஏரோதின் பவுத்திரி. இவள் பிலிப்பை விவாகம் செய்தபின் அவனைத் தள்ளிவிட்டு, ஏரோது அந்திப்பாவோடு சேர்ந்து வாழ்ந்தாள். இவ்வாருக அவள் தன் கணவனுக்கு துரோகம் செய்தாள். பரிசுத்த ஆவியினுல் நிறைந்த யோவான் ஸ்நானகன், அவர்களை கண்டித்தான் அதனுல் அவள் யோவானை அறவே வெறுத்தாள். அவனை ஒழிக்க சமயம் பார்த்துக்கொண்டிருந்தாள். யோவான் நீதியும், பரிசுத்தமும், தேவ அன்பும் நிறைந்தவனென்று, அறிந்த ஏரோது அவனை பிடித்துக் கட்டி, காவலில் வைத்திருந்த போதிலும், அவனுக்குப் பயந்து, அவனைப் பாதுகாத்து, அனேக காரியங்களை அவனது யோசனையின்படி செய்து, விருப்பத்தோடே அவன் சொல்லைக்கேட்டு வந்தான். ஆனுல் ஏரோதியாளோ அவனுக்கு சதி நினைத்து, அவனைக் கொலை செய்ய மனதாயிருந்தாள்.

ஏரோதின் பிறந்த நாள் வந்தபோது, சாத்தானின் பிள்ளையாகிய இந்த ஏரோதியாள், தனது மகளாகிய சிறுபெண்ணை அரண்மனையில் ஏரோதிடம் வந்திருந்த, பல பிரதான மனிதருக்கு முன்பாக நடனமாட அனுப்பினுள். அவள் நடனமாடி ஏரோதையும், கூடியிருந்தவர்களையும் சந்தோஷப்படுத்தினுள். எப்தா, யோசியாது

ஒரு பொருத்தனை செய்து, தன் ஒரே மகளை இழந்த வண்ணம், இந்த ஏரோதும் சற்றுப் யோசியது, அப்பெண்ணுக்கு அவள் கேட்பது எதுவாயினும் அதைக் கொடுப்பதாக வாக்களித்து விட்டான். அவள் தன் தாயிடம் போய் இதை தெரிவித்தாள். யோவானை கொலை செய்ய எடுத்த முயற்சிகளெல்லாம் பயனற்றுப் போகவே, அவள் இத்தருணத்தை அதற்காக பயன்படுத்திக் கொண்டாள். யோவானின் தலையை ஒரு தாலத்தில் வைத்துத் தருமாறு கேட்க அவள் தன் மகளிடம் கூறினாள். அவளும் அவ்வாறே செய்தாள். ஏரோது கூடியிருந்தவர்களின் முன்னிலையில் தன் ஆணையினிமித்தம் அதை மறுக்க முடியாது, தன் சேவகரை யோவானின் தலையைக் கொண்டு வருமாறு பணித்தான் அப்பெண் அதைக் கொண்டு போய் தன் தாயிடம் கொடுத்தாள்.

இன்றும் கூட மக்கள் தேவனுக்கு முன்பாக அவர்கள் செய்யும் பாவங்களை யாரும் கண்டித்துணர்த்த விரும்புவதில்லை. அதற்கு மாறாக அவர்கள் தங்கள் இருதயங்களை இந்த ஏரோதியாளைப் போல் கடினப்படுத்திக் கொள்ளுகிறார்கள். இந்த பாவத்தினிமித்தம் ஏரோதியாள் மேலும் மேலும் தீயச்செயலில் ஈடுபட்டு, கோபாக்கினையைத் தன் தலைமேல் சுமரப்பண்ணினாள். தான் கெட்டதுமல்லாமல், தன் மகளையும், தீயவழியில் செல்ல வழிகாட்டினாள். இவளைப்பற்றி இன்றும் உலகம கேவலமாகப்பேசுவதை நாம் அறிவோம்.

நாம் பாவம் செய்கையில், தேவமக்களால், அவற்றைப்பற்றி உணர்த்தப்படும்போது, அவைகளுக்காக மனஸ்தாபப்பட்டு, மனந்திருப்பி, தேவனிடம் அறிக்கையிடும்போது, பாவ மன்னிப்பும், தேவசமாதானமும் பெற்று, யோவான் கூறிய வருங்கோபாக்கினைக்கு நாம் தப்பித்துக் கொள்ளுவோம். நம்முடைய பிள்ளைகளையும் அவர்கள் தீயவழிக்கு செல்லாதபடி கவனித்து, அவர்களை நல்வழிப் படுத்துவோமாக. ஏரோதியாளின் துணிகரப் பாவங்கள் யாரிடமும் தோன்றாது ஊக்கமாகஜெபிப்போம். நாம் நல்வழியில் சென்று, நம் பிள்ளைகளை நல்வழியில்

நடத்தி, நமது நடக்கையிலே அநேகரை நல் வழிக்கு வர வைத்து, இவ்வுலகில்நாம் இருக்கும் வரைக்கும் அவருக்காக எரிந்து பிரகாசிக்கிற ஒளிகளாக வாழ்வோமாக.

92. ஏரோதியாளின் மகள்-சலோமி

(மாற்கு 6:22-28)

சாலோமி ஏரோதியாளின் குமாரத்தி "தாயைப் போல் பிள்ளை, நூலைப்போல் சேலை" என்ற தமிழ் பழமொழிக்கேற்ப இவள் தன் தாய் சென்ற வழியிலேயே சென்றாள். தனது தாயின் சொற்கேட்டு, நடனம் பண்ணி, ஏரோதை சந்தோஷப்படுத்தினதுமல்லாது, தனது தாயின் போதனையின்படியே யோவானின் தலையைக் கேட்டாள்.

இவளுக்குத் தன் தாயின் முறைகேடான ஜீவியத்தைப் பற்றியும், அவளது துர்ப்புத்தியைப் பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். ஆயினும் அவள் தன் தாயின் சொற்படியே நடந்து வந்தாள். தன் தாயின் நடத்தையை சிறிதும் சீர்ப்படுத்திக் கொள்ளவில்லை. யோவானின் தலையைக் கேட்பது, அதாவது ஒரு மனிதனைக் கொல்வது அவ்வளவு பெரிய பாவம் என்பதை அவள் அறிந்தேயிருக்க வேண்டும். என்ற போதிலும் தன் தாயை அவ்வாறு செய்ய வேண்டாமென சொல்வதற்குப் பதில், அவள் தன் தாயுடன் இத்தீச்செயலில் ஒத்துழைத்தாள்.

அருமையான சகோதரியே, நீ உன் பிள்ளைகளை எவ்வாறு வளர்க்கிறாய்? அந்த ஏரோதியாள் தன் மகளைத் தன் தீயவழியில் போதித்ததால், சிறு பெண்களுக்கு இயற்கையாகவே இருக்கக்கூடிய இச்சுபாவத்தைக்கூட அவள் இழக்கும்படி செய்துவிட்டாள். தன் மகளுக்கே அவள் ஒரு இடறலாக நின்றாள். கர்த்தரின் எச்சரிப்புச்சத்தம் நம் காதுகளில் ஒலிக்கட்டும். இவ்வாறு சிறு பிள்ளைகளுக்கு இடறலாக இருப்பவர்களின் கழுத்தில் எந்திரக் கல்லைக் கட்டி, ஆழ்ந்த சமுத்திரத்தில் போட வேண்டுமென இயேசு கூறுகிறார். எனவே, நாம் நமது பிள்ளைகளை அவர்கள் நடக்க வேண்டிய செம்மையான பாதையிலே

நடத்தி, அவர்களுக்கு முன் மாதிரியாகவும், தேவனுக்கு உகந்த சாட்சிகளாகவும் வாழ்வோமாக.

சலோமி, தானாக எதைக் கேட்போம் என்று நினைத்துச் செயல்படாமல், தன் தாயைக் கேட்டாள். அவள் பதினேழு வயது பிராயத்திலுங்கூட தானாக சிந்தித்து செயல்பட முடியாதவளாயிருந்தாள். அப்படியே அவள் வளர்க்கப்பட்டாள். ஆனால் நாம் நமது பிள்ளைகளுக்கு ஓரளவு சுதந்தரம் கொடுத்து, அவர்களின் சிந்திக்கும் திறனை வளர்ப்போமாக. நம் பிள்ளைகள் சாமுவேலைப் போல ஆண்டவரின் சத்தத்தைக்கேட்கவும், மரியாளைப் போல தேவனின் பாதத்தை அண்டிக்கொள்ளவும், யோசேப்பைப் போல தங்களைக் காத்துக்கொள்ளவும் வழிக்காட்டுவோமா? காட்டுவோம்.

93. தெலீலாள் (நியாயாதிபதிகள் 16:4-20)

சிம்சோனுடைய தாய் விரதமிருந்து, தன் மகனையும் நசரேய விரதத்தில் வளர்த்தாள். தேவனுடையஆவி அவனோடிருந்ததால், அவன் இஸ்ரவேலைபெலிஸ்தரிடமிருந்து மீட்க ஒரு கருவியானான். அவன் மிகவும் பலசாலியாயிருந்ததால், வீரச் செயல்கள் பல புரிந்தான். பெலிஸ்தர் அவனை எவ்வாறேனும் நிர்மூலமாக்க வேண்டுமென முயற்சிகள் பல எடுத்தனர். ஆனால் அவர்களால் முடியவில்லை. இந்நிலையில் பெலிஸ்தரின் நாட்டில் குடியிருந்த தெலீலாள் என்னும் பெண்ணுடன் சிநேகம் கொண்டான். பெலிஸ்தர் இதையறிந்து, அவனிடம் வந்து, "நீ அவனை (சிம்சோனை) நயம்பண்ணி, அவனுடைய மகாபலம் எதினால் உண்டாயிருக்கிறது என்றும், நாங்கள் அவனைக்கட்டி சிறுமைப்படுத்துகிறதற்கு எதினாலே அவனைமேற்கொள்ளலாம் என்றும் அறிந்துகொள்; அப்பொழுது நாங்கள் ஒவ்வொருவரும் ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு உனக்குக் கொடுப்போம்" என்றார்கள். பெலிஸ்தர் சிம்சோனைச் சிறுமைப்படுத்த நினைத்திருக்கின்றனர் என அறிந்தும் கூட, தெலீலாள் அவர்கள் வாக்குப்பண்ணின அப்பொருளின் மீதே இச்சைக்கொண்டாள்.

அதனால் அவள் அவனைத் தினம் தினம் அலட்டிக் கொண்டிருந்தபடியால், அவன் தன் இருதயத்தை அவளுக்குத் திறந்து காட்டினான். பெலிஸ்தர் கடைசி முறையாக வருவதற்கு முன்பாக, அவள் அவனைத் தன் மடியில் நித்திரை செய்யப்பண்ணி, ஒருவனை அழைத்து, அவன் தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்து, அவனை சிறுமைப் படுத்தத் தொடங்கினாள். அவன் பலம் அவனை விட்டுநீங்கிற்று. எளிதில் அவன் சிறைப் பட்டுப்போனான்.

தெலீலாளைப் போன்ற பெண்கள் இன்றும் உலகில் வாழ்கிறார்கள். பணத்திற்கு ஆசைப்பட்டு, ஆண்களைத் தங்கள் அழகினால் மயக்கும் பெண்களுமுண்டு. அப்படிப் பட்ட பெண்களால் வஞ்சிக்கப்படும் வாலிபருமுண்டு. முன்னே நாம் பார்த்தபடி பண ஆசையே இவ்வாறான பாவங்களுக்கெல்லாம் வேராயிருக்கிறது.

அன்பான சகோதரியே, உன் வாழ்க்கை எப்படி யிருக்கிறது? தெலீலாளைப் பின்பற்றவேண்டாம். "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்கு பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" (நீதிமொழிகள் 31:30) கர்த்தருடைய வசனத்தின்படி உன்னைக் காத்துக் கொண்டு, உன் வழியை சுத்தம்பண்ணு. உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நீ நடப் பாயானால், தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார். இளவயதும், வாலிபமும் மாயையே எனவே, என் அன்பார்ந்த சகோதரியே, இதுவரை நீ உன்வழியில் நடந்து, உன் இச்சைகளுக்கு இடங்கொடுத் திருந்தால், இன்றே மனந்திரும்பு. "என்னிடத்தில் வருகிறவர்களை நான் புறம்பே தள்ளுவதில்லை" என்று கூறிய ஆண்டவர் உனக்காக காத்துக்கொண்டிருக்கிறார். உன்னை இரட்சிக்க, இப்படிப்பட்ட பாவங்களிலிருந்து விடுவிக்க, நித்திய ஜீவனை அளிக்க, உன் பேரை ஜீவ புஸ்தகத்தில் எழுத, அன்போடு உன்னை அழைக்கிறார். அவர் சத்தத்தைக்கேட்டு அவரண்டை வா.

அத்தியாயம் XVIII

கர்த்தரின் வழிவிட்டு விலகின ஸ்திரீகள்

94. லோத்தின் மனைவி (ஆதியாகமம் 19:1-30)

லோத்தின் குடும்பம் சோதோமில் செழித்தோங்கியதாகக் காணப்பட்டது. லோத்தின் மனைவி தேவனிடத்தில் முழு இருதயத்தோடும் சாராது, உலகப் பொருட்களை அதிகமாக விரும்பினாள். சோதோமின் பாவம் கர்த்தருடைய சந்நிதியில் வந்தெட்டியபொழுது, கர்த்தர் சோதோமை அழிக்க சித்தமானார். ஆபிரகாமின் மன்றாட்டைக்கேட்ட தேவன் லோத்தையும், அவனது குடும்பத்தினரையும் அழிவுக்குத் தப்புவிக்க தேவதூதர்களை அங்கு அனுப்பினார். லோத்து அவர்களை உபசரித்தான். அவர்கள் அங்கு இராத்தங்கி, தாங்கள் வந்த நோக்கத்தை அறிவித்தார்கள். அவனது குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அழைத்துக்கொண்டு தப்பி ஓடும்படி சொன்னபோது, லோத்து தனது குமாரத்திகளை விவாகம் பண்ணப்போகிற மருமக்களை அழைத்தான் அவர்களோ பரிகாசம் பண்ணி, உடன்வர மறுத்துவிட்டனர்.

தேவதூதர்கள் தங்கள் திட்டத்தைக் கூறியும், லோத்தின் குடும்பத்தார் உடனே தேவதூதனுடைய வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல் போனார்கள். அவர்கள் தாமதித்தும், கர்த்தர் அவர்கள்மேல் வைத்த இரக்கத்தினால், தேவதூதர்கள் அவர்களைக் கையைப்பிடித்துப் பட்டணத்திற்கு வெளியே கொண்டுபோய்விட்டு, "உன் ஜீவன் தப்ப ஓடிப்போ, பின்னிட்டுப்பாராதே; இந்த சம பூமியில் எங்கும் நில்லாதே" என்று துரிதப்படுத்தினார்கள். லோத்தின் மனைவியின் இருதயமும், ஜீவனும் சோதோமிலுள்ள அவளது ஆஸ்திகளோடு ஒன்றாக இணைக்கப்பட்டிருந்தது. பரத்திலிருந்து இறங்கி வந்த தூதர்களாலும்

அவளை மீட்க முடியவில்லை. அவள் கர்த்தரின் வார்த்தைகளுக்குக் கீழ்ப்படியாமல், அவர் சொல்லைமீறி தான் விட்டுவந்த அந்த அக்கிரமம் நிறைந்த நகரையும், அதிலுள்ள தனது செல்வத்தையும் திரும்பிப்பார்த்தாள். உப்புத்தூண் ஆனாள். அதற்கு மாறாக, அவள் தனக்குண்டான யாவற்றையும் வெறுத்து, கர்த்தரை விசுவாசித்து, அவருடைய சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, மாயையாகிய பூமியை பின்னோக்கிப்பாராது, கர்த்தர் கொண்டுசெல்லும் அத்தேசத்திற்கு நேராகத் தன் கண்களைத் திருப்பியிருந்தால், அவளது வாழ்வு வேறு வகையில் நன்முறையில் அமைந்திருக்கும்.

ஆண்டவராகிய இயேசுவும்கூட லோத்தின் மனைவியை ஒரு எச்சரிப்பாக எடுத்துக்கொள்ளும்படி கூறுகிறார். ''லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள்'' என்றார் (லூக்கா 17:32). நாம் இந்த உலகத்தை லோத்தின் மனைவியைப்போல பின்னிட்டுப் பாராது, இலக்கை நோக்கித் தொடருவோம். பாரமான யாவற்றையும், நம்மைச்சுற்றி நெருங்கி நிற்கும் பாவத்தையும் பாரத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்கிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடி, முடிவில் வாடாத ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வோம். (எபிரேயர் 12:1; I கொரிந்தியர் 9:24,25).

95. மீகாள் (I சாமுவேல் 18:20-30)

மீகாள் சவுல் ராஜாவுடைய மகள் ''சவுல் கொன்றது ஆயிரம், தாவீது கொன்றது பதினாயிரம்'' என ஸ்திரீகள் தாவீது கோலியாத்தைக் கொன்றதைக் குறித்து ஆடிப்பாடியதைக்கண்ட, சவுல் தாவீதின்மேல் பொறாமைக்கொண்டான். அவன் தாவீதை ஒழிக்க வகை தேடினான். இதற்கிடையில் சவுல் தன் மகளாகிய மீகாள் தாவீதை விரும்புவதாக அறிந்தான். அவள் மூலமாக தாவீதை ஒழிக்க எண்ணிய சவுல், தாவீதை பெலிஸ்தரின் கையில் விழப்பண்ணும்படி, மீகாளுக்காக நூறு பெலிஸ்தரின் நுனித்தோல்களை கொண்டு வருமாறு கூறினான்.

தாவீது, மீகாளின் மீது கொண்ட அன்பால் அவ்வாறே செய்தான். பின் அவளை விவாகம்பண்ணினன். இருவரும் சந்தோஷமாக வாழ்ந்தனர். சவுல் தாவீதை காவல் பண்ணி, மறுநாள் அவனைக் கொன்று போடும்படி அவன் வீட்டிற்கு ஆளை அனுப்பினன். இதையறிந்த மீகாள் அதைத்தன் கணவனுக்கு அறிவித்து அவனை ஜன்னல் வழியாய் இறகிக்விட்டு, அவன் தப்பிச் செல்ல வழிப் பண்ணினள்.

இவ்வாறு, இவர்களிருவரும் இணைந்து வாழ்ந்த போதிலும், தாவீது சவுலுக்குத் தப்பியோடி திரிந்த நாட்களில் சவுல் அவளை பல்த்தியேலுக்கு மனைவியாகக் கொடுத்தான். தாவீது உயிரோடிருக்கையிலேயே அவள் வேறொருவனுக்கு மனைவியாகவாழத் துணிந்துவிட்டாள். தன் கணவன் கஷ்டப்படுகிறான் என்ற கரிசனையில்லாது, அவள் இவ்வுலக ஆசாபாசங்களுக்கு அடிமையாக்கித் தன் கணவனுக்குத் துரோகம் இழைத்தாள். அவள் பல்த்தியே லோடு வாழ்ந்து வந்தாள்.

சவுலும், யோனத்தானும் யுத்தத்தில் மடிந்த பின்னர், சவுலின் குடும்பத்துக்கும், தாவீதுக்கும்நெடுநாள் யுத்தம் நடந்துக் கொண்டிருந்தது. சவுலின் குடும்பத் திற்கு உதவியாயிருந்த அப்னேர், அவர்களுக்கு விரோத மாகத் திரும்பி, தாவீதிடம் சமாதானம் பேசி, அவனை இஸ்ரவேலனைத்திற்கும் ராஜாவாகும்படி கேட்டுக்கொள்ள வந்தான். அப்பொழுது தாவீது, அப்னேர் மீகாளை தன்னிடம் அழைத்து வந்தால், அவனோடு உடன்படிக்கை செய்துக் கொள்ளுவதாகச் சொன்னன். அவ்வாறே மீகாளை அப்னேர், பல்த்தியேலிடமிருந்து பிரித்து வந்தான். பல்த்தியேல் அவள் பிறகாலே அழுதுக்கொண்டு வந்தான். இவ்வாருக அவள் தனது இரண்டாம் கணவனை யும் கைவிட்டு, மறுபடியுமாக தாவீதிடம் வந்துசேர்ந்தாள் அவள் தன் வசதிக்காக கணவன்களைகூட மாற்றத் துணிந்தாள்.

தாவீது கர்த்தருடைய பெட்டியை ஒபேத் ஏதோமின் வீட்டிலிருந்து எருசலேமுக்குக் கொண்டு வரும்போது, அவன் அதன் முன்னல் நடனமாடி வந்தான்.

இதை ஜன்னல் வழியாகப் பார்த்த மீகாள், தன் இருத யத்திலே அவனை அவமதித்தாள். ஒருவேளை அவள் மற்ற புருஷனுடன் வாழ்ந்ததினால், தாவீதை முன் போல் நேசியாமலிருந்திருக்கலாம். தாவீது தன் வீட்டாரை ஆசீர் வதிக்கும் படி வந்தபோது அவள், ''இன்று தம்முடைய ஊழியக்காரருடைய பெண்களுக்கு முன்பாகத் தம்முடைய வஸ்திரங்களை உரிந்துப் போட்டிருந்த இஸ்ரவேலின் ராஜா இன்று எத்தனை மகிமைப்பட்டிருந்தார்'' என்றாள். இது அவமதிப்போடு, ஆணவத்தையும் காட்டுகிறது. தாவீதோ, தான் கர்த்தருக்கு முன் இன்னும் நீசனும், அற்பனுமாவதாகக் கூறினான். இவ்வாறு மீகாள் அவமதித்தது, தாவீதை மட்டுமல்ல. தேவனாகிய கர்த்தரும் அவமதிக்கப்பட்டார். ஆகையால், அவள் மரணமடையு மட்டும் அவளுக்கு பிள்ளையில்லாதிருந்தது.

இவ்விதமான தண்டனையடைய மீகாள் செய்த தவறுகளை நாம் செய்யாதிருப்போமாக கர்த்தருக்கும், உங்கள் கணவருக்கும் நீங்கள் மதிப்பு கொடுத்து, ஆணவத்தை விடுத்து, அவர்களுக்கு அடங்கி நடந்து ஆசீர் வாதங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள். மீகாளின் வழியில் நடந்து சாபத்தை வருவித்துக் கொள்ளாத படி கவனமாயிருந்து கர்த்தரின் பேராசீர்வாதங்களை அவர் பாதத்திலிருந்து பெற்று அவருக்கு மகிமையாக வாழ அவர் அருள் புரிவாராக.

96. தீனாள் *(ஆதியாகமம் 34)*

தீனாள் யாக்கோபின் மனைவியாகிய லேயாளுக்கு பிறந்தவள். அவள் தன் தேசத்துப் பெண்களை பார்க்கப் போகையில் சீகேம் என்ற பிரபு அவளைக் கண்டு, அவளுடைய மனதிற்கு இன்பமாகப் பேசினான் அவன் தன் தகப்பனாகிய ஏமோரை பார்த்து அந்த பெண்ணை தனக்கு விவாகம் பண்ணுவிக்கும் படி கேட்டான். அவன் அவளுக்காக காத்திருக்காமல் அவளை தீட்டுப்படுத்தினான். அதனால் யாக்கோபின் குமாரர் கொதித்தெழுந்து,

அவனையும், அவனை சேர்ந்தவர்களையும் வஞ்சகமாக விருத்தசேதன உடன் படிக்கைக்கு உட்படுத்தி, அந்த பரிசுத்தமான தேவனோடு செய்ய வேண்டிய உடன் படிக்கையைப் பரிசுத்த குலைச்சலாக்கினார்கள் அடுத்து அவர்கள் துணி கரமாய் பட்டணத்திற்குள் சென்று, அப் பட்டணத்திலுள்ளோரை கொன்று குவித்தனர். இதனால் கானானியரிடமும், பெர்சியரிடமும், யாக்கோபின்வாசனைக் கெட்டது' அவர்கள் அதினால் தங்கள் தந்தையிடமிருந்து ஆசீர்வாதத்திற்குப் பதிலாக சாபத்தை பெற்றனர்.

நமது வாலிபப்பிள்ளைகளுக்கு நாம் ஓரளவு சுதந்தரம் கொடுத்தாலும், அவர்களிடம் தேவ பயத்தை புகுத்தி, அவர்களை மிகுந்த கவனத்தோடும், எச்சரிப் போடும் வளர்க்க வேண்டும். தீனாள் ஓர் அழகியப்பெண். ஆனால் அவள் அழகு அவளைக் கெடுத்தது. "சௌந்த ரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப்பயப் படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" (நீதிமொழிகள் 31:30) நீ உன் வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை. (பிரசங்கி 11:9,10;12:1; சங்கீதம் 119:25) என்றவாக் கின்படி, நாம் நமது வாலிபப் பிள்ளைகளை தேவனைப் பற்றும் அன்பிலும், பயத்திலும் வளர்க்க வேண்டும்.

எனது அருமையான வாலிபப்பிள்ளைகளே, வாலிபம் வாழ்க்கையில் மிகவும் விரும்பப்படத்தக்க பருவ மாகும். இது ஒரு வளமான வயது. உன் வாலிபப்பிராயத் திற்காக இருவர் துடித்துக் கொண்டிருக்கின்றனர். ஒருவர் இயேசு, மற்றொருவன் பிசாசு. இயேசு இந்த வாலிபவயதில் உன்னை ஆட்கொண்டு, உன்னை நல்வழிப்படுத்தி, தன் செட்டைகளின் மறைவில் வைத்து, காத்து, தனக்கு உகந்த பாத்திரமாக மாற்ற உனக்காக காத்துக் கொண் டிருக்கிறார். ஆகையால் நீங்கள் இப்பிரபஞ்சத்திற்குரிய வேஷந்தரியாமல், உங்கள் சரீரங்களை பரிசுத்தமும் தேவ னுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுங்கள் ரோமர் 12, 1) அப்பொழுது அவர் உங்களை அரவணைத்து ஆசீர்வதிப்பார். அன்றி, யாரை விழுங்கலாமோவென சுற்றித்திரிகின்ற இப்பிரபஞ்சத்தின் அதிபதியாகிய பிசா

சானவனுக்கு நீங்கள் அடிமைப்பட்டு விடுவீர்களானல், அவன் உங்களை என்றும், மீள முடியாத எரி நரகத்துக்கு அழைத்து சென்றுவிடுவான். (I பேதுரு 5;5-10) எனவே, நீங்கள் ஆண்டவருக்கு உங்களை ஒப்புக்கொடுத்து, அவரது அன்பின் கரங்களுக்குள்ளே அமர்ந்திருந்து வாழ்வீர்களா? அப்பொழுது உங்கள் வாலிபம் உங்களுக்கும், அவருக்கும் மகிழ்ச்சியையும், மகிமையையும், நிம்மதியையும் கொண்டு வரும் (சங்கீதம் 119:8)

97. எப்சிபாள்-மனாசேயின் தாய்

(II ராஜாக்கள் 21:1-17)

எப்சிபாள் மனாசேயின் தாய். எசேக்கிய ராஜாவின் மனைவி ஆவாள். எசேக்கியா ராஜாவோடு வாழ்ந்து, அவனது நற்கிரியைகள், தேவனுக்கு பயப்படும் பயம், அவன் தேவனிடத்திலிருந்து கேட்டு, அற்புதமாக தன் ஆயுசு நாட்களுடன், பதினைந்து வருடங்களைக் கூட்டிக் கொண்டது எல்லாவற்றையும் அறிந்திருக்க வேண்டும். அப்படியிருந்த போதிலும், அவள் தன் மகனாகிய மனாசேயை கர்த்தருக்குகந்தவனாக வளர்க்கவில்லை. அதனால் மனாசே தன் தந்தை செய்த சீர்திருத்தங்களையெல்லாம் குலைத்துப் போட்டு, தேவனுக்கு முன்பாக தீமையை செய்தான்: அதனால், நாடும் அவனும் இன்னலுக்குள்ளாயினர்.

அருமையான தாய்மாரே, எப்சிபாள் தன் பிள்ளை சூதாட, கெட்ட நண்பர்களுடன் பழக, அந்நிய தேவர்களை பின்பற்ற, குற்றமில்லாத இரக்கத்தை சிந்த முன் வரும் போது, அவள் தொடக்கத்திலேயே தடுத்து, உபவாசித்து, ஜெபித்து, கடவுளுடைய கிருபையை சார்ந்திருந்தாளானால், நிச்சயமாக இந்த கேடு வந்திருக்க முடியாது. ''அந்நிய தேவர்களை பின்பற்றுகிறவர்களுக்கு வேதனை பெருகும். அவர்கள் செலுத்துகிற இரத்த பான பலிகளை நான் அங்கீகரிக்க மாட்டேன்'' என்று ஆண்டவர் சொன்னார். எசேக்கியா தேவனுடைய பிள்ளை என்று, ஏசாயா 38-ம் அதிகாரத்திலும், II இராஜாக்கள் 20-ம் அதிகாரத்திலும் நாம் பார்க்கிறோம். அவனது மகனுக்கு

இந்நிலை ஏற்பட்டிருக்க வேண்டாம். மனுசேயின் தாய் தன் கடமையை செய்யத் தவறினாள். மனாசே ராஜா வாகும் பொழுது 12 வயதே நிரம்பியவனுகயிருந்தான். வாலிபனாகக் கூட இருக்கவில்லை. எனவே, தாயின் போதனைகளை அவள் கவனித்து நடந்திருக்கக்கூடிய வயது. எப்பொள் தன் தவறினுலே தனது மகனின் வாழ்வை யும், அதோடு அவனது நாட்டின் வாழ்வையும் பாழ் படுத்தினுள். அதே மனுசே, பிற்கால வாழ்வில் தன் தவறை தானே உணர்ந்து திருந்தினுன். ஆகவே, அவன் தாய் சிறு வய்திலேயே அவனை நல்வழி படுத்தியிருந்தால், நிச்சயமாகவே அவன் தீயவழியில் சென்றிருக்கமாட்டான். அவள் தன் மகனுக்கு தன் கணவனின் நல்வாழ்வை பின் பற்ற போதித்திருக்க வேண்டும். நாமும் நமது பிள்ளை களை எவ்வாறு வளர்க்கிறேம் என்பதில் கவனமாயிருப் போமாக. நல்வழி படுத்தாதினுல் பிள்ளைக்கும், அவன் தாய்க்கும் சாபம் உண்டாகிறது. இந்த விதமான நிலை வராதபடி தாய்மார் கவனித்துக்கொள்ள தேவன் கிருபை செய்வாராக. கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனை யிலும், வளர்க்க முன் வாருங்கள். தேவன் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பார். (எபேசியர் 6;1-4)

98. பெனின்னுள் (I சாமுவேல் 1:1-4)

பெனின்னுள் எல்க்கானாவின் மனைவி அன்னுள் அவனுடைய மற்றொரு மனைவி. பெனின்னுளுக்கு பிள்ளை கள் இருந்தனர். அன்னுளுக்கோ பிள்ளைகள் இல்லை. அதினால் எல்க்கானா அன்னாளிடத்தில் மிகவும் பிரியமா யிருந்தான். அதினால் பெனின்னாள், அன்னாளை துக்கப் படுத்தும் வகையில், அவளை நிந்தித்து விசனப்படுத்தினுள். அன்னாள் அழுதுக்கொண்டிருந்தாள். இன்றைக்கும், பெனின்னுளைப் போன்ற பெண்கள் இருக்கின்றனர். மற்ற பெண்களைவிட தாங்கள் அழகிலோ, புத்தியிலோ, செல்வத் திலோ, அல்லது மற்றெவ்விதத்திலோ சிறந்து விளங் கினுல், பெருமைக்கொண்டு, மற்றவர்களை அற்பமாக எண் ணுவார்கள். ஆனால் ஆண்டவர் எளியவர்களையும்,

கஷ்டத்திலிருப்பவர்களையும், எப்பொழுதும் கண்ணோக்கிப் பார்க்கிறார் என்பதை மறந்துவிடுகிறார்கள். "கர்த்தரின் கண்கள் எவ்விடத்திலுமிருந்து நல்லோரையும், தீயோரையும்" நோக்கிப்பார்க்கிறது. (நீதிமொழிகள் 15:13) "ஒடுக்கப்படுகிற யாவருக்கும் கர்த்தர் நீதியையும், நியாயத்தையும் செய்வார்" (சங்கீதம் 103 6) அதுபோலவே, தேவன் அன்னாளுக்கு இரங்கி ஒரு அரிய புத்திரனைக் கொடுத்தார்.

பெனின்னாளுக்கு அநேக பிள்ளைகளிருந்தும், அவளுடைய பிள்ளைகள் ஒருவரை பற்றியாவது நாம் வேதத்தில் வாசிப்பதில்லை. ஆனால் அன்னாளுக்குப்பிறந்த செல்வனோ, இஸ்ரவேலிலே ஒரு பெரிய தீர்க்கதரிசியாய் விளங்கினார். பெனின்னாளைப்பற்றியும் நன்மையானது எதுவும் கூறப்படவில்லை.

இந்த பெனின்னாளின் போக்கு எல்க்கானாவுக்கு எரிச்சலை மூட்டியிருக்கலாம். எனவே, அவன் அன்னாளை இன்னும் அதிகமாக நேசித்தான். கணவனின் பரிபூரண அன்பு அன்னாளுக்கே கிடைத்தது. பெனின்னாளுக்கல்ல அவள் தன் கணவனை குறிப்பறிந்து அவனுக்கு இதமாக நடந்திருந்தால் அவளுக்கும் அவ்வித பாக்கியம் கிட்டியிருக்கும்.

எனவே, நாம் யாரையும் அற்பமாக எண்ணலாகாது. அவர்களது மனம் புண்படும்படி பேசலாகாது. நாம், நமது நாவும் நெருப்புத்தான் என்பதையுணர்ந்து, அதை நமது கட்டுக்குள் வைத்திருக்க வேண்டும். "யாகாவாராயினும் நா காக்க" என்பது வள்ளுவர் வாக்கு. யாக்கோபும், "நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப் பேசும்" என்றும் (யாக்கோபு 3:5), "நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது" என்றார் (யாக்கோபு 3:5-14). ஆகையால், நாம் அடங்காத பொல்லாங்குள்ளதும்,

சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமான நமது நாவை அடக்கிப் பிறரைபற்றிப் புறங்கூறுதலையும் ஒழித்து, அந்தச் சிறிய அவயவத்தால் கர்த்தரைத் துதிக்கப் பயன் படுத்துவோமாக. சங்கீதக்காரனைப் போல், ''என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும், என் வாயை கடிவாளத்தால் அடக்கி வைப்பேன்'' என்று சொல்லி, நமது வாயைக் காத்துக் கொள்வோமானால், அநேக பாவங்களுக்கு நீங்கலாவோம்.

99. பெர்னிக்கேயாள்

(அப்போஸ்தலர் 25:13,23;26:1-32)

பெர்னிக்கேயாள் ஒரு மகா பொல்லாத ஸ்திரீ என்பதே அக்காலத்திலுள்ளோரின் அபிப்பிராயம். இவள் ஏரோதின் வம்சத்தில் பிறந்து, ஏரோதியாளைப் போலவே பாவ வாழ்வில் ஈடுபட்டாள். இவள் தனது கணவனை விட்டுப்பிரிந்து, தனது சகோதரனான இரண்டாவது அகிரிப்பா ராஜாவுடன் வாழ்ந்து வந்தாள். பவுல் நியாயந் தீர்க்கப்படும்போது இவள் அகிரிப்பா ராஜாவுடன் வாழ்ந்தாள். பவுல் குற்றமற்றவன் (அப்போஸ்தலர் 26:30,31) எனத் தெரிந்த பின்னரும்கூட, அவனது போதகத்திற்கு அவள் செவிகொடுக்க மறந்துவிட்டாள். இவளும், தன் கணவனும்இரட்சிப்புக்கேற்ற சுவிசேஷத்தைக் கேட்டும் அதை ஏற்றுக்கொள்ள விருப்பமற்று காணப் பட்டார்கள். (அப்போஸ்தலர் 26:27,28). விருப்பமற்ற நிலையில் கணவன் இருந்திருந்தாலும், இவளாவது சத்தி யத்திற்கு செவிகொடுக்க கணவனை தூண்டியிருக்கலாம். பெர்னிக்கேயாளைப்போல இந்நாட்களிலும் அநேக ஸ்திரீகள் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மனமற்று காணப் படுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்காக ஜெபிப்போமாக.

நம்முடைய நிலையை நாம் இங்கு சற்று ஆராய வேண்டும். ஒருவேளை நாம் இவர்கள் சென்ற தீயவழியில் செல்லாதிருக்கலாம். ஆனால் நம்மில் பாவமில்லையென்று நாம் ஒருவரும் சொல்ல முடியாது. பரிசுத்த ஆவியான

வர் தமது ஊழியர் மூலம், நமது பாவங்களை உணர்த்தும் போது, நாம் அவர்களது வார்த்தைகளுக்குச் செவி கொடுக்கிறோமா? சாக்குப் போக்குச் சொல்லித் தள்ளிப் போடுகிறோமா? சற்றே சிந்திப்போம். நாம் நமது இச்சைகளுக்கு இடங்கொடாதிருப்போமாக. ஏனெனில் இச்சை கர்ப்பந்தரித்து பாவத்தை பிறப்பிக்கும் (யாக்கோபு 1:5) நமது தேவன் எசேக்கியா தீர்க்கதரிசியின் மூலம் செப்பின வார்த்தைகளாகிய, ''நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக'' (எசேக்கியா 3:17-21) இந்த வார்த்தைகளுடன் அனுப்பும் தேவ ஊழியரின் எச்சரிப்பின் சத்தத்தைக் கேட்டு, தேவனால் உணர்த்தப்படும்போது. அலட்சியம் செய்யாது, நமது பாவங்களை அறிக்கையிட்டு, மனந்திரும்புவோமானால், அவர் நமது பாவத்தை அகற்றுவார். அவரே நமது பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி. அவர் நமது பாவங்களை தாமே சுமந்து, அவைகளை சமுத்திர ஆழங்களில் போட்டு விடுவார். நாம் நமது பாவமற சுத்திகரிக்கப் படுவதால், அவரது இரட்சிப்பின் சந்தோஷத்தைப் பெறுவோம். அதனால் நமது ஆவி உற்சாகமடைந்து, நாம் அவருக்கு சாட்சிகளாக மாறுவது மாத்திரமல்ல, பாதகருக்கு அவரது வழிகளை உபதேசித்து அவர்களை கர்த்தரிடத்தில் திரும்பச் செய்வோம்.

100. துருசில்லாள் (அப்போஸ்தலர் 24:24-27)

துருசில்லாளும் இரண்டாம் அகிரிப்பா ராஜாவின் சகோதரியே. இவள் தன் முதல் கணவனை விட்டு, பலஸ்தீனுவின் தேசாதிபதியாகிய பேலிக்ஸ் என்பவனை மணந்து கொண்டாள். யூதப்பெண்ணான இவள் இவ்வாறு நடந்துக் கொண்டதால் இஸ்ரவேல் மக்களுக்கு இவள்மேல் வெறுப்பு இருந்தது.

பவுல் நியாயந்தீர்க்கப்பட்டபோது, துருசில்லா பேலிக்ஸ் முன்னிலையில் பவுலின் வார்த்தைகளைக் கேட்டிருக்கின்றாள். இருளை விட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும், மக்களை திருப்புவது தான் தனது நோக்கம் என்பதைத் தெளிவாகக் கூறின பவுலின் வார்த்தைகளைக் கேட்டாள். இவள்

ரோம ராஜ்யத்தில் மிகுந்த செல்வாக்குள்ளவளாக விளங்கிஞள். ஆஞல் இவள் துன்மார்க்கத்தில் ஊறிப்போனதால், இந்த தேவ மனிதனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிய மறுத்து விட்டாள். நியாயத்தீர்ப்பின்போது அவர்கள் தங்கள் மனசாட்சியில் குத்தப்பட்டதால், மறுபடியும் வேருெரு சமயம் கேட்பதாகக் கூறிவிட்டனர். (அப்போஸ்தலர் 24;24)

பவுலிடமிருந்து ஏதாவது லஞ்சம் கிடைக்குமென்று அநேகந்தரம் கூப்பிட்டு விசாரிக்கிருன் பேலிக்ஸ். லஞ்சம் வாங்க கணவன் செய்யும் தந்திரத்தை இவள் கவனித்து, தன் கணவனை புத்தி சொல்லி திருத்தவில்லை. பண ஆசை எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது. பண ஆசையினுல் நீதிமானை குற்றவாளியாக சிறையில் விட்டுச் சென்ருன். நியாயத்தைப் புரட்டாமலும், முகதாட்சண்யம் பண்ணுமலும், பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக. பரிதானம் ஞானிகளின் கண்களை குருடாக்கி, நீதிமான்களின் நியாயத்தை தாறுமாருக்கும் (உபாகமம் 16:19; ஏசாயா 5:23; யோபு 15:34). நியாயத்தைப் புரட்டி, பரிதானம் வாங்கி சேர்த்து வைத்தாலும் அக்கினி அதை பட்சிக்கும் பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். நீ நன்மை செய்தால் மேன்மை அடைவாய். நன்மை செய்யாவிட்டால் பாவம் பின் தொடரும் பவுலை விடுதலை செய்ய பேலிக்ஸோடு சொல்லி இவள் விடுவித்திருக்கலாம். விடுவிக்காமல் போய் விட்டாள். ''நன்மை செய்ய திராணியிருந்தும் செய்யத்தக்கவர்களுக்கு நாம் செய்யாமலிருப்பது பாவம் (யாக்கோபு 4:17; நீதிமொழிகள் 3:27). பிரியமானவர்களே, இவளைப் போன்று திராணியிலிருந்து செய்யத்தக்கவர்களுக்கு செய்யாமல் கண் ஜாடையாய் இருந்தால் தேவசமுகத்தில் அது குற்றமாகும். ஆகையால், நன்மை செய்யத் திராணியிருக்கும் போது செய்யத்தக்கவர்களுக்குச் செய்ய வேண்டும். துருசில்லாளைப் போலிருக்க வேண்டாம்.

101. வஸ்தி (எஸ்தர் 1)

இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரை 127 நாடுகளை அரசாண்ட அகாஸ்வேரு ராஜா, தன்

ராஜ்யபாரத்தின் மூன்றும் வருஷத்திலே தன்னுடைய பிரபுக்களுக்கும், ஊழியருக்கும் ஒரு பெரிய விருந்து பண்ணினன். அதில் பிற நாட்டு பிரபுக்களும், அதிபதிகளும் கலந்துக் கொண்டனர். அவன் தன் மகிமையையும், மகத்துவத்தையும், ஐசுவரியத்தையும் 180 நாட்கள் விளங்கச் செய்துக் கொண்டிருந்தான். அதன் பின்னர் தன் நாட்டிலுள்ள அனைத்து மக்களுக்கும் ஏழு நாள் விருந்து பண்ணினான். மதுபானம் பண்ணுவதில் யாருக்கும் எந்த வித தடையும் விதிக்கப் படவில்லை. ராஜ ஸ்திரீயான வஸ்தியும், ஏழு நாட்கள் தேசத்து ஸ்திரீகளுக்கு ஒரு விருந்து செய்தாள்.

வஸ்தி மிகவும் அழகுள்ளவள். ஏழாம் நாளிலே எல்லோரும் மதுபானத்தில் களித்திருக்கும்போது, மகா ரூபவதியான தனதுமனைவியின் எழிலைபிரபுக்களுக்கும்ஏனைய மக்களுக்கும் காண்பிக்கும் படியாக, ராஜ கிரீடத்துடன் அவளை அழைத்து வருமாறு தன் பிரதானிகளுக்கு ராஜா கட்டளையிட்டான். அப்பொழுது வஸ்திஅங்கு வர மறுத்து விட்டாள். அதன்விளைவாகஅவன் பட்டத்தரசியின் பதவி யிலிருந்து நீக்கப்பட்டதுடன், அவள் ராஜ சமுகத்தில் பிரவேசிக்கவும் கூடாது என்ற கட்டளையும் பிறப்பிக்கப் பட்டது.

வஸ்தி தான் அழைக்கப்பட்டபோது, அங்கு செல்ல மறுத்தக் காரணம், கணவனை கண்டு களிக்க வேண்டிய தன் எழிலை, அவள் குடிவெறியிலிருந்த ஏனைய மக்களுக்கு காண்பிக்க விரும்பவில்லை என்பதே. அவள் விரும்பாவிட்டாலும் ராஜாவின் கட்டளைக்கு கீழ்ப்படிவது அவள் கடமை. அவளை ராஜவஸ்திரத்துடனும், ராஜா கிரீடத்துடனும், தனது கணவனுன ராஜாவும், மற்ற அதிபதிகளும் பார்க்கும் படி அவளை வரவழைத்தப் போது அந்த அழைப்பை நிராகரித்து தவருன செயலாகும். ஒரு மனைவி தன் கணவன் வார்த்தைகளுக்குத் கீழ்ப்படிய வேண்டியவள்.

அந்தப் பிரதானிகள் ராஜாவைப் பார்த்து,

''அவள் உம்மை மாத்திரம் அவமதிக்கவில்லை. 127 நாடுகளின் அதிபதிகளுக்கும். மற்ற மக்களுக்குப் அநியாயஞ் செய்தாள். ராஜாத்தியாகிய வஸ்கி, ராஜா அழைத்தாலும் வரமாட்டேன் என்று கூறியதால், ராணியின் செய்தி மற்ற ஸ்திரீகளுக்குத் தெரியவந்தால், அவர்களும் தங்கள் கணவன்மார்களை மதிக்க மாட்டார்கள். ஆகையால் இவள் பட்டத்தரசி என்ற பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும் என்றனர். அது மட்டுமல்ல, அவள் ராஜசமுகத்தில் ஒரு போதும் பிரவேசிக்கக் கூடாது என பெர்சியருக்கும், மேதியருக்குமான தேசச் சட்டத்தில் இது எழுதப்பட்டுவிட்டது மாரூத கட்டளையுமாகி விட்டது. இதுபோல இயேசுகிறிஸ்துவின் கட்டளைகளுக்கு அப்படியே கீழ்ப்படிய மறுக்கிற அனைவருக்கும் மேல் தேவ கோபாக்கினை வரும் (எபேசியர் 5:6). கணவன்மாருக்கு கீழ்ப்படியாத, மதிக்காத பெண்களுக்கு இது ஒரு சரியான பாடமாகும். நமது குடும்பங்களில் வஸ்தியின் நிலைமையாருக்கும் வராதிருக்க நாம் ஜெபிப்போம.

பல நிலையில் உட்பட்ட 101 பெண்களை படித்து தியானித்த அருமையானவர்களே!

நாம் நமது வாழ்க்கையின் அடித்தளத்தில் ஆண்டவருடைய பரிபூரண சித்தத்திற்கு நம்முடைய வாழ்க்கையை அர்ப்பணம் செய்ய வேண்டும்! நம்மை அர்ப்பணம் செய்து வாழும் போது நம்மை மடக்க பல தந்திரங்களை கையாள்வான் சாத்தான். அவனை முறியடிக்க இறையருள் பெற்றுஜெயம் பெறல்வேணடும்.

1952-வது வருஷம் நடந்த ஒரு சம்பவத்தை குறிப்பிடுகிறேன். ஒரு நாள இந்த வனாந்தர வாழ்க்கை எனக்கு வேண்டாம் சுவாமி என்னுடைய 60-வது வயது வரையிலும் நிம்மதியாக வீட்டிலமர்ந்து மற்றவர்களுக்காக ஜெபித்து அதன் பிறகு ஊழியம் செய்வேன் என்று சொன்னேன். ஒரு அடி முன் வரும்போது இரண்டு அடி பின்னிழுக்கக்கூடிய பிரச்சனைகளும் போராட்டங்களும் குறுக்கிட்டது என் பெற்றோரால், அப்போது ஒரு சத்தம்

கேட்டேன். இதோ பார்! உனக்காக இந்த பாடுகளுக்குள்ளானேன். இந்த சத்தம் கேட்கவே ஆண்டவராகிய இயேசு கல்வாரி சிலுவையில் எப்படி தொங்கியிருப்பாரோ, அதே காட்சியை என் கண் கண்டது அவர் என்னை பார்க்கும்போதே அவர் கண்களிலிருந்து இரத்த கண்ணீராய் ஓடுவதை பார்த்தேன். அக்காட்சிதனை கண்ட நான், எனக்காக இப்பாடுகளுக்குள்ளீரென்றால் உமக்காக நான் எதையும் செய்வேன் என்று என்னை அர்ப்பணித்து முன் வந்தேன். அந்த 1952-ம் வருடத்திலிருந்து 1987-ம் வருடம் வரையிலும் இயேசு என் வாழ்க்கையில் வந்த எல்லா இக்கட்டுகளின் மத்தியிலும் நல்லவராகவும் வல்லவராகவும் இருக்கிறார் மலைபோன்ற துன்பங்களையும், பனி போல மாற்றுகிறார். அவரின்றி ஒரு நிகழ்ச்சியும் நடக்காது.

ஒருநாள் ஒரு மிஷனெறி அம்மாவை ஒரு அம்மா தூற்ற ஆரம்பித்தாராம். நிரபராதியான மிஷனெறி அம்மா எதுவுமே பதில் கூறவில்லை தூஷித்த அம்மா மிஷனெறி அம்மாவிடம் தெரியாமல் கூறிவிட்டதாக மன்னிப்பு கேட்டாராம். அதற்கு மிஷனெறி அம்மா ஒரு கூடை நிறைய பஞ்சை எடுத்து கொடுத்து மேல் மாடியில் சென்று காற்றாலே விட்டு கீழே வாருங்கள் என்று சொல்லி அனுப்பினார்கள். அம்மா பஞ்சை மேல் மாடியில் போட்டதும் காற்று எல்லா பஞ்சையும் அடித்துக் கொண்டு போய்விட்டது என்று சந்தோஷமாக கூறினார்கள். மிஷனெறி அம்மா அவர்களிடம் காற்றில் விட்ட பஞ்சு அனைத்தையும் பொறுக்கி கொண்டு வருமாறு கூற இந்த அம்மா எப்படி பொறுக்குவது என்று வேதனைப்பட்டார்களாம். அப்போது மிஷனெறி அம்மாள் கூறினார்கள் நீங்கள் என்னைப்பற்றி தூற்றின வார்த்தைகளும் பஞ்சு போல் பறந்துவிட்டது. நான் மன்னித்து விட்டேன். கர்த்தரும் உங்களை மன்னிக்கட்டும் என்று கூறியதை கேட்ட அம்மா மிகவும் வருத்தப்பட்டார்களாம். நாம் மற்றவர்களை குறைகூறி தூற்றுகிறோமா? நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தருடைய சன்னிதானத்தில் நாம் நிற்போம். அன்று தப்புவதற்கு வழி இராது.

தாவீது ஒரு சந்தர்ப்பத்தில் சீமேயுவால் தூஷிக்கப் படுகிறான். அந்த சீமேயை கொன்று போடட்டுமா என்று தாவீதிடத்தில் கேட்டார்கள். அதற்கு தாவீது சொன்னார். கர்த்தரின் சித்தம் தூஷிக்கும் படியாயிருக்கலாம் என்று கூறினான். இவ்வாறு முன்னோடிகளான பரிசுத்தவான்கள் அவைகளை கர்த்தர் பாதத்தில் வைத்து விடுகிறார்கள். இறைவன் அவர்களை ஆசீர்வதித்து விடுகிறார் கர்த்தர் அதை பார்ப்பார். கர்த்தர் அதை கேட்பார். என்று சொல்கிறோமா? கர்த்தர் அதை பார்க்கும்போது யாருமே தப்ப முடியாது. நாம் அப்படிபட்டவர்களுக்காக ஜெபிக்கவும், புத்தி கூறவும் கடமைப்பட்டிருக்கிறோம். கர்த்தருடைய பெட்டி தாவீதின் நகரத்திற்குள் பிரவேசிக்கிறபோது சவுலின் குமாரத்தியாகிய மீகாள் பலகணிவழியாகப் பார்த்து தாவீது ராஜா கர்த்தருக்கு முன்பாக குதித்து நடனம் பண்ணுகிறதைக் கண்டு, தன் இருதயத்திலே அவனை அவமதித்தாள். அதினால் சவுலின் குமாரத்தியாகிய மீகாளுக்கு மரணமடையும் நாள் மட்டும் பிள்ளையே இல்லாதிருந்தது 2 சாமு 6:16,23. பிறரை குறை கூறுவதில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். என் இருதயத்தில் அக்கிரம சிந்தை கொண்டிருந்தேனானால் ஆண்டவர் எனக்குச் செவி கொடார். சங்கீதம் 66:18.

இந்த புஸ்தகத்தின் அட்டைபடத்தில் நாம் பார்க்கிறபடி பலஆண்டுகளுக்கு முன்னால் ஒரு கப்பல் உடைந்து. பலர் உடைந்த கப்பல் துண்டுகளை பிடித்து நீந்தி வரும்போது ஒரு அம்மா சிலுவையைப் போன்ற பாறை ஒன்றிருந்தது கண்டு அதை பிடித்துக்கொண்டார்கள். கடலின் கொந்தளிப்பிலிருந்து தப்பித்துக் கொண்டார்கள். இந்த உலகமாகிய சமுத்திரத்தில் நீந்துகின்ற நாம் அலைகளும், மீன்களும் போன்ற துன்பங்கள் நம்மை அமிழ்த்திவிடாதபடி இயேசுவை வேண்டுவோம். வானம் எனக்கு சிங்காசனம் பூமி எனக்கு பாதப்படி என்ற ஆண்டவரின் பாதத்தை பற்றிக்கொள்வோம்.

பண்டித ராமாபாயைப்போல், மதர்தெரசாவைப் போல், கார்மிக்கேல் அம்மையாரைப்போன்று வாழவும்,

றைந்த பிரதமர் இந்திராகாந்தி கூறினார். "என் னங்களுக்காக செயல்பட்டுக் கொண்டிருக்கும் போது மரித்தால் பெருமைப்படுவேன்" இதே ஆவல் நிறைந்தவர் களே மறைந்த பரிமளா மாசிலாமணி அம்மாவுமாகும் இது போல் நாம் ஜீவிக்கவும் பிறருக்காக உதவி செய்யவும் முன் வரவேண்டும்.

விதவைகள், திக்கற்றவர்கள், இவர்களுக்காக ஜெபிப்பதோடு நம்மால் முடிந்த அளவு உதவி செய்து அவர்களை ஆண்டவருக்கு நேராக வழிநடத்துவோம். அப்படிப்பட்டவர்களின் கண்ணீரை நாம் துடைக்கும்போது நமது கண்ணீரை ஆண்டவர் மாற்றுவார். சென்ற இரண்டு வருடங்களாக பெண்களை குறித்த இந்த புத்தகத்தை வெளியிட வேண்டுமென்று ஆண்டவரால் உணர்த்தப்பட்டு, அப்புறமாக குறிப்பெடுத்து சேர்த்து புத்தகவடிவில் அமைக்க சென்னையில் மதிப்பிற்குரிய ஐயாசாமி அம்மா இதற்கு அதிக உதவியாக இருந்தார்கள். அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய மதிப்பிற்குரிய கன்னியாகுமரி பிஷப் ஐயா அவர்களுக்கும், சென்னை பிஷப் அம்மா, திருநெல்வேலி பிஷப் அம்மாவுக்கும் இறைமைந்தன் இயேசு ன் நாமத்தில் மிகவும் நன்றியுடையவளாவேன். அனை வருக்காகவும் ஜெபிக்கிறேன்.

ஐந்து கண்டங்களின் மக்களின் இரட்சிப்புக்காக வும் நம் நாட்டின் சமாதானத்திற்காகவும், நாட்டின் தலைவர்களுக்காகவும், ஜெபிக்கவும் செயலாற்றவும் முன்வருவோமாக.

இவைகளை குறித்து நீங்கள் என்னோடு பகிர்ந்து கொள்ள விரும்பினால், உங்கள் ஊர்களில் ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று விரும்பினாலும் கீழ் கண்ட முகவரிக்கு எழுதுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பான சகோதரி,

D. அமிர்தபாய் சன்னியாசி.
அழகியமண்டபம்.
முளகுமூடு அஞ்சல் - 629 167
(குமரி மாவட்டம்)

தீகல் பிறஸ், நெய்யூர்.

Copies can be had From :-

1. Christian Literature Society,
   Post Box No. 501
   Park, Madras.
   Also available in their branches at Coimbatore, Madurai, Kodaikanal and Vellore.

2. Evangelical Literature Service,
   95-A, Veppery High Road,
   Madras - 600 007.
   Also avilable in their branch at Purasawalkam, Mount Road, Vellor, Bangalore & Trivandrum.

3. Bangalore Tracts Book Society.
   Mark Road, Bangalore

4. Gelina Stores,
   Martandam, Kanyakumari District.

5. Diocesan Book Depot C. S. I.
   College Road, Nagercoil.

6. Diocesan Book Depot,
   Palayamkottai, Tirunelveli-2.

7. Rev John V. Koilpillai,
   Tamil Methodist Church,
   197, Jalan Sultan Abdul Samad,
   Brick Fields,
   Kula Lumpur -0905
   Malayasia. Telephone: 441299

8. ReV. J. Daniel.
   No. 7, Boon Least Terrace.
   Singapore-5 TelePhone: 638257

9. சாம் ஜெபத்துரை. MA
   ரயில்வே ரோடு கோடம்பாக்கம், சென்னை.

10. Good News Book Centre
    550, Jail Road, Coimbatore-641 018.

Price : Rs. 6-50